# நன்னூல்

## சொல்லதிகாரம்

புதியமுறை
எளியவுரை



தமிழண்ணல்

பவணந்தி முனிவர்

அருளிய

# நன்னூல்

## சொல்லதிகாரம்

புதிய முறை எளியவுரை

தமிழண்ணல்

விற்பனை உரிமை

மீனாட்சி புத்தக நிலையம்

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை-625 001
தொலைபேசி : அலுவலகம் - 0452 - 2345971 வீடு - 2560517
மின்அஞ்சல் : meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : மே, 2004

மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 2010

உரிமை : உரையாசிரியருக்கு

**தமிழண்ணலின் பவளவிழா வெளியீடு**

**விலை ரூ. 90.00**

**நூலைப்பற்றி**


| | | |
|---|---|---|
| நூலின்பெயர் | : | நன்னூல் - சொல்லதிகாரம் - எளியவுரை |
| உரை ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | மே, 2004 |
| மூன்றாம் பதிப்பு | : | டிசம்பர், 2010 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 'டெமி' அளவு |
| மொத்தப்பக்கம் | : | 276 |
| நூலின் விலை | : | ரூ. 90.00 |
| அச்சிட்டோர் | : | மோனார் கிராபிக்ஸ், சென்னை |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஐ கேட்சர், மதுரை |

வெளியீடு

**தமிழ்மொழிப் பயிலகம்**

4/585 சதாசிவநகர், முதன்மைச்சாலை

மதுரை - 625020.

பேசி : (0452) 2533792.


**குறிப்புகளுக்காக**

# இப்புதிய முறை எளியவுரையைப் படிக்கும் நெறிமுறைகள்

இன்று உலகெலாம் தமிழர் பரவி வாழ்கின்றனர். தமிழ் ஈழம் தமிழைக் காக்கும். தமிழகமும். எழுச்சி பெறும். அதனால், '**கற்போம் தமிழைக் கற்பிப்போம்**!

1. ஒவ்வோர் இயலுக்கும் முன்னருள்ள '**இயல் கருத்து நிரலை**' ஒருமுறை - இருமுறை - மும்முறை ஒரு கண்ணோட்டமிடுங்கள். ஒருகதை, கட்டுரை படிப்பது போல் படியுங்கள். அவ் இயல் பற்றிய ஒரு 'பருந்துப் பார்வை' கிடைக்கும்.

2. ஒவ்வோர் இயலிலுள்ள நூற்பாக்களின் **தலைப்புக்களை** மட்டும் ஒரு முறை படிக்க வேண்டும். பவணந்தி முனிவர் தமது நூலை, எவ்வாறு வகுத்தும் பகுத்தும் எழுதியுள்ளார் என்பது உங்கள் மனத்தில் பதிந்துவிடும்.

3. ஒவ்வொரு நூற்பாவையும் உரையையும் இனிப்படிக்கத் தொடங்குக. மிக எளிமையாக விளங்கும்

4. எடுத்துக்காட்டுக்கள், மரபு மாறாமல், ஆனால் புதியவையாகத் தரப்பட்டுள்ளன. உங்களுக்கேகூட, புதிய உதாரணங்கள் சொல்லத் தோன்றும்.

5. ஒரு நூலை ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் படித்து முடித்தால்தான், நம் புலமை 'ஆழங்காற்படுகிறது'.

6. உங்களை மிகுந்த மகிழ்ச்சியோடு நூலுள் அழைத்துச் செல்லும் திறன், இவ்உரையில் அமைந்துளது. மேலோட்டமாகப் படித்துப் பழகப்பழக நீங்கள் தமிழ்ப் புலமை பெறுவீர்கள்! தமிழுணர்வு பெற்று, முழுமைத் தமிழராவீர்கள்!

தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாகும். ஆய்வுகள் முடியப் படியுங்கள்; ஆயிரம் வாய்ப்புகள் தேடிவரும்!

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | பெயரியல் | 5 |
| 2. | வினையியல் | 101 |
| 3. | பொதுவியல் | 146 |
| 4. | இடையியல் | 223 |
| 5. | உரியியல் | 252 |
| 6. | நூற்பா முதற்குறிப்பு அகரநிரல் | 272 |

# சொல்லதிகாரம்

## 1. பெயரியல்

### இயல் கருத்து நிரல்

தமிழ்ச் சொற்கள் கட்டமைப்புடையவை. கட்டடக் கலை போல, ஒரு கட்டுமானம் உடையவை. அவை இலக்கிய வழக்கு, உலக வழக்கு என்று, தமிழ் தோன்றிய காலந்தொட்டு இருவழக்காகவே விளங்கி வருபவை. ஒரு மொழி தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை என மூன்று நிலைகளை உடையது. எழுத்துக்கள் தனித் தனியே நின்று, சொல்லாவது தனிநிலை மொழிகளாகும். எழுத்துக்கள் சிதைவின்றி ஒட்டி நின்று, பின்பு பிரித்தறியக் கூடிய நிலையிலிருப்பன ஒட்டு நிலை; பிரித்தறிய முடியாதபடி இணைந்துபோய் விடுவன உட்பிணைப்புநிலை. மொழிகள் இம்மூன்று படிநிலைகளின் படி வளர்வன; சிலபோது ஒரே மொழியில் இம் மூன்று நிலையும் காணப்படும். தமிழன் ஆ ஈ போ வா என்று, கைகால் அசைத்து, ஆடிப்பாடிப் பாவனை - சைகை - செய்து பேசிய காலம் தனிநிலைக்காலம். இப்போதும் தமிழ் ஒட்டுநிலையில் இருப்பது, கட்டளைத்தமிழ் எனப்படும் எழுத்துத் தமிழில் ஆகும். பேச்சில் பெரும்பாலும் அது உட்பிணைப்பு நிலைக்குப் போய்விடும். ஓட்றான் விளையாட்றான், செஞ்சுப்பிட்டேன், கத்றான் - இவை போல்வன உட்பிணைப்புநிலை. இவற்றைப் பிரித்தறிய இயலாது. ஆங்கிலம் முதலான உலகமொழிகள் பல உட்பிணைந்து போயின. தமிழில் - எழுத்துத்தமிழ், இலக்கியத் தமிழ், பொதுத்தமிழ், கட்டளைத்தமிழ் (Standard Language) என்பது ஒட்டுநிலையிலேயே இன்னும் உள்ளன. ஓடு + கிறு + ஆன் = ஓடுகிறான் (இது ஓட்றான் ஆனது விரைவாகப் பேசுவது) ஓடு - பகுதி, முதனிலை, செயலிதுவென்று காட்டுவது, கிறு - நிகழ்காலம் காட்டும் இடைநிலை, ஆன் - இச்சொல் உயர் திணை ஆண்பால் படர்க்கை ஒருமை எனும் நான்கையும்

காட்டுவது. தமிழில் பிரிப்பது மட்டுமல்லாமல், பிரித்தபடியே, மீண்டும் சேர்க்கலாம்; ஒரு இயந்திரத்தை - பொறியைப் பிரித்துச் சேர்ப்பது போல. இதனாலேதான் தமிழ் இன்றும் இளமை மாறாத கன்னித்தமிழாக உள்ளது. விளையாடுகிறான் = விளையாடு + கிறு + ஆன். செய்துவிட்டேன் = செய்து+விடு+ஏன். கத்துகிறான் = கத்து + கிறு + ஆன். செய்து - என்பதன் பின் விடு வருவது துணை வினை. முன்பு செய்தேன் என்றாலே போதும். கால மாற்றத்தில் வந்த புதியன புகுதல் இது. ஆனாலும் மொழிச்சிதைவு இல்லை.

**தமிழில் நாம் பேசுவது போல் எழுதுவதில்லை; எழுதுவது போல் பேசுவதுமில்லை.**

எழுத்துத் தமிழ்தான் கட்டளைத் தமிழ், பொதுவானது. பேச்சுத்தமிழ் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும். ஒலித்திரிபு, கொச்சை, பிழைபாடு என அவை சிதைந்தும் காணப்படும். செருமன் மொழி எட்டுவகையான வட்டார வழக்குகளையுடையது என்றும் ஒன்றிற்கு ஒன்று தெளிவாக விளங்காத அளவும் வேறுபடுவன என்றும் ஆயினும் எழுத்து மொழியாம் - கட்டளை மொழியால், சிறிய நாட்டினதான அம்மொழி, ஒரே மொழியாய் விளங்குகிறதென்றும் கூறுவர். உலகிற் சிறந்த பேரறிஞர்கள் பிறந்த நாடு அது.

சிலர் பேசுவது போலவே எழுதி = கதை, புதுக்கவிதை, புதினம், கட்டுரை எல்லாம் எழுதி 'தமிழ்க்கொலை' செய்தார்கள்; செய்து வருகின்றார்கள். அவர்களுக்குப் பரிசும் பேரும் புகழும் தந்து, விகடக் கச்சேரி செய்யும் ஓரின இதழ்கள் அனைத்தும் 'தமிழ்க்கொலை' க்குத் துணை போயின; போயொழி கின்றன. போய்த் தொலையட்டும்.

நெஞ்சில் நிலைபெற நிறுத்துங்கள். தமிழில் கட்டளை மொழி- ஒட்டுநிலை விட்டுச் சற்றும் பிசகாது, இந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலும் வழங்கிவருவது, உலக மொழிகளில், எம்மொழிக்கும் இல்லாத, தமிழுக்கேயுரிய தனிப்பெருமை யாகும். இதைக் கண்டு பொறாமை, மன அழுக்காறு, நன்றி யில்லாத தன்மை நஞ்சை உமிழ்கின்றன.

நாம் விழிப்பாக இருந்தால், இதுகள் எல்லாம் குப்பையிற் கொட்டப்பட்டுக் காலப்போக்கில் தோன்றிய சுவடு தெரியாமல் அழிவதுறுதி.

சொல்லதிகாரம் - சொற்களின் இலக்கணத்தைக் கூறுவது. அறிஞன் என்பது பெயர்ச்சொல். அறி + ஞ் + அன். பாடினான் = பாடு + இன் + ஆன். இது வினைச்சொல். இவற்றுள் அறி, பாடு என்பன முதனிலைகள். பெயர், வினை இவை என உணர்த்தும் அடிப்படைகள் இவைகளே. எனவே தமிழ்ச் சொற்களைப் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று வகைப்படுத்தலாம். ஆனால் பின்பு வருகின்ற ஞ் + அன், இன் + ஆன், போன்றவையும் சொற்கட்டமைப்புக்கு உதவுகின்றன. அவையும் பொருளுடையன. ஞ் பெயரிடைநிலை. இன் இறந்தகாலம் காட்டும் வினை இடைநிலை. அன், ஆன் - உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை எனத்திணை பால் இடம் எண் உணர்த்துவன.

எழுத்துக்கள் கூடி நின்று, பிறிதொரு பொருளைத் தருமானால் அது 'சொல்' எனப்படும். அல்லவா? த், ட், ற், இன், கிறு, கின்று, ப், வ் போன்றவை காலங்காட்டும் இடை நிலைகள். அன் ஆன், அள் ஆள், அர் ஆர் முதலானவை திணை பால் எண் இடம் உணர்த்தும் இறுதி நிலைகள்

முதனிலையைப் பகுதி என்பதும் இறுதிநிலையை விகுதி என்பதும் நன்னூலார் ஆளும் சொற்கள். இவையும் பிற மொழிச் சொற்கள் என்பதை விடவும், பகுத்து முதலில் நிற்பது பகுதி என்பது போன்ற இயல்புடைமையால், இவற்றைத் தமிழ்ச் சொற்கள் என்றே கருதலாம். சிலர் மறுப்பாரேனும் இவை தமிழாக்கச் சொற்கள் என்பதில் ஐயமில்லை.

இவ்விடைநிலைகள், விகுதிகள், உவம உருபுகள், வேற்றுமை உருபுகள். சாரியைகள் போல்வன பலவும் பெயரையும் வினையையும் சேர்ந்து அவற்றினிடையே வழங்கி வருதலன்றித் தனித்து வழங்காமையின் இடைச் சொல் எனப்படும்.

அது போலவே உரிச்சொல் என்பன அருஞ்சொற்களாய், செய்யுளுக்குரியன. அடைமொழிகளாக வருவன. அடிச்சொற்களாக நின்று பல சொற்களை உருவாக்க உதவுவன. பெரிதும் பண்பை உணர்த்துவன. இவையும் பெயர் வினைகளைச் சார்ந்தே வழங்குவன. அதனால் இடைச்சொல் உரிச்சொல் இரண்டையும் சேர்த்துத் தமிழ்ச் சொற்கள் நான்கு வகைப்படும்.

இவை தவிர இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் நான்கும் இலக்கியத்தில் ஆளப்படுவன. அவற்றுள் இயற்சொல் என்பன முற்கூறிய நான்குமாகும். அவை மக்களால் இயல்பாக வழங்கப்படுவன. புலவர்கள் செய்யுளுக்கு ஏற்பச் சிறிது மாற்றி வழங்குவன திரிசொற்கள். இவையும் அருஞ்சொற்களே. இன்று மிக அருகிக் காணப் படுவன. வடசொல் என்பது பிற மொழிச்சொல். முதன் முதல் தமிழில் கலந்தது, வடக்கே இருந்து வந்த சமற்கிருதச் சொற்களேயாதலால், அவை வடசொல் எனப்பட்டன. இவை தமிழாக்கம் செய்யப்பட்ட பிறகு தமிழ்ச் சொல் வகையில் சேர்க்கப்பட்ட சொற்களாகும். ரிஷப - சமற்கிருதம்; இடபம் (காளை) - தமிழாக்கச் சொல். கமல் - சமற்கிருதம்; கமலம் - தமிழாக்கச் சொல்.

தமிழாக்கச் சொற்களையே தொல்காப்பியர் வடசொல் என்று, தமிழ்ச்சொல்வகையில் ஏற்றுக்கொண்டார். எந்தப் பிற மொழிச் சொல்லையும் தமிழ் ஒலிப்புக்கு ஏற்ப மாற்றிவிட வேண்டும். ஆங்கிலேயன் டமில், மெசுரா, டின்னவேலி என்று தானே மாற்றிக்கொண்டான். வாழும் மொழிக்கு - வளரும் மொழிக்கு இது தேவைப்படும்.

தமிழர்கள் இன்றும் பாட்டில் என்பதைப் போத்தல் என்றும் வில் (will) என்பதை உயில் என்றும் பட்டன் என்பதைப் பொத்தான் என்றும் ஜோசப் என்பதை வளன் என்றும் இவை போல் தமிழாக்கம் செய்து, தமிழ்ச் சொற்களாக மாற்றியே வழங்குவர். இன்று தமிழாக்கம் செய்யாமல் அப்படி யப்படியே வழங்குவன மொழியறிவில்லாதவன் செயல்களாகும்.

ஆங்கிலம் கற்பவர்கள் அவர்களின் ஆங்கிலப்படுத்தும் அரிய நுண்ணுணர்வை அறியாதிருப்பதும் அதைத் தமிழில் பின்பற்ற மறுப்பதும் ஏனோ? கம்பன் வடமொழிச் சொற்கள் அனைத்தையும் தமிழாக்கம் செய்ததை அறியாமல், வெறுமனே கம்பனைக் கொண்டாடிக் கதை பேசுவதைக் கம்பனே அறிய நேர்ந்தால், 'அட உணர்விலிகளே' என அழைக்கமாட்டானா? ஆயிரம் முறை விழாக் கொண்டாடினாலும், கம்பன் தமிழுணர்வு இவர்களுக்கு அமைவதில்லை. கம்பனே இவர்கள் முகத்தில் விழிக்க மறுப்பானே தவிர, தமிழுணர்வு மிக்க - தமிழ்ப் பண்பாடு காத்த அவன் மகிழ்ச்சி அடையமாட்டான்.

இவ்வாறு வழங்கும் தமிழ்ச் சொற்களைப் பற்றிய இலக்கணம், மிக எளிமையானது. செய்யுள் போன்ற நூற் பாக்களால் பார்த்து மருள வேண்டாம். அவற்றை நிரலே உரைநடையிற் படித்து விட்டால் அச்சம் அகன்றுவிடும்; எளிதில் விளங்கிவிடும்.

**இறைவணக்கம்:**

1. மேலேயுள்ள மூன்று உலகங்களுக்கும் நிழல் தரும், முழுமதி போலும் மூன்று குடைகளின் கீழ் இருக்கும் அச்சுதனாகிய அருகக் கடவுளின் திருவடிகளைத் தொழுது, சொல் இலக்கணத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன். *சமண சமயக் கடவுள் வணக்கம் இது.*

**சொல் பற்றிய பொது இலக்கணம் - சொல்லின் வகைப்பாடும் இலக்கணமும்.**

2.1 ஒரு மொழி தொடர்மொழி பொதுமொழி எனச் சொற்கள் மூன்று வகைப்படும். உயர்திணை அஃறிணை எனும் இருதிணை, ஆண் பெண் பலர் ஒன்று பல என்ற ஐம்பால், தன்மை முன்னிலை படர்க்கை எனும் மூன்று இடங்கள், ஒருமை, பன்மை எனும் இரண்டு எண்கள் ஆகிய வற்றைச் சொற்கள் உணர்த்தும். சொல்தான் இன்ன சொல் எனத் தன்னையும் உணர்த்தும். இச்சொற்கள் உலக வழக்குச் சொற்கள், .செய்யுள் (இலக்கிய) வழக்குச் சொற்கள் என இரு வகைப்படும். வெளிப்படையாகப் பொருள் தருவன, குறிப்பாய்ப் பொருளை விளக்குவன எனவும் வகைப் படுத்தப் படும்.

பொருள் தரும் ஒலியே எழுத்தெனப்படும். அதுபோல, சில எழுத்துக்கள் கூடியோ, தனித்தோ பொருள் தரின் அவை சொல்லெனப்படும். இதுவே அடிப்படை இலக்கணம். இது பெயர்ச்சொல், வினைச்சொல் என அறியவைப்பது தான் சொல் தன்னை உணர்த்துவது; இவன் அறிஞன், குதிரை ஓடுகிறது என அச்சொல்லால் ஒரு பெயர் அல்லது செயலை உணர்த்துவது அதாவது அதனால் அறியப்படும் திணை பால் எண் இடம் ஆகிய நான்கையும் அறிவிப்பது, பொருளை உணர்த்துவதாகும்.

## மூவகைச் சொற்களும் அவை பொருள் தரும் முறையும்

2.2 ஒரு மொழி - நிலம், நீர், நடந்தான், தவ, நனி. ஒரே சொல்லாய் நின்று ஒரு பொருளைத் தருவன. தொடர் மொழி - கற்குவியல், புல் சிறிது, காய்கறி, செம்பவளம், ஐம்பொறி என்பன பல பொருளைத் தருவன. (கல்லும் குவியலும், புல் சிறியது, காயும் கறியும், செம்மைநிறப் பவளம், மெய்வாய் கண் மூக்கு செவி எனும் ஐம்பொறி .)

பொதுமொழி ஒரு பொருளும் தரும்; பல பொருளும் தரும். மலர்முகம் - மலர்கின்ற, விரிகின்ற முகம்; மலர் போன்ற முகம். தாமரை: தா+மரை - தாவும் மான்;மரை - மான் எனப் பொருள்படும். தாமரைப்பூ

எனவே சொற்கள் ஒரு மொழி, தொடர் மொழி, பொது மொழி என மூவகைப்படும். ஒரு மொழி ஒரு பொருளையே உணர்த்தும்; தொடர்மொழி பல பொருள் தரும்; பொது மொழி ஒரு மொழியாய் நின்று ஒரு பொருளையும் தொடர் மொழியாய் நின்று பல பொருளையும் தரும்.

தொல்காப்பியர் ஓரெழுத்தொருமொழி (வா, ஈ, ஆ) ஈரெழுத்தொரு மொழி (விழி, கண், காது, நட, இரு), இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி (படகு, அறிஞன், படித்தான்) எனப் பகுத்தது, இன்னும் பொருத்தமாகப் படுகிறது (தொல். 45).

## இரண்டு திணைகள்

3.1 மக்கள் தேவர் நரகர் - மூவரையும் குறிக்கும் சொற்கள் உயர்திணைச் சொற்கள் எனப்படும். மற்றைய உயிருள்ளனவும் (பறப்பன, நடப்பன, ஊர்வன, நீந்துவன அனைத்தும்) உயிரில்லாதனவும் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் அஃறிணைச் சொற்களாகும்.

## உயர்திணையில் மூன்று பால்கள்

3.2 உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பால்களைக் குறிக்கும் சொற்ளையுடையது.

## அஃறிணையில் இரண்டு பால்கள்

3.3 அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டு பால்களைக் குறிக்கும் சொற்களையுடையது.

### ஆணும் பெண்ணுமல்லாத அலியும் பேடியும்

3.4 பெண் தன்மையை விட்டு, ஆண் தன்மையை அவாவு வனவாகிய 'பேடு' ஆண்பாலாகக் குறிக்கப் படும். ஆண் தன்மையை விட்டுப் பெண் தன்மையை அவாவுவன வாகிய பேடு உயர்திணைப் பெண்பாலாகக் குறிக்கப் படும். இவை இரண்டும் அஃறிணைத் தன்மையினவாகவும் குறிக்கப்படும். (இன்று அலி, பேடி என வழங்கப் படுகின்றன.)

### மூன்று இடங்களும் அவற்றை உணர்த்தும் வினைச் சொற்களும், அவை 'பால்' உணர்த்தும் முறையும்

3.5 படர்க்கையில் வரும் பெயர்ச்சொல்லும் வினைமுற்றுச் சொல்லும் இருதிணை, ஐம்பாலையும் உணர்த்தும். தன்மை முன்னிலையில் வரும் பெயரும் வினையும் ஒருமை, பன்மைப் பால்களை மட்டும் குறிக்கும்.

### மூன்று இடங்கள் யாவை?

3.6 தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன மூன்று இடங்களாகும்.

### உலக வழக்கின் வகைகள்

4.1 உலக வழக்கு இரண்டு வகைப்படும். இயல்பு வழக்கு தகுதி வழக்கு என்பன அவை. இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். அவற்றுள் இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ (மருவி வழங்குவன, திரிந்து வழங்கினும் ஏற்புடையன) என்பன அவை. கொச்சை வழக்கு, குறு மொழி, பிழைபட்டவை என வழங்குவனவற்றை உலக வழக்கு எனும் பெயரால் ஏற்பது தவறு என இதனால் அறியலாம். தகுதி வழக்கும் மூன்று வகைப்படும்: இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்பன அவை. இவ்வாறு உலக வழக்கு ஆறு வகைப்படும்.

1. இலக்கணம் உடையன : உலகில் நிலம் நீர் மனிதன் விலங்கு என இயல்பாக வழங்குவன அனைத்தும் .
2. இலக்கணப்போலி: இல்லின் முன்பகுதியை இல்முன் என்னாமல் 'முன்றில்' என்பது; நகரின் புறத்தேயுள்ளதை நகர்ப்புறம் என்னாது புறநகர் என்பது. இவை இலக்கண முடையது போலத் தோற்றுதலால் 'இலக்கணப்போலி'

எனப்பட்டன. 3. மரூஉ - மருவி வழங்குவன : அருமருந்தன்ன பிள்ளை - அருமந்த பிள்ளை, சோழ நாடு - சோணாடு, புதுச்சேரி - புதுவை, ஆதன் தந்தை - ஆந்தை. 4. இடக்கரடக்கல் - மலங்கழித்தலை 'வெளிக்குப் போதல்' எனல். ஒன்றுக்கு, இரண்டுக்கு எனல். பலர் முன் பேச முடியாத இடக்கரான வற்றைச் சிறிது மாற்றிக் கூறுதல். 5. மங்கலம் : மங்கல மல்லாததை மங்கலச் சொல்லாற் கூறுதல் : செத்தார் என்னாது துஞ்சினார், காலமானார் எனல். இடுகாட்டை நன்காடு எனல். 6. குழூஉக்குறி: கள்ளைச் சொல்விளம்பி எனவும் மதுவைத் தண்ணீர் போட்டதாகவும் ஒரு குழுவிற்குள் வழங்குவன. வணிகரிடம் விலைபற்றிய குழூஉக்குறிகள் அதிகம்.

## செய்யுள் வழக்கு - (இலக்கிய வழக்கு) செய்யுள் இன்னது என்பது

*4.2* ஏழுவகையான தாதுக்களினால் உடம்பு உருவாகி உயிருக்கு இடமாகிறது. அதுபோலப் பலவகைச் சொல்லாலாகி, பொருளுக்கு இடமாக, உணர்வு வல்ல பெரியோர் அணி அழகுபடச் செய்வன செய்யுளாகும். (முன்பு செய்யுள் என்பது செய்யப்படும், அதாவது படைக்கப்படும் இலக்கியத்தைக் குறித்தது. பலவகைத் தாதுக்கள் என்பன தோல், குருதி, தசை, நிணம், எலும்பு, மச்சை என்னும் நரம்புத்தசை, வீரியம் என்னும் ஏழும் என்பர்.)

## சொற்கள் குறிப்புப் பொருள் தருவனவும் வெளிப்படையாகப் பொருளுணர்த்துவனவும்.

*4.3* குறிப்புப் பொருள் தருவன: 1. பொதுவாகக் கூறி, ஆண் பெண்ணுள் ஒன்றை ஒழித்து ஒன்றை உணர்த்துவன. 'தேர்வு எழுதும் மாணவரில், தாவணி அணிந்தோர் எண்ணிக்கையே கூடுதல்' (ஆடவரல்லர் என்பது குறிப்பு). 2. செய்யுள் விகாரம் ஒன்பதும் குறிப்புப் பொருள் தரும். *(155,156 )* 'மரைமலர் புரையும் சேவடி' தாமரை மலர் - 'தா' குறைந்தது முதற்குறை. 3. தகுதி வழக்கு - இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி 'அவன் தண்ணி(ணீர்) போட்டிருக்கிறான்' என்பது இடக்கரடக்கல். 4. ஆகுபெயர் - வற்றல் நன்றாக இருந்தது. உணவு வகை. 5. அன்மொழித் தொகை - வயங்கிழை வந்தாள் - பெண்ணைக் குறிக்கும். இழை என்ற அணிகலனின் பெயர் பெண்ணைக் குறித்ததால், இது

அன்மொழித் தொகை. 6. குறிப்பு வினைமுற்று. அவன் தீயன். பெயராகாமல் தீயனாயுள்ளான் என வினைச் சொல்லாவது. 7. முதற்குறிப்பு - ஒரு பாடலின் முதல் சொல்லைச் சுட்டி, அப்பாடலை உணர வைப்பது 'மலர் மிசை' ...எனும் குறள். 8. தொகைக்குறிப்பு - முத்தமிழ் இயல் இசை நாடகம் .

இன்ன பிறவும் என்பதால் பறவா அன்னம் - சோறு (இதை இலக்கணத்தில் 'வெளிப்படை' என்பர்) 'அவர் மிக மிகப் பெரியவர் - அங்கதம்படக் கூறுவது இது. இவை போல் வன பல. இவை தவிர்த்தவை எல்லாம் வெளிப்படையாய்ப் பொருள் தருவன.

## தமிழில் வழங்கும் சொற்களின் வகை

*5.1* பெயர்ச்சொல், வினைச்சொல் இரண்டும் அடிப்படைச் சொற்கள். இவை இரண்டும் இயற்சொல்லாகவும் புலவர் களால் இலக்கியத்தில் ஆளப்படும் திரிசொல்லாயும் வழங்கும்.(எனவே பெயரியற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல் என இவை அறியப் படும்.) இடைச்சொல், உரிச்சொல் பெயர்வினையை அடுத்து வழங்குவன. ஆக பெயர், வினை, இடை, உரி என்பனவே அடிப்படைச்சொற்களாகும். இவைதவிர திசைச் சொல் என்பன, அன்றைய நிலையில், தமிழகத்தைச் சார்ந்த பன்னிரண்டு பகுதிகளில் வழங்கிய வட்டார வழக்கு களாகும்; வடசொல் என்பன சமற்கிருதமாகிய வடநாட்டு மொழியிலிருந்து இங்கு வந்து, தமிழாக்கம் செய்யப் பட்டுத் தமிழோடு தமிழாக வழங்கிய சொற்களாகும்.

இன்று வடசொல் என்பதைப் பிறசொல் - பிற மொழிச்சொல் என்று கொள்ளவேண்டும். அவை தமிழிலுள்ள 31 ஒலிகளுக்குள் (உயிர் 12, மெய் 18, ஆய்தம்1) அடக்கப்பட்டுத் தமிழாக்கச் சொற்களாகி விடுமேல், அவையும் தமிழ்ச்சொல் வகையுள் ஒன்றாகிவிடும். ராகவ் - ராகவ - இராகவன்; லஷ்மண் - இலட்சுமணன் - இலக்குவன்; ஸ்வப்ரஹ்மண்ய - சுப்பிரமணியன். ஒரு பாடகியை 'ஸ்வப் ரஹ்மண்ய பாரதியே' என்று பாடவைத்த இசைத்தட்டு ஒன்று, அவர்கள் பாடையின்படி 'கர்ண, கடூரமாகும்'. தமிழச்சியின் வாயில் சுப்ரமண்யன் என்று கூட வராது;

வரின் அதுவும் தவறே. தமிழில் 'சுப்பிர மணியன்' என்பதே, தொல்காப்பியர், திருவள்ளுவர், கம்பர் நெறிப் படியான தமிழாக்கமாகும்.

இவை தமிழாக்கம் பெறும் முறைகள். ஒலிக் கலப்பே ஒரு மொழியைச் சிதைத்துவிடும்; சொற்கலப்பு தமிழொலிக்குக் கட்டுப்படின் எக்குறையும் நேராது. அதாவது ஆங்கிலம் உலக மொழிச் சொற்களைத் தனது 26 ஒலிகளுக்குள் அடக்கிக் கொள்வது போல, தமிழின் 31 ஒலிகளுக்குள் எச்சொல்லையும் மாற்றிவிடவேண்டும்.

### இயற்சொல் என்பது யாது?

5.2 செந்தமிழாகி *(கட்டளைமொழி. ஆங்கிலர்,* **Standard Language** *என்பர்)* சொல் ஒலித்திரிபோ பொருள் திரிபோ இல்லாமல் புலவர்க்கேயன்றி மக்கள் எல்லோருக்கும் தம்பொருளை எளிதில் விளக்கும் தன்மையுடையன இயற் சொல் எனப்படும். *(நீர், மணம், மனிதன், ஆடு, வானம் என வரும் இவையே, மொழியில் வழங்கும் பெரும் பாலான சொற்கள்.)*

### திரிசொல் என்பது யாது?

5.3 ஒரே பொருளைத் தரும் பல சொற்களாகியும் பல பொருளைத் தரும் ஒரு சொல்லாகியும், மக்களனைவ ராலும் எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத, அரிய சொற்கள் திரிசொற்கள் எனப்படும். இவை செய்யுளில் வழங்கிப் புலவர்களால் அறியப்படும்.

படர், இடும்பை, இடர், இடுக்கண், கவலை, துயரம், துன்பம், நோய் (பழம்பொருள் துன்பம்) இன்னாமை - இவ்வாறு வருவன ஒரு பொருள் தரும் பல சொற்கள். இவற்றிடையே நிழற்பொருள் வேறுபாடுண்டு. புலவர்களால் இலக்கியத்தில் இடமறிந்து பயன்படுத்தப் படும். இவை பெயர்த்திரிசொற்கள். கூவுதல், கத்துதல், அகவுதல், பிளிறுதல், கனைத்தல், குரைத்தல், குழறுதல், முனங்குதல், அலறுதல் என்பன வினைத்திரிசொற்கள் இவை யாவும் பல சொற்கள் வந்து கிட்டத்தட்ட ஒரே பொருளைத் தருவன. செவ்வி - தக்கபருவம், தக்கநேரம், பக்குவநிலை, உயர்ந்த தன்மை, அழகுடைமை, பொலிவு

என ஒரே சொல் பல பொருள் தந்தன. பெரிதும் அருஞ் சொற்களையே 'திரிசொல்' என்றனர்.

## திசைச்சொல் என்பது யாது?

5.4 செந்தமிழ் நிலம் - நாடு என்பது பாண்டிய நாடு. தமிழ் அவையம் - தீந்தமிழின் துறை - 'சங்கம்' எனும் பிற்காலப் பெயர் மாற்றம் பெற்ற புலவர் குழு ஒன்று இருந்ததால், அதுவே செவ்விய மொழி வழங்கும் நாடெனப் பட்டது. அதைச் சூழ்ந்த பன்னிருநாடுகளிலும் தமிழே வழங்கிய தெனினும், அவை வட்டார வழக்குகளாகப் பிரிந்து வழங்கின. மலையாளத்தில் அச்சன் (தந்தை), உறங்வா நின் மிழிகள், ஓமனே (மகனே) என இது போல வழங்குவன, தமிழின் மூலச் சொற்கள் - திரிபுச்சொற்கள் எனப் பல வகைப்படும். இந்திய நாட்டுமொழிகள் பதினெட்டில் தமிழ் நீங்கிய பிற மொழிச் சொற்களும் தமிழாக்கப் பட்டுத்தமிழில் வழங்கின. இவை அனைத்தும் திசைச்சொற்கள் எனப் பட்டன. 'தம் குறிப்பின' என்பது, அவ்வத்திசையில் நன்கு விளங்குமிவை மற்றவர்களால் வழங்குவோர் குறிப்பறிந்தே விளங்கிக் கொள்ளப்படும். கேணி - கிணறு என நாம் அறிவோம்; (திரு) அல்லிக்கேணி - அல்லிமலர் பூத்த குளம் என்பதைக் குறிப்பால் உணர்கிறோம். ஒரு வட்டார வழக்கு, சளி பிடித்தலைத் 'தடுமன்' என்பது. குளிர்ச்சி கூடியதை உணர்த்தும் அது குறிப்பால் அறியப்படும்.

## வடசொல் என்பது யாது?

5.5 சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தானும் (25) தமிழில் இன்றி சமற்கிருத மொழிக்கேயுரிய சிறப் பெழுத்தானும் (28) சமற்கிருதமும் தமிழும் கலந்த எழுத்துக்களாலும் ஆகி (எழுத்து நூற்பா. 146), தமிழாக்கம் பெற்றுத் தமிழில் பொருந்தி வருவன, தமிழில் 'வட சொல்' என ஒரு வகையாக வழங்கும். கமலம் - பொது எழுத்தாலானது. சுகி சிறப்பெழுத்தாலானது தமிழாக்கம் பெற்றது. உறரன் - அரன். இரண்டெழுத்தும் கலந்தது, தமிழாக மாற்றப் பட்டது. இதுகாறும் 'சொல்' பற்றிய முன்னுரையே கூறப்பட்டது.

# பெயர்ச்சொல் இலக்கணம் தொடங்குகிறது

## பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம்

*6.1* பெயர்ச்சொல்லின் இலக்கணம்: இடுகுறி மரபு, இடுகுறி ஆக்கம், காரணக்குறி மரபு, காரணக் குறி ஆக்கம் என மரபுவழிப்பட்டும் காரணம் கருதியும் வருவன பெயர்ச் சொற்கள். வினையாலணையும் பெயரல்லாத பிறபெயர்கள் காலம் காட்டா. பெயர்கள் வேற்றுமைக்கு இடமாக, அவற்றை ஏற்றுவரும். இருதிணை, ஐம்பால், மூன்றிடம் இவற்றில் ஒன்றைக் காட்டும். அல்லது பலவற்றை ஏற்றுப்பொதுவாகவும் வரும்.

காலம் காட்டாது, வேற்றுமை ஏற்றல் பெயரின் அடிப்படை இலக்கணம்.

### உயர்திணை ஆண்பாற் பெயர்கள்

*6.2* பெயர்ச்சொற்கள் பொருள், இடம், காலம், சினை (உறுப்பு), குணம், தொழில் என்ற ஆறின் அடிப்படையில் வரும்.

கிளை என்னும் உறவுப் பெயர்கள், எண்ணிக்கை யால் வருவன, ஒரு குழுவின் பெயராக வருவன. இவை முதலான பொருட் பெயர்கள்.

குறிஞ்சி முதலான நிலத்தால் வருவனவும், தேசத்தாலும் ஊராலும் வருவனவும் வானத்தான், அகத்தான், புறத்தான் முதலாக வருவனவும் இடத்தால் வரும் பெயர்கள்.

ஆண்டு (வயது) பருவம் (வேனிலான்) மாதம் (மாசியான்) நாள் (நட்சத்திரம் - ஆதிரையான்) முதலியன வாக வருவன காலத்தால் வரும் பெயர்கள்.

தோள், குழல் (மயிர்), மார்பு, கண், காது முதலான உறுப்புக்களால் வரும் பெயர்கள் (நெடுந் தோளன், கார்குழலி).

பெரியன், புலவன், மலரவன், (மலர் போன் றவன்), நெட்டையன், செய்யவன், மானுடன் (கதி - பிறப்பு), வேளிர்குடியன், ஆசிரியன் (சிறப்பு) முதலிய வற்றால் வருவன குணப்பண்பால் வரும் பெயர்கள்.

ஓதுவான், ஈவான், முதலானவை பல செயல்களின் அடிப்படையில் வருவன.

இவற்றைச் சார்ந்து வரும் சுட்டுப்பெயர்கள் (அவன், இவன்), வினாப் பெயர்கள் (எவன், யாவன்), பிற (பிறன்), மற்று (மற்றையான்) என்பனவும் 'ன' கர மெய்யீற்றுடன் வரும் ஆண்பாற் பெயர்களாகும்.

நம்பி, ஆடூஉ, விடலை (இளையன்) கோ, வேள், குரிசில், தோன்றல் இன்னனவும் ஆண்பாற் பெயர்கள். இவை தவிர வில்லி, சென்னி, ஏந்தல் என வரும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் அனைத்தையும் கொள்க என்பர் உரை யாசிரியர்கள்

## உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்

6.3 முன் நூற்பாவில் கிளை (உறவுப்பெயர்) முதலாகக் கூறப்பட்ட அனைத்துப் பெயர்களிலும் 'ன' வ் வொற்றை நீக்கிவிட்டு, 'ள' வ்வொற்றையும் இகரத்தையும் ஈறாகப் பெற்றுவருவன எல்லாம் பெண்பாற்பெயர்களாகும். மேலும் தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையலுடன் இவ்வாறு வருவன அனைத்தும் பெண்பாற் பெயர்களே யாம்.

## உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்.

6.4 முன்பு 'கிளை' முதலாகக் கூறப்பட்ட அனைத்துப் பெயர் களிலும் 'ர'கர ஒற்றை ஈறாகக் கொண்டனவும் சிலபோது ஏற்குமிடத்து 'கள்' விகுதி கொண்டனவும் (உயர் திணையில் அவர் - அவர்கள் ஆனவை பிற்கால வழக்கு), இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகும்.

## அஃறிணை ஒன்றன்பாற் பெயர்கள்

6.5 இவை 'து' விகுதியுடன் வரும். வினா (எது), சுட்டுடன் (இது) வரும். அவற்றின் வேறாகப் பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலுடனும் 'து' - வ்விகுதியுடன் வரும் (காட்டது, பனியது), சுட்டுடன் கூடிய ஆய்தம் பெற்று அஃது, இஃது என வரும். ஒன்று - எனும் எண்ணுடனும் வரும். பிறிது, மற்றையது என இவ்வாறு வருவன எல்லாம் அஃறிணை ஒன்றன் பாற் பெயர்களாகும்.

## அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள்

6.6 முன் நூற்பாவில் கூறிய வினா, சுட்டுப் பெயர்களுடனும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அறுவகைப் பெயர்களுடனும், ஏற்குமிடத்தில் வரும் 'வை' ஈற்றுப் பெயர்களும் அகர ஈற்றுப் பெயர்களும் அஃறிணைப் பலவின்பாலில் வரும். வகர மெய் ஈற்றுச் சுட்டுப் பெயர்களும் கள் என்னும் பகுதிப் பொருள் விகுதி ஈற்றுப் பெயர்களும் ஒன்றல்லாத இரண்டு மூன்று முதலான எண்ணாகு பெயர்களும் அஃறிணைப் பலவின் பாற் பெயர்களேயாகும். மேலும் உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில என்னும் எட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர்களும் இவை போல்வன பிறவும் அஃறிணைப் பலவின்பாற் பெயர்களேயாகும்.

## பால்பகா அஃறிணைப் பெயர்கள்
## ஒன்றன்பால், பலவின்பாலுக்குப் பொது

6.7 அஃறிணையில் ஒன்றன் பாலுக்கும் பலவின்பாலுக்கும் வேறுபாடு இன்றி வழங்குவன, பால்பகா அஃறிணைப் பெயர்களாகும். குருவி பறந்தது, குருவி பறந்தன; குதிரை கனைத்தது, குதிரை கனைத்தன என வினைமுடிபால் மட்டுமே இவை ஒருமை, பன்மை அறியப்படும்.

அது (து), அவை (வை), கரிய (அ), அவைகள் (கள்) என்பன ஒன்று, பல எனப் பால் அறியப்படுவன.

## இருதிணைப் பொதுப் பெயர்கள்

6.8 முதற்பெயர் நான்கும் - சாத்தன், சாத்தி (உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொது) சினைப்பெயர் நான்கும் (முடவன், முடத்தி இருதிணைக்கும்) சினை முதற் பெயர் ஒரு நான்கும் - (முடக்கொற்றன், முடக் கொற்றி இரு திணைக்கும்). முறை இரண்டும் (அப்பா, அம்மா) தன்மை நான்கும் (யான், யாம், நான், நாம் இரு திணைக்கும்) முன்னிலை ஐந்தும் ( நீ இருதிணை ஒருமை ஆண் பெண் ஒன்று என மூன்று+ இருதிணைப் பன்மை பலர், பல - என இரண்டு. இவற்றுக்குப் பொது) எல்லாம், தாம், (இருதிணைப் பன்மைக்குப் பொது) தான் (இருதிணை ஒருமைக்குப் பொது). இன்னன என்பதால்: ஞாயிறு மறைந்தான், ஞாயிறு மறைந்தது - ஒன்றையே

இருதிணையாக்கிக் கூறுவது. ஊமை வந்தான், ஊமை வந்தாள் - உயர்திணை இருபாற் பொதுப்பெயர். தன்மை, முன்னிலை வினையாலணையும் பெயர்களும் இருதிணைப் பொதுவாக வரும்.

## முதற்பெயர் நான்கு, சினைப்பெயர் நான்கு, சினை முதற் பெயர் நான்கு, முறை இரண்டு இவற்றை வகுத்துக் காட்டி விளக்குதல்

*6.9* ஆண்மை முதற் பெயர் (சாத்தன்) பெண்மை முதற் பெயர் (சாத்தி), ஒருமை முதற்பெயர் (கோதை) பன்மை முதற்பெயர் (கோதைகள்). இவை நான்கும் இரு திணைக்கும் பொது, ஆண்மைச் சினைப்பெயர் (முடவன்), பெண்மைச் சினைப்பெயர் (முடத்தி), ஒருமைச் சினைப் பெயர் (செவியிலி), பன்மைச் சினைப் பெயர் (செவி யிலிகள்). இவை நான்கும் இருதிணைக்கும் பொது. ஆண்மைச் சினை முதற் பெயர் (முடக்கொற்றன்), பெண்மைச் சினைமுதற் பெயர் (முடக்கொற்றி), ஒருமைச் சினைமுதற் பெயர் (கொடும் புற மருதி), பன்மைச் சினைமுதற் பெயர் (கொடும்புற மருதிகள்) இவை நான்கும் இருதிணைக்கும் பொது. ஆண்மை முதற் பெயர் - தந்தை, அப்பன்; பெண்மை முதற் பெயர் - தாய், அம்மா, இரு திணைக்கும் பொது.

## இரு திணைப் பொதுப் பெயர்கள்

*6.10* முன்னே கூறிய உயர்திணை அஃறிணை ஆகிய இரு திணைப் பொதுப்பெயர்கள், 26இல் (282), ஒவ்வொன்றும், தன்தன் திணை, பால் உணர்த்தும் சொற்களை ஏற்கும். அதாவது முடிவுச்சொல்லால் மட்டுமே, பொதுப் பெயர்கள் திணை, பால் அறியப்படும். (சாத்தன் இவன், சாத்தன் இது. தாய் வந்தாள், இதன் தாய் வந்தது).

## தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்

*6.11* தன்மைப் பெயர்கள்: யான் நான் யாம் நாம். 4. முன்னிலைப் பெயர்கள் : எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ 5. இவ் ஒன்பதுமல்லாத பெயர்கள் எல்லாம் படர்க்கைப் பெயர்கள் (அவன், அவள், அவர், அது, அவை, செழியன், கண்ணகி என வரும்). எல்லாம் என்பது மூவிடத்திற்கும்

பொதுப் பெயராகும் (நாங்கள் எல்லாம், நீங்கள் எல்லாம், அவர்கள் எல்லாம்)

## தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடு

*6.12* தொழிற்பெயர் படர்க்கையில் மட்டுமே வரும். (தொழுதல் நன்று, பாடுதல் இனிது) வினையாலணையும் பெயர் மூன்று இடத்திற்கும் பொதுவாக வரும். (கொடுத்தேனை, கொடுத்தாயை, கொடுத்தானை).

## திணை பால் இரண்டிற்கும் பொதுவாக வரும் பனிரண்டு பெயர்கள்

*6.13* தான், யான், நான், நீ - ஒருமை (உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன் பால்). தாம், யாம், நாம், எலாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் - பன்மை (உயிர்திணைப் பலர்பால், அஃறிணைப் பலவின்பால்)

## எண்ணுப் பெயரில் வரும் உயர்திணைப் பெயர்கள்

*6.14* தமிழில் ஒருவரை ஒருவன், ஒருத்தி என்பதே வழக்காறு. அதற்கு மேற்பட்டவர்களை இருவன், இருத்தி என்ப தில்லை. (இருவர், மூவர் என்பதுண்டு)

## 'ஒருவர்' எனும் பெயரின் இலக்கணம்

*6.15* 'ஒருவர்' - என்னும் சொல் உயர்திணை ஆண்பால், பெண்பால் இரண்டுக்கும் பொதுவாய் வந்து, பன்மை வினையைக் கொண்டு முடியும். (அவர் வந்தார் - இரு பாலரையும் சொல்லலாம். ஆணா பெண்ணா என வேறுபாடு தெரியாதபோது, 'அங்கே நிற்பவர் யார்' என வினவுவர்.)

## ஆகுபெயர் இலக்கணமும் அதன் வகைகளும்

7. ஆகுபெயர் இலக்கணம் : ஒன்றினுடைய பெயரால், அதனோடு தொடர்புடைய பிறிதொன்றைக் குறித்துத் தொன்றுதொட்டு வரும் மரபு வழியில் உரைப்பன ஆகு பெயர் எனப்படும். அதாவது ஒன்றன் பெயர் பிறிதொன் றற்கு ஆகிவருவது, ஆகுபெயர். இவை தொன்றுதொட்டு, மரபு வழி வரவேண்டும். ஒருவர் புதிதாக ஒன்றைச் சொல்லி, அது தொடர்பில்லாத பிறிதொன்றைக் குறிக்கும் என வாதிக்க முடியாது. (சலவை கொண்டு வந்தான்

என்றால், தொன்றுதொட்டுச் சலவைசெய்த உருப்படிகளைக் குறிப்பது, பலகாலம் சொல்லிப் பழகியதன் விளைவாகும்.)

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறு பொருட் பெயர்களும் ஆகுபெயராக வரும். முல்லைப் பல்வரிசை - முல்லைக் கொடியைக் குறிக்கும் பெயர் அதன் மொட்டுக் கானது முதலாகு பெயர். இதுவே பொருளாகு பெயர் என்றும் கூறப்படும். அளவை (நீட்ட லளவை, முகத்தலளவை, எடுத்தலளவை, எண்ணலளவை ஆகுபெயர்கள்); 'மூன்று கிலோ கொடு' அவ்வளவு எடை யுள்ள பொருளைக் கொடு (இது எடுத்தலளவை ஆகுபெயர்). சொல்லாகுபெயர், தானியாகுபெயர், கருவியாகுபெயர், கருத்தா ஆகுபெயர், காரிய ஆகுபெயர் முதலியனவாக இது வரும். (இது எண்சீரோ? அறுசீரோ? பாட்டைக் குறிக்கும் போது கருவி யாகுபெயர்). இவ்வாறு ஆகுபெயரை பல வகைகளாக விரித்துரைப்பர்.

## 'வேற்றுமை' என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

8. எவ்வகைப்பட்ட பெயருக்கும் ஏற்குமிடமறிந்து இறுதியில் ஒட்டிநின்று, அப்பெயரின் பொருளை வேறுபடுத்துவன வேற்றுமை எனப்படும். அங்ஙனம் வரும் வேற்றுமைகள் எட்டேயாகும். இங்கு வேற்றுமை உருபுகளே, 'வேற்றுமைச் சொற்கள்' எனப்படுகின்றன. அவை இடைச் சொற்க ளாகும்.

## வேற்றுமையின் பெயர்களும் அவற்றின் வரிசை முறையும்

8.1 பெயர் (எழுவாய், கருத்தா, வினை முதல், செய்வது எனலும் உண்டு), ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி (விளி - தன்முகமாக அழைப்பது - கூப்பிடுவது) என்பன அவற்றின் பெயரும் வரிசை முறையுமாகும். வரிசை முறை என்பது இவை முறையே முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என நிரலே கூறி, விளியை எட்டாம் வேற்றுமை என முடிப்பது. தமிழ் மரபுப்படி இவை ஐ வேற்றுமை, ஆல் வேற்றுமை, கு வேற்றுமை என்றே முதலில் பெயரிட்டு அழைக்கப்பட்டன.

## எழுவாய் வேற்றுமை பற்றிய விளக்கம்

8.2 பெயர் மட்டுமே திரிபின்றி நிற்கும் எழுவாய்க்கு - முதல் வேற்றுமைக்கு அப்பெயரே உருபாகும். அப்பெயராகிய

உருபு, ஏனைய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும். அதாவது ஐ, (2), ஆல் (3), கு(4), இன் (5) அது (6), கண் (7) எனும் இடையேயுள்ள இரண்டு முதலான ஏழுவரையுள்ள ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்று, வெவ்வேறு வேற்றுமைகளாகும். இறுதி விளி வேற்றுமையாம் எட்டாம் வேற்றுமை, பெயர் ஈறு திரிந்து பொருள் தருமே யன்றி, அதற்கு உருபில்லையாதலின், அது இங்குக் கூறப் படவில்லை.

## உருபு ஏலாப் பெயர்கள்

8.2.1 எழுவாய் பெயராகி நின்று பிற உருபுகளை ஏற்கும் என்றார். ஆனால் நீயிர், நீவிர், நான் மூன்றும் எழுவாயாக மட்டுமே நிற்கும், பிற உருபுகளை ஏற்கமாட்டா.

(நீயிர், நீவிர், நீர் எல்லாம் நும் என மாறி நும்மை, நுமக்கு என உருபேற்கும். நான், யான் என்பன என் என மாறி என்னை எனக்கு என உருபேற்கும். நீ என்பதும் நின், உன் என மாறி நின்னை, நினக்கு என உரு பேற்கும்)

## முதல் வேற்றுமையாம் எழுவாய் வேற்றுமையின் இலக்கணம்

8.2.2 எழுவாய் எனப்படும் வேற்றுமைக்கு உருபு, சிறிதும் திரிபு இல்லாத பெயரேயாகும். அது வினைமுற்று, பெயர், வினா என்னும் மூன்றையும் அதன் பயனிலையாகக் கொண்டு முடியும். (கண்ணன் படித்தான், கண்ணன் அவன், கண்ணன் யார்?)

## இரண்டாம் வேற்றுமையின் உருபும் பொருளும்

8.3 இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஒன்றேயாம். அதன் பொருள்கள் 'செயப்படுபொருளில்' அடங்கும். அவை ஆக்கல், அழித்தல், அடைதல்,நீத்தல், ஒத்தல், உடைமை முதலியனவாகப் பல வகைப்படும். அவன் கோட் டையைக் கட்டினான் - ஆக்கப்படுபொருள்; கோட்டையை இடித்தான்-அழிக்கப்படுபொருள்; கோட்டையை அடைந் தான் - அடைதற்பொருள்; கோட்டையை நீங்கினான் - நீத்தற் பொருள்; கோட்டையை ஒத்தது அவன் ஊக்கம். (ஒப்பு); கோட்டையை உடையான் (உடைமைப் பொருள்).

## மூன்றாம் வேற்றுமை உருபும் பொருளும்

8.4 மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல் ஆன் ஒடு, ஓடு என்பன. ஆல் என்பதே ஆன் என்றும் ஆகும். 'ஓடு' - வே 'ஒடு' - வுமாகும். இதன் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி மூன்றுமாகும். ஆல், ஆன் இரண்டும் கருவி கருத்தா இரண்டிற்கும் சிறப்பாக வரும். இவை முன்பு அரிதாக உடனிகழ்ச்சிப் பொருளிலும் வந்துள்ளன. பேச்சு வன்மையான் பெரும்புகழ் பெற்றான். (கருவிப்பொருள்) 'தூங்குகையான் ஓங்குநடைய' - தொங்கும் கையுடன் உயர்ந்த நடையையுடைய யானைகள். இதில் ஆன் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. கருத்தா என்பதும் ஏவுதல் தன்மையால் 'கருவி' யாகவே பயன்படுகிறது. அரசனால் கோயில். கட்டப்பட்டது. அரசனால் ஆனது இக் கோயில். இவை ஏவுதற் கருத்தா எனப்படும். தச்சனால் கட்டப்பட்டது இவ்வீடு. இது இயற்றுதற் கருத்தா எனப் படும். தந்தையொடு மகன் வந்தான். ஆசிரியனொடு மாணவன் வந்தான். உடனிகழ்ச்சியில் 'ஒடு' வை உயர்ந்த தனோடு சேர்த்துச் சொல்வது பெரு மரபு, 'கொடியொடு சிக்குண்டான்' எனக் கருவிப் பொருளில் அருகிவரும் - கொடியால் சுற்றப்பட்டுச் சிக்கலில் மாட்டிக்கொண்டான் என்று பொருள். கொண்டு (பூவைக் கொண்டு தொடுத்த மாலை), உடன் (நண்பனுடன் அன்பழகன் வந்தான்). கொண்டு, உடன் சொல்லுருபுகள்.

## நான்காம் வேற்றுமை உருபும் பொருளும்

8.5 நான்காம் வேற்றுமைக்கு 'கு' உருபு ஒன்றே உண்டு. **'இதற்கு இது'** என்பதே இதன் பொதுப் பொருள். கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), தகவு, அதுவாதல், பொருட்டு, முறை என்பன ஏழும் 'இதற்கு இது' எனும் பொருள் நடையில் வரும். படிப்பவர்க்குப் பண உதவி கொடுத்தான் - கொடை. நல்லிணக்கத்திற்குக் கேடு மதவெறி - பகை. பாரிக்கு நண்பர் கபிலர் - நேர்ச்சி, நட்பு. திறமையாளனுக்கு வேலை கிடைத்தது - தகவு, தகுதி. கவிதைக்குச் சந்தம் - அதுவாதல். சந்தமே கவிதையாகிறது. சிவன் பிட்டுக்கு மண் சுமந்தான் - பொருட்டு (காரணம்). இவர் என் மனைவிக்குச் சிற்றப்பா - முறை, உறவு.

கு - என்பதன் சொல்லுருபுகள் பொருட்டு, நிமித்தம், ஆக என்பனவாகும். கற்பதற்கு கடினமாக உழைக்கவேண்டும். இதைக் கற்பதன் பொருட்டு, கற்பதன் நிமித்தம், கற்பதற்காக உழைத்தான் என்று கூறுவர்.

உரையாசிரியர்கள் மிக விரிவாக எழுதுவன பல வற்றைக் கண்டு மருட்சி ஏற்பட வேண்டாம். பொதுவான இலக்கணம் இங்கு, இந்நூலில் தரப்படுகிறது. பிற யாவும் நுட்பமாய் ஆராய்வார்க்குப் பயன்படும். அதனைக் கண்டு எல்லோரும் இலக்கணத்தை வெறுத்துவிடுதல் கூடாது. பொது வேறு; ஆராய்ச்சி வேறு, பழைய உரைகள் இரண்டும் கலந்தவை.

## ஐந்தாம் வேற்றுமை உருபுகளும் அவை உணர்த்தும் பொருள்களும்

8.6 ஐந்தாம் வேற்றுமை உருபு இல், இன் என்பன. இதன் பொருள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பவையாகும். வீட்டின் வெளியேறினான் (வீட்டிலிருந்து என்போம் இன்று)- நீங்கற் பொருள். வீட்டிற் சிறந்த விடுதி. (இன் - இற் ஆனது புணர்ச்சி வேறுபாடு) - ஒப்புப் பொருள். வீட்டின் வடக்கே ஒரு விடுதி இருக்கிறது - எல்லைப் பொருள். வீட்டிற் பெறலாம் மன அமைதி. (வீடு காரணமாக என்று கூறுகையில்) - ஏது (காரணப் பொருட்டு) அறிவிற் சிறந்த பெரியோர் என்று, அறிவு காரணமாகச் சிறந்தோரைக் குறிப்பிடுவர். 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்பது, பழமொழிபோல் வழங்கும் ஏது பற்றிய பழைய உதாரணம். 'காக்கையிற் கரிது களம்பழம்' - என்பதும் அது போன்றதே. கரியநிறம் பற்றிய ஒப்புமையுடையன. இன்றைக்கு - 'இருந்து' (மலையிலிருந்து விழும் அருவி), நின்று (மலையினின்று விழுகின்ற அருவி) என இருந்து, நின்று என்பன சொல்லுருபுகளாக வழங்குகின்றன.

## ஆறாம் வேற்றுமையும் அவை உணர்த்தும் பொருள்களும்

8.7 ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது என்பன ஒருமைக்கும் அ-என்பது பன்மைக்கும் உருபுகளாகும். அது என்பதே ஆது என ஆகும். இதன் பொருள் 'கிழமைப்' பொருள். கிழமை என்பது உரிமை. அது தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகைப்படும். தற்கிழமை பிரிக்க

வொண்ணாதது (கையினது விரல் என்பது போன்றது); பிறிதின் கிழமை பிரிக்கக் கூடியது (கையினது மோதிரம் என்பது போல). பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் என்பன தற்கிழமைப் பொருளன.

சிறுமியது நினைவாற்றல் - தொழிற் பண்பு - தற்கிழமை. நாயினது வால் - உறுப்புத் தற்கிழமை. தமிழ்ச் சான்றோரது பேரவை - ஒன்றன் கூட்டத் தற்கிழமை. ஐக்கிய நாடுகள் சபையினது கூட்டம் - பலவின் ஈட்டத் தற்கிழமை. கரும்பினது சாறு - திரிபின் ஆக்கமெனப்பட்ட தற்கிழமை.

எனது கை - எனாது கை (அது ஆது உருபு). நின தாள்கள் (அ-பன்மை உருபு). 'உடைய' - என்பது ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு, இன்று பெருவழக்கு. என்னுடைய வீடு; தம்பியுடைய மனைவி.

## ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும்

*8.8* ஏழாம் வேற்றுமை உருபு 'கண்' முதலான மிகப் பல வாகும். அது தருவது 'இடப்' பொருள். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு பெயர்க்கும், தற்கிழமை பிறிதின் கிழமையால் இடமாக நிற்றல் அவ் இடப்பொருளின் பாகுபாடாகும். . பாட்டின்கண் இருக்கின்றது ஓசை - தற் கிழமையில் பொருள் இடமாயிற்று. நற் பண்பின்கண் மிளிர்வது பெருமிதம் - பண்புத் தற் கிழமையில் பொருள் இடமாயிற்று. கார்ப்பருவத்தில் கொன்றை பூக்கும் - பிறிதின் கிழமையில் காலம் இட மாயிற்று.

## இடப்பொருள் தரும் உருபுகள் 28

*8.8.1* கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் எனும் 28ம் இடப் பொருள் தரும் உருபு களாகும்.

## எட்டாம் வேற்றுமையாம் விளி வேற்றுமையில் பெயர் ஏற்கும் திரிபுகள்; அத்திரிபுகளே விளியுருபுகளாகும்.

9. எட்டாம் வேற்றுமை படர்க்கையோரைத் தன்னை நோக்கு மாறு, தன் முகமாகத் தான் அழைப்பதாகும். விளித்தல் கூப்பிடுதல், பெயர் சொல்லி அழைத்தல். அதனால் இதை 'விளிவேற்றுமை' என்பர். எழுவாயும் பெயரேயானாலும் அது வினைமுதலாக இயல்பாக மட்டும் நிற்கும். இது பெயரின் இறுதியில் திரிபு, குன்றல், மிகுதல், இயல் பாதல், ஈற்றுக்கு அயல் எழுத்துத் திரிதல் ஆகிய மாற்றங் களை அடையும். அவையே விளி வேற்றுமை உருபுகள் எனப்படும். ஈறுதிரிபு - பிள்ளை - பிள்ளாய். ஈறு குன்றல் - அன்பன் - அன்ப. ஈறு மிகுதல் - பெருமக்கள் - பெரு மக்களே. கண்ணன்! இயல்பு (அண்மை விளி).ஈற்றயல் திரிதல் - பெரியர் - பெரியீர். இவை ஒன்றும் பலவும் வருதலுமுண்டு.

## விளியேற்கும் பெயர்களின் பட்டியல்

9.1 இ, உ, ஊ, ஐ, ஓ- ஐந்து உயிரெழுத்துக்கள்; ன, ள, ர, ல, ய என்னும் ஐந்து மெய்யெழுத்துக்கள் ஆகிய பத்தும் ஈறாக வரும் உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் (நண்பர் - நண்ப). மேலே கூறியவற்றுள் ஓ,ர இரண்டுமல்லாத எட்டும் ண, ஆ, இரண்டும் சேர்ந்த பத்தையும் ஈறாக வுடைய பொதுப் பெயர் விளியேற்கும் (மருதி - மருதீ. ஒரு பெண் அல்லது பசுவின் பெயர்). மொழி ஈறாகும் எழுத்துக்கள் எனப்பட்ட உயிர் 12, ஞணநமன யரல வழளமெய்கள், குற்றியலுகரம் (எழுத்தியல் 52) ஆகிய 24 எழுத்துக்களில் ஞ, ந - வும் மொழி ஈறாகாத 'எ' யும் ஆகிய மூன்றையும் நீக்கி, மீதமுள்ள 21 எழுத்துக்களையும் ஈறாகப் பெற்றுவரும் அஃறிணைப் பெயர்கள் விளியேற்கும். (கிளி - கிளியே)

## மூவகைப் பெயர்களும் விளியேற்கும் மூவகை நிலைகள்

9.2 முன் சுட்டிய உயர்திணை, அஃறிணை, பொதுத் திணைப் பெயர்கள் இயல்பு, ஏ பெறுதல், இ - ஈ என நீளுதல் - என இவை மூன்றையும் பெரிதும் உருபாகப் பெற்று வரும். தம்பி! - இயல்பு. முல்லையே - ஏ பெறல். வள்ளி - வள்ளீ - ஈ என நீளுதல்

## விளியுருபுக்கு மேலும் சில சிறப்பு விதிகள்

9.3 ஐகார ஈற்றுப் பொதுப் பெயர்க்கு ஆய், ஆ, இரண்டும் உருபாகும். (முன்பு கூறியபடி இயல்பும் 'ஏ' மிகுதலும் உண்டு). அல்லாதனவாகிய உயர்திணை, அஃறிணைப் பெயர்கட்கு, அவற்றுள் ஐ - ஆய் ஆகும்.

அன்னை - அன்னாய், தந்தை - தந்தாய், அம்மை - அம்மா - இவை பொதுப்பெயர்கள். நாரை - நாராய். விடலை - விடலாய்) - இவை அஃ றிணை, உயர்திணைப் பெயர்கள்

## 'ன'கர - மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் போது, ஈறு திரிபுகள்

9.4 'னகர' மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் (மெய்யன், ஐயன்), பொது விதி தவிரவும் (305) விளி ஏற்கும் போது அளபெடுக்கும், ஈறுஅழியும், ஈற்றயல் நீளும், ஈற்றயல் நீண்டு ஈறுகெடும், ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு, ஓகாரம் மிகும், ஈறுகெட்டு ஓ வரும், ஈறு 'யகரமாகும், ஈறு யகரமாகி ஈற்றயல் திரிந்து ஏ சேரும், யகரமாகி ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய்ப்பின் ஏகாரம் மிகும். (ஐயனே!, ஐய, ஐயாவோ, வாயிலோயே!)

## ளகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் போது, 'ஈறு' - திரிபுகள்

9.5 ளகர மெய்யீற்று உயர் திணைப் பெயர்கள் பொது விதி தவிரவும் கீழ்க்கண்ட வேறுபாடுகளும் பெறும்: அள பெடுக்கும்; ஈறுகெடும்; ஈற்றயல் நீளும்; ஈற்று - ள் - ய் ஆகும், ஈற்றயல் அகரம் ஏகாரமாகும். (அடிகள் - அடிகாள், அடிகேள், ஆயிழையாள் - ஆயிழையாய் )

## 'ரகர' மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் போது ஈறு- திரிபுகள்

9.6 'ரகர' மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுக்குப் பொது விதிகளேயல்லாமல், கீழ்க்கண்டவையும் உள: அள பெடுத்தல் ஈற்றயல் அகரம் இகரமாதலும், ஈகாரமாதலும் ஈற்றயல் ஆ- ஈ ஆதல், அத்திரிபுடன் ஏகாரம் சேர்தல், ஈற்றில் ஏ மிக்கு ஈற்றயல் யா கெட்டு அதன் அயலிலுள்ள இகரம் ஈகாரமாதல், ஈற்றில் ஈர் வருதல். (சிறாஅர்! சான்றீரே, தமரீர்!)

### லகர யகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறைகள்

9.7 பொது விதியேயன்றி, லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்க்கு ஒரு சார் அளபெடுத்தலும் சில ஈற்றயல் நீளுதலும் உருபாகும். யகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்க்கு அளபெடுத்தல் உருபாகும். (மால் - மாஅல், தோன்றல் - தோன்றால். சேய் - சேஎய்)

### னகர மெய்யீற்று அஃறிணைப் பெயரும் பொதுப் பெயரும் விளியேற்றல்

9.8 னகர மெய்யீற்று உயர்திணை அல்லாத அஃறிணைப் பெயர்களிலும் பொதுப் பெயர்களிலும் சில ஈறு கெடும்; சில ஈறு கெடுதலோடு அயல் நீட்சியும் உருபாகும். (அலவன் - அலவ. கருடன் - கருடா). சாத்தன் - சாத்த, சாத்தா)

### லகர, ளகர மெய்யீற்று அஃறிணைப் பெயரும் பொதுப் பெயரும் விளியேற்றல்

9.9 ல, ள ஈற்று அஃறிணைப் பெயர்க்கும் பொதுப் பெயர்க்கும் பொதுவிதியேயன்றி, ஈற்றயல் நீளுதலும் விளியுருபாகும். (கிளிகள் - கிளிகாள், மக்கள் - மக்காள்)

### விளியுருபுகளுக்குப் புறனடை

9.10 பொதுவாக விளியுருபுகள் அண்மை விளியாயின் இயல் பாயும் ஈறு அழிவுமாகும். சேய்மை விளியாயின் அள பெடை பெறும். புலம்பல் விளியாயின் இறுதியில் ஓ பெற்று வரும். (முருகன்! நண்ப! முருகனேஎ! அம்மாவோ?)

### விளியுருபு ஏற்காத பெயர்கள்

9.11 'நு' வ்வில் தொடங்கும் பெயர்கள் விளி ஏலா: நுமன், நுமள், நுமர். வினா, சுட்டு (எ, யா, ஏ; அ, இ, உ) முதலாக வரும் னளர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளிஏலா: (எவன் எவள் எவர்; அவன், அவள், அவர்.)

வை, து என முடியும் வினா, சுட்டு அஃறிணைப் பெயர்களும் விளி ஏலா, (எவை, எது, அவை, அது)

## முதலும் சினையும் ஒரு தொடரில் வரின் ஐ உருபும் கண் உருபும் மாறி வருதல்

*10.1* முதலும் சினையும் ஒரே தொடரில் வரின் இரண்டிலும் 'ஐ' வருதல், பொருந்தாது. கிளியைக் காலைக் கட்டினான் எனல் இயல்பன்று. எனவே முதற்பொருளில் ஐ வந்தால், சினையில் கண் வரும். கிளியை காலின்கண் கட்டினான் எனல் வேண்டும். அது உருபு முதலுக்கு வரின் சினைக்கு ஐ வரும். கிளியது காலைக் கட்டினான். 'கண்' உருபு முதலுக்காயின், சினைக்கு ஐ வரும் என்றும் கொள்ளலாம். புத்தகத்தின்கண் பாடத்தைப் படித்தான்.

## முதற்பொருள், சினை (உறுப்பு) வேறுபாடு அறியும் விதம்

*10.2* யானை முதல் என்றால் கால் சினை; கால் முதலென்றால் நகம் சினை. அதுபோல நெற்குவியல் முதலென்றால் நெல் பிண்டப்பொருள். நெல் முதலானால் உமி பிண்டமாகி விடும். எது முதல், எது சினை என்பது நிலையாக வேறு படுவன அல்ல. அவை உரைப்போர் குறிப்பின் வழிப் பட்டன.

## எந்த உருபில் கூறினும் பொருளுக்கே முதலிடம். உருபுகள் தனிப்பொருளுடையனவாயினும் கருதிய பொருளுக்கேற்ப, அவற்றின் பொருள் மாறிக்கொள்ளும்

*11.* ஒரு வேற்றுமைப் பொருளை, வேறு ஒரு வேற்றுமை உருபால் கூறினாலும், பொருள் மாறாது. பொருளுக் கேற்பவே வேற்றுமையுருபும் பொருள் தரும்.

'வேயொடு வென்று விரிந்த தோள்கள்' - ஒடு - இங்கு உடனிகழ்ச்சிப் பொருள் தரவில்லை. வேயை (மூங்கிலை) என, ஒடு - உருபு, ஐ - உருபுப் பொருளையே தருகிறது. இதை உருபுமயக்கம் என்பர்.

## ஐ, ஆன், கு உருபுகள் செய்யுளில் 'அ' - ஆக மாறுதல்

*12.* ஐ, ஆன் (ஆல்), கு - மூன்று உருபுகளும் செய்யுளில் வரும் போது, உயர்திணையில் ஒருசில இடங்களில் 'அ'கர மாகும். அஃறிணையில் 'ஆன்' அல்லாதனவாகிய ஐயும் குவும் அகரமாகத்திரியா; எனவே ஆன் மட்டும் அகரமாகத் திரியும். இவை பழந்தமிழ் வழக்கு. 'மன்னனைப் பார்த்து

ஒரு மனமகிழ்வுற்றேன்.' இது மன்னனைப் பார்த்து என ஐ - அ வாகும். இவை பேச்சுவழக்குப் போல் உள.

**எட்டு வேற்றுமைகளுக்கும் முடிக்கும் சொற்களாக வருபவை யாவை?**

*13.* எல்லைப் பொருள்தரும் 'இன்' வேற்றுமையும் *(5)*, அது - வேற்றுமையும் *(6)* பெயர்கொண்டு முடியும். இவை அல்லன எல்லாம் அதாவது எழுவாய், ஐ வேற்றுமை *(2)*, ஆல் ஆன் வேற்றுமை *(3)*, கு வேற்றுமை *(4)* இன் *(5)* வேற்றுமையில் எல்லைப் பொருள் தவிர்த்தவை (நீங்கல், ஒப்பு, ஏது) கண் வேற்றுமை *(7)* விளி வேற்றுமை *(8)* அனைத்தும் வினைச்சொல் கொண்டு முடியும். (தெரி நிலை வினை முற்றும் குறிப்பு வினை முற்றும்). நான்காம் வேற்றுமையும் (கு), ஏழாம் வேற்றுமையும் (கண்) வினைச்சொல்லைக் கொண்டு முடிவதுடன், வினையொடு தொடரும் பெயரையும் கொண்டு முடியும்.

தமிழ்நாட்டின் தெற்கு தமிழ்ஈழம் - பெயர் கொண்டு முடிந்தது

தமிழது பெருமை செவ்வியலாகும் - பெயர்கொண்டு முடிந்தது.

பிள்ளையாரை வணங்கினேன்<br>பிள்ளையார்க்குக் கொடுத்தேன் } வினைகொண்டு முடிந்தன

பிள்ளையார்க்குக் காணிக்கை - 'கு' - பெயர் கொண்டும் முடிந்தது. நோய்க்கு மருந்து - பெயர்கொண்டு முடிந்தாலும் இது நோய்க்குத் தரும் மருந்து என்றே பொருள்படும். இதுவே வினையொடு தொடரும் பெயர்.

# 1. பெயரியல்

ஒரு மொழியில் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களுமே தலைபையானவை; மிகுதியானவை; அடிக்கடி பயன்படுபவை. ஒரு சொல்லால் 'மரம்', 'நீர்' என ஒரு பொருளைக் குறிக்கிறோம். இது பெயர்ச்சொல். மரம் வளர்கிறது, அசைகிறது; நீர் ஓடுகிறது, பாய்கிறது, நீர் இனிது என்று அவற்றின் செயலையோ, இயல்பையோ சுட்டிச்சொல்ல வருவது வினைச் சொல்.

தமிழில் ஏனைய இடைச்சொல்லும் உரிச்சொல்லும் இச்சொற்களைச் சார்ந்துநின்று, பொருள் வேறுபாடுகளை உணர்த்த வருவனவே. இங்கு நாம் 'பெயர்ச்சொல்'லின் இலக்கணத்தைப் படிக்கப் போகின்றோம். முருகன், மனிதன், குயில், நண்டு, புழு, மரம், செடி, கொடி என ஒரு பொருளைக் குறிக்க வருவன எல்லாம் பெயர்ச்சொற்களே.

## இறை வணக்கம்

258 முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதன்
அடிதொழுது அறைகுவன் சொல்லே 1

மூன்று உலகங்களுக்கும் தண்ணளி (கருணை) யாம் நிழலைத் தரும், முழுமதி போலும் குடைகள் மூன்றின் கீழ் அமர்ந்திருக்கும் அருகக் கடவுளின் திருவடிகளைத் தொழுது, சொல்லிலக்கணத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

சகம் - உலகம். அச்சுதன் - அழிவற்றவன், சமணர் வழிபடும் இறைவனது திருப்பெயர்களில் ஒன்று.

## 'சொல்' என்பது யாது? பொதுநிலையில் அது எத்தனை வகைப்படும்? அது எவ்வாறு பயன்படுகிறது?

259. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா

**இருதிணை, ஐம்பால் பொருளையும் தன்னையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே 2**

இந்நூற்பா சொல்லின் இலக்கணத்தைக் கூறுகிறது

1. சொல் மூன்று வகைப்படும்: ஒருமொழி, தொடர் மொழி, பொதுமொழி.

2. ஒரு பொருள் உணர்த்துவதே சொல்லாகும். பொருள் தராத ஒலிகள் எழுத்தும் ஆகா; சொல்லும் ஆகா. சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

ஒரு சொல் உயர்திணையா, அஃறிணையா என்று இருதிணையையும் ஆணா பெண்ணா பலரா ஒன்றா பலவா என்னும் ஐம்பாலையும் உணர்த்தும். இது ஆண்பாலை உணர்த்தும் சொல், இது அஃறிணையை உணர்த்தும் சொல் என, தன்னையும் உணர்த்தும். அதாவது ஒரு சொல் தன்னால் அறியப்படும் பொருளை அறிவிப்பதோடு, தான் அதை அறிவிக்க வந்த இன்ன சொல் என்றும் கூறப்படும்.

மரம் என்பது எதிரே நிற்கும் வேப்ப மரத்தைச் சுட்டினால், அது அந்தப் பொருளை உணர்த்துகிறது. மரம் + வேர் = மரவேர். இதில் 'மரம்' என்ற சொல்லின் ஈற்று மகரம் கெட்டது என்னும் போது அச்சொல் தன்னையே குறிக்கிறது.

தன்மை (நான்), முன்னிலை (நீ), படர்க்கை (அவன்) என மூன்று இடத்தையும் சொல் உணர்த்தும்.

சொற்கள் நம் அன்றாடப் பேச்சு எனப்படும். உலக வழக்கிலும் இலக்கியம் எனப்படும் செய்யுள் வழக்கிலும் வழங்கும்.

சொற்கள் பொருள் தருங்கால் வெளிப்படையாகவும் பொருள்தரும்; குறிப்பாகவும் பொருள் தரும். 'மரம்' - வேம்பு - எனும் சொல் அஃறிணையில் வெளிப்படையாகப் பொருள் தருகிறது. எழுத்தறிவற்ற மனிதனை 'மரம்' என்னும் போது குறிப்பினால் உணர்த்துகிறது. இவை யாவும் 'சொல்' பற்றிய இலக்கணமாகும்.

**சொல்லின் இலக்கணம் :** சொல், என்பது ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூன்று வகைப்படும், இரு திணை ஐம்பால் பொருளை உணர்த்தி, தான் இன்னசொல் எனத் தன்னையும் உணர்த்தி, மூவகை இடத்தையும் சுட்டிக் காட்டி, உலகவழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கி, வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளை விளக்குவதாகும்.

## மூவகை மொழிகள் பொருள் தரும் முறை

**260. ஒரு மொழி ஒரு பொருளனவாம் தொடர்மொழி
பல பொருளன பொது இருமையும் ஏற்பன. 3**

ஒரு மொழி ஒரு பொருளைத் தரும். நிலம், நீர், கொடி, மலர், நீ, அவன் என வருவன. நட என பகாப்பதமாக நின்றாலும் நடந்தான் எனப் பகுபதமானாலும் ஒரு பொருள் தரும் ஒரு மொழியேயாம்.

தொடர்மொழிகளும் இங்கு ஒரு சொல் தன்மைத்தாய் நிற்பனவே. வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர்கள் என்பன தொடர்கள் எனப்படும். தொடர்மொழி எனப்படா. சிவஞான முனிவர் தொடர்மொழிகள் 'பயனிலை வகையானும் தொகை நிலை வகையானும் எண்ணுநிலை வகையானும் தொடரும்' எனக் கூறியது பொருந்தும். கற்றீது, கற்குவியல், மட்குடம் என ஒரு சொல் நீர்மைத்தாய் வரும் தொடர்மொழிகள் இவை. பற்பசை, கற்கண்டு, வில்லாளி - ஒரு மொழிபோல் காணப்படும் தொடர்மொழிகள் இவை. கற்றீது: கல்தீது, புல்சிறிது - இவை பயனிலை வகையால் எழுவாயும் பயனிலையுமாகத் தொடர்ந்தன. காய்கறி (காயும் கறியும்), செம்பவளம் (செம்மை நிறப் பவளம்) - இவை தொகைநிலை வகையால் வந்தன. ஐம்புலன், முத்தமிழ் - எண்ணுநிலை வகையால் தொடர்ந்தன. புணர்ச்சி இலக்கணம் பெரிதும் ஒரு சொல்லாகி வரும் தொடர்மொழிகள் பற்றியனவே.

நாழி + உரி = நாடுரி. மூன்று + தமிழ் = முத்தமிழ் எனக் காட்டலாம். இவை நாழியும் உரியும், இயல்இசை நாடகம் எனப்

பல பொருள்தரும்.

தில்,மன், உம் எனும் இடைச் சொற்களும் தவ, நனி, கடி எனப்படும் உரிச்சொற்களும் 'ஒரு மொழி' எனும் வகை யினவே. தவச்சிறிது, எளிதுமன் என்னும் போது தொடர் மொழிகள். கற்கோயில் என்னும்போது கல்லையும் கோயிலையும் குறிப்பதால், பலபொருள் தருபவை ஆயின.

பொதுமொழிகள் ஒரு மொழியாய் நின்று ஒரே பொருளைத் தந்தும், அதுவே தொடர்மொழியாய் நின்று பல பொருள் தந்தும் இரண்டிற்கும் பொதுவாய் நிற்பன. தாமரை : பூ. தா + மரை: தாவும் மரை (மான்). எழுந்திருந்தான் ஒருமொழி; எழுந்து (பின்) இருந்தான் - தொடர்மொழி (பொருளும் வேறு). இஃது ஒரு வகையில் 'இரட்டுற மொழிதல்' (சிலேடை) போலவும் உளது.

உரையாசிரியர்கள் வேற்றுமைத் தொடர்களையும் அல் வழித் தொடர்களையும் முழுவதுமாக உதாரணம் காட்டி யுள்ளனர். முருகனது மலை, இரவலர்க்குக் கொடு எனவரும் வேற்றுமைத் தொடர்களும் கந்தன் வந்தான், மனம் நன்று, சாலப்பெரிது என வரும் அல்வழித்தொடர்களும் தொடர்மொழி என்று காட்டுவன, தொடராக வருவனவே தவிர, 'மொழி' எனப்படுமா என்பது ஆராய்தற்குரியது. இந்நூற்பா ஒருசொல், தொடர்ச்சொல் எனத் தனிச் சொல் அல்லது ஒரு சொல் தன்மையதான தொடர்ச்சொல் பற்றியதேயன்றி, முழுமையான தொடர்களைக் காட்டுவது பொருந்தாது.

## இரண்டு திணைகள்

**261. மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்று, உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை 4**

மக்களும் தேவரும் நரகரும் உயர்திணை; அவர்க ளல்லாத பறவை, விலங்குகளாகிய உயிருள்ளவையும் கடல், மலை நிலம் முதலிய உயிரற்றவையும் அஃறிணை. இவ்வாறு பொருளுணர்த்தும் சொற்கள் உயர்திணைச் சொல், அஃறி ணைச் சொல் என்றழைக்கப்படும் என்பதே கருத்து.

நாம் கண்ணாற்காணும் மக்களை மட்டுமே உயர்திணை என்பார் தொல்காப்பியர். அவர்கள் ஆறறிவுடையவர்கள். ஏனையவை அனைத்தும் அஃறிணையே. அஃறிணை - அல் + திணை - உயர்திணை அல்லாதன அஃறிணை. இஃது உலக வுயிர்களை இருவகைப் படுத்துகிறது. அவற்றைக் குறிக்கும் சொற்களும் அதனால் இரண்டு வகையாகப் பிரிக்கப் படுகின்றன. முருகன், வள்ளி - உயர்திணை.வேங்கைமரம், கிளி, குயில் - அஃறிணை. உடல் பருத்தது, உயிர் நீங்கியது என உடலையும் உயிரையும் பிரித்துச் சொன்னாலும், அவை அஃறிணையே. தொல்காப்பியர் மக்களை மட்டுமே உயர் திணை என்றார். நாமறிந்தவர் அவர்கள் தானே?

## ஐம்பால் வகைகள்

### உயர்திணை மூன்று பால்கள் ஆகும்

262. ஆண்பெண் பலர் என முப்பாற்று உயர்திணை 5

ஆண்பால், பெண்பால், பலர்பால் என உயர்திணை மூன்று பால்கள் ஆகும். இவை அவ்வவற்றைச் சுட்டும் போது ஆண்பாற்சொல், பெண்பாற்சொல், பலர்பாற்சொல் எனப்படும்.

பால் - பகுப்பு. திணையின் உட்பகுப்பு இது. மக்களாகிய உயர்திணையில் சேரன், முத்தன், அண்ணாமலை, குரிசில் என ஆண்பாற் சொற்களும் கயல்விழி, மீனாள், செல்வி எனப் பெண்பாற் பெயர்ச்சொற்களும் மன்னர், அவையோர், சேரர் எனப் பலர்பாற்சொற்களும் வழங்கும். மாந்தர், அறிஞர், மக்கள் என இருபாலுக்கும் இவை பொதுப் பெயர்ச் சொற்களாகவும் வழங்கும்.

தமிழில் ஒருமை, பன்மை என எண் தனியே சுட்டாமல், அதனை இவ்வாறு பாலுள் அடக்கிக் கூறுவர். ஆண், பெண், ஒன்று - ஒருமை. பலர், பல - பன்மை.

## அஃறிணை இரண்டு பால்கள் ஆகும்.

263. ஒன்றே பல என்று இருபாற்றுஅஃறிணை 6

அஃறிணை ஒன்றன் பால், பலவின்பால் என இரண்டு பால்களையுடையது.

அஃறிணைப் பெயர்களில் கலைமான், பிணைமான்; களிறு, பிடி; சேவல், கோழி; காளை, ஆ(பசு) என இருபாற் பட்டவை உள. தொல்காப்பிய மரபியலில் இவ் வேறுபாட்டுடன் வழங்கும் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. சொல் பிரிவு இல்லை யென்றாலும் ஆண்புலி, பெண்புலி; ஆண் நாய், பெண்நாய் என வழங்கலாம் எனவும் குறிப்புளது. ஆயினும் தமிழில் அஃறிணைக்கு ஒருமை, பன்மை மட்டுமே பகுக்கப் பட்டுள்ளன. களிறுகள், புலிகள், பறவைகள், கிளிகள் என்பன இன்று பலவின்பால் எனப்படுவன. முன்பு வினைச்சொல்லை வைத்தே இவை பகுத்தறியப்பட்டன. புலி பாய்ந்தது, களிறு பிளிறியது என்றால் ஒன்றன் பால்; புலி பாய்ந்தன, களிறு பிளிறின என்றால் பலவின்பால். அஃறிணையில் ஆண், பெண் பகுப்பை விடுத்து, மரம் செடி கொடி மலர் அனைத்தும் வருதலின் ஒன்று, பல எனும் எண்போதுமென்றும் அவையும் வினைச்சொல்லால் அறியப்படும் என்றும் பால்பகுப்புச் செய்தனர். 'முல்லையும் பூத்தியோ?' என்றால் ஒருமை - ஒன்றன்பால். 'முல்லையும் பூத்தன, பிடவும் மலர்ந்தன' - பலவின் பால். அதில் தெளிவின்மை கருதியே இப்போது 'கள்' விகுதி, அஃறிணைப் பன்மைக்கு (பலவின்பாலுக்கு) மிகுதியும் பயன்படலாயிற்று (புலிகள், கிளிகள்).

## ஆணாகவும் பெண்ணாகவும் ஆகாமல் பிறந்தவற்றுக்கு எவ்வாறு திணை, பால் பகுப்பது

264. பெண்மைவிட்டு ஆண்அவா வுவபேடு ஆண்பால்
ஆண்மைவிட்டு அல்ல தவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும். 7

ஆணும் பெண்ணுமல்லாமல் பிறப்பவற்றை இதில் 'பேடு' என்று குறிக்கப்படுகிறது. பெண்தன்மையை விட்டு, ஆண்தன்மையை அவாவும் பேடுகள் - அதாவது பெண் தன்மை குறைந்து ஆண்தன்மை மிகுந்தவை உயர்திணை ஆண்பாலாக வழங்கப்படும். (இவை 'அலி' எனப்படுவ துண்டு) ஆண்தன்மையை விடுத்து, பெண்தன்மையை அவாவும் பேடுகள் - அதாவது ஆண்தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்தவை உயர்திணைப் பெண்பாலாகக் குறிக்கப் படும். (இவை 'பேடி' என அழைக்கப்படுவதுண்டு) இவை இரண்டும் உயர்திணையில் மட்டுமன்றி அஃறிணையாக வினை முடிபு கொடுத்தும் கூறப்படும். (பேடு பேடி எனத் திரித்து வழங்கப்படுகிறது.) அலி வந்தான்; பேடி பேசினாள். அலி வந்தது; பேடி பேசியது. இன்று அரவாணிகள் என்று கூறி, பெண்பாலில் சேர்க்கின்றனர்.

## மூன்று இடமாகிய படர்க்கை,தன்மை, முன்னிலைச் சொற்கள் பால் உணர்த்தும் முறை

265. படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்
பெறப்படும் திணைபால் அனைத்தும்; ஏனை
இடத்தவற்று ஒருமை பன்மைப் பாலே 8

நாமம்-பெயர்ச்சொல். வினைமுற்றுச் சொல்லும் பெயர்ச் சொல்லும் படர்க்கையைக் குறிக்கும் போது இரு திணையும் ஐம்பாலும் ஆகிய அனைத்தையும் உணர்த்தும்.

வந்தான்-உயர்திணை ஆண்பால் வினைமுற்றுச் சொல்

வந்தாள்-உயர்திணை பெண்பால் வினைமுற்றுச் சொல்

வந்தனர் - உயர்திணை பலர்பால் வினைமுற்றுச் சொல்

வந்தது-அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்றுச் சொல்

வந்தன-அஃறிணை பலவின்பால் வினைமுற்றுச் சொல்

முருகப்பன் - உயர்திணை ஆண்பால் பெயர்ச்சொல்

வள்ளி - உயர்திணை பெண்பால் பெயர்ச்சொல்

மாந்தர், மக்கள் - உயர்திணை பலர்பால் பெயர்ச் சொல்

கிளி, மான் - அஃறிணை ஒன்றன்பால் பெயர்ச் சொல்

கிளிகள், மான்கள் - அஃறிணை பலவின்பால் பெயர்ச் சொல்

இதனைச் சுருக்கமாக அவன் அவள் அவர் அது அவை எனச் சுட்டுச் சொற்களால் சுட்டிக்கூறிவிடலாம். வினைமுற்றுச் சொல் இருதிணை, ஐம்பாலை உணர்த்துவதில் பெயர்களை விடச் சிறந்தன. அதனால் முதலிற் கூறப்பட்டன. பாரி, ஆய், மாணிக்கம், சிதம்பரம் எனக் கூறும் போது, ஆண்பாலைக் குறிக்கும் இறுதிநிலை இல்லை. மாணிக்கம் வந்தாளா எனக் கேட்டால் பெண்பாலாகிவிடும். ஆனால் வினைச்சொல்லில் தடுமாற்றமே இல்லை. இறுதிநிலை - விகுதி பெண்பால் என்பதைத் தெளி வாகக் காட்டிவிடும்

ஏனை இடத்தவற்று - ஏனைய தன்மை (நான்), முன்னிலையில் (நீ), ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் மட்டும் பெறப்படும். ஆகவே தன்மை முன்னிலைகள் திணையையும் பாலையும் காட்டமாட்டா என்பது பெறப்படும்.

வந்தேன், படித்தேன் - தன்மை ஒருமை வினைச்சொல்

வந்தோம், படித்தோம்-தன்மைப் பன்மை வினைச் சொல்

வந்தாய், படித்தாய்-முன்னிலை ஒருமை வினைச்சொல்

வந்தீர், படித்தீர் - முன்னிலைப் பன்மை வினைச்சொல்

நான், யான் - தன்மை ஒருமைப் பெயர்ச்சொல்

நாம், யாம், நாங்கள் - தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல்

நீ - முன்னிலை ஒருமைப் பெயர்ச்சொல்

நீர், நீங்கள் - முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல்

'நீ என்னுடன் வா; நான் சிங்கத்தைக் காட்டுகிறேன்' என்று நரி சொன்னதாகக் கதை கூறுவர். எனவே தன்மை,

முன்னிலைக்கேயுரிய வினை, பெயர்ச்சொற்களில் ஒருமை, பன்மை மட்டும் தெரியுமே தவிர, திணை பால் அறிய முடியாது.

அறிஞர் : அறி - பகுதி, ஞ் - இடைநிலை, அர் - விகுதி - என அச்சொல்லின் அமைப்பை அறிகிறோம். அப்போது அச்சொல் தன்னை உணர்த்துகிறது. அப்துல்கலாம் ஓர் அறிஞர் என்னும் போது 'அறிஞர்' எனும் சொல், தன்னைக் குறிக்காமல், தன்னால் சுட்டப்படும் நமது குடியரசுத்தலைவரைக் குறிக்கிறது. இவ்வாறே எல்லாச் சொற்களும் தன்னையும் குறிக்கும்; தன்னால் சுட்டப்படும் பிறிதொன்றையும் குறிக்கும் என உணரவேண்டும்.

## மூவிடம் என்பன யாவை?

266. தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே 9

மூன்று 'இடங்கள்' என்பன தன்மையும் (நான்), முன்னிலையும் (நீ), படர்க்கையும் (அவன்) ஆகும். பெயர்ச் சொல்லில் இவை மூவிடம். வந்தேன் (நான்); வந்தாய்(நீ), வந்தான் (அவன்) - வினைச் சொல்லில் மூவிடம். இவை 'ஒருமை' பற்றியன.

நாங்கள், நீங்கள், அவர்கள் - இவை பன்மைப் பெயர்கள்.

வந்தோம், வந்தீர்கள், வந்தார்கள் - இவை பன்மை வினைகள்

நான் படித்தேன் - தன்மை ஒருமைப் பெயரும் வினையும்

நாங்கள் படித்தோம் - தன்மைப் பன்மைப் பெயரும் வினையும்

நீ கேட்டாய் - முன்னிலை ஒருமைப் பெயரும் வினையும்

நீங்கள் கேட்டீர்கள் - முன்னிலைப் பன்மைப் பெயரும் வினையும்

படர்க்கையில் இவ்வாறு ஒருமை, பன்மை மட்டுமன்றி,

திணைபால் அனைத்தும் அறியப்படும்.

அவன் கூறினான் - உயர்திணை ஆண்பால் ஒருமைப் பெயரும் வினையும்

அவள் பேசினாள் - உயர்திணை பெண்பால் ஒருமைப் பெயரும் வினையும்

அவர்கள் கூடினார்கள் - உயர்திணை பலர்பால் (பன்மை) பெயரும் வினையும்

அது கூவியது - அஃறிணை ஒன்றன்பால் பெயரும் வினையும்

அவைகள் கூவின - அஃறிணை பலவின்பால் பெயரும் வினையும்

தன்மை, முன்னிலையில் திணை, பால் அறிய இயலாது என்பதையும் ஒருமை பன்மை மட்டுமே அறியமுடியும் என்பதையும் படர்க்கையில் திணை பால் எண் மூன்றையும் அறியலாம் என்பதையும் மேலே காட்டிய உதாரணங்களால் நன்கு அறியலாம்.

## உலக வழக்கு - பேச்சு மொழி வகையும் விளக்கமும்

267. இலக்கணம் உடையது, இலக்கணப்போலி
மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்,
இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனும்முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல் 10

கடவுள் வாழ்த்துக்குப் பிறகு, இரண்டாம் நூறபாவில் கூறப்பட்ட வரிசைப்படி, இலக்கணம் கூறப்படுகிறது. மூவகை மொழிகள், திணையும் பாலும், மூவகை இடம் விளக்கப் பட்டன. 'வழக்கொடு செய்யுளின்' என்பன இனி விளக்கப் படும். குறிப்பும் வெளிப்படையுமாய்ப் பொருள் உணர்த்துதல் அடுத்துவரும். இவை 'சொல்' பற்றிய முன்னுரைகள் எனலாம்.

உலகப் பேச்சுவழக்கை, இலக்கணத்திற்குள் அடக்கும்

போது (1) இயல்பு வழக்கு (2) தகுதி வழக்கு என இரண்டாகப் பகுக்கப்படும். இயல்பு வழக்கு - ஒரு மொழியில் மாற்ற மெதுவும் இன்றி இயல்பாக வழங்குவன. தகுதி வழக்கு - ஒன்றை உள்ளவாறே கூறுதல் தகுதியன்று என்றோ, நாகரிக மன்று என்றோ கருதி அதை விடுத்து, வேறொரு சொல்லால் கூறுவது, தகுதிநோக்கிக் கூறுவதாகும்.

இயல்பு வழக்கு மூவகைப்படும் - (1) இலக்கணம் உடையது - இலக்கண நெறிப்படி, தொன்று தொட்டு இயல்பாய் வழங்குவது.

(2) இலக்கணப் போலி - தொன்று தொட்டு மாறி பேச்சில் இடம் பெற்று விட்டவை.

(3) மரூஉ - பிறவாறு மருவி வழங்குவன. மக்கள் சில காரணங்கருதிச் சிதைத்தும் சுருக்கியும் வழங்கி, மொழியில் இடம் பெற்றவை.

பிறவாறு பிழைபட்டவை, ஒலித்திரிபுகள், கொச்சைகள், குறுமொழிகள் - இலக்கணம் என ஏற்கப்படா. அவை பேச்சில் இடம்பெறினும் கட்டளைத் தமிழாம் - எழுத்து வழக்கில் ஏற்கப் படா. தமிழ் இருவகை வழக்குள்ள மொழி. பேசுவது போலவே எழுதுவதுமில்லை. எழுதுவது போலவே பேசுவது மில்லை. எழுத்து மொழி - இலக்கிய மொழி- பாடமொழி - படிப்புமொழி கட்டளைத் தமிழ் (standard Language) எனப்படும் செந்தமிழா கவே இருக்க வேண்டும். அதை உணர்த்தவே இப்பாகுபாடு. உலகப் பேச்சுவழக்கிலும் காணப்பட்டு, இலக்கியத்தும் ஏற்கப் பட்டவை மட்டுமே இந்நூற்பாவில் வகைமைப் படுத்தப் படுகின்றன.

எடுத்துக்காட்டுக்கள்:

இயல்பு வழக்கு :

(1) இலக்கணமுடையது - கண், மெய், வாய், நிலம், நீர் என வரும் அனைத்துச் சொற்களும் இதில் அடங்கும்.

(2) இலக்கணப் போலி - இலக்கணமுடையது போல, மக்கள் வழக்கில் இடம் பெற்றுவிட்டவை. இல்முன் என்பதை

முன்றில் என்றும் கோவில் என்று வகர உடம்படுமெய் வரவேண்டியதைக் கோயில் என்றும் இவ்வாறே மாற்றி வழங்கி, இலக்கியத்திலும் ஏறியவை இவை. கண்ணின் மேற்பகுதியை - கண்மீ என்னாமல் மீகண் என்றனர். நகரின் புறப்பகுதியை, நகர்ப்புறம் என்னாது புறநகர் என்பர். இவை ஓரளவு இலக்கணம் உடையது போல்வனவே.

(3) மரூஉ - பிறவாறு மருவி வழங்கி, ஓரளவு ஏற்புடையன. புதுச்சேரி - புதுவை, புதுக்கோட்டை - புதுகை, கோயம்புத்தூர் - கோவை. சோழநாடு - சோணாடு. வாழ்நாள் - வாணாள். ஆதன் தந்தை - ஆந்தையானது இது போன்றதே. யானை - ஆனையானதும் பூனை - பூசையானதும் மரூஉமொழிகளே.

**தகுதி வழக்கு மூவகைப்படும் :**

(1) இடக்கரடக்கல் - நாலுபேர் உள்ள இடத்தில் சொல்லக் கூடாத, இடக்கரான சொல்லை மாற்றிக் கூறுவர். பள்ளிப் பிள்ளைகள் 'ஒன்றுக்கு', 'இரண்டுக்கு' என்று கேட்பன, அவசர நிமித்தமான இயற்கை அழைப்புக்கள். பெண்கள் 'சற்றே ஒதுங்கி' வருவதாகக கூறுவர். பூப்பெய்தினாள் என்பது; மாத விடாயை 'வெளியை' எனச் சிலர் கூறுதல்; இன்று குழந்தை களிடம் 'ஆய்வருதா' எனக் கேட்டல் யாவும் இடக்கரடக் கலேயாகும். தொல்காப்பியர் இடக்கரடக்கலை, 'அவையல் கிளவி' என்பார். அவையோர் முன் கூறத்தகாதனவற்றை, மறைத்துக் கூறுதலே நாகரிகம் என்பார் அவரும்.

(2) மங்கலம் - மங்கலமல்லாதவற்றை மங்கலமாகக் கூறுதல். விளக்கை 'அணை' என்னாமல், மலையேற்று அல்லது நல்லா வை என்றெல்லாம் மங்கலமாகக் கூறுவர். கள் குடித்தவர் வாய்க்கு வந்தவாறு பேசிச்செல்வர். அதைச் 'சொல் விளம்பி' என்றனர். முன்பு இடுகாட்டை - நன்காடு என்ப துண்டு. 'போகிறேன்' என்றால் மனம் ஒவ்வார்; 'போய் வரு கிறேன்' என்று சொல்ல வேண்டுமென்பர். மங்கலமல்லாததை, மங்கல வழக்காகச் சொல்லவேண்டுமென்பதில், தமிழ் மக் களுக்குப் பெருநம்பிக்கையுண்டு. நிகழ்ச்சிநிரலில் கடைசிப் பேச்சை 'முடிவுரை' என்று போடாமல் 'நிறைவுரை' என்று

போடுவர். (3) குழூஉக்குறி - வணிகரும் நண்பர் குழாமும் சிறு குழுவினரும் தம்முள் வழங்குவன இவை. 'தண்ணீர்' போட்டிருக்கிறான் என்பர். செல்வரை, 'இப்போது வகையாக' இருக்கிறார் என்பதுண்டு. இன்று ஊழலை, 'பெட்டி' கொடுத்துக் காரியம் சாதிப்பதாகக் கூறுகின்றனர். மாணவர் 'அறுவை' என்பது கூட, ஒரு குழூஉக்குறிதான். அவ்வக் குழுவினர்க்கே விளங்கும் படியான இவை மிகப்பலவுள.

இவ்வாறு இயல்பு வழக்கு மூன்றும் தகுதி வழக்கு மூன்றுமாக உலக வழக்கிலிருந்து, இலக்கணிகள் ஏற்றுக் கொண்டவை ஆறு வழக்காறுகள் ஆகும்.

## செய்யுள் வழக்கு - (இலக்கிய வழக்கு)
## செய்யுள் இன்னதென்பது

268. பல்வகைத் தாதுவின் உயிர்க்குஉடல் போற்பல
சொல்லால் பொருட்கு இடனாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் 11

செய்யுள் அல்லது இலக்கியம் என்பது புலமை மிக்க படைப்பு வல்லுநர்கள் அழகு பெறவும் அணி நலம் பொருந்தவும் படைப்பனவாகும். செய்யுளுக்கு உயிர் அது தரும் பொருள் ஆகும். அந்த உயிருக்கு உடல் போன்றது செய்யுளின் வடிவம் - யாப்பு வடிவம். அது யாக்கை (உடம்பு) போன்று யாக்கப்படுவது. பலவகைத் தாதுக்கள் எனப்படும் தோல், இரத்தம், இறைச்சி (தசை), நிணம், எலும்பு, மச்சை என்னும் நரம்புத் தசை, வீரியம் ஆகிய ஏழுவகையால், உயிருக்கு இடமாக உடல் யாக்கப்படுவது போல, சுவையுணர்வுள்ள பொருளுக்கு இடமாக யாக்கப்படுவது செய்யுள். எனவே,

எழுத்து சொல் பொருள் அணி நான்கும் இவ் யாப்பினுள் அடங்கி நடக்கும் என்பதாம்.

## சொற்களும் தொடர்களும் உலக வழக்கிலும் செய்யுள் இலக்கிய வழக்கிலும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பொருள் தரும் நெறி முறைகள்

269. ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி,
ஆகுபெயர், அன்மொழி, வினைக் குறிப்பே,
முதல், தொகை, குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை 12

இங்கு குறிப்புப் பொருள் தரும் சொற்கள் எனப் பட்டியலிடப்பட்டவை தவிர, நிலம், நீர், தீ, மனிதன், மாடு எனச் சொல்லப்படுவன எல்லாம் வெளிப்படையாகப் பொருள் தருவனவாம்.

**குறிப்பினால் பொருள் தருபவை :**

(1,) ஒன்றொழி பொதுச் சொல் - இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச்சொல். அருவியில் குளித்தவர்களில் அறுவர் தலைவாரிப் பூச்சூடிக் கொண்டவர்; பரிசு பெற்றவர்களில் மிகுதியானவர் தாவணியணிந்த இளையோர் ஆவர். இவை ஆடவரல்லர் எனக் குறிப்பால் உணர்த்தினமையின் 'ஒன்றொழி பொதுச்சொல்' ஆகும்.

(2) செய்யுள் விகாரம் ஒன்பது வகைப்படும். வலித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என வரும். இருப்புக் கையன்றோ இது - இரும்பு இருப்பானது வலித்தல் விகாரம். ஓந்தியை ஓதி என்பது இடைக்குறை. நீல் நிறக் கடல் - நீலம் நீல் ஆனது கடைக்குறை. உலக வழக்கில் இவை அருகியே வரும்.

(3) தகுதி: தகுதி வழக்கு மூன்று. இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி, இவையும் குறிப்பால் பொருள் தரு

வனவே. நல்லா இரு, அரசாளுவாய் - வசைச் சொல்லை மங்கல மாய்க் கூறுவது. (4) ஆகுபெயர் - வீட்டுக்கு வெள்ளை அடித்தனர். (சுண்ணாம்பு). சலவை எத்தனை? (உருப்படிகளை). (5) அன் மொழித்தொகை - 'வயங்கிழை ஒழிய வாரேன் நெஞ்சே' - விளங்கும் அணி பூண்ட காதலியைக் குறிக்கும். நயம்புள்ளி வந்தார் என்பது அம்மனிதரைக் குறிக்கும். (6) குறிப்பு வினை- அவன் நல்லன். 'நல்லன்' - எனப்பெயரைக் குறிக்காது நல்லன் ஆயினான் என்பதால் குறிப்பாயிற்று. (7) முதற் குறிப்பு - 'அகர முதல' என்பது கடவுள் வாழ்த்து. - முதற் குறளை இது சுட்டுகிறது. (8) தொகை - ஐவர் (பாண்டவர்), 'அறுவர் பயந்த செல்வன்' - கார்த்திகைப் பெண்கள்.

(9) இவைபோல் 'குறிப்புச் சொற்கள், தொடர்கள்' மிகப்பலவுள. இலக்கியத்தில் குறிப்புப் பொருள் தருவன அனைத்தும் இதில் அடங்கும். பாயா வேங்கை (மரத்தைக் குறிக்கும்), பறவா அன்னம் (சோற்றைக் குறிக்கும்). 'பெரிய ஆளப்பா நீ' என்பதிலும் எள்ளற் குறிப்பு உளது. 'தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுகலான்' (1073) அங்கதக் குறிப்பு இது. எந்த மொழி இலக்கியமாயினும்,. குறிப்புப் பொருள் உள்ளதே கவிதை யாகும். குறிப்பிற் பொருள் தருவன குறிப்புச் சொற்கள் அல்லன எல்லாம் வெளிப்படப் பொருள் தரும் சொற்கள். இதுவரை பெயரியலில், சொல் பற்றிய முன்னுரையே கூறப்பட்டது.

## தமிழில் வழங்கும் சொற்கள் எத்தனை வகைப்படும்?

**270. அதுவே,**
**இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர், வினை**
**எனஇரண் டாகும் இடையுரி அடுத்து**
**நான்குமாம் திசை, வட சொல்அணு காவழி 13**

தமிழ்ச் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டுவகையாய்த் தலைமை வாய்ந்தனவாகும். இவற்றை அடுத்து, இப்பெயர்வினைகளுடன் சேர்ந்து வழங்குவன இடைச்சொல், உரிச்சொல் எனப்படும். எனவே பெயர், வினை,

இடை, உரி எனப் பகுப்பதே, மிகுதியான வழக்கு. இவை இயற்சொல்லாயும் திரிசொல்லாயும் பிரிவுபட்டும் வழங்கும். இயற்சொல் - இயல்பாக வழங்குவது. திரிசொல் - ஒரு பொருள் குறித்த பல சொல்லும் பல பொருள் குறித்த ஒரு சொல்லும் என்று விளக்குவர். புலவர்கள் பொன் என்பதைப் பொலம் என்றும் வாழ்நன் என்பதை வாணன் என்றும் திரித்து வழங்கு வதுண்டு. இவை பெரிதும் இலக்கியத்தில் வருவன. இதனால் சொற்களை பெயர் இயற்சொல், பெயர்த்திரிசொல், வினை இயற்சொல், வினைத்திரிசொல் என இருவகைப்படுத்தலே முறையாகும். உரையாசிரியர்கள் இடையியற்சொல், இடைத் திரிசொல் என்றும் உரியியற்சொல், உரித்திரிசொல் என்றும் இணைத்துக் கூறுவர். திசைச்சொல் என்பது இன்று நாம் வட்டார வழக்கு என்பது போல்வதே. முன்பு தமிழகம் சார்ந்து, பன்னிரு வட்டார வழக்குகள் வழங்கின. அவற்றுட் சிலவே கன்னடம், துளு, தெலுங்கு, மலையாளம், குடகு, கொங்கணம் என மாறிப்போயின. தமிழில் வந்து வழங்கும் சமற்கிருதச் சொல்லே, வடசொல் எனப்பட்டது. இதனைப் பொதுவாக தமிழில் வந்து வழங்கும் பிறமொழிச் சொல் என்று கூறலாமாயினும் முன்பு வடமொழிச்சொல்லே பெரும் பான்மையாகக் கலந்ததால் அவ்வாறு அழைக்கப்பெற்றது.

தொல்காப்பியர் கூறுகிறபடி பெயரும் வினையும் என்பன தலைமைவாய்ந்த தமிழ்ச் சொற்கள். அவற்றினிடையே சார்ந்து வழங்குவன, இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகும். இது தமிழ் மொழியின் அடிப்படைச் சொற்கள்.

செய்யுளில் வழங்குங்கால் இவை நான்கும், தன் இயல்பாய் வழங்குவதே இயற்சொல். அதனை ஒருசொல் பலபொருள் தருவன, பலசொல் ஒருபொருள் தருவன என்பன போலப் புலவர்கள் வழங்குவன திரி சொல் எனப்படும். இனி அன்று திசைச்சொல் எனவும் வழங்கியது, தமிழில் வட்டார வழக்குகளாக விளங்கியன. தமிழில் வந்து வழங்கிய சமற் கிருதச் சொற்கள் தமிழ் வடிவம் பெறும். ஸ்லோகா, சுலோக மாகும்; ஸ்ருதி சுருதியாகும்; க்ரியா கிரியை ஆகும். இங்ஙனம்

தமிழ் வடிவமாய், தமிழ் ஒலிக்கேற்ப மாற்றி வழங்கப் பட்டனவே இங்கு வடசொல் எனப்பட்டன.

சுருக்கமாகச் சொன்னால் பெயர் வினை இடை உரி என்பன பொதுவகை; இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொல் என்பன ஒருவகை. இவை ஒன்றினொன்று மேவி வருமிடங்களும் உள.

## 'இயற்சொல்' என்பதன் விளக்கம்

**271. செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்**
**தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல் 14**

கண், மண், நீர், நிலம் என இயல்பாக, செந்தமிழாக, சிதைவின்றி, எல்லோர்க்கும் எளிதில் தம் பொருளை விளக்கும் தன்மையுடையவை அனைத்தும் 'இயற்சொல்' எனப்படும்.

நீர், மணம், நாள் - பெயர் இயற்சொல். படித்தான், சிரித்தான் - வினை இயற்சொல். கடவுளை, மனிதனால் - ஐ ஆல் இடை இயற்சொல்.

## 'திரிசொல்' என்பதன் இலக்கணம்

**272. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்**
**பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்**
**அரிதுணர் பொருளன திரிசொல் லாகும் 15**

இயற்சொற்கள் எல்லோராலும் அறியப்படும். அவ் இயற் சொற்களிலிருந்தே திரிசொற்களும் கிளைப்பொருள்களால் வேறு வகைப்பட்டுப் பலபொருள்படும். அதனால் அவை கற்றவர்களால் அரிதின் உணரப்படுவனவாகும்.

**1. ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரி சொற்கள் :** அலர், மலர், பூ. அரும்பு, மொட்டு, மொக்குள், முகை. பிழை, தப்பு, தவறு, குற்றம், பிசகு. இவை ஒரே பொருள் தரும் பெயர்த் திரி சொற்கள்.

**ஒரு பொருள் குறித்த பல வினைத் திரி சொற்கள்:** பகர்ந்தான், கூறினான், சொன்னான், செப்பினான், உரைத்தான். செத்தான், துஞ்சினான், பட்டான், உயிர்துறந்தான். இவை ஒரே பொருளைச் சிறுசிறு வேறுபாட்டுடன் தரும் பலவினைத்திரி சொற்கள். நடந்தான், இருந்தனன், ஆன், அன் என்பன **ஒரு பொருள் குறித்த பல இடைத்திரி சொற்கள்.** சேறும், வருதும் - றும், தும் என்பனவும் ஒரு பொருள் தருவனவே. சால, உறு, தவ, நனி, கூர், கழி - மிகுதிப் பொருள் தரும் **ஒரு பொருள் குறித்த பல உரித் திரி சொற்கள்**

**பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்** - செவ்வி - தக்கநேரம், த்குந்த பக்குவம், சிறந்த தன்மை, புதுமையுடைமை.

**பலபொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்** - விளம்பினான் - விளக்கினான், திரும்பத்திரும்பச் சொன்னான், விளம்பரப் படுத்தினான், நிறைய ஊற்றினான்.

**பலபொருள் குறித்த ஓர் இடைத் திரிசொல்** - ஏ : தேற்றம், வினா, பிரிநிலை முதலிய பலபொருள் தரும். (தவறே இல்லை, அவனே செய்தான், இவர்களுள் ஒருவனே கள்வன்)

**பலபொருள் குறித்த ஓர் உரித்திரிசொல்** - கடி : மணம், காவல், கூர்மை, அச்சம் எனப் பலபொருள் த்ரும். (கடி மலர், கடிநகர், கடிவேல்)

## 'திசைச்சொல்' என்பதன் விளக்கம்

**273. செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்**
**தம்குறிப்பினவே திசைச்சொல் என்ப** 16

திசைச்சொல் என்பது இன்று நாம் 'வட்டார வழக்கு' என்பதோடு ஒத்தது.

'செந்தமிழ் வழங்கும் நாடு' பாண்டியநாடே என்ற கருத்து உண்டு. அச்செந்தமிழ் நிலப் பகுதியைச் சார்ந்தவை பன்னிரண்டு நிலப்பகுதிகள். அவை பெரிதும் செவ்விய தமிழி

னின்றும் வேறுபடுவன என்று கருதி 'கொடுந்தமிழ்' நிலம் என் றனர். அது பொருந்தாது. கொச்சை வழக்குகள், பிழைபட்டவை, ஒலித்திரிபுகள், குறுமொழிகள் ஏற்புடையன அல்ல.

செந்தமிழ் நிலம் சார்ந்த பன்னிரு நிலப்பகுதிகளாகத் தொன்றுதொட்டுக் கூறப்படுவன வருமாறு:

தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி,
பன்றி, அருவா, அதன்வடக்கு - நன்றாய
சீத, மலாடு, புனல்நாடு, செந்தமிழ்சேர்
ஏதம்இல் பன்னிருநாட்டு எண்

இன்று சென்னையில் 'திருவல்லிக்கேணி' என்பது ஒரு குளத்தின் பெயர். கேணி என்று குளத்தைக் குறித்தது ஒரு வட்டார வழக்கு. காரைக்குடிப் பகுதியில் 'தடுமன்' என்பது, சளியைக் குறிக்கிறது. இங்ஙனம் பல ஆயிரம் வட்டார வழக்குச் சொற்கள் உள்ளன. இவற்றினடிப்படையில் வட்டார வழக்குக் கதைகள், புதினங்கள் உள்ளன. அவ்வவ் வட்டார மக்களுக்கே இவை வெளிப்பட விளங்கும். மற்றவர் குறிப்பினால் உணர்வர். அதனால்தான் திசைச்சொற்கள் 'தம்குறிப்பின' என்றார்.

'செப்புமொழி பதினெட்டுடையாள்' என்பார், பாரதியார். ஒன்பதிற்று இரண்டினில் தமிழ் ஒழி நிலத்தினும் - ஒன்பதிற்று இரண்டு = பதினெட்டு. தமிழ் சேர்த்துப் பதினெட்டு மொழிகள் பாரத நாடு முழுவதும் பேசப்பட்டன. அங்கிருந்து வந்தவை தமிழாக்கப்பட்டுத் தமிழில் வழங்கின. பலதிசைச்சொற்களாதலின் இவை யாவும் 'திசைச்சொல்' எனப்பட்டன. இவ்வாறு பாரத நாட்டில் பதினெட்டு மொழி பேசும் நாடுகள் இருந்தன. முன் னர்க் குறித்த பனிரண்டும் தமிழுடன் நெருங்கிய தொடர்புடையவை; தமிழின் கிளைமொழிகள் எனத்தக்கன. பின்னர்ச் சுட்டிய பதினெட்டு மொழிச் சொற்களும் 'திசைச் சொற்களாக' வந்து வழங்கின. இப்பதினெட்டில் தமிழும், தனித்துக் குறித்த வடமொழியும் தவிர்த்த பதினாறும் தமிழில் வந்து கலந்து, தமிழ்ச் சொற்களாக ஏற்கப்பட்டன. இவை மிகமிக அரிதில் வந்து கலந்தவை. இனி உரையாசிரியர்கள் காட்டும் உதாரணங்களை அறிவோம்.

தென்பாண்டி நாடு-பசுவைப் பெற்றம் என்பர்.
சோற்றைச் சொன்றி என்பர்.

குட்ட நாடு-தாயைத் தள்ளை என்பர்.

குடநாடு-தந்தையை அச்சன் என்பர்.

கற்கா நாடு-வஞ்சரைக் கையர் என்பர்.

வேணாடு-தோட்டத்தைக் கிழார் என்பர்.

பூழி நாடு-சிறுகுளத்தைப் பாழி என்பர். நாயை ஞமலி என்பர்

பன்றி நாடு-செறுவைச் செய் என்பர்

அருவா நாடு-சிறுகுளத்தைக் கேணி என்பர்

அருவா வட தலைநாடு-புளியை எகின் என்பர்.

சீதநாடு-தோழனை எலுவன் என்பர்
தோழியை இகுளை என்பர்

மலையமான் நாடு - நீரை வெள்ளம் என்பர்
புனல் நாடு - தாயை ஆய் என்பர்

துளுநாட்டார் மாமரத்தைக் கொக்கு என்பர் எனவும் தெலுங்கர் உரைத்தலைச் செப்புதல் என்றும் எருத்தைப் பாண்டில் என்றும் குறிப்பதையும் உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர்.

இவற்றுள் பல சொற்கள் முன்பும் இன்றும் தமிழ் வழக்கிலும் காணப்படுவனவே என அறியலாம். பதினெட்டு மொழிகள் என்பதில் சிங்களம், சாவகம், கலிங்கம், கொங்கணம் முதலியன குறிக்கப்படுகின்றன.

சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளு குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங் குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே.

இதில் வடமொழி இடம்பெறாமை காண்க, இப் பெயர்களை, இன்றுள்ள பெயர்களுடன் ஒப்பிட்டுத் தமிழின் உலகளாவிய தன்மையையும் உணர்க. இவை பரந்துபட்ட

பாரதமும், பிற சீனம் முதலியனவும், ஒரு காலத்தில் தமிழகமாகவே இருந்து, இம்மொழிகள் படிப்படியே பிரிந்து போயின என எண்ணத் தூண்டுகின்றன. வட்டார வழக்குச் சொற்களைத் தனிக் களஞ்சியமாகத் தொகுக்குமளவு, அவை பல ஆயிரக் கணக்கில், இன்றும் அகராதிகளில் இடம் பெறாமலே உள.

## 'வட சொல்' என்பது யாது?

**274. பொது எழுத் தானும் சிறப்பு எழுத் தானும்**
**ஈர்எழுத் தானும் இயைவன வடசொல் 17**

சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தாலும் சமற்கிருதத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலும் இரண்டற்கும் உரிய எழுத்துக்கள் கலந்தும் ஆகி, தமிழாக்கப்பட்டுத் தமிழில் வந்து வழங்குவன வடசொல் எனப்படும்.

தமிழில் பிறமொழிச் சொல்லை எடுத்தாளும் போது, அதைத் தமிழ்வடிவப் படுத்தல் (தமிழ்மைப்படுத்தல்) வேண்டும். ஆங்கிலச் சொற்களில் பாட்டிலைப் 'போத்தல்' என்றும் பட்டனைப் 'பொத்தான்' என்றும் அலுமினியத்தை அதே சொல்லானும் வழங்குவர். ஜாக்கப் யாக்கோபு, ஜான்-யோவான், ஜோசப்-வளன் இவ்வாறு தமிழாக்கம் செய்வர். இவை தமிழ்ச்சொல் வகைக்குள் அடக்கப்படும்.

சமற்கிருதம், ஸ்ருதி-தமிழில் சுருதி ஆனபின் வடசொல் எனப்படும். சமற்கிருதக் க்ரியா, தமிழில் கிரியை ஆகும்போது தமிழ்மைப் படுகிறது. இவ்வாறு தமிழ் ஒலி வட்டத்திற்குள் அடக்கப்பட்டவை மட்டும் தமிழிலுள்ள 'வட சொல்' எனப்பட்டன.

பதவியலில் நன்னூலார் இதுபற்றி விரிவாக விளக்கி யுள்ளார் (வடமொழி ஆக்கம், நூற்பா எண் 146).

கமலம், காரணம் - இரண்டு மொழிக்கும் பொது எழுத்தால் அமைந்தன. சுகி, சுத்தி. வட மொழிக்கே உரிய எழுத்து, தமிழாக்கம் பெற்றது. ஹரன்-அரன், ஹரி-அரி. இவை வட எழுத்தும் தமிழ் எழுத்தும் கலந்து, தமிழாக மாறியவை. தொல்காப்பியர், சமற்கிருதச் சொல்லை, அம் மொழிக்குரிய ஒலி

வடிவை நீக்கி, தமிழ் எழுத்தொலிக்குள் கொண்டுவந்து அமைப்பதையே 'வடசொல்' என்றார். பிறமொழிச் சொற்கள் அனைத்திற்கும் இவ்விதிகள் பொருந்தும். இதுவரை தமிழில் வழங்கும் சொற்களைக் கூறி, அதன் வகைகளையும் விளக்கியபின், பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூற முற்படுகிறார், பவணந்தியார்.

## பெயர்ச்சொல்

### பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம்

**275. இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்**
**தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா**
**வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே** 18

பெயர்கள் இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என முன்பே விளக்கப்பெற்றது (நூ.62). இங்கு அவை தொன்றுதொட்டு மரபுவழி வருமெனவும் புதிதாக ஆக்கப்பெற்றும் வருமெனவும் கூறுகிறார். 1. இடுகுறி மரபுப் பெயர்கள்: ஆண், பெண், மரம், நிலம், 2. காரணக்குறி மரபுப்பெயர்கள்: விலங்கு (குறுக்காக வளர்வது), பறவை (பறப்பது), தேட்டம் (தேடப்படும் செல்வம்), இவை மரபு வழி வந்தன.

1. இடுகுறி ஆக்கப் பெயர்கள் : இவை மிக அரிதாக வரும். அழகே இல்லாதவனை, 'அழகப்பன்' என்பது. வயது கருதாமல் ஒரு பையனையும் 'ஐயா' என்பது. 2. காரணக் குறி ஆக்கப் பெயர்கள்: சேமக்கலம் (Flask), மின் விசிறி. இவை பெயர் வகைகள். தொழில் - இங்கு வினையாலணையும் பெயர். படித்தவனைப் போற்றுவர், படிப்பவனுக்கு உதவ வேண்டும்; படிக்கிறவனைப் பார்த்துப்படி என இவ்வாறு மூன்று காலமும் காட்டும். ஆனால் பெயர் காலங்காட்டாது; வினைச் சொல்தான் காலங்காட்டும். அதனால், 'தொழில் அல காலம் தோற்றா' என்றார். அதாவது வினையாலணையும் பெயரல்லாதவை காலம் காட்டா என்பதாம். வேற்றுமைக்கு இடனாய் - பெயர்கள் வேற்றுமை ஏற்று வரும். (தம்பியை, தம்பிக்கு, தம்பியால்).

இருதிணை (உயர்திணை, அஃறிணை); ஐம்பால் (ஆண் பெண் பலர் ஒன்று பல); மூவிடம் (தன்மை, முன்னிலை படர்க்கை) ஆகிய இவற்றுள் ஒன்றை ஏற்பனவும் பலவற்றை ஏற்பனவும் என வருவன பெயர்ச்சொற்களாகும்.

பெயர்ச்சொல் என்பது இடுகுறி காரணப் பெயராய், மரபுவழிபட்டும் புதிதாக ஆக்கப்பட்டும் வரும். வினை யாலணையும் பெயர் தவிர்த்த, அனைத்துப் பெயர்களும் காலம் காட்டா. பெயர்கள் வேற்றுமை ஏற்று, இருதிணை ஐம்பால் மூவிடத்துள் ஏதேனும் ஒன்றை ஏற்றும் அல்லது பலவற்றை ஏற்றும் வரும்.

## உயர்திணை ஆண்பாற்பெயர்களாக வருவன யாவை? நன்னூலார் அவற்றைப் பட்டியலிடும் நெறிமுறை யாது?

276. அவற்றுள்,
கிளை, எண், குழூஉமுதல் பல்பொருள்; திணை, தேம்
ஊர், வான், அகம், புறம், முதலநிலன்; யாண்டு,
இருது, மதி, நாள் ஆதிக் காலம்;
தோள் குழல் மார்புகண் காதுமுதல் உறுப்பு;
அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி
சாதி, குடி, சிறப்பு ஆதிப் பல்குணம்;
ஓதல், ஈதல் ஆதிப் பல்வினை
இவை அடை சுட்டு வினாப்பிற மற்றோடு
உற்ற னவ்வீறு, நம்பி, ஆடூஉ,
விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல்
இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப 19

உலகத்துப் பெயர்ச்சொற்களைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என ஆறன் அடிப்படையில் வரும் என்பர். அவற்றுள் ஒவ்வொன்றிற்கும் சிலவற்றைக் குறிப்பிட்டு ஆண், பெண், பலர்பாற பெயர்களை நன்னூல் விளக்குகிறது. நிலம் - இடம். உறுப்பு - சினை. வினை - தொழில்

1. **பொருளால் வரும் பெயர்:** உலகத்திலுள்ள பொருள்களுக் குரிய பெயரனைத்தும் இதிலடங்கும். கிளைப்பெயர் - உறவுப் பெயர். அப்பன், அண்ணன், நமன் (நம்மவன்). எண்ணால் வரும் பெயர்: ஒருவன், ஆறுமுகன், ஏழுமலையான். குழுவால் வரும் பெயர்: அரிமாக்கழகத்தான், கட்சிக்காரன், சன்மார்க்க சபையன். 'முதல்' என்பவற்றால் செல்வன், நண்பன், கடைக் காரன் எனப் பலவும் வரும்.

2. **இடத்தால் வரும் பெயர்:** வெற்பன், சிலம்பன் - குறிஞ்சி நிலத்தவன். எயினன், ஆறலைகள்வன் - பாலை நிலத்தவன். இடையன், ஆயன் - முல்லை நிலத்தவன். ஊரன், மகிழ்நன் - மருதநிலத்தவன். சேர்ப்பன், துறைவன் - நெய்தல் நிலத்தவன். சிங்கப்பூரான், வங்காளத்தான் - தேயத்தால் வரும் பெயர். சென்னையான், பழனியான், கருவூரான் - ஊரால் வரும் பெயர். வானத்தான், அகத்தான், புறத்தான் என்பனவும் மண்ணகத்தான், விண்ணவன் என்பனவும் இடத்தான் வருவனவே.

3. **காலத்தால் வரும் பெயர்கள்:** ஈரெட்டாண்டு அகவையான், (ஆண்டு) வேனிலான், கார்முகிலன் (பருவம்); மாசியான், ஆடியான் (மாதம்), திருவாதிரையான், திருவோணத்தான் (நாள் மீன்) இருது - பருவம். மதி - மாதம். நாள் - நாள்மீன், நட்சத்திரம். ஆதி என்பதால் பகலவன், இருளன் என்பனவும் வரும்.

4. **சினையால் வரும் பெயர்கள்:** வன்தோளன், கார்குழலன், திருமார்பன், கண்ணன், நெடுங்காதன் முதலியன. மூக்கன், தாள்தொடு தடக்கையன், கோச்செங்கணான் முதலியனவும் வரும்.

5. **குணத்தால் வரும் பெயர்கள்:** அளவு - பெரியன், சிறியன், சிறுவன். அறிவு - புலவன், அறிஞன், பாணன். ஒப்பு (உவமை) - வண்ணநிலவன் (அதுபோன்றவன்), மலரவன் (மலர்போன்றவன்). வடிவு - நெட்டையன், குட்டையன், குறளன். நிறம் - செய்யவன், வெள்ளையன். கதி (பிறப்பு)யால் வரும் பெயர்: தேவன், மானுடன், நரகன். சாதி - வேளாளன், பார்ப்பான். குடி - ஆவிநன்குடியன், ஓவியன் (ஓவியக்

குடியினன்), சேரன். சிறப்பு - ஆசிரியன், தலைவன், தொண்டன். ஆதி என்றதால் நல்லவன், தீயவன் என்பனவும் கொள்வர்.

6. தொழிலால் வரும் பெயர்கள் : ஓதுவான், ஈவோன், வண்மையன், பணியாளன்.

இவற்றைச் சார்ந்து வரும் சுட்டுப்பெயர் (அவன், இவன்), வினாப் பெயர் (எவன், யாவன்), பிற (பிறன்), மற்று (மற்றையான்). இதுகாறும் கூறியவை 'னகரமெய்' (ன்) ஈறுபெற்று வருவன. நம்பி, ஆடூஉ, விடலை (இளையவன்), கோ, (அரசன்) வேள், குரிசில், தோன்றல் எனும் இத்தகையனவும் ஆண்பாற் பெயர்கள். இவை தவிர வில்லி, சென்னி, ஏந்தல் என வரும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் அனைத்தையும் கொள்க. இவை முன்மாதிரிகளே.

## உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்

277. கிளை முதலாகக் கிளந்த பொருள்களுள்
எவ் ஒற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோடு இன்னன பெண்பாற் பெயரே 20

முன்பு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆணுக்குரிய அறுவகைப் பெயர்களும் கூறப்பட்டன. அவ்வாறு கூறிய பெயர்களுள், 'ன்' நீக்கி 'ள்' மெய்யீறும் இகர ஈறும் பெற்று வருவன எல்லாம் உயர்திணைப் பெண்பாற் பெயர்களாம். மேலும் தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்பவற்றுடன், இவை போல் வருவன யாவும் பெண் பாற் பெயர்களே.

கிளை (உறவுப்) பெயர்கள்: மனையாள், அக்காள். சினையால் வரும் பெயர்: கயற்கண்ணி, மலர்விழி. இடத்தால வரும் பெயர் : குறத்தி, ஆய்ச்சி. காலத்தால் வரும் பெயர். ஆதிரையாள், இவ்வாறு முன்னே காட்டிய ஆண்பாற் பெயர்களில், 'ன'கர ஒற்றுக்குப் பதிலாக 'ள்', 'இ' எனும் ஈற்றுடன் வரக்கூடிய அனைத்தும் பெண்பாற் பெயர்களே. மாது, இகுளை (தோழி), வீராங்கனை, மங்கை, மடந்தை, பாவை போல்வன பலவுள. இவை முன் மாதிரிகளே.

## உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்

278. கிளந்த கிளை முதல் உற்றரவ் வீற்றவும்
'கள்' ளென் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும் 21

பொருள் இடம் முதலான அறுவகைப் பெயர்களுள், கிளை, எண் எனப் பகுத்துக் கூறப்பட்ட ஆண்பாற் பெயர்களில் 'ர்' எனும் ரகரமெய் ஈற்றையுடையனவும், ஏற்குமிடத்துக் 'கள்' எனும் இறுதியையுடையனவும் இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகும்.

பல்லோர் என்பதே எண் அடிப்படைப் பலர்பாற் பெயராதல் காண்க. கிளை (உறவுப்) பெயர்: தாயர், தந்தையர், உறவினர். எண் அடிப்படையின: அறுபத்து மூவர், எழுவர், பதின்மர். இங்ஙனம் ஏற்குமிடமெல்லாம் 'ரகர' மெய்யீறு சேர்க்க, அது பலர்பாற் பெயராகும்.

'கள்' ஈறு தொல்காப்பியர் கூறாதது; இடைக்காலத்தது. எனினும் 'மக்கள்' என்பதில் முன்பே இது காணப்படுகிறது. திருவள்ளுவர் 'அச்சமே கீழ்களது ஆசாரம்' (1075) என ஆள்வார். இவை அன்று அரிய வழக்கு; இன்றோ பெருவழக்கு.

கோக்கள் (அரசர்கள்), கீழ்கள் (கீழ் மக்கள்) - இவற்றில் கோ, கீழ் என்பவற்றிற்கு, முற்காலத்தில் பன்மை ஈறு இல்லை. எனவே இக் 'கள்' விகுதியைப் 'பகுதிப் பொருள் விகுதி' என்றனர். அரசர்கள், வீரர்கள், படைப்பாளர்கள் - இவற்றில் அரசர் என விகுதியே பன்மையுணர்த்தவும், மேலும் 'கள்' விகுதியும் கூடுதலாக வந்துளது. இவை 'விகுதி மேல் விகுதி ஈற்றுப் பெயர்கள்' எனப்படும். பறவைகள், மாடுகள் என அஃறிணையில் இது பெருவழக்காதலின், உயர்திணையில் 'கள் என் ஈற்றின் ஏற்பவும்' என்றார்.

மாந்தர், மானுடர் எனவும் ஆவியர், வேளிர் (குடிப்பெயர்), எனவும் இவ்வாறு வருவன பலவாம்.

## அஃறிணை ஒன்றன்பாற் பெயர்கள்

**279. வினாச்சுட் டுடனும் வேறும் ஆம் பொருள்**
**ஆதி உறு'து'ச், சுட்டு அணை ஆய்தம்**
**ஒன்றென் எண் இன்னன ஒன்றன் பெயரே 22**

வினா, சுட்டுடனும் அவற்றின் வேறாகிய பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் முதலியவற்றுடனும் 'து' விகுதி பெற்றுவருவன; அஃது - எனச் சுட்டு ஆய்தம் சேர்ந்து வருவன; ஒன்று - எனும் எண்ணுப் பெயர். இவைபோல்வன பிற யாவும் அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாகும்.

'து' விகுதியுடையன அஃறிணை ஒன்றன் பாலாக வரும். வினாப் பொருளில் எது, யாது, ஏது என்று வரும். சுட்டுப் பொருளில் அது, இது, உது எனவரும். வினா, சுட்டுடன் அல்லாமல் வேறாகியும் வரும். அவை பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆறுடனும் வருவன. உயிரது - பொருள். காட்டது - இடம். பனியது - காலம். கோட்டது - சினை. (கோடு - கொம்பு) நல்லது - குணம். ஊர்வது - தொழில். இவ்வாறு அறுவகைப் பெயரும் ஒன்றன் பாலாக வரும். சுட்டு அணை ஆய்தம் - அஃது. இஃது, உஃது. ஒன்று, பிறிது, மற்றையது என வருவனவெல்லாம் அஃறிணையாகும்.

## அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள்

**280. முன்னர் அவ்வொடு வரு, வை அவ்வும்,**
**சுட்டு இறு வவ்வும், கள்இறு மொழியும்,**
**ஒன்றுஅல் எண்ணும் உள்ள இல்ல**
**பல்ல சில்ல உளஇல பலசில**
**இன்னவும் பலவின் பெயர் ஆகும்மே 23**

முன் நூற்பாவில் கூறிய வினா, சுட்டுப் பெயர்களுடனும் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும் பெயர்ச் சொல் வகைகளுடனும், ஏற்குமிடங்களில் வரும் 'வை' ஈற்றுப் பெயர்களும் அகர ஈற்றுப் பெயர்களும் அஃறிணைப் பலவின் பாலில் வரும். வகர மெய் ஈற்றுச் சுட்டுப் பெயர்களும் கள் என்னும் பகுதிப் பொருள் விகுதி ஈற்றுப் பெயர்களும் அஃறிணைப் பலவின்பாலாகும். 'ஒன்று' என்பது தவிர்த்து,

இரண்டு, மூன்று முதலிய எண்ணாகு பெயர்களும் அஃறிணைப் பன்மையே. மேலும் உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில என்னும் எட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர்களும் இவை போல்வன பிறவும் அஃறிணைப் பன்மைப் பெயர்களே.

**வினாப்பெயர்** : எவை, யாவை. **சுட்டுப்பெயர்:** அவை, இவை. **வேறுவகையின:** நெடியவை, நல்லவை, உள்ளவை, இருப்பவை. **பொருட்பெயர் முதலியன** : பொருள் - உயிரின, உடலின, பாலின. **இடம்** : காட்டகத்தன, காட்டகத்த. **காலம்** : மழைக்காலத்தன, மழைக்காலத்த. **சினை** : கண்ணின, கண்ண. **குணம்** : நல்லன, நல்ல. தொழில்: ஊர்வன, ஊர்வ. (இவை 'அ' ஈறும், ஊர்வன, கண்ணின என அன், இன் சாரியையுடன் அகர ஈறும் பெற்று வந்தன.) **வகர மெய் (வ்) ஈற்றுச் சுட்டுப் பெயர்கள்** : அவ், இவ், உவ் என்பன. அவ் வீடுகள், இவ் வுடைகள் எனச் சுட்டலாம் என்பதால், இவையும் சேர்க்கப் பட்டன போலும்.

**'கள்' ஈற்றுச்சொற்கள்:** மரங்கள், நூல்கள். மரம் என்பதன் பன்மை 'கள்' விகுதியால் வருகிறது. 'கள்' விகுதி இல்லாத காலத்து மரம் சாய்ந்தது, மரம் சாய்ந்தன என வினைச்சொல்லை வைத்தே பன்மை அறியப்பட்டது. அதனால் பின்பு 'கள்' விகுதி சேர்ந்த போது 'பகுதிப் பொருள் விகுதி' என்று இதைக் குறிப்பிட்டனர். **எண்ணுப் பெயர்கள்:** ஒன்று என்பது மட்டுமே ஒன்றன்பால். இரண்டு, நான்கு, எட்டு என்று, ஒன்றுக்கு மேற்பட்ட அனைத்தும் பன்மையே. 'மூன்றும் தா' என்றால், மூன்று தமிழும் தா எனப் பொருள் படுதலால் இவை யாவும் எடுத்தாளப்படும்போது 'எண்ணாகுபெயர்கள்' எனப்படும்.

மற்றபடி உள்ள, இல்ல முதலான எட்டும் நூற்பாவிலேயே உள்ளன. உள்ள, உள்ளன; இல்ல, இல்லன என இவை 'அன்' சாரியை பெற்றும் வரும். இன்னன பிறவும் என்றதால் யா, பிற, மற்றைய என அஃறிணைப் பன்மையில் வரும். பெயர்கள் அனைத்தும் கொள்க.

ஆண்பாலுக்கு 'னவ்வீறு' (ன்) உரியது. எனவே அன்,

ஆன், மன், மான், ன் ஐந்தும் அதற்குரியனவாகும். பெண்பாலுக்கு 'ளவ்வொற்று' (ள்) வரும். அதனால் அள், ஆள், ள் மூன்றும் கொள்ளப்படும். பலர்பாலுக்கு 'ரவ்வீறு' (ர்) வரும். அதன்படி அர், ஆர், மார், ர் இந்நான்கும் வரும்.

## பால்பகா அஃறிணைப் பெயர்கள் ஒன்றன்பால் பலவின் பாலுக்குப் பொது

**281. பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற் பொதுமைய 24**

அஃறிணையை ஒன்றன்பால், பலவின்பால் என்று மட்டுமே பகுப்பது தமிழ் வழக்கு. அப்பாற்பகுப்பும் அறியப் படாதவை பாற்பொதுப் பெயர்களாகும். அஃறிணையைத் தமிழில் ஒன்று, பல என்ற பகுப்போடு நிறுத்திக் கொண்டனர். யானை, பறவை, மரம், மலர் என ஒருமை, பன்மை என வேறுபடுத்தாது, அஃறிணைப் பொதுப் பெயராக வருவன பலவுள. இவை 'பால் பகா அஃறிணைப் பெயர்கள்' எனப்பட்டன. இவை ஒன்றன் பால், பலவின்பால் இரண்டனுக்கும் பொதுவானவை என்பது இந்நூற்பாக் கருத்து. யானை - வந்தது; யானை வந்தன. பறவை பறந்தது, பறவை பறந்தன. மரம் செழித்தது, மரம் செழித்தன, முல்லை பூத்தது, முல்லை பூத்தன, கண் சிவந்தது, கண் சிவந்தன. இவ்வாறு இவை வினை முடிபால் மட்டுமே ஒருமை, பன்மை அறியப்படும். அது(து), அவை (வை), கரிய (அ), அவைகள் (கள்) என்பன ஒன்று, பல எனப் பால் அறியப் படுவன.

## இருதிணைக்கும் பொதுவாய் வழங்கும் பொதுப்பெயர்கள்

**282. முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்**
**சினைமுதற் பெயர்ஒரு நான்கும் முறை இரண்டும்**
**தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்**
**எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர் 25**

ஆண், பெண், ஒருமை, பன்மைக்குப் பொதுப்பெயர்கள் :

முதற்பெயர் (முழுப்பெயர்) நான்கு (சாத்தன், சாத்தி உயர் திணை இரண்டு அஃறிணை இரண்டு.) சினைப்பெயர் நான்கு (முடவன் முடத்தி இருதிணைப்பொது நான்கு). சினை முதற் பெயர் (முடக்கொற்றன், முடக்கொற்றி இரு திணைப் பொது நான்கு) முறை இரண்டு தாய், தந்தை. தன்மை நான்கு (யான், யாம் இருதிணைக்கும்) முன்னிலை ஐந்தும் (நீ - இரு திணை ஒருமை மூன்று, நீர் - இருதிணைப் பன்மை இரண்டு) - மற்றும் எல்லாம், தாம், தான் என்பன இருதிணைப் பொதுப் பெயர்கள்..

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வழங்கும் பெயர்களை இந்நூற்பா விளக்குகிறது.

முன்காலத்தில் காளை, பசுப் போன்ற அஃறிணை களுக்கும் சாத்தன், சாத்தி, மருதன், மருதி போலப் பெயரிட்டு அழைத்தனர். இன்றும் செல்ல நாய், பூனை, கிளி போன்ற வற்றை மணி, காரி, பாரி, பரிதி, செல்லி என இவ்வாறு பெயரிட்டு அழைப்பதுண்டு. பெரிதும் ஆங்கிலப் பெயரிட்டு அழைப்பர். இதனால் சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது (காளை); மருதி வந்தாள், மருதி வந்தது (பசு) என இரு திணைக்கும் பொதுவாய் வழங்கினர். இன்றும் பாண்டியன் வந்தான்; பாண்டியன் புறப்படுகிறது (இரயில்) என இரு திணைப் பொதுப்பெயர் பலவுள.

இருதிணைப் பொது முதற்பெயர் நான்கு : ஆண், பெண்; ஒன்று, பல.

இருதிணைப் பொதுச் சினைப்பெயர் நான்கு: ஆண், பெண், ஒன்று, பல.

இருதிணைப் பொதுச் சினைமுதற்பெயர் நான்கு: ஆண், பெண்; ஒன்று, பல

(சாத்தன் என்பது முதற்பெயர் - முழுப் பெயர். முடத்தி- சினைப்பெயர் (கால்முடம்). முடக் கொற்றன் - சினைமுதற் பெயர்)

இருதிணைப்பொது முறைப்பெயர் இரண்டு : ஆண், பெண்.

இருதிணைத்தன்மைப் பொதுப்பெயர் நான்கு: யான், யாம் (உயர்திணை 2 + அஃறிணை2)

இருதிணை முன்னிலைப் பொதுப்பெயர் ஐந்து - நீ, நீர், இருதிணைக்கும் ஐந்து. எல்லாம், தாம், தான் என்பன மூன்று

ஆக - இருதிணைப் பொதுப் பெயர்கள் 26

இன்னன (இவை போல்வன) பிறவும் உள என்றமையால் கீழ் வருவனவும் கொள்ளப்படும். சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது. சந்திரன் தோன்றினான், சந்திரன் தோன்றியது. இவ்வாறு ஒரு பொருளையே உயர்திணையாக்கியும் அஃறிணையாக்கியும் கூறுவதுண்டு. ஊமை வந்தான், ஊமை வந்தாள்; செவிடு வந்தான், செவிடு வந்தாள் எனப் பொதுப் பெயராக ஆளுவதுண்டு. உண்டேனை, வந்தேனை - தன்மை வினையாலணையும் பெயர். உண்டாயை, வந்தாயை - முன்னிலை வினையாலணையும் பெயர். இவையும் இருதிணைப் பொதுப் பெயர்களே.

முன்னே குறிப்பிட்ட 26 இருதிணைப் பொதுப் பெயர்களின் விரிவும் விளக்கமும் தொடர்ந்து கூறப்படுகின்றன.

## முதற்பெயர் நான்கு, சினைப்பெயர் நான்கு, சினைமுதற்பெயர் நான்கு, முறைப்பெயர் இரண்டு ஆகியவற்றை விரித்து விளக்குதல்

**283. ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மையின்**
**ஆம் அந் நான்மைகள்; ஆண்பெண் முறைப்பெயர் 26**

முதற்பெயர் நான்கு:

ஆன்மை முதற்பெயர் - சாத்தன், மருதன்

பெண்மை முதற்பெயர் - சாத்தி, மருதி

ஒருமை முதற்பெயர் - கோதை, பரிதி

பன்மை முதற்பெயர் - கோதைகள், பரிதிகள்

**சினைப்பெயர் நான்கு:**

ஆண்மைச் சினைப்பெயர் - முடவன்

பெண்மைச் சினைப்பெயர் - முடத்தி
ஒருமைச் சினைப்பெயர் - செவியிலி
பன்மைச் சினைப்பெயர் - செவியிலிகள்

**சினைமுதற்பெயர் நான்கு:**

ஆண்மைச் சினை முதற்பெயர் - முடக்கொற்றன்
(முடம்-சினை, கொற்றன்-முதல்)
பெண்மைச் சினை முதற்பெயர் - முடக்கொற்றி
ஒருமைச் சினை முதற்பெயர் - கொடும்புறமருதி
(வளைந்த முதுகையுடைய மருதி பெண் / பசு)
பன்மைச் சினைமுதற்பெயர் - கொடும்புற மருதிகள்

**முறைப்பெயர் இரண்டு:**

ஆண்மை முறைப்பெயர் - தந்தை
பெண்மை முறைப்பெயர் - தாய்

இவற்றின் சாரம்-உயர்திணை, அஃறிணைக்குப் பொதுப் பெயர்கள் உண்டு என்பதேயாம். இவற்றின் உள்வகைகள் முற் காலத்தில் தேவைப்பட்டன. இன்று இவற்றை விளக்கமாகச் சொல்லிவிடுவதால், இப்பகுப்பு அத்துணைப் பயன்படுவ தில்லை. வீட்டுநாய் மணிக்குக்கால் முடமானது - முடம் - என்று முடித்துவிடுவர்.

## இருதிணைப் பொதுப்பெயர்கள் தத்தம் பாலை உணர்த்தும் சொல்லில் முடியும்

**284. அவற்றுள்**
**ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும் 27**

முன்னே விரிவாகக் கூறிய 26ம் பிறவுமாகிய பொதுப் பெயர்கள் ஒவ்வொன்றும் இருதிணையிலும் தன்தன் பாலை ஏற்று வரும். முன் நூற்பாவில் கூறியவற்றுடன் வினை முடிபு சேர்த்தால், 'பால்' ஏற்பது விளங்கிவிடும்.

சாத்தன் இவன், சாத்தன் இவ் எருது. முடவன் இவன், முடவன் இவ்எருது என்று காட்டுகின்றனர். முடக்கொற்றி

வந்தாள், முடக்கொற்றி வந்தது என வினைமுடிபு தர வேண்டும். நமக்குத் தெரிய வேண்டியது கொற்றி, சாத்தி, மருதி - கொற்றன், சாத்தன், மருதன் என்பன திணைப் பொதுவாக வரும். அவையவை தமக்கு ஏற்ற பாலினை ஏற்கும் என்பதேயாம்.

முன்பு காட்டப்பட்ட முதல், சினை, சினை முதல், முறைப் பெயர்களுக்கு அவையவை ஏற்கும் பால்முடிபு எளிதாக அறியத் தக்கன. தந்தையிவன், தந்தையிவ்வெருது, என ஆண்மை முறைப்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று. இவ்வாறு வரும். முன்பு காட்டப்படாதனவற்றை இங்குக் காண்போம்.

தன்மைப் பெயர் நான்கு: யான், நான் என்று ஓர் ஆணும் சொல்லலாம். ஒரு பெண்ணும் சொல்லலாம்; ஒரு பூதம், பேய் அவ்வாறு சொன்னதாகவும் கதை எழுதலாம். யாம், நாம், என்பதும் இருதிணைப் பன்மைக்கும் அதுபோல வரும். இருதிணை ஒருமை மூன்றிற்கும் இருதிணைப் பன்மைக்கும் வந்ததால் நான்காயிற்று

முன்னிலைப் பெயர் ஐந்து: தன்மைப் பெயர் போலவே, 'நீ' என்று முன்னிற்கும் ஆண், பெண், பூதம் மூன்றையும் சொல்லலாம். 'நீர்' என்று இரு திணையிலும் கூறலாம். எல்லீர், நீயிர், நீவிர் என்பனவும் முன்னிற்கும் இருதிணையிலும் சுட்ட லாம். (நீ, நீர், எல்லீர், நீயிர், நீவிர் என ஐந்தாயின.)

**எல்லாம், தாம், தான்:** அவரெல்லாம், அவையெல்லாம் . அவர்தாம், அவைதாம் - இருதிணைப் பன்மைக்குப் பொது.

அவன்தான், அவள்தான், அதுதான் - இருதிணை ஒருமை மூன்றற்கும் பொது.

## தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப் பெயர்

**285 தன்மை யான் நான் யாம்நாம், முன்னிலை**
**எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ,** 28
**அல்லன படர்க்கை, எல்லாம் எனல்பொது**

தன்மைப்பெயர்கள் : யான் நான, யாம்நாம்

முன்னிலைப்பெயர்கள் : எல்லீர், நீயிர், நீவிர், நீர்; நீ

இவ் ஒன்பதுமல்லாத பெயர்கள் எல்லாம் படர்க்கைப் பெயர்கள். (அவன், அவள், அவர், அது, அவை முதலாயின). 'எல்லாம்' என்பது மூவிடத்திற்கும் உரிய பெயராகும்; யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம் என வரும்.

## தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடு

286 **வினையின் பெயரே படர்க்கை; வினையால்**
**அணையும் பெயரே யாண்டும் ஆகும்** 29

வினையின் பெயர் - தொழிற்பெயர். இது படர்க்கையில் மட்டுமே வரும். வினையாலணையும் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடத்திலும் வரும்.

ஆடுதல், பாடுதல், பொறுப்பு, உண்ணல், உறக்கம், கரைதல், கரைவு, இரைச்சல், பரிவு - எல்லாம் தொழிற் பெயர்களே.

ஆடினான் - வினை அல்லது தொழில் அல்லது ஒரு செயல். அதையே ஆடுதல் என்றால் தொழில் - பெயராகி விடுகிறது. பரிந்தான் - அன்பு காட்டினான். அதைப் 'பரிவு' (அன்பு காட்டுதல்) என்றால் தொழிற்பெயர். ஆட்டம், பாட்டம் என்பனவும் தொழிற்பெயர்களே. ஆடுதல் நன்று; ஆட்டம் சிறப்பாக இருந்தது, இது உனது ஆட்டம், எங்கள் பொறுப்பு இது, அவள் பேசுதல் வல்லவள். இங்கெல்லாம் தொழிற்பெயர் - படர்க்கையாக வருவது காணுதல் தகும்.

வினைச்சொல் - படித்தான்; இதுவே படித்தவன் எனச் சொல்லப்பட்டால் வினையாலணையும் பெயர் ஆகும். கண்ணாற் கண்டான் - கண்டவனை விசாரித்தனர். மது அருந்து வான் - வினைச்சொல். அருந்துபவன் உடல் நலம் கெடும். படம் பார்க்கின்றனர். பார்க்கின்றவர்களுக்கு மனம் கெடுகின்றது. இவை

வினையாலணையும் பெயர்கள். இவை படர்க்கை. கண்டேனை (தன்மை), கண்டாயை (முன்னிலை). வருகின்றேனை, வருகின்றாயை, வருகின்றானை என மூன்று இடத்தும் வரும்.

வினை பெயராகிக் காலங்காட்டாது படர்க்கையாய் நிற்பது தொழிற்பெயர். வினை பெயராகிக் காலங்காட்டி மூவிடத்திற்கும் வருவது வினையாலணையும் பெயர்.

## திணை, பால் இரண்டினுள்ளும் பொதுப்பெயராய்ப் பயன்படும் பன்னிரண்டு பெயர்கள்

**287. தான்யான் நான்நீ ஒருமைபன்மைதாம்**
**யாம்நாம் எலாம் எலீர் நீயிர்நீர் நீவிர்** 30

தான், யான், நான், நீ - நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப் பெயர்கள். (முக்கூறு உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால்). அஃறிணையான கிளி கூட 'நான்' என்று கூறியதாகக் கற்பனை செய்யலாம்.

தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் - இவை எட்டும் இருதிணை இருகூற்றுப் பன்மைப் பெயர்கள். (இருகூறு : உயர்திணைப் பலர்பாலும் அஃறிணைப் பலவின் பாலும்) அஃறிணையும் இவ்வாறு பேசுவதாகப் புனையலாம்.

## எண்ணின்படி வரும் உயர்திணைப் பெயர்கள்

**288. ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில** 31

ஒருவன், ஒருத்தி என வரும் எண்ணால் வரும் பெயர்களே தமிழில் உண்டு. அதற்குமேல் ஆணாயினும் பெண்ணாயினும் இருவர், மூவர் என்பதன்றி, இருவன், இருத்தி என வருவதில்லை.

## 'ஒருவர்' எனும் பெயரின் இலக்கணம்

**289. ஒருவர் என்பது உயர் இரு பாற்றாய்ப்**
**பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப** 32

உயர்திணை ஓர் ஆணையோ, பெண்ணையோ 'ஒருவர்' என்று பொதுப்படச் சொல்வது தமிழிலுள்ள ஒரு வழக்காறு. அஃது அவ் இருபாலுக்கும் பொது. ஒரே ஒருவரைத்தான் குறித்தாலும் பன்மை வினை வாய்பாட்டால் முடியும் இயல் பினையுடையது அது. அவர் வந்தார் (ஆண் அல்லது பெண்). அவர் வந்தாள் என்று பெண்ணையும் அவர் வந்தான் என்று ஆணையும் குறிப்பதில்லை.

அவர் என்பது மதிப்புறு பெயராய் ஆணுக்கும், பெண்ணுக்கும் வழங்கும் போதும் பன்மை வினைகொண்டு முடியும். வள்ளியம்மை எனும் பெண்மணி தென்னாப்பிரிக் காவில் காந்தியடிகளின் அறப்போருக்குத் துணைநின்றார். அவர் தமிழச்சி என்பது நமக்குப் பெருமை. தொல்காப்பியனார், இறையனார் என்பனவும், இது போல்வனவே. கம்பனைக் கம்பர் என்பதும் வள்ளுவனை வள்ளுவர் என்பதும் இது போன்றதே. இங்கு எழுதினார், பாடினார் எனப் பன்மை வினை முடிபு கொடுத்தாலும், அவை ஒருமை வினை போன்றே கருதப்படும்.

நரியார் வந்தார்; சிங்கத்தைப் பார்த்தார் எனக் கதைப்ப துண்டு. நரி-பால்பகா அஃறிணைப் பொதுப்பெயர். ஒருமை, பன்மைக்குப் பொது. நரி கத்திற்று, கத்தின என்று முன்பு சொல்லலாம். முடச்சாத்தியார் வந்தார் என இருதிணைப் பொதுப் பெயர்களும் பன்மை வினையில் முடியும்.

'நாம் இருவர்; நமக்கு ஒருவர்' என்ற, குடும்பக் கட்டுப் பாட்டு விளம்பரத்தில் 'இருவர்' என்பதும் உயர்திணை இருபாற் பொதுப்பெயர்; ஒருவர் என்பது பிறக்கப் போவது ஆணா, பெண்ணா என்று தெரியாதநிலையில், இரு பாலுக்கும் பொதுப் பெயராய் ஆளப்படுகிறது. இல்லையென்றால் நமக்கு ஒருத்தி, நமக்கு ஒருவன் என்றல்லவா முடிய வேண்டும்?

தமிழ் இலக்கணம் தம்மை அறியாமல், வழக்கு நோக்கிப் பழக்கத்தால், பலராலும் ஆளப்படுகிறது என்பதை, இது போல் பல உதாரணங்களால் அறியலாம்.

## ஆகுபெயர் - இலக்கணமும் வகைகளும்

290. பொருள் முதல் ஆறோடு அளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே 33

ஒன்றைச் சொன்னதும் அது தன்னோடு தொடர்புடைய பிறிதொன்றைக் குறிப்பதுதான் ஆகுபெயர். பேருந்தில் ஏறி அமர்ந்ததும் 'சென்னை இரண்டு' என்றால், 'சென்னைக்குப் போக இரண்டு பயணச்சீட்டுத் தருக' என்று நீட்டாமல் சொல்வது அது. இரண்டு பயணச்சீட்டை, அந்தச் சூழலில், அந்த எண் குறிப்பதையே, தொடர்பும் இயைபுமுடைய ஒன்றைக் குறிக்கும் என்று கூறுகிறோம். அதனையே பழக்கடையில் இரண்டு போதும் என்றால், அது பழங்களை என்பது விளங்கிவிடுகிறது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பன ஆறு பெயர்ச்சொல் வகைகள். இவற்றுடன் நான்கு வகை அளவைப் பெயர்கள், சொல், தானி, கருவி, காரியம், கருத்தன் ஆகிய ஆறினையும் சேர்த்து, இவை போல் வரும் பெயர்களுள் ஒரு பொருளினது பெயரைச் சொல்லி, அதன் மூலம் அதற்கு இயைபுடைய - தொடர்புடைய - பிறிதொரு பொருளை, தொன்று தொட்டு வரும் முறைப்படி, உணர்த்து வது ஆகுபெயர் எனப்படும்.

ஒன்றன் பெயர் பிறிதொன்றற்கு ஆகி வருவது ஆகு பெயர் எனப்படும்.

1. பொருளாகு பெயர்: பணத்தைச் சட்டையில் வை - சட்டை முதல் - அதன் உறுப்பு (சினை), பை. இவ்வாறு முதலின் பெயர் சினைக்கு ஆவது முதலாகு பெயர். இது பொருளாகு பெயர் என்றும் கூறப்படும்.

2. இட ஆகுபெயர் - காஞ்சிபுரம் என்ன விலை? இது அங்கு நெய்த பட்டைக் குறிப்பது இடவாகு பெயர். ஊர் சிரிக்கும் என்பதும் அதுவே. மக்களைக் குறிக்கும்.

3. கால ஆகுபெயர் - 'காலாண்டு' முடிந்தது. இது தேர்வைக்

குறிக்கும் போது, கால ஆகுபெயர். கோடை விளைந்ததா என்பதும் அது.

4. **சினை ஆகுபெயர்** - தலைக்குப் பத்துப்பழம் கொடு - தலை எனும் உறுப்பின் பெயர், மனிதரைக் குறிக்கிறது. அதாவது சினை, முதலைக் குறிக்குமிது சினையாகுபெயர். 'விளையாட ஒரு கை குறைகிறது' என்பதும் அது.

5. **குண ஆகுபெயர்** - 'வெள்ளை கொண்டு வந்தாயா?' - வெள்ளை நிறப்பண்பு. அஃது உடையைக் குறிப்பது குண ஆகுபெயர். சிவப்பை விடப் பழுப்பு நிறம் நன்றாகவுளது. இவை புடைவையைக் குறிக்கும் போது குண ஆகுபெயர்.

6. **தொழிலாகு பெயர்** - உணவில் வறுவல், கூட்டு, சுண்டல், துவையல், அவியல் - எல்லாம் தொழிற் பெயர்களாய், அவ்வாறு செய்த உணவுகளுக்காயின. இவை தொழிலாகு பெயர்.

**அளவைப் பெயர் ஆகுபெயர்கள்**

1. *எண்ணலளவை ஆகுபெயர்* - ஐம்பது கடன் கொடு. ரூபாயைக் குறிக்கும்போது. இது ஐந்தா, ஆறா? - பேருந்தைக் குறிக்கும் போது.

2. *எடுத்தலளவை ஆகுபெயர்* - ஒரு கிலோ போதும் - காய் கறிகளைக் குறிக்கும்போது. 'நூறு கிராம் தா' என்பதும் அது.

3. *முகத்தலளவை ஆகுபெயர்* - ஒரு 'படி' வேண்டும் -'ஓர் ஆழாக்கு வாங்கிவா' - இவை அரிசி, நெய்யைக் குறிக்கும் போது.

4. *நீட்டலளவை ஆகுபெயர்* - நான்கு முழமா, எட்டு முழமா எது வேண்டும்? - வேட்டியைக் குறிக்கும் போது.

**மேலும் சில ஆகுபெயர்கள்**

1. *சொல்லாகு பெயர்* - விரிவுரை இது. உரைக்கப்படும் சொற்பொழிவையோ, விளக்கத்தையோ குறிக்கும் போது.

2. *தானியாகு பெயர்* - தானம் - இடம், தானி - அதில் இருப்பது. தண்ணீரை இறக்கு - குடத்தைக் குறிக்கும்

போது தானி ஆகுபெயர். தண்ணீர் (தானி - தானத்திலிருப்பது), அதனையுடைய குடத்தை (தானம்) குறிக்கிறது.

3. *கருவியாகுபெயர்* - எண் சீரா, அறுசீரா? - பாட்டைக் குறிக்கும் போது.

4. *காரிய ஆகுபெயர்* - அணி அழகிது. அணியப்பட்ட கலன் - ஆபரணம். அணியப்பட்டது காரியம். அது அதன் கருவியைக் குறிக்கிறது.

5. *கருத்தா ஆகுபெயர்* - திருவள்ளுவரைப் படி, மில்டனைப் படித்ததுண்டா? நூல் செய்த கருத்தாக்களைக் குறிக்கும்.

ஆகுபெயர்கள் அளவிறந்தன. இலக்கண ஆசிரியர்கள் தம் புலமையைக் காட்ட, அதன் வகைகளைப் பெருக்கிப் படிப்பவரைத் திகைக்க வைக்கின்றனர். இன்று 'ஆலமரம் இறங்கு' என்று பேருந்தில் நடத்துநர் கூறினால், அந்த இடத்திற்குச் சீட்டு எடுத்தவரைக் குறிக்கும் (இட ஆகுபெயர்). கோடி கோடியாய் அரசியலில் கொள்ளை போகிறது. கோடியும் ஆகுபெயர்; அரசியலும் ஆகுபெயர்தானே? முன்னது பணத்தையும் பின்னது மனிதரையுமல்லவா குறிக்கின்றன.

''ஒளி தோன்றியது. கடிகாரம் ஐந்து அடித்தது. எங்கும் வெள்ளை அடித்தது போல் பளிச்சிட்டது. பால்காரன் ஒரு லிட்டர் கொடுத்துவிட்டுப் போனான். உலகம் கண் விழித்தது. தெரு ஆரவாரமானது' - சிறுகதை, கவிதை, புதினங்களில் ஆகுபெயர்க்குக் குறைவுண்டா?

புளி தின்றான் - புளியையும் சுவையையும் பிரிக்க முடியரது - எனவே இது விடாத ஆகுபெயர். ஊர் கூடியது - ஊரும் மக்களும் பிரிக்கக் கூடியவை. ஆகவே இது விட்ட ஆகுபெயர். குறுவை விளைந்தது, குறுகிய காலத்தைக் குறித்து, அக்காலத்து விளைந்த நெல்லைக் குறிப்பது இருமடியாகு பெயர். 'கோட்டை இறங்கு' - கோட்டை ஓர் இடம் - அதற்கு வாங்கிய பயணச்சீட்டு - அதை வாங்கியவரைக் குறிக்கும் போது இடத்திற்கு ஆகி, அது சீட்டுக்கு ஆகி, அது வாங்கி

யவரைக் குறிப்பது மும்மடியாகுபெயர். வெற்றிலை நட்டான் - இலை கொடிக்கு ஆனது சினையாகுபெயர். இலையை நட முடியாதே? வெறுமை - அடை. எனவே இது அடையடுத்த ஆகுபெயர். வகரக் கிளவி - இதில் கிளவி என்பது சொல்; இங்கு 'வ' என்ற எழுத்தைக் குறிப்பதால் ஆகுபெயர். வகரமாகிய கிளவி என இரண்டும் ஒன்றேயாதலால், இதை இரு பெய ரொட்டாகு பெயர் என்பர்.

இவை புலமை வீச்சுக்கள். ஒரு முறை படித்துவிடுதல் போதும். இனி ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் என்ன வேறுபாடு?

1. பொற்றொடி வந்தாள், ஆயிழை பேசினாள் என்பன போலப் பெண்ணைக் குறிப்பர். இவை அன்மொழித் தொகை எனப்படும். பெரிதும் புலவர்கள் ஆள்வது இது. ஆகு பெயர் எல்லோரும் ஆள்வது.
2. ஒரே சொல்லாக வராமல் இரண்டு முதலிய பல சொற்க ளால் வருவது அன்மொழித்தொகை. ஒரே சொல்லால் அல்லது ஒரு சொல்நீர்மைத்தான சொற்களால் வருவது ஆகுபெயர்.
3. அன்மொழித் தொகை தொடர்புடையதற்கு மட்டுமே வரும் என்பதில்லை. ஆகுபெயரோ தொடர்புடைய தற்கே வரும்.
4. அன்மொழித் தொகை அவ்வப்போது படைக்கப்படு வன. ஆகுபெயர்கள் தொன்று தொட்டு வரும் மரபு வழிப்பட்டன.

## 'வேற்றுமை' என்பதன் பொருள் யாது? அது எங்கு வரும்? எத்தனை வகைப்படும்?

**291. ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப், பொருள்**
**வேற்றுமை செய்வன, எட்டே வேற்றுமை 34**

எவ்வகைப்பட்ட பெயர்க்கும், ஏற்குமிடத்தில், இறுதியில் நின்று, அப்பெயரின் பொருளை வேறுபடுத்தி யுணர்த்துவது 'வேற்றுமை' எனப்படும். அது எட்டு வகைப்படும்.

முருகனைப் பார்த்தேன்; முருகனுக்கு உறவு; முருக னிடம் பெற்றேன் - பெயர் முருகன். முருகன் என்ற பெயரை ஐ, கு, இடம் என்ற உருபுகள், இறுதியில் நின்று, யாரை யாருக்கு யாரிடம் என வினவுமாறு பொருள் வேற்றுமை செய்கின்றன. அதனால் அவ் உருபுகளையே 'வேற்றுமை' என்றார். அவை பெயர்ப் பொருளை வேறுபடுத்த வரும் இறுதி ஒட்டுக்கள். நடத்தலுக்குப் பயிற்சி வேண்டும். நடத்தல் - தொழிற்பெயர் 'கு' வேற்றுமை பெற்றது. வந்தவரை வரவேற்போம் - வந்தவர்: விணையாலணையும் பெயர். அது ஐ வேற்றுமை ஏற்றது. பெயர் வடிவம் பெறும் எந்தச் சொல்லும் இவ்வாறு வேற்றுமை ஏற்கும். முதல் வேற்றுமையும் (எழுவாய்), எட்டாம் வேற்று மையும் (விளி) - அல்வழியில் சேர்க்கப்படும். ஆயினும் இங்கு பெயரின் பொருளை ஒருவாறு வேறுபடுத்தலால், சேர்த்துக் கூறப்பட்டன. முருகா! அம்மையே! - என அழைக்கும் விளியை, முன்னோர் தனியே பிரித்துக் கூறுவர். முதல் வேற்றுமைக்கும் உருபு இல்லை; எட்டாம் வேற்றுமையோ இவ்வாறு ஈறு திரியும்.

## வேற்றுமையின் பெயர்களும் அவற்றின் வரிசை முறையும்

**292. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்**
**விளி என்று ஆகும் அவற்றின் பெயர்முறை** 35

பெயர் (எழுவாய்), ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பன அவற்றின் பெயர்களாகும். எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை, ஆல் வேற்றுமை, விளி வேற்றுமை என்பனவே பழம் பெயர். பின் வரிசை கருதி இவற்றை முறையே முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எண்ணிக்கை வரிசைப்படி அழைக்கலாயினர்.

## எழுவாய் பெயராய் நின்று ஏனைய ஆறு உருபுகளையும் ஏற்கும்

**293. ஆறன் உருபும் ஏற்கும் அவ் உருபே** 36

அவ் உருபே - பெயர் மட்டுமே நிற்கும் எழுவாய்க்கும் அப் பெயரே உருபாகும். அதற்கென்று வேறு உருபு தனியே இல்லை. ஐ ஆல் கு இன் அது கண் - என்ற ஆறு உருபையும் அம்முதல் வேற்றுமையாம் எழுவாய்ப் பெயர் ஏற்கும்.

சேரன் வந்தான்-எழுவாய் வேற்றுமை. சேரனைக் கேள் - அப்பெயரே 'ஐ' ஏற்றது; சேரனிடம் போ - அப்பெயரே 'இடம்' (கண்) உருபேற்றது. எட்டாம் வேற்றுமை சேரா, சேரனே என இறுதியில் திரிபுற்று அழைக்கப்பயன்பட்டுத் தனியுருபு ஏற்ப தில்லை. அதனால் அது இங்கு கூறப்படவில்லை.

## உருபேலாப் பெயர்கள் மூன்று

**294. நீயிர் நீவிர் நான் எழுவாய் அலபெறா** 37

நீயிர், நீவிர், நான் மூன்றும் எழுவாயாகவே வரும். இவை உருபேற்பதில்லை. நீயிர், நீவிர் - முன்னிலைப் பெயர்கள். நீர் என்பது நும் என மாறி நும்மை, நுமக்கு என உருபேற்கும். நீயிர், நீவிர் என்பனவும் நும் என்றே மாறியாக வேண்டும். நீவிரை, நீவிருக்கு என வாரா. யான் என்னும் தன்மைப் பெயர் என் என மாறி என்னை, எனக்கு என உருபேற்கும். நானும் என் என மாறியே உருபேற்கும். நானை, நானுக்கு என - உருபேலாது.

## 'பெயர்' வேற்றுமையின் இலக்கணம் இது எழுவாய் வேற்றுமை, முதல் வேற்றுமை என்றும் அழைக்கப்படும்

**295. அவற்றுள்,**
**எழுவாய் உருபு திரிபு இல் பெயரே**
**வினை, பெயர், வினாக் கொளல் அதன்பயனிலையே38**

எவ்விதமான திரிபும் இல்லாத பெயரே, எழுவாய் வேற்றுமை. அஃதாவது முதல் வேற்றுமையின் பொருள் - எழுவாய்; அதன் உருபு - திரிபில்லாத பெயர். எழுவாய் தன் பயனிலை''ாக வினைச் சொல்லையும் பெயர்ச் சொல்லையும் வினாவையும் கொண்டு முடியும்.

1. கண்ணன் வந்தான்; தேவன் வருவான்; மணியன் வருகின்றான். இவை தெரிநிலை வினைமுற்றுக் கொண்டன. அன்னம் நல்லவள்; குதிரை கரிது. இவை குறிப்பு வினைமுற்றுக் கொண்டன.
2. நண்பன் இவன்; இது புத்தகம்; அவள் கண்ணகி; வேலன் அவன். இவை யாவும் பெயரைப் பயனிலை யாகக் கொண்டு முடிந்தன. யானை பல; பாண்டவர் ஐவர்; கடுகு ஒரு கிலோ. இவை அளவை காட்டும் பெயரோடு முடிந்தன.
3. தேர்வு என்று?; கோயில் எது?; பண்பு பயன்தருமா?; இவை வினாப் பயனிலை கொண்டன.

கருத்தன் (கருத்தா), எழுவாய், வினைமுதல், செய்பவன் (செய்வது) - ஒரு பொருளன.

காலன் என்பவன் கொடியவன்; வேலனானவன் செயல் இது; மலர்விழியானவள் வந்தாள்; நாயானது ஓடியது; பறவை யானவை இரைந்தன. - என்பவன், ஆனவள் போன்ற சொல் லுருபுகள் பயன்படுமிடங்கள் உண்டு. இன்றைய வழக்கில் சொல்லுருபுகளே மிகுதி.

## இரண்டாம் வேற்றுமையின் உருபும் பொருளும் யாவை?

**296. இரண்டா வதனுருபு ஐயே அதன்பொருள்**
**ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஒத்தல் உடைமை ஆதி ஆகும்.** 39

இரண்டாம் வேற்றுமையுருபு 'ஐ' ஒன்றே. அதன் பொருள் செயப்படு பொருளாகும். எழுவாயும் செயப்படு பொருளும் பயனிலையுமே ஒரு வாக்கியத்தில் முக்கிய மானவை என அறிவோம். அவையே முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை எனப்பட்டன. பயனிலையால்தான் இவை முடிவு பெறுகின்றன. செயப்படு பொருளை பல வகைப் படுத்தலாம். அதை நன்னூல் ஆறுள் அடக்கி, இவை போல்வன என முடிக்கின்றது.

ஆக்கப்படு பொருள் - புத்தகத்தை எழுதினான்,
வீட்டைக் கட்டினான்.

அழிக்கப்படு பொருள் - தாளைக்கிழித்தான்,
கோட்டையை இடித்தான்.

அடையப்படுபொருள் - பரிசைப் பெற்றாள்,
சென்னையை அடைந்தான்.

நீக்கப்படு பொருள் - படிப்பை நிறுத்தினான்,
பண்பைக் கைவிட்டான்.

ஒத்தல் - ஒக்கப்படுபொருள் - தேனை ஒத்த செந்தமிழ்
மானைப் போன்ற மைவிழி
கயலை ஒத்த கருவிழி

உடைமை - உடைமைப்பொருள் - பொறுமையைப்
பெற்ற புலவன், செல்வத்தைப்
பெற்ற செழியன், அன்பை
உடைய அருளாளன்.

வினை முதல் செய்வது, ஆக்குவது, படைப்பது. அச் செயலின் பயனை அடைவது செயப்படுபொருள். நாகன் வீட்டைக் கட்டினான் என்றால், செய்யப்பட்ட பொருள் வீடு, அவன் நடந்தான் - செயப்படுபொருள் குன்றிய வினை, அவன் பாடத்தைப் படித்தான் - செயப்படுபொருள் குன்றா வினை. தன்னைப் புகழ்ந்தான், தன்னைப் பேணினான் - செயப்படு பொருள் எழுவாயுமாயிற்று. வி(செய்வி), பி(உண்பி) என வருவன பிறரால் செய்விக்கும் பிறவினைகள். குழந்தையைச் சோற்றை உண்பித்தாள் என இரண்டு செயப்படுபொருள் வந்தன. புரவலனால் பள்ளியைக் கட்டுவித்தான் - இப்பிற வினையில் ஒரே ஒரு செயப்படுபொருள் வந்தது.

நாம் சொல்கிற விதத்தைப் பொறுத்து வேற்றுமை அமையும். பசுவினைப் பாலைக் கறத்தல்; பசுவினது பாலைக் கறத்தல், பசுவிலிருந்து பாலைக் கறத்தல்; பசுவின்கண் பாலைக் கறத்தல் - இரண்டு உருபுகள் இணைந்து வருமிடங்கள் இவை. வீட்டைக் கட்டினான் - செய்வினை வாக்கியத்தில் வீடு செயப் படுபொருள். கட்டியவன் யார் என்பது தோன்றா எழுவாய். வீடு

கட்டப்பட்டது - அதுவே செயப்பாட்டு வினை வாக்கியமாகும் போது வீடு எழுவாய்ப் பொருள் தருகிறது.

இங்ஙனம் 'ஐ' உருபு எழுவாய்ப்பொருளும் தருகிறது. இங்ஙனம் 'ஐ' உருபு ஏற்குமிடங்களை இலக்கணிகள் ஆழ்ந்து நோக்கும் விதங்கள் பலவாகும். சொல்வோன் குறிப்பிற்கு ஏற்பப் பெயர்ப் பொருள்கள் வேறுபடுகின்றன.

## மூன்றாம் வேற்றுமையின் உருபுகளும் பொருளும் யாவை?

297. மூன்றா வதனுருபு ஆல் ஆன் ஓடுஒடு
**கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்** 40

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல் ஆன் ஓடு ஒடு என்பன. ஆல் என்பதே ஆன் என்றும் ஆகும்; 'ஓடு' வே 'ஒடு'வுமாகும். இவ் வேற்றுமையின் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்வு மூன்றுமாகும். 'ஏற்புழிக் கோடல்' என்னும் உத்தியின்படி, 'ஆல், ஆன்' என்பன கருவிக்கும் கருத்தாவுக்கும் பெரிதும் வரும்; ஓடு, ஒடு உடனிகழ்ச்சிப் பொருளுக்குச் சிறப்பாக் வரும். கருத்தா என்பது வினை முதல், வினையைச் செய்பவன். அவன் ஒரு காரியம் நடக்க, ஏவும் தலைவனாய்க் கருவியாதலும் உண்டு.

காலால் நடந்தான்
அறிவான் ஆகாததில்லை - கால், அறிவு கருவிகள்

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் - குறள்
உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் - குறள்
(தோட்டி - யானையை அடக்கும் கருவி, அங்குசம்)

வள்ளலால் உருவான பள்ளி } வினை முதல் கருத்தா
அரசனான் ஆனதிக் கோயில் } செய்தவன்

கருவி என்பது வினைமுதல் (கருத்தா) செய்த - செயலின் பயனைச் செயப்படு பொருளிற் சேர்ப்பது. கருத்தா என்பதும் ஏவும் தலைமையுடைய 'கருவி' யேயாம்.

குழந்தையோடு தாய் வந்தாள்<br>ஆசிரியனோடு மாணவன் வந்தான் } உடனிகழ்ச்சி

கருவி, காரணம், ஏது, நிமித்தம் என்பன ஒரு பொருட் சொற்களாகும். கருவி அல்லது காரணம் மூன்று வகைப்படும்.

மண்ணால் குடத்தை வனைந்தான்<br>உணர்வால் கவிதை படைத்தான் } மண், உணர்வு அடிப்படையாதலின் முதற்கருவிஅல்லது முதற்காரணம்,

திரிகையால் குடத்தைச் செய்தான்<br>பேனாவால் பாடலை எழுதினான் }

- திரிகை, பேனா - உருவாகும் வரை உதவிசெய்து, பிறகு நீங்கி விடும். இவை துணைக்கருவி/ துணைக்காரணம்.

தச்சன் கோயிலைக் கட்டினான்<br>கவிஞன் பாடலை இயற்றினான் } இவை இயற்றுதற் கருத்தா

அரசன் கோயில் கட்டுவித்தான்<br>வள்ளல் கவிஞனைப் பாடவைத்தான் } இவை ஏவுதற் கருத்தா

இவை இரண்டும் நிமித்த காரணம் / கருவி எனப்படும்.

எனவே முதற்காரணம் (மண்), துணைக்காரணம் (திரிகை), நிமித்த காரணம் (குயவன்) என கருவி மூவகைப் படுகிறது. இவை போலவே உணர்வு, பேனா, கவிஞன் என்பன வும் முதல்,துணை, நிமித்த காரணங்களாகக் கொள்க.

ஆல், ஆன் உருபுகள் சிறுபான்மை உடனிகழ்ச்சிப் பொருளிலும் செய்யுளில் வந்துள்ளன. 'தூங்கு கையான் ஓங்கு நடைய' என்னும்போது தொங்கும் கையோடு உயர்ந்த நடையை யுடைய யானை எனப் பொருள்படுகிறது.

ஓடு, ஒடு உருபானவை கருவிப் பொருளிலும் செய்யுளில் வருவதுண்டு. 'கொடியொடு துவக்குண்டான்' (கொடியால் சுற்றப்பட்டான்) என்னும் போது'ஒடு' கருவிப் பொருளில் வந்தது.

உடனிகழ்ச்சிப் பொருளில், எப்பொழுதும் ஓடு, ஒடு என்பனவற்றை, உயர்ந்ததன் கூடவே சேர்த்துச் சொல்ல வேண்டும். அமைச்சரோடு செயலாளரும் வந்தார் என்றுதான் கூற வேண்டும். ஆசிரியரோடு மாணவர் வந்தார் என்பதே முறை. கிளயொடு கணியன் (சோதிடன்) வந்தான் என்றால், தலைமை கிளிக்கு ஆகின்றது. இடம் நோக்கித் தலைமை இல்லாத பொருள் தலைமை பெற்றது.

ஆல், ஆன் - இவற்றுக்குப் பதிலாக கொண்டு, வைத்து என்றாற் போல்வனவும் ஓடு ஒடுவுக்குப் பதிலாக உடன், கூட என்றாற் பொல்வனவும் சொல்லுருபுகளாக வழங்கும். வாளைக் கொண்டு வெட்டினான், கத்தியை வைத்து வெருட்டினான்; தன் காதலியுடன் காதலன் வந்தான்; என் கூட நீயும் வந்தாய் என வரும்.

## நான்காம் வேற்றுமை உருபு ‘கு’
## ‘இதற்கு இது’ என்பன பொருள்

**298. நான்கா வதற்கு உரு பாகும் ‘கு’வ்வே;**
**கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அது வாதல்,**
**பொருட்டு, முறை ஆதியின் ‘இதற்கு இது’ எனல்**
**பொருளே 41**

நான்காம் வேற்றுமைக்கு ‘கு’ என ஒரே உருபுதான் உண்டு. ‘இதற்கு இது’ என்பன எல்லாம் அதன் பொதுப் பொருளாகும். ‘இதற்கு’ என்பது ஏற்பது, பெறுவது. ‘இது’ என்பது கொடுப்பது. கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை எனும் ஏழும் இவை போல்வன பிறவும் ‘இதற்கு இது’ எனும் பொருள் நடையில் வரும்.

கற்பவர்க்குக் கல்வி கொடுத்தான்
வறியவர்க்குச் சோறு கொடுத்தான்

கொடை அதாவது இது கோடற்பொருள். ‘கு’ உருபு பெறுபவர்க்கு உரியது.

பாம்புக்குப் பகை கீரி
நோய்க்குப் பகை மருந்து

பகை. பகைக்கு ஆளாவது பாம்பும், நோயுமே. கீரி யிடமிருந்து பகை பாம்புக்குத் தொடர்வதால் இதைப் 'பகைதொடர்பொருள்' என்பர்.

கோப்பெருஞ்சோழனுக்கு நண்பர் பிசிராந்தையார்
இராமனுக்கு நண்பன் குகன்

நேர்ச்சி - நட்பு. நட்பு ஆந்தையாரிடமிருந்து சோழனுக்குத் தொடர்கிறது. குகன் நட்பு இராமனுக்குக் கிடைக்கிறது. இதை 'நட்பு' என்றுமட்டும் கூறாமல் 'நட்புத்தொடர் பொருள்' என்றால்தான், ஏற்பவரைப் போய்ச்சேரும்.

வென்றவர்க்குப் பரிசு
நல்லவர்க்குப் புகழ்

தகுதி. இவர்கள் தகுதியுடையவர்கள் என்று உணர்த்தப்படுகிறது.

குடத்திற்கு மண்
அணிகலனுக்குத் தங்கம்
பாட்டுக்குக் கவித்திறன்.

அதுவாதல். மண்ணே குடமாகிறது. தங்கமே அணியாகிறது. திறனே கவியாகிறது. இவை முதற்காரணம்.

சம்பளத்திற்கு வேலையிற் சேர்ந்தான்
கூலிக்கு வீட்டு வேலை செய்தான்

பொருட்டு, இன்னதன் பொருட்டு இது என்பதே பொருள். பொருட்டு - காரணம் இங்கு நிமித்த காரணம். வேலை நிமித்தமாகப் பெறுவதே சம்பளம் அல்லது கூலி.

| | |
|---|---|
| என் அண்ணனுக்கு நான்<br>இளைய தம்பி<br>இவள் எனக்கு மனைவி | } முறை - உறவு முறை |

'கொடை' என்பது, கொடுத்தலை மட்டும் குறிக்காமல், இங்கு கொள்வதையும் ஏற்றுக் கோடலையும் குறிக்கின்றது.

கோடல் என்பது ஏற்றல். புலவர்கள் தங்கள் புலமை வீச்சைக் காட்ட இதைப் பலவகைப் படுத்துவர். ஒரு சில பார்த்தாலே போதும்.

பூங்கொடிக்கு நீர் பாய்ச்சினான் - கேளாதேற்றல் (கொடியா கேட்டது?)

பாணர்க்குப் பரிசில் ஈந்தான் - பாணர் பரிசில் கேட்டுப் பெறுவர் (பரிசில் கடாதல்). கேட்டே ஏற்றல்,

நண்பனுக்கு விருந்திட்டான் அவன் தோழன் - ஒப்போன் ஏற்றல்.

ஏற்பார்க்குக் கொடுத்தலையும் இது குறிக்கும். அதனையும் இலக்கணம் வல்லார் பலவகைப் படுத்திப் பார்த்துள்ளனர். தமக்கை மகனுக்கு மகளைக் கொடுத்தான் - உறவு வழக்கத்தின்படி. அரசன் தன் மகனுக்கு ஆட்சியைக் கொடுத்தான் - உரிமையிற் கொடுத்தல். காவலனுக்குக் கைக்கூலி கொடுத்தான் - அச்சத்திற் கொடுத்தல். அதிகாரிக்கு இலஞ்சம் கொடுத்தான் - வெறுப்பிற் கொடுத்தல்.

எனது செல்வம் என்பது உரிமையைக் குறிக்கின்றது. எனக்கு மகன் என்பது உறவைக் குறிக்கிறது.

மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை; புயலுக்குப் பின் அமைதி என்பன அறிகுறிபற்றியன. 'ஆதி' (முதலியன) என்பதால் இது போல் வருவனவெல்லாம் கொள்ளப்படும்.

'கு' - வருமிடத்தில், சொல்லுருபுகளாக - பொருட்டு, நிமித்தம், ஆக என்பன வரும். கற்பதற்குக் கடுமையாக முயன்றான் என்பதைக் கற்பதன் பொருட்டு - கற்பதன் நிமித்தம் - கற்பதற்காக முயன்றான் எனக் கூறுவர். கற்பதற்கு+ஆக = உருபின் மேல் உருபு வந்தது.

## ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளும் அவை உணர்த்தும் பொருள்களும்

299. ஐந்தா வதன் உருபு இல்லும் இன்னும்
நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப்பொருளே 42

ஐந்தாம் வேற்றுமை உருபு இல், இன் என்பன. (ஆல், ஆன் என்ற மூன்றாம் வேற்றுமை உருபுகள் போல்பவை இவை. ஆன் உருபே, எளிமை கருதி ஆல் ஆனது. இங்கும் 'இன்' எனும் பழங்கால வழக்கே, பின்பு 'இல்' லும் ஆயிற்று)

பெயரின் பொருளை இவை வேறுபடுத்தும் விதம் : நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பன.

தலையின் உதிர்ந்த முடிமயிர்
விண்ணின் வீழ் கொள்ளி
மலையின் வீழ் அருவி
} நீங்கற்பொருள்

'தலையின் இழிந்த மயிரனையர்' (குறள்.964) என்பதும் காண்க. இங்கு தலை, விண், மலை எனும் பெயர்களே, வேற்றுமைப் பொருளாம் 'நீங்குதலை' ஏற்றன.

பொன்னிற் சிறந்த புதுமலர்
கண்ணிற் சிறந்த காதலி
காக்கையிற் கரிய கருங்கல்
} 'பொன்னைப் போல' என இவ்வாறு இவை, 'ஒப்புமையை' உணர்த்துவன.

கோயிலின் வடக்கு சித்திரைவீதி
அம்பலத்தின் கிழக்கு ஆயிரங்கால் மண்டபம்
– எல்லைப் பொருள்

அறிவிற் சிறந்தவர் ஆன்றோர்
அன்பிற் சிறந்தவர் புத்தர்
கல்வியிற் பெரியவர் கம்பர்
} அறிவு, அன்பு, கல்வி காரணமாக உயர்வு கூறப்படுதலால், இவை ஏதுப்பொருளன

இங்கெல்லாம் 'அறிவில்' – எனும் 'இல்' என்பதே 'இற்' ஆனது. இன்று பிரித்தெழுதும் பழக்கத்தால் 'கல்வியில்

சிறந்தவர் கம்பர்' என்கின்றோம். 'இன்' என்பதும் 'இற்' எனத் திரியும்.

இதனின் வேறு அது; ஆற்றலில் தோன்றும் அஞ்சாமை என வேறுபடுத்தல், காரணம் போலும் பிறபல பொருள் களையும் இவ்வுருபுகள் தரும்.

நின்று, இருந்து என்பன போல வரும் சொல்லுருபுகள் 'உம்' பெற்றும் பெறாதும் வரும். மலையினின்றும் விழும் அருவி, மலையிலிருந்து விழுகின்ற அருவி. வீட்டினின்று வெளியேறினான். வீட்டினின்றும் புறப்பட்டான். மதுரை யிலிருந்து புறப்பட்ட வண்டி; மதுரையினின்றும் வருகிற வண்டி என இவ்வாறு வருவன இன்று பெருவழக்கு. இவை முன்னைய வழக்கினின்று வேறுபடுகின்றன - வழக்கி னின்றும் வேறுபடுகின்றன-வழக்கிலிருந்து வேறுபடுகின்றன.

## ஆறாம் வேற்றுமையின் இலக்கணம் உருபுகள், தற்கிழமையாயும் பிறிதின் கிழமையாயும் வரும் பொருள்கள்

**300. ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்**
**பன்மைக்கு அவ்வும் உருபாம்; பண்பு உறுப்பு**
**ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்**
**திரிபின் ஆக்கமாம் தற் கிழமையும்**
**பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே** 43

ஆறாம் வேற்றுமையில் ஒருமைக்கு உருபுகள் அது, ஆது என்பன. அது என்பதே செய்யுளில் சில போது ஆது என நீளும். பன்மை உருபு 'அ' ஆகும்.

ஆறாம் வேற்றுமைக்குப் பொருள் 'கிழமைப் பொருள்'. கிழமை - உரிமை, உறவு, தொடர்பு எனப் பொருள்படும். இது தற்கிழமை, பிறிதின் கிழமை என இரண்டாகும். வேலனது விரல் - தற்கிழமை; பிரிக்க முடியாதது. வேலனது வேல்- இரண்டும் தனித்தனி பிரியற்பாலன. இது பிறிதின் கிழமை.

தற்கிழமையில் பண்பு (தொழிலும்), உறுப்பு(சினை), ஒன்றன் கூட்டம் (மக்கள் கூட்டம்), பலவின் ஈட்டம் (விலங்குகளின் தொகுதி), திரிபின் ஆக்கம் - ஒன்று திரிந்து மற்றொன்றாதல் என்னும் ஐந்தும் வரும்.

| | |
|---|---|
| மலரது செந்நிறம்<br>குதிரையது ஓட்டம்<br>சேரனது ஆற்றல் | பண்புத்தற்கிழமை |
| காளையது கொம்பு<br>பாம்பினது தலை<br>சேரனது கை | உறுப்புத்தற்கிழமை |
| மக்களது கூட்டம்<br>நெல்லது குப்பை (குவியல்) | ஒன்றன் கூட்டத் தற்கிழமை |
| படைகளது அணிவகுப்பு<br>(தேர், யானை, குதிரை, காலாட்படை)<br>விலங்குகளது உயிர்க்கண் காட்சி | பல்வின் ஈட்டத் தற்கிழமை (ஈட்டம்- கூட்டம்) |
| கோதுமையது மா<br>மாவடுவது ஊறுகாய்<br>நெல்லினது பொரி | ஒன்றுதிரிந்து ஒன்றாயதன் தற்கிழமை |

எனது கை (அதுஉருபு), எனாது கை (ஆது உருபு)
தனது முயற்சி (அது), தனாது முயற்சி(ஆது)

நின தாள்கள், என கைகள் - 'அ' உருபு பன்மையில்

திருமண அழைப்பிதழில் 'எனது மகன்' என்று போடலாமா? இக்கிழமைப் பொருள் (உரிமை) உயர் திணைக்கு வராது. அதனால் 'அது' உருபு கெட்டு, 'கு'வ்வுருபு வரும் என்பர். தொல்காப்பியரும் உறவுக்குக் 'கு'வ்வுருபே வரும் என்றார். எனக்கு மகன், என் அண்ணனுக்கு மாமனார் இவர், என் அண்ணியார்க்குத் தங்கை இவள் - இவ்வாறு இன்றும் உறவுமுறை கூறுவர்.

அதனால் திருமண அழைப்பில் என் மகன் சோழனுக்கும் மதிவாணர் மகள் மலருக்கும் திருமணம் என்று போடுவர்.

அல்லாமல் எனக்கு மகனாகிய சோழனுக்கும் மதிவாணர்க்கு மகளாகிய மலருக்கும் என்று போடவேண்டும். அவ்வாறு போடும் பழக்கம் காணப்படவில்லை.

ஆயினும் ஆறுமுகநாவலர், தமது நன்னூல் உரையில், ''சிறுபான்மை 'அரனது தோழன்'; 'குன்றவர் தமது செம்மல்', என உயர்திணை ஒருமைப் பொருண்மைக்கும், 'நினது அடியா ரொடல்லால்' என உயர்திணைப் பன்மைப் பொருண்மைக்கும், எனது கைகள் என அஃறிணைப் பன்மைப் பொருண்மைக்கும் அதுவுருபும் வரும்'' என்று கூறுகிறார். எனவே இம் மூன்றினுள் ஒரு வகையால் திருமண அழைப்பில் எழுதலாம் என்றே ஏற்க வேண்டியுளது. மேலும் 'அது' என்பது, உருபேயன்றி, அஃறிணைச் சுட்டன்றே.

இவ்வீடு என் உறவினரது, அத்தோட்டம் அவனது, புத்தகம் எங்கள் ஆசிரியரது - இவ்வாறு வருவன 'து' விகுதி பெற்ற, குறிப்பு வினைமுற்றுக்கள். அவன் + அ + து = 'அ' கரம் சாரியை. என்னது காணாமற் போனது, முருகனதை நான் வாங்கினேன் - இவை, முன்புபோல வந்த, குறிப்பு வினையாலணையும் பெயர்கள். இவை ஆறாம் வேற்றுமை உருபல்ல. ஆறாம் வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல்லுருபு. என்னுடைய மகள், கண்ணகியுடைய கணவன், பாரியுடைய பறம்பு மலை, பறம்பினுடைய பறவைகள் எனவரும்.

## ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும்

301. ஏழன் உருபுகண் ஆதி யாகும்
பொருள் முதல் ஆறும் ஓர் இரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப 44

ஏழாம் வேற்றுமை உருபு கண் முதலிய பலவாகும். அது பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறு பெயர்க்கும், முன்பு கூறியபடி தற்கிழமை, பிறிதின் கிழமையில், 'இடமாக' நிற்றலைப் பொருளாகக் கொள்ளும். மணியின்கண் ஒளி என்பது இடப்பொருள். இதை மணியது ஒளி என்றும் கூறலாம். அதனால் இடப்பொருள். தோன்ற மணியின் கண்

இருக்கின்றது ஒளி என்றே உதாரணம் காட்டுவர். ஒளி இருப்பதற்கு மணி இடமாகிறது.

உயிரின்கண் இருக்கின்றது உணர்வு
பொன்னின்கண் இருக்கின்றது ஒளி - தற்கிழமை (இரண்டையும் பிரிக்க முடியாது) பொருள் இடமாயிற்று.

பையின்கண் இருக்கின்றது பணம்
மரத்தின்கண் இருக்கின்றது பறவை
- பிறிதின் கிழமை (இரண்டும் பிரியக்கூடியன) பொருள் இடமாயிற்று.

மலையின்கண் உள்ளது உச்சி (சிகரம்)(தற்)
மலையின்கண் இருக்கின்றது மான் (பிறி)
- இடம் இடமாயிற்று.

பகலின்கண் பனிரண்டு மணி உள (தற்)
இரவின்கண் வெண்ணிறமலர் பூக்கும் (பிறி)
- காலம் இடமானது.

காளை முதுகின்கண் இருப்பது திமில் (தற்)
காளை கழுத்தின்கண் இருப்பது மணி (பிறி)
- சினை (உறுப்பு) இடமாகிறது.

செவ்விதழின்கண் மிளிர்வது ஓரழகு (தற்)
காதின்கண் வயிரத்தோடு கண்ணைப் பறிக்கிறது(பிறி)
- குணம் (பண்பு) இடப்பொருளில் வந்துளது.

ஆட்சியின்கண் வேண்டும் அறம் (தற்)
ஆட்சிசெயும் கோட்டை இது(பிறி)
- தொழில் இடமானது இது.

உயிரைவிட்டு உணர்வைப் பிரிக்க முடியாததால் அது தற்கிழமை எனப்படும். (தன்+கிழமை = தன்னுடன் ஒட்டியிருக்கும் உரிமையுடையது. பிறிதின் + கிழமை = பிறிதாகப் பிரிக்கக் கூடிய உரிமையுடையது)

கண் எனக் கூறினும் ‘இடம்’ எனப் பொருள்படும்

அனைத்தும் ஏழாம் வேற்றுமை உருபுகளே. இவற்றைச் சொல் லுருபுகள் எனலாம். அடுத்த நூற்பா காண்க.

மூன்றாம் வேற்றுமையில் ஆல், ஆன் என்பவற்றை விட 'கொண்டு' - என்பதும் ஒடு ஓடுவுடன் 'உடன்' என்பதும் வரு மெனக் கண்டோம். (கயிற்றால் கட்டினான் - கயிற்றைக் கொண்டு கட்டினான். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் - பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்).

நான்காம் வேற்றுமையுருபு 'கு'-வுக்குப் பதிலாக நிமித்தம், காரணம், பொருட்டு, ஆக முதலிய சொல்லுருபுகளே உலக வழக்கில் இன்று மிகுதி. (விழாவினுக்கு வெளியூர் போனேன்; விழாவினுக்காக விடுமுறை போட்டேன்; விழாவின் நிமித்தம் நன்கொடை கேட்டோம்; விழாக் காரணமாக வேலை செய்தான்; விழாவின் பொருட்டு அனைவரும் கூடினர்).

ஐந்தாம் வேற்றுமை இல், இன் - ஆயினும் சொல்லுருபு களே மிகுதியும் பயன்படும்.

மதுரையின் நீங்கிய கார், மலையின் வீழ் அருவி என்பதை விட, மதுரையிலிருந்து நீங்கிய (புறப்பட்ட) கார்; மலையிலிருந்து விழுகின்ற அருவி என்றே இன்று கூறு கின்றனர். ஓரளவு 'நின்று' என்ற சொல்லுருபும் பயன்படும். வாயினின்று வந்தவார்த்தை; தீயினின்றும் தப்பிப் பிழைத்தான்; பாட்டினின்றும் எழும் ஓசை எனப் பேசக் காணலாம்.

ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ - என்ப வற்றைவிட 'உடைய' என்பதே மிகவும் கூடுதலாகப் பயன் படும். என்னுடைய மகள், அவனுடைய வீடு, மெய்யனுடைய தோட்டம் துரவுகள், சேரனுடைய சொத்துக்கள், இன்னாருடைய மகன் இவன் - என்று வழக்கில் கூறுவர்.

## 'இடப்'பொருள் தரும் உருபுகள் இருபத்தெட்டு

302. கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி

உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே 45

இவ் இருபத்து எட்டும் இடப்பொருள் தரும் உருபு களாகும். இவை பல செய்யுளில் வருவன.

கண் - 'மு.வ. அரங்கின்கண்' விழா நடைபெறும்.

கால் - 'ஊர்க்கால் ஓங்கிய பொதும்பர் (சோலை)

கடை - தேர்க்கடை அமர்ந்த தெய்வம்.

இடை - கூட்டத்தினிடைப் புகுந்து நசுக்குண்டான்

தலை - மலைத்தலை ஒளிரும் வான் சுடர்

வாய் - நீர்வாய் மலரும் நீலமலர்.

திசை - தேர்த்திசை தெய்வம் எழுந்தருளும்

வயின் - தமிழ்வயிற் பற்றே தமிழரைக் காக்கும்

முன் - சான்றோர் முன் பணிவு காட்டுக.

சார் - ஒரு சார் ஒதுங்கிநிற்க.

வலம் - அவர்வலம் இல்லை அது
(இன்று வயம் - வசம் என்பர்).

இடம் - என்னிடம் தமிழன் என்ற உணர்வுளது.

மேல் - அவன் மேல் குற்றம் சுமத்தாதீர்கள்.

கீழ் - ஆண்டவன் நிழற் கீழ் அனைவரும் சமமே.

புடை - சோலைக்கு வந்த காதலர்
அதன் ஒருபுடை நின்றனர்.

முதல் - இறைவன் அடிமுதல் வீழ்ந்து
அடியவர் வணங்கினர்.

பின் - காதலன் நெஞ்சம் காத்திருந்த காதலிபின் சென்றது.

பாடு - கண்ணனின் கால்மாடு தனிலமர்ந்தான் தருமன்.

அளை - கல்லளை கசியும் சுனைநீர்
(அளை - துளை போன்ற இடம்).

தேம் - தோழி தேஎத்தும் கண்டோரிடத்தும்
செவிலி பேசுவாள்

உழை - என்னுழை வந்த இனியவள் என் துணைவி.

வழி - புன்னை மரவழி புதியவள் நின்றனள்.

உழி - காதலன் சென்ற அவ்வுழிச் சென்றதென் நெஞ்சு.

உளி - காவுளி நிற்பவர் காதலர் போலும்.

உள் - வகுப்பினுள் அமைதி காத்தனர் மாணவர்.

அகம் - அவையகத்து அறிவின்றிப் பேசற்க.

புறம் - மடைப்புறம் பாய்ந்தது பெருவெள்ளம்.

இல் - மாமரத்தில் குயில் கூவியது .

உரையாசிரியர்கள் செய்யுளடிகளையே எடுத்துக் காட்டியுள்ளனர். இவை 'இடம்' எனும் ஒரு பொருளேயன்றி, ஒவ்வொன்றும் ஒருசார் நிழற்பொருளும் உடையன. ஒரு சார் - ஒரு பக்கமான ஒதுக்கிடம். நிழற் கீழ் - திருவடிக்கண் என்பதாகவும் பொருள்படும். அடிமுதல் - பாதமாகிய அடிக்கண் தொட்டு. கால்மாடு - கால்பக்கமுள்ள இடம். உள் - உள்ளேயுள்ள இடம். இங்ஙனம் பலதிறந்தனவான இடங்களை இவை உணர்த்தும்.

இவை சில பெயர்களாகவும் வழங்கும் : கண்ணகன் ஞாலம் - இடம் பரந்த உலகம். அகத்திற்குரியவர் - அகத்துக்காரர், ஆத்துக்காரர் என்பது வட்டார வழக்கு(அகம் - வீடு). இடைச்சுரம் - பாலை இடைவழி. தென்திசை - திசை பெயராதலே பெருவழக்கு.

## எட்டாம் வேற்றுமை
## விளி வேற்றுமையாகும் திரிபுகள்

303. எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
**திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்**
**திரிபுமாம். பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முக மாகத் தான் அழைப் பதுவே** 46

எட்டாம் வேற்றுமையின் பொருள் படர்க்கைப் பெயர்களைத் தனக்கு எதிர்முகமாகத் தன்பால் அழைப்பதாகும். 'ஏ தோழா' என அழைப்பது போலப் படர்க்கையில் நிற்பவரை, முன்னிலைப் படுத்தி அழைப்பது.

எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. ஆனாலும் பெயரே - பல்வகைத் திரிபு அடைவதை, அதன் உருபு என்றனர். எழுவாயும் பெயராகவே நிற்றலான், அதனுடன் இதை வேறுபடுத்த வேண்டியுளது. 'எழுவாய் உருபு திரிபில் பெயரே' என்பது முதல் வேற்றுமை; 'ஈறு திரிபுகொள் பெயர்' விளிவேற்றுமை.

விளிப்பொருளை ஏற்பதற்காக பெயர்ஈறு திரிதல்: அம்மை - அம்மா! ஐ - ஆ ஆனது திரிதல்

ஈறுகுன்றல் : நண்பன் - நண்ப! மீனாள் - மீனா!

ஈறுமிகுதல் : அம்மை - அம்மையே! நண்பன் - நண்பனே!

ஈற்றயல் திரிதல் : மக்கள் - மக்காள்! இயல்பு : கண்ணன்! தம்பி! தலைவி! இவை அண்மை விளி. இவை ஒன்றும் பலவும் கலந்து வருதலுண்டு.

ஈறுகுன்றி,ஈற்றயல் திரிதல் : கண்ணன் கண்ணா.

ஈறுகுன்றி, ஈற்றயல் திரிந்து, ஈறுமிகுதல் : அண்ணன் - அண்ணாவோ.

அண்மை விளி கண்ணன் என்பதன் ஒலிப்பும் - கண்ணன் வந்தான் என வரும் எழுவாய் வேற்றுமை ஒலிப்பும் வேறுபடுதல் சொல்லிப் பார்த்தால் விளங்கிவிடும்.

## விளிக்கப்படும் பெயர்களின் பட்டியல்

**304. இஉ ஊவோடு ஐ ஓ னளரல**
**யவ்வீற்று உயர்திணை; ஓ,ர அல் இவற்றோடு**
**ணஃகான் ஆஈறாகும் பொதுப்பெயர்**
**ஞநஒழி அனைத்தீற்று அஃறிணை விளிப்பன 47**

தமிழ் இலக்கணம் போல் வறையறுக்கப்பட்ட இலக் கணமுடைய மொழி பிறிதொன்று உலகிலில்லை எனப் பிற நாட்டார் கூறியுள்ளனர். 'விளி' ஏற்கும் பெயர்கள் இவை எனப் பட்டியல் போடும் இது மிக நுட்பமானது. நமக்குக் கடினம் போல் தோன்றினும், நமது புலவர்களின் நுண்மாண் நுழைபுலத்தை வியவாமல் இருக்க முடியாது.

இ, உ, ஊ, ஐ,ஓ என்னும் ஐந்து உயிரெழுத்துக்களும் ன, ள, ர, ல, ய என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் ஆகிய பத்தும் ஈறாக வரும் உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும். மேலே சொன்னவற்றுள் ஓ, ர இரண்டுமல்லாத எட்டும், ண, ஆ இரண்டும் சேர்ந்த பத்தையும் ஈறாகவுடைய பொதுப் பெயர் களும் விளியேற்கும்.

மொழியீறாகும் எழுத்துக்கள் 'ஆவி ஞணநமன யரல வழள மெய், சாயும் உகரம் நாலாறும் ஈறே' (107) என்று முன்பு கூறிய 24-இல், ஞ,ந, மொழி ஈறாகாத எ மூன்றையும் நீக்கி, மீதமுள்ள 21 எழுத்துக்களையும் ஈறாகப் பெற்று வரும் அஃறிணைப் பெயர்கள் விளியேற்கும்.

உயர்திணைப் பெயர்கள்: தோழி (அண்மை விளியில் 'இ' வந்தது) தோழீ! தோழியே! எனக் கூப்பிடலாம். அன்னை (ஐ விகுதி) அன்னாய், அன்னையே என அழைக்கலாம். வரதராசர் - வரதராசரே, வரதராசா எனக் கூவலாம். தோன்றல் - தோன்றால் என விளிக்கலாம்.

இருதிணைப் பொதுப்பெயர் : மருதி(ஒரு பெண் அல்லது ஆ (பசு). மருதீ! மருதியே! எனலாம். தாய் - தாயே, என்று இருதிணையிலும் பாடிப்பரவலாம்.

அஃறிணைப் பெயர்: கிளி(கிளியே); நாரை (நாராய் நாராய் செங்கால் நாராய்!)

## மூன்று பெயர்களும் விளிக்கும்போது பொதுவாகவரும் மூன்று 'விளியுருபுகள்'

305. இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்
இகர நீட்சியும் உருபாம் மன்னே 48

உயர்திணை அஃறிணை பொதுத்திணை எனப்பட்ட மூன்று பெயர்களிடத்தும் இயல்பாக வருதலும் இறுதியில் ஏகாரம் பெறுதலும் இகரமாயின் ஈ என நீளுதலும் பெரும்பாலும் விளி உருபுகளாகும்.

ஒருவரைப் பெயர் சுட்டிக் கூப்பிடும் போது, நாம் இடம் சூழலுக்கேற்ப, எப்படிவேண்டுமோ அப்படி அழைப்போம். அதையே 'இலக்கணம்' வகுக்க முயல்கின்றனர். பக்கத்தில் இருந்தால் தம்பி! நம்பி! கண்ணகி! சேரன்! என்று மென்மையாகத் திரிபின்றி, இயல்பாகக் கூப்பிடுவோம்.

அண்ணாமலை, சிதம்பரம் எல்லாம் இன்று பொதுப் பெயர்களே. மலை, ஊரையும் குறிக்கும்; மக்களையும் குறிக்கும்

கிளி பேசு, முல்லை பூத்தியோ என்பன அஃறிணை. இவை யாவும் இயல்பு எனப்படும் விளிவேற்றுமை.

கண்ணகியே! சேரனே! என்றும், அண்ணாமலையே! சிதம்பரமே! என்றும் கிளியே! குயிலே! என்றும் 'ஏ' காரம் சேர்ப்பது உண்டு. வண்டே பூவே நண்பனே முருகனே அண்ணாவே!- என அழைப்பன பலவகையல்லவா? 'ஏ' வந்தது.

தோழீ! சாத்தீ! மந்தீ! - எனக் கூப்பிடுவர். (இ - ஈ ஆனது). முன்பு மருதி, சாத்தி, சாத்தன், மருதன் என்பன ஆடுமாடு களுக்கும் மனிதர்களுக்கும் வழங்கியதால் பொதுப்பெயர் எனப் பட்டன. இன்று பொதுப்பெயர் இல்லையே எனல் தவறு. இன்றும் மிகுதியாக வழங்குவன உள. பாண்டியன், சேரன் என்பன பேருந்து, தொடர்வண்டிகளுக்கும் மனிதர்களுக்கும் பொதுப்பெயர்கள். தேமொழி தேனீர்க்கடை, கற்பகவல்லி உணவுக்கடை, பாப்பாத்தி காய் கறிக்கடை, செல்வி மருந்தகம், கருப்பர் சரக்குந்து (லாரி), கண்ணன் மிதிவண்டி - இங்ஙனம் மிகப்பலவுள. கண்ணன் சரியாகிவிட்டது. பாண்டியன் வருகிறது,பாண்டியன் வருகிறான் எனச் சொல்லிப் பாருங்கள்.

## விளியுருபுக்கு மேலும் சில சிறப்பு விதிகள்

306. ஐ இறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபாம்; அல்லவற்று ஆயும் ஆகும் 49

ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்கு ஆய், ஆ உருபாக வரும். முன்பு கூறிய பொது விதிப்படி இயல்பும், 'ஏ' காரம் மிகுதலும் உண்டு. அல்லவற்றுக்கு-அதாவது உயர்திணை,

அஃறிணைப் பெயர்களுக்கு அவற்றுடன் 'ஐ' காரம் 'ஆய்' எனத் திரிதலும் உருபாகும்.

அன்னை - அன்னாய், அன்னா (பொது). அன்னை என்று இயல்பாய் வருதலும் அன்னையே என ஏகாரம் மிகுதலும் முற்கூறப்பட்டன. 'அன்னே நின்னையல்லால் யாரை நினைக் கேனே'. அன்னே - என ஏகாரமாகத் திரிந்ததும் உளது. நாரை - நாராய் (அஃறிணை). விடலை - விடலாய் (இளையோய்) (உயர்திணை).

## 'ன' கரமெய் (ன்) இறுதி உயர்திணைப்பெயர் விளியேற்கும் போது, ஈற்றில் திரியும் விதிகள்

**307. ஒருசார் னவ்ஈற்று உயர்திணைப் பெயர்க்கண்**
**அளபு, ஈறு அழிவு, அயல் நீட்சி, அதனோடு**
**ஈறு போதல் அவற்றோடு ஓ உறல்**
**ஈறு அழிந்து ஓ உறல் இறுதியவ் வாதல்**
**அதனோடு அயல்திரிந்து ஏஉறல் ஈறு அழிந்து**
**அயல் ஏ ஆதலும் விளி உரு பாகும்**

பொதுவிதிப்படி மட்டுமன்றி கீழ்க்கண்டபடியும் திரிபுகள் ஏற்படும். இந்நூற்பா 'ன்' எனப்படும் னகரமெய் ஈற்று உயர் திணைப் பெயர்கள், விளியேற்கும் போது பெறும் சிறப்புத் திரிபுகளைக் குறிக்கிறது. பொதுவிதி முன்பு கூறப்பட்டது. அதைத் தவிர்த்து ஒரு சில இடங்களில் வரும் சிறப்பு விதிகளை இது கூறுகிறது.

அளபு - அளபெடுக்கும். கிழான் - கிழா அன். மலையான் - மலையா அன். ஈறுஅழிவு - ஒரு சில ஈறு கெடும். கவிஞன் - கவிஞ. பாணன் - பாண. நண்பர் - நண்ப. அயல் நீட்சி - சில ஈற்றயல் நீளும். மலையன் - மலையான் அதனோடு ஈறுபோதல் - சில ஈற்றயல் நீண்டு ஈறு கெடும். நண்பன் - நண்பா, இறைவன் - இறைவா, அவற்றோடு ஓ உறல் - சில ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகும். ஐயன் - ஐயாவோ. அழகன் - அழகாவோ.

ஈறு அழிந்து ஓ உறல் - சில ஈறு மட்டும் கெட்டு ஓகாரம்

மிகும். மலையன் - மலையவோ, திரையன் - திரையவோ. இறுதி யவ்வாதல் - சில னகரமெய்,'ய' கர மெய்யாகும். வாயிலான் - வாயிலாய். அதனோடு அயல்திரிந்து ஏஉறல் - சில ஈற்று னகரமெய், யகர மெய்யாகத் திரிந்து அதனுடன் அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரம் மிகும். வாயிலான் - வாயிலோயே. கோயிலான் - கோயிலோயே. ஈறு அழிந்து அயல் ஏ ஆதலும் - சில ஈறுகெட்டு அயலில் அகரம் ஏகாரமாகும். ஐயன் - ஐயே.

## ளகரஇறுதி (ள்) உயர்திணைப் பெயர் விளியேற்கும் போது ஏற்படும் மாற்றங்கள்.

**308. ளஃகான் உயர்பெயர்க்கு அளபு,ஈறு அழிவு, அயல்**
**நீட்சி, இறுதி யவ்வொற்று ஆதல்**
**அயலில் அகரம் ஏ ஆதலும் விளித்தனு** 51

பொது விதிப்படியன்றியும் (305), கீழ்க்கண்டபடியும் திரிபுகள் ஏற்படும். 'ள' கர மெய்யை (ள்) இறுதியாகவுடைய உயர்திணைப் பெயர்களுக்குள் சில அளபெடுக்கும். வேள் - வேஎள், ஈறு அழிவு - சில ஈறு கெடும். மீனாள் - மீனா, நல்லாள் - நல்லா. அயல்நீட்சி - சில விளிப் பெயர்கள் ஈற்று அயல் (கடைசிக்கு முந்தி) உள்ள எழுத்து நீளும். மக்கள் - மக்காள்; அடிகள் - அடிகாள்; நமர்கள் - நமர்காள். இறு யவ் ஒற்று ஆதல் - இறுதி 'ள்' - மெய், ய் - ஒற்று ஆதல். கோயிலாள் - கோயிலாய். சேயிழையாள் - சேயிழையாய். அயலில் அகரம் ஏ ஆதல் - ஈற்றயலில் உள்ள அகரம் ஏகாரமாகும். அடிகள் - அடிகேள். விளித்தனு - விளியுருபு. இங்ஙனம் விளிப் பெயர்களின் ஈற்றில் ஏற்படும் திரிபுகளை விளியுருபு எனல் மரபு.

## ரகரமெய் ஈற்று (ர்) உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் நெறிமுறைகள்

**309. ரவ்வீற்று உயர்பெயர்க்கு அளபு எழல், ஈற்றுஅயல்**
**அகரம் இ,ஈ ஆதல், ஆண்டை ஆ**
**ஈ ஆதல், அதனோடு ஏ உறல், ஈற்று ஏ**

**மிக்கு அயல் யாக்கெட்டு அதன் அயல் நீடல்,**
**ஈற்றின் ஈர்உறல் இவையும் ஈண்டு உருபே 52**

பொதுவிதி (305) அனைத்திற்கும் பொது. அதுவன்றி, இவையும் உள என்று கொள்ள வேண்டும். இத்திரிபுகள் 'விளி யுருபுகள்' என்றே அழைக்கப்படுகின்றன. ரவ் ஈற்று உயர் பெயர்க்கு 'ர' கர மெய் ஈற்று உயர்திணைப் பெயர்களுக்கு.

அளபு எழல் - அளபெடுத்தல். சிறார் - சிறாஅர்! மகார் - மகாஅர்

ஈற்று அயல் (கடைசிக்கு முதலிலுள்ளது) அகரம் இகரமாதலும் ஈகாரமாதலும்

- தெவ்வர் - தெவ்விர் ! வேந்தர் - வேந்தீர் !

ஆண்டை ஆ - ஈற்றயலாகிய அவ்விடத்து ஆ, ஈ ஆதல். அதனோடு ஏ உறல் - சில அத்திரிபுகளுடன் ஏகாரம் ஏற்கும்.

- சான்றார் - சான்றீர்! சான்றீரே!

சில ஈற்றில் 'ஏ' மிக்கு, ஈற்றுக்கு அயலிலுள்ள 'யா' கெட்டு, அதன் அயலிலுள்ள இகரம் ஈகாரமாகும்

- நம்பியார் - நம்பீரே தம்பியார் - தம்பீரே!

ஈற்றில் ஈர் உறல் - ஈர் பொருந்தும்.

- எமர் - எமரீர் தமர் - தமரீர்!

சில போது நரியாரே, நரியீரே, சாத்தியாரே, சாத்தியீரே என அஃறிணைப் பெயர், பொதுப்பெயர்களிலும் உயர் திணைக்கு என மேலே கூறப்பட்டது போல வரும்.

## லகர, யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறைகள்

**310. லகார ஈற்று உயர்பெயர்க்கு அளபும், அயல் நீட்சியும்**
**யகார ஈற்றிற்கு அளபுமாம் உருபே 53**

பொது விதியல்லாமலும் லகர மெய் ஈற்று உயர் திணைப் பெயர்க்கு ஒரு சார் அளபெடுத்தலும் சில ஈற்றயல்

நீளுதலும் உருபாகும். யகர மெய் ஈற்று உயர்திணைப் பெயர்க்கு அளபெடுத்தல் உருபாகும்.

மால் - மாஅல் - லகர ஈறு அளபெடுத்தது. தோன்றல் - தோன்றால், மடவரல் - மடவரால் (பெண்ணே) - அயல் நீண்டது. செவ்வேற் சேய் - சேஎய் (முருகன்) அளபெடுத்தது.

## னகர மெய் ஈற்று (ன்) அஃறிணைப் பெயரும் பொதுப்பெயரும் விளியேற்றல்

**311. னவ்வீற்று உயர்திணை அல் இரு பெயர்க்கண்**
**இறுதி அழிவதனோடு அயல் நீட்சி** 54

னகர மெய் (ன்) ஈற்று, உயர்திணை அல்லாத அஃறிணைப் பெயர்களிலும் பொதுப்பெயர்களிலும் சில ஈறு கெடும்; சில ஈறு கெடுதலோடு அயல் நீட்சியும் உருபாகும்

**அஃறிணைப் பெயர்கள்**

அலவன் - அலவ (நண்டு) ஈறு கெட்டது.

கலுழன் - கலுழா (கருடன்) ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது.

**பொதுப்பெயர்கள்**

சாத்தன் - சாத்த. ஈறு கெட்டது.
கொற்றன் - கொற்றா. ஈறு கெட்டு அயல் நீண்டது
(சாத்தன் கொற்றனென மாடுகளையும் அழைப்பதுண்டு)

## லகர, ளகர மெய் ஈற்று (ல்,ள்) அஃறிணைப் பெயரும் பொதுப் பெயரும் விளியேற்றல்

**312. ல, ள ஈற்று அஃறிணைப் பெயர் பொதுப் பெயர்கள்**
**ஈற்றயல் நீட்சியும் உருபா கும்மே** 55

ல, ளகர மெய்யீற்று அஃறிணைப் பெயர்க்கும் பொதுப் பெயர்க்கும் பொதுவிதியன்றி, ஈற்றயல் நீளுதலும் விளியுரு பாகும். முயல் - முயால். கிளிகள் - கிளிகாள். - ஈற்றயல் நீண்டது, அஃறிணையில். மக்கள் - மக்காள். இது பொதுப்பெயர்.

## விளியுருபுகளுக்குப் புறனடை

313. அண்மையின் இயல்பும் ஈறு அழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவும் ஆகும் 56

மேலே கூறிய விளி உருபுகள் அண்மை விளியாயின் (அருகிலிருப்பவரை அழைத்தால்) விளியேற்கும் பெயர்கள் இயல்பாயிருக்கும்; அல்லது ஈறு கெடும். சேய்மையில் அளபும் - தூரத்திலிருப்பவரை அழைத்தால் அளபெடை பெற்றுவரும். புலம்பும பொழுது (கூவிஅழுதல்) ஓகாரமும் பெற்று வரும். (மற்றையவை இம் மூன்று (அண்மை, சேய்மை, புலம்பல்) விதமாகவும் வரும்).

தோழி! முருகன்! வள்ளி! தம்பி! - இயல்பு. பக்கத்தி லிருப்பவரைக் கூப்பிடுவது. நண்ப! (ன் கெட்டது), வேந்த! (ன் கெட்டது) இதுவும் அண்மை விளி.

வள்ளீஇ! சேஎய்! முருகனேஎ! - அளபெடை ஆனது. அண்ணாவோ! அம்மாவோ! - புலம்புதல் (புலம்பல் விளி) அழுதுகொண்டே கூப்பிடுதல்.

## விளியுருபு ஏற்காத பெயர்கள்
## அழைத்துக் கூப்பிட முடியாத பெயர்கள்

314. நுவ்வொடு வினாச் சுட்டு உற்ற னளர
வை துத் தாம்தான் இன்னன விளியா 57

சில பெயர்களைக் கூப்பிட முடியாது. ஆகவே அவை விளி ஏலா. இதற்கும் விதி கூறுகிறது தமிழ் இலக்கணம்.

'நு' - வில் தொடங்கும் பெயர்கள் விளி ஏலா. விளியா - விளித்துக் கூறப்படா. நுமன், நுமள், நுமர். வினா, சுட்டு உற்ற ன, ள, ர ஈற்று உயர்திணைப்பெயர்கள் விளிக்கப்படா (வினா என்பது எ, யா, ஏ என்ற முதல் எழுத்துடன் வரும் உயர்திணை வினாப் பெயர்கள்; சுட்டு என்பது அஇஉ என்ற மூன்றுமான உயர்திணைச் சுட்டுப்பெயர்கள்).

எவன், எவள், எவர், யாவன், யாவர், யாவள், ஏவன், ஏவள்; ஏவர்; அவன், அவள், அவர், இவன் இவள், இவர்; உவன், உவள், உவர். உற்ற வை, து - முற்கூறிய வினா, சுட்டுப் பெயர்களில் வை, து என முடியும் அஃறிணைப் பெயர்களும் விளி ஏலா. எவை, எது; யாவை, யாது; ஏவை, ஏது. அவை, அது; இவை, இது; உவை, உது. தான், தாம் - இரண்டும் விளியேலாப் பெயர்களில் அடங்கும்

இன்னன என்றதால் மற்றையான், மற்றையாள், மற்றை யார், மற்றையது, மற்றையன, மற்றையவை; பிறன், பிறள், பிறர், பிறிது, பிற முதலியனவும் விளி ஏலா என்பர் உரையாசிரியர்கள்.

## முதலும் சினையும் ஒரு தொடரில் வரின் ஐ உருபும் கண் உருபும் மாறிவருதல்

**315. முதலை ஐ உறின் சினையைக் கண்ணுறும்**
**'அது' முதற்காயின், சினைக்கு ஐ ஆகும் 58**

முதலை ஐ உருபு பொருந்தினால், சினையைக் கண் உருபு சார்ந்துவரும். அது உருபு முதலுக்குவரின் (அது - முதற்காயின்) சினைக்கு ஐ உருபு வரும். அது முதற்காயின் என்பதற்கு, முன் சொன்ன 'கண்' உருபு முதலுக்குவரின் சினைக்கு 'ஐ' உருபு வருமென்றும் இரண்டாவதாக ஒரு பொருள் கொள்ளலாம். யானையைக் காலின்கண் வெட்டினான். யானை - முதல், கால் - சினை (அதன் உறுப்பு). யானையைக் காலை வெட்டினான் என இரண்டிடத்தும் ஐ உருபு வருவது சிறப்பன்று என்பது கருத்து.

யானையது காலை வெட்டினான்.
யானையின்கண் காலை வெட்டினான்.

## முதல் இது, சினை இது என்று எவ்வாறு அறிவது?

**316. முதல் இவை சினை இவை என வேறு உளஇல**
**உரைப்போர் குறிப்பின; அற்றே பிண்டமும் 59**

இவைதான் முதற்பொருள், இவைதான் சினைப்பொருள் என வேறுபாடு நிலையாக உள்ளன எதுவும் இல. அவை உரைப்பவர் குறிப்பினவாய் அமையும். பிண்டப்பொருளும் அத்தகையதே.

யானை முதல் என்றால் அதன் கால் சினை: கால் முதல் என்றால் அதன் நகம் சினை. மலை முதலென்றால் மரம் சினை; மரம் முதலென்றால் கிளை சினை; கிளை முதலென்றால் கொம்பு சினை. எனவே எவை முதல் என்பதும் எது சினை யென்பதும் உரைப்போர் குறிப்பின் வழிப்பட்டன. பிண்டம் (ஒரு குவியலும் அதன் பகுதியும்) இது போன்றனவே. பொலி - முதல். நெல் - பிண்டம். நெல்லைப் பொலியின்கண் வாரி னான்; நெல்லினது பொலியை வாரினான். நெல் - பொலிக் குவியலும் அதிலுள்ள நெல்லும் வேறல்ல. இங்கும் பொலியை நெல்லை வாரினான் என வருதல் சிறப்பன்று.

## உருபு மயக்கம்

**பொருளுக்கேற்பவே எந்த உருபும் பொருள் தரும். எந்த உருபில் கூறினாலும் பொருள் செல்லும் வழியில் உருபு பொருள் தரும்.**

**317. யாதன் உருபில் கூறிற் றாயினும்**
**பொருள்செல் மருங்கில் வேற்றுமை சாரும் 60**

ஒரு வேற்றுமைப் பொருளை, வேறு ஒரு வேற்றுமை உருபால் கூறலாம். அவ்வாறு உருபுகள் இடம் மாறி வருவன பலவுள. ஐ உருபுக்குரிய பொருள் உள்ள இடத்தில், ஒடு உருபு வந்தாலும் அந்த ‘ஒடு’ உருபு, ஐ-யின் பொருளையே பெறும். இதனை உருபு மயக்கம் என்பர். உருபு மயக்கத்தால் பொருள் மயக்கம் ஏற்படாது. எந்த உருபில் கூறினாலும், பொருள் கொள்ளும் வழியிலேயே வேற்றுமை உருபு சார்ந்து பொருள் தரும் (வேற்று உருபுக்குரிய வழியில் பொருள் சார்ந்து குழப்பம் ஏற்படுத்தாது). பொருளே முக்கியம். அதற்கேற்ப உருபைத் தான் மாற்றிப் பொருள்கொள்ள வேண்டும்.

வேயொடு சிரித்து விரிந்த தோள்கள்-(வேய் - மூங்கில்) இங்கு 'ஒடு' - உடனிகழ்ச்சிப் பொருள் தரவில்லை. வேயைப் (பார்த்துச்) சிரித்து, அதனிலும் உருண்டுதிரண்ட வலிய தோள்கள் என்பது பொருள். இங்கு 'ஐ' வேற்றுமை உருபிற் குரிய செயப்படுபொருளை 'ஒடு' தந்துளது. இதுவே உருபு மயக்கம்.

கிழங்கு மணலுக்கு ஈன்ற முளை - கிழங்கு மணலின் கண் ஈன்ற முளை. நான்காம் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளைத் தந்தது.

'செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்' - செய்யவள் தவ்வைக்குக் காட்டி விடும் என்று பொருள். கு - இடத்தில் ஐ - நின்று கு (நான்காம் வேற்றுமை உருபு)வின் பொருளையே தந்தது.

மதுரையின் நீங்கினான்; மதுரையிலிருந்து நீங்கினான். இது ஐந்தாம் வேற்றுமை - நீங்கற் பொருள். இதை 'மதுரையை நீங்கினான்' என ஐ உருபோடு கூறினும் நீங்கற் பொருளே. மதுரையின் வடக்கு மேலூர் - எல்லைப் பொருள் - ஐந்தாம் வேற்றுமை. இதை மதுரைக்கு வடக்கு மேலூர் என்று கூறினும், இன் எனும் பொருளே தரும்.

தூணின்கண் சார்ந்தான் என்பதைத் தூணைச் சார்ந்தான் என்பதுண்டு. (கண் வேண்டிய இடத்தில் ஐ வந்தது). கண் காணும் - கண்ணால் காணும். 'ஆல்' உருபு மறைந்து கண் எழுவாயாக நின்றது.நின்றாலும் கண்ணால் என்பதே பொருள். அதைக் கண்ணது காட்சி என ஆறாம் வேற்றுமை ஆக்கியும் கூறலாம் யாதன் உருபில் கூறினாலும், வேற்றுமைப் பொருள் வேறுபடாது. உருபு மாறிவருவது உருபு மயக்கம்.

## ஐ ஆன் கு உருபுகள் செய்யுளில் 'அ' - வாக மாறுதல்

**318. ஐ ஆன்குச் செய்யுட்கு அவ்வுமாகும்.**
**ஆகா அஃறிணைக்கு ஆன் அல் லாதன** 61

ஐ ஆன் (ஆல்) கு - மூன்று உருபுகளும் செய்யுட்கு உயர் திணையில் ஒரு சில இடத்தில் அகரமாகத் திரிந்து வரும்.

ஆன் அல்லாத ஐ, கு இரண்டும் அஃறிணைக்கண் அகரமாகத் திரியா. எனவே ஆன் மட்டும் அகரமாகத் திரியும் என்பதாம்.

காவலோனைக் கண்டு களிறஞ்சும் - காவலோனக் களிறஞ்சும். ஐ - அ - ஆனது. புலவரான் போற்றப்படுமே - புலவரானப் போற்றப் படுமே. ஆன் - அ ஆனது. 'கடிநிலை இன்றே ஆசிரியற்கு' என்பது 'கடிநிலை இன்றே ஆசிரியற்க என வரும். கு - க ஆனது - கு + என்பதில் உ, அ-வாக மாறியது. அஃறிணையில், 'புள்ளினான் விளைந்த புதுமை' என்பதை, 'புள்ளினான விளைந்த புதுமை' எனப்பாடுவர்.

## எட்டு வேற்றுமைகளும் முடிக்கும் சொல்லைப்பெறும் நெறி முறைகள்

**319. எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்,**
**அல்ல வினைகொளும், நான்கு ஏழ் இருமையும்**
**புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர் 62**

எல்லைப் பொருள் தரும் இன் என்னும் ஐந்தாம் வேற்று மையும் ஆறாம் வேற்றுமை அது-வும் பெயர்கொண்டு முடியும்.

அவையல்லாத எழுவாய் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை (ஐ), மூன்றாம் வேற்றுமை (ஆல், ஆன் ஒடு ஓடு) நான்காம் வேற்றுமை (கு), ஐந்தாம் வேற்றுமை (எல்லைப் பொருள் தவிர்த்தவை - நீங்கல் ஒப்பு, ஏது) ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை எல்லாம் வினைச் சொல்லைக் கொண்டு முடியும். நான்காம் வேற்றுமையும் (கு) ஏழாம் வேற்றுமையும் (கண், இடம்) வினையை ஏற்பதுடன் வினையொடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும்.

1. மதுரையின் தெற்கு திருமங்கலம். மலையனது கை - எல்லை 'இன்'னும், அதுவும் பெயர்கொண்டு முடிந்தன.
2. கண்ணன் வந்தான், கண்ணன் நல்லன்
   கண்ணனைக் கண்டேன், கண்ணனை உடையேன்
   கண்ணால் கண்டேன், கண்ணால் இனியன்

கண்ணனுக்குக் கொடுத்தான், கண்ணனுக்கு நல்லன்

நோயின் நீங்கினான், நோயிற் கொடியன்

அவையின்கண் இருந்தான், அவையின்கண் பெரியன்

கண்ணா வா, கண்ணா நல்லை

- அல்லன எல்லாம் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் கொண்டு முடிந்தன.

**நான்கும் ஏழும்**

3. பிணிக்கு மருந்து - பெயர் கொண்டது; பிணிக்குக் கொடுக்கும் மருந்து - இது வினையொடு தொடரும் பெயர் கொண்டது. மணியின்கண் ஒளி - பெயர் கொண்டது. மணியின்கண் ஒளிரும் ஒளி - இது வினையொடு பொருந்திய பெயர் கொண்டது. (முன்பு கண்ணனுக்குக் கொடுத்தான், அவைக்கண் இருந்தான். என இவை வினைகொண்டு முடிந்தன. அவையே அன்றி இவ்வாறு பெயரும், வினையுடன் கூடிய பெயரும் கொண்டு முடிவனவும் பெரும்பாலும் உள என்பதாம்). இனிச் சிறுபான்மையாக இவை தொழிற் பெயரையும் வினையாலணையும் பெயரையும் கொண்டு முடிதலும் உண்டு. எழுவாய் வேற்றுமை வினை கொண்டு முடிதலேயன்றிப் பெயரையும் வினாவையும் கொண்டு முடிதலும் உண்டு.

**கண்ணன் வருகை, (தொழிற்பெயர்) புலவன் எழுதியவன் (வினையாலணையும் பெயர்)**

**கண்ணன் வந்தான் (வினை) கண்ணன் அவன் (சுட்டுப்பெயர்), கண்ணன் யாவன் (வினாப்பெயர்), கண்ணன் யார் (வினாக்குறிப்புவினை). இவ்வாறு கொண்டு முடிவனவும் சிலவுள.**

# 2. வினையியல்

## இயல் கருத்து நிரல்

'வினைச்சொல்' பல சிறப்புக்களையுடையது. அது தனித்துநின்று, வாக்கியமாக முடியும். 'ஓடுகிறான்; பிடியுங்கள்' - என்றால் 'அவன்' தோன்றா எழுவாயாகி மறைந்துநின்று, இதுவே தனிச்சிறு வாக்கியமாகிவிடும். ஒரு வினைச்சொல்லை வைத்து, அதன் திணை பால் எண் இடம் அனைத்தையும் அறியலாம். 'கற்கின்றாள்' - உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை யாவும் புலனாகின்றன. பெயர்ச் சொல்லும் இவற்றை உணர்த்துமாயினும் பெருமாள், மணி, அழகு எனும் பெயர் போல்வனவும் சாத்தி, மருதி, கொற்றி, பாண்டியன், சேரன் போல்வனவுமாகிய பொதுப் பெயர்களும் வினைச் சொல்லை வைத்தே திணை, பால் உணரப்படும். பாண்டியன் வந்துவிட்டது - என்றால் அஃறிணையாகிவிடும்

பிறமொழிப் பெயர்கள்தான் தமிழிற் கலக்கும். சினிமா, மேசை, பேனா, கமலம், குரான் திருமறை, இயேசு - பெயர்கள். வினைச் சொற்கள் கலத்தில் எளிதன்று. ஆனாலும் இன்று ஆங்கிலக் கல்விக் கூடங்களை, தமிழக அரசுகள் வளர்த்துத் தமிழறிவை அறவே அழித்துவிட்டதால், வண்டி 'மூவ்' (Move) ஆகிறது; பாடம் ஸ்டார்ட் (Start) ஆகிவிட்டது; தமிழ் குளோஸ் (Close) ஆகிப் போனது. இவ்வாறு வினைச் சொற்களும் அயல்சொற்களாவது ஒரு மொழியின் அழிவு தொடங்கிவிட்டதையே உணர்த்துகிறது.

பெயர் வேற்றுமை ஏற்கும்; காலம் காட்டாது. வினை காலம் காட்டும்; வேற்றுமை ஏற்காது. இது பொது விதி.

### பெயர் வினையாக மாறுமிடம் ஒன்றுண்டு

அவன் பொன்னன் இதில் பொன்னன் பயனிலை. அவள் அழகினள். இதில் அழகினள் பயனிலை. அவன் பொன்னன் ஆயினான்; அவள் அழகியாகவுள்ளாள் என்றே இவை முடிவு பெறவேண்டும். ஆயினும் பொன்னன், அழகினள் என்பன குறிப்பு வினை எனப்படும். இது கரிது, அவன் நல்லன் எனக்

காலங் காட்டாதன யாவும் குறிப்புவினை அல்லது வினைக்குறிப்பு எனப்படும். காலம் காட்டுவது தெரிநிலை வினைமுற்று. அவையே பெரும்பான்மையின.

## வினை பெயராக மாறுமிடம் இரண்டு உண்டு

வந்தான் - வருதல். அறிந்தான் - அறிவு. தேர்ந்தான் - தேர்வு. படித்தான் - படிப்பு. இங்கு வருதல், அறிவு, தேர்வு, படிப்பு என்பன வினை - தொழில் பெயராக மாறியவை. இவை **'தொழிற்பெயர்'** - எனப்படும். வினைச்சொல், பெயர்த் தன்மைப்பட்டு, வேற்றுமை உருபேற்கும் போது வினையா லணையும் பெயராகும். வீட்டுக்கு வந்தவரை வரவேற்றேன்; வந்தார்க்கு எல்லாம் வாழ்வுதந்து 'பாழான' தமிழ்நாடு; தமிழால் இறைவனை அருச்சித்தவர்பால் அருள் தோன்றும். வந்தவரை, வந்தார்க்கு, அருச்சித்தவர்பால் இவை வேற்றுமை உருபேற்ற **வினையாலணையும் பெயர்கள்**. கற்றவர் உயர்வர். கற்றவர் - வினையாலணையும் பெயர் எழுவாயாக நின்றது.

இத்தகைய வினைச்சொல்லின் இலக்கணம், இவ் இயலில் பவணந்தி முனிவரால் வரையறைப்படுத்தி விளக்கப் படுகிறது.

## தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம்

1. ஒரு தெரிநிலை வினைச்சொல் அதைச் செய்பவன் யார் (எழுவாய்), கருவி (காரணம்), நிலம் (நிகழிடம்), செயல், காலம், செயப்படுபொருள் ஆறினையும் உணர்த்தும். படித்தான் - மாணவன், கண்களால், பள்ளி, படித்தல், முன்பு, புத்தகம் - ஆறும் முறையே உணரப்பட்டன.

## குறிப்பு வினைச் சொல்லின் பொது இலக்கணம்

2. குறிப்பு வினை பெயரடிப்படையில் பிறப்பது. பெயர்கள் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என ஆறு வகைப்படும் என்று முன்பு படித்தோம் (132). இவற்றின் அடிப்படையில் வருவதே குறிப்பு வினை. முன் நூற்பாவில் சொன்ன செய்பவன் எனப்படும் அறுவகைப் பெயராகிய வினைமுதல் ஒன்றை மட்டுமே வெளிப்படையாக உணர்த்துவது வினைக்குறிப்பு அல்லது குறிப்புவினை எனப் படும். பிறயாவும் குறிப்பால் மட்டுமே அறியப்படும். அவன் நல்லன் - நல்லன் ஆயினான் எனப் பொருள்படும் இது, வினைமுதலாகிய பெயரை மட்டுமே உணர்த்துகிறது.

### வினைச் சொல் முற்றாகவும் எச்சமாகவும் வருதல்

3. வினைச்சொல் வினை முற்றாகவும் பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டாகவும் வரும். திணை, பால், இடங்களில் ஒன்றைமட்டும் உணர்த்துவனவாகவும் பலவற்றுக்குப் பொதுவாகவும் வரும்.

தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினை முற்று எனவும் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனவும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனவும் வரும்.

வந்தான், செல்கின்றான் - தெரிநிலை வினைமுற்றுக்கள். பெரிது, நன்று - குறிப்பு வினை முற்றுக்கள். வந்த பையன்- தெரிநிலைப் பெயரெச்சம். நல்ல பையன் - குறிப்புப் பெயரெச்சம். வந்து போனான் - தெரிநிலை வினையெச்சம். நன்கு பேசினான் - குறிப்பு வினையெச்சம். நாடிய வந்தனன், நாடிய பொருள் கை கூடும். 'நாடிய' வினையெச்சம், பெயரெச்சம் இரண்டிற்கும் பொதுவாயிற்று. தெரிநிலை எச்சங்கள் காலம் காட்டும்; திணை, பால் உணர்த்தா. (வந்த - ஆண், பெண், மனிதர், மாடு) குறிப்பு எச்சங்கள் பெரும்பாலும் பண்பை உணர்த்தும் அடை மொழிகளாக மட்டுமே வரும்.

### வினைமுற்றின் இலக்கணம்

4. வினைமுற்று முன்பு குறிப்பிட்ட செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் எனும் ஆறினையும் தோற்றுவித்துவரும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனப்பட்ட ஆறு பெயர்களையும் பயனிலையாக ஏற்குமேயல்லாது, வேறு எதனையும் ஏற்காது.

முற்றுவினை - செயல் முற்றுப் பெற்றதை உணர்த்துவது= (பொழிந்தது மழை)

வினைமுற்று முற்கூறிய பொருள், இடம் முதலான ஆறுக்கும் பயனிலையாக வருமென்பது, சொல்லாமலே பெறப்படும். (மழை பொழிந்தது)

கொடிது மொழிக் கலப்பு - மொழிக் கலப்பு கொடிது. குறிப்பு வினை முற்று.

## தெரிநிலை வினைமுற்றின் 27 வகைகள்

5. ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் ஐந்தையும் படர்க்கையில், மூன்று காலத்துடனும் பெருக்கவே படர்க்கை வினைமுற்றுக்கள் 15 ஆகும். (அவன் வந்தான், அவள் வந்தாள்.......) தன்மை, முன்னிலை இடத்தில், ஒருமையில் மூன்று காலத்தோடும் பெருக்க 6 ஆகும். (நீ வருகின்றாய், நான் சென்றேன்)

தன்மை, முன்னிலை இடத்தில், பன்மையில் மூன்று காலத் தோடும் பெருக்க 6 ஆகும். (நீங்கள் வருவீர்கள், நாங்கள் போவோம்) ஆக, தெரிநிலை வினைமுற்றுக்கள் 27 ஆகும்.

## ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

5.1 அன், ஆன் என்னும் விகுதிகளைப் பெற்று முடிவன படர்க்கை உயர்திணை ஆண்பால் ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுக்களாகும். குறிப்பு வினை முற்றுக்கும் இது பொருந்தும். (ஓடினன், ஓடினான், சிறியன், சிறியான்)

## பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

5.2 அள், ஆள் என்னும் விகுதிகளைப் பெற்று முடிவன படர்க்கை உயர்திணை பெண்பால் ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுக்களாகும். குறிப்பு வினை முற்றும் இவ் வாறு வரும். (ஓடினள், ஓடினாள், சிறியள், சிறியாள்)

## பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

5.3 அர், ஆர், ப, மார் என்னும் விகுதிகளைப் பெற்று வருவன படர்க்கை உயர்திணைப் பலர்பால் வினைமுற்றுக் களாகும். இவற்றுள் மார் ஈறு பெயருடன் முடிவதேயன்றி வினைச் சொல்லோடும் முடியும். (ஆடினர், ஆடினார், சிறியர், சிறியார், வருப, என்ப, உண்மார்)

## ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

5.4 து, று, டு மூன்றும் குற்றியலுகரமாக வரும் வினைச்சொல் ஈறுகள். இவை படர்க்கையில் அஃறிணை ஒன்றன்பாலைக் குறிக்க, தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்றாக வரும். இவற்றுள் டு - வ்விகுதி குறிப்பு வினைமுற்றில் மட்டுமே வரும். (றுவ் விகுதியும் இறந்தகால இடை நிலையோடு மட்டும் கூடிவரும்.) (ஓடியது, செவ்விது, ஓடிற்று, எற்று, பொருட்டு, உண்டு)

## பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

5.5 அ, ஆ ஈறுகள் படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகள். அவற்றுள் ஆ - விகுதி எதிர்மறையில் வரும். (அகர விகுதி அன் சாரியை பெற்றும் பெறாதும் வரும். ஆ - எதிர் மறையில் மட்டும் வருமெனவே, அகரவிகுதி உடன்பாடு, எதிர்மறை இரண்டிலும் வரும் என்பதாம்)

(அவை ஓடுவ, ஓடுகின்றன, ஓடின எனவரும். ஓடுவ - அகர ஈறுமட்டும். ஓடு + வ் + அ.வ் - எதிர்கால இடைநிலை ஓடு + கின்று + அன் + அ. இதில் 'அன்' சாரியை வந்தது. அவை நடந்தன, நடந்தில - அ விகுதி உடன்பாடு எதிர் மறை இரண்டிலும் வந்தது. அவை ஓடா, நடவா என ஆ விகுதி எதிர்மறையில் மட்டும் வந்தது.

## இருதிணைக்கும் பொதுவாக வரும் வினைச்சொற்கள்

6. தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று வியங் கோள் வினைமுற்று, வேறு இல்லை உண்டு எனும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்கள், தெரிநிலை மற்றும் குறிப்புப் பெயரெச்சம், தெரிநிலை மற்றும் குறிப்பு வினையெச்சம் ஆகியவை இரு திணைக்கும் பொதுவாகவரும் வினைச் சொற்களாகும். ('செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெய ரெச்சம் வினைமுற்றாகவும் வரும். அதுவும் இருதிணைப் பொது வினையாக வரும்.)

(நான் வருவேன், நீ தந்தாய், மணமக்கள் வாழ்க, அது வேறு, பொருள் இல்லை, அவள் இல்லை, அரசியலில் நல்லவர் உண்டு, வந்த பையன், பழகிய மாடு, நடந்து போனான், கடந்து சென்றது, நல்ல பையன், கடிது சென்றது, தேவி தமிழிசை பாடும்)

வா, போ, இரு - என்பன ஏவல்வினை. வருக, செல்க, வாழ்க என்பன வியங்கோள் வினை. 'வியம்' எனினும் ஏவுதலே. ஆனால் அது மதிப்புடன் ஏவுதலாக வரும்.

## தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்

7.1 கு, டு, து, று என்னும் நான்கு குற்றியலுகர ஈறுகளும், அல், அன், என், ஏன் என்னும் நான்கு மெய்யீறுகளும் உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணைகளில் ஆண், பெண், ஒன்று என வரும் மூன்று பால்களுக்குமட்டும் தன்மை

ஒருமை வினைமுற்று விகுதிகளாக வரும். (பொதுவாக வினைமுற்று என்றால் அது தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று இரண்டையும் குறிக்கும்.) (கு, டு, து, று - நான்கும் விகுதியே காலம் காட்டும்.) யான் செய்கு, யான் கண்டு, யான் வேண்டுவல், யான் நடப்பென், யான் நல்லென், யான் வருவேன், யான் வருவன் என இவ்வாறு வரும். பழந்தமிழில் யான் வருவென், தருவென் என 'என்' ஒன்றே தன்மை ஒருமைக்கு வரும். வருவன், தருவன் என்பன படர்க்கை இடத்தினை உணர்த்தும். காலப்போக்கில் இவை தன்மை ஒருமைக்கு மாறிக்கொண்டன.

### தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்:

7.2 அம், ஆம் என்பன தன்மையை மட்டுமன்றி முன்னிலை யாரையும் உளப்படுத்தி வரும் தன்மைப் பன்மை வினை முற்றுக்கள். (நாம் பாடுவம்,நாம் பாடுவாம்) எம், ஏம், ஓம் என்பன தன்மையை மட்டுமன்றி, படர்க்கை இடத்தவரை உளப்படுத்தியும் வரும் தன்மைப் பன்மை வினை முற்றுவிகுதிகள். (நாம் செய்குவெம், நடப்பேம், எழுதுவோம்.) உம் - சேர்ந்த கடதற என்பனவாகிய, கும், டும், தும், றும் என்னும் நான்கு விகுதிகளும் முன்னிலை, படர்க்கை எனும் இரண்டு இடத்தார்களை உளப்படுத்தியும் வரும் தன்மைப் பன்மை வினைமுற்றுக்களாகும். (யாம் உண்கும், நாம் உண்டும், நாம் அனைவரும் சேறும். இவ்வழக்கு இன்று ஏனைய திராவிட மொழிகளில் உளது.) இவை (கும், டும், தும், றும்) காலங்காட்டுதலின் குறிப்பு வினையாக வாரா. ஏனைய யாம் நல்லம், பெரியேம், பெயரினோம் எனக் குறிப்பு வினையாக வரும்.

### செய்கு, செய்கும் - வினைமுடிபும் கொள்ளுதல்

8. 'செய்கு' என்னும் தன்மை ஒருமை வினைமுற்றும் 'செய்கும்' என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றும் பெயரோடு முடிதலேயன்றி, வினைச்சொல் கொண்டு முடியினும், முன்பு விளக்கியபடி வினைமுற்றேயாகும்; எச்சம் எனப் படாது என்பது கருத்து. (உண்கு யான், உண்கும் யாம் - பெயரோடு முடிந்தமை முன்னைய விதி. உண்கு வந்தேன், உண்கும் வந்தேம் - இந்நூற்பா விதி. இங்குள்ள உண்கு, உண்கும் என்பன எச்சங்களல்ல; முற்றுக்களேயாம்.

## உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள்

9. முன்னிலை வினைமுற்றுடன் கூடிய படர்க்கையும் உளப் பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றாகும். (நீர் உண்டனிர், நீயும் அவனும் வந்தனிர், நீயும் அவளும் நட் பினிர்.)

## முன்னிலை ஒருமை வினைமுற்றின் விகுதிகள்

10.1 ஐ, ஆய், இகர ஈறுகளையுடைய மூன்றும், ஏவலில் வரும் இறுதிநிலைகளையுடைய எல்லாச் சொற்களும், ஆண், பெண், ஒன்று எனவரும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களாகும்.

'ஏவல் பொருளில் வரும் எல்லா ஈற்றவும்' என்றது முன்பு, 'நட, வா' தொடங்கிச் சொன்ன 23 இறுதிகளையுடைய சொற்களாகும். இவை நடவாய், வாராய் என விகுதி யுடனும் நட, வா என விகுதி குன்றியும் வரும் என்பர். (நீ வந்தனை, நீ கொடுப்பாய், நீ தருதி என வரும். நட, போ, வா என வரும் ஏவல் வினைகளும் முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களே. பெரியை, கரியாய், நல்லி எனக் குறிப்பு வினைமுற்றுக்கள், முன்னிலை ஒருமையில் வரும்.)

## முன்னிலை ஒருமையில் 'ஈ' விகுதியும் வருதல்

10.2 முன்னிலை ஏவல் ஒருமையில் ஈகாரமும் ஏகாரமும் இறுதி யாக வருவதுண்டு. அவ்வாறு வரும்போது அவை தமக் குப் பொருந்திய மெய்யெழுத்து ஒன்றுடன் பொருந்தி வரும். (சென்றீ பெரும! (ற் + ஈ), நீ அவண் நின்மே! (ம் + ஏ) ) ஈ, ஏ - விகுதிகள். ற், ம் - எழுத்துப்பேறு. பொரு ளின்றி, உயிர்சேர இடங்கொடுத்ததால் எழுத்துப்பேறு என்பர்.

## முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்

10.3 இர், ஈர் இறுதியையுடைய இரண்டும் இருதிணைக்கும்

பொதுவான, முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களாகும். 'மின்' ஈற்றில் வருவன, முன்னிலைப் பன்மையில் ஏவலைக் குறிக்கும் வினைமுற்றுக்களாகும்.

*(நீர் பேசினிர், நீர் உண்டீர், விரைந்து வாரீர். நீர் உண்மின், சென்மின்) (நீர் பழங்குடியினிர், பெரியீர் என்பன குறிப்பு வினை.)*

## வியங்கோள் வினைமுற்று விகுதிகள்

*10.4* க, ய வுடன் ரகர ஒற்று இறுதியில் வருவன, வியங்கோள் வினைகளாக, மூன்று இடம் ஐம்பால் அனைத்திற்கும் பொதுவாக வரும்.

நீ வாழ்க, யான் மனம் நிறைவடைக, தமிழ் வாழ்க - மூன்றிடத்தும் வந்தன. அவன் அவள் அவர் அது அவை - வாழ்க, வாழிய, வாழியர். இவை தவிர வேறு சிலவும் உள. ஓங்குக என்னாமல் ஓங்க - என 'அ' ஈறு வருதலுண்டு. 'எனல்' - என்க எனும் பொருளில் 'அல்' வந்தது. ஆதல் (ஆகுக) - தல் ஈறு வந்தது. இவையும் வியங்கோளில் வழங்குகின்றன.

ஏவல்வினை முன்னிலையில் மட்டும் வரும். வியங்கோள் வினை (மதிப்புடன் ஏவுதல்) இருதிணை, ஐம்பால், மூன் றிடங்களிலும் வரும்.

## வேறு, இல்லை, உண்டு - குறிப்பு வினைகளின் இலக்கணம்

*11.* வேறு இல்லை உண்டு எனும் மூன்று குறிப்பு வினை முற்றுக்களும் ஐம்பால் மூவிடத்திற்கும் வரும்.

*(யான், நீ, அவன் - வேறு, இல்லை, உண்டு என வினை முடிபு கொடுக்கவும்.)*

இல்லை என்பது - 'எஞ்ஞான்றும் இல்' என நிற்பதுண்டு. வேண்டும், தகும், படும் என்பன சில இதுபோல் ஐம்பால் மூன்றிடத்தில் வருவதுண்டு. ஓதல் வேண்டும் யான், நீ, அவன். அவனுக்கு இது தகும்; இவ்விடம் கூட்டம் நடத்தத் தகும்; பாம்பினை அஞ்சப்படும், வஞ்சரை அஞ்சப்படும் என வரும்.

## பெயரெச்சம்

### பெயரெச்ச வாய்பாடுகளும் இலக்கணமும்

12.1 செய்த செய்கின்ற செய்யும் என்னும் வாய்பாடுகள் 'செய்' என்பதிலிருந்து பிறந்த, இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் மூன்று காலமும் செயல் இன்னதென்பதும் காட்டும் பெயரெச்சங்கள் (இது தெரிநிலைப் பெயரெச்சத்திற்குரியது.) மேலும் ஐம்பாலும் தோன்றாது, செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் எனப் பயனிலையாக முடியும் ஆறு பொருட்பெயர்களும் அறியப்படாமல் எஞ்சும் படி நிற்பது பெயரெச்சமாகும்.

தெரிநிலைப் பெயரெச்சம்: விழுந்த, விழுகின்ற, விழும். இவற்றில் முக்காலமும் விழுதலாகிய தொழிலும் தெரிந்தன. விழுந்தது ஆணா, பெண்ணா, சுவரா எனும் பால் வேறுபாடும் விழுந்தது பொருளா, கருவியா, மழையா எனும் பிறவும் எஞ்சிநின்றன.

கரிய நிறம், நல்ல மழை, பெரிய மனம் - குறிப்புப் பெயரெச்சம்.

### செய்யும் என்னும் வாய்பாட்டிற்குச் சிறப்பு விதிகள்

12.2 'செய்யும் - என்னும் எச்சத்தின் ஈற்று உயிர் மெய் கெடும். இது உலக வழக்கிலும் உளது. (போகும் - போம், ஆகும் - ஆம், வாவும் - வாம் என ஆதல் இது) செய்யுளுள் ஈற்று 'உம்' - உந்து என ஆகும். (பாயுந்து, நடக்குந்து - மிகப் பழைய வழக்கு இது). மேலும் செய்யுளில் 'செய்யும்' - என்பது முற்றாக வரின் உயிரோ, உயிர் மெய்யோ கெடும். (இவள் கலுழும் - கலுழ்ம் = ஈற்று உயிர் கெட்டது. ஊர் மொழியும் - மொழிம் - ஈற்றுயிர்மெய் கெட்டது.) இவை செய்யுளில் வருவன.

## வினையெச்சம்

### வினையெச்சத்தின் இலக்கணம்

13.1 வினையெச்சம் செயலிது எனவும் காலமும் தோன்றி, ஐம் பாலும் வினையும் எஞ்சிநிற்பதாகும். குறிப்பு வினை யெச்சத்தில் காலம் தோன்றாது. கற்று உயர்ந்தான் - இதில் கற்று என்பது உயர்ந்தான் என வினைகொண்டு முடிந்தது. கற்றலாகிய தொழிலும், இறந்த காலமும் தோன்றின.

நன்கு நடந்திலன் - நன்கு என்பது குறிப்பு வினையெச்சம்.

கற்று உயர்ந்தான், உயர்ந்தார் என முடிக்கலாம். நன்கு நடந்தது, நன்கு நடந்தன, நன்கு பேசினாள் என முடிக்கலாம். இவை ஐம்பால் தோன்றாமை அறிக. முடிக்கும் வினையால் மட்டுமே பால் அறியப்படும்.

**வினையெச்ச வாய்பாடுகள்**

*13.2* செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் எனும் 9 வாய் பாட்டால் வருவனவும் வான், பான், பாக்கு எனும் மூன்று விகுதிகளைக் கொண்டு வருவனவும் இவை போல்வன பிறவும் வினையெச்சங்களாகும். இவற்றுள் முதலிலுள்ள ஐந்தும் இறந்த காலம் காட்டும். நடுவிலுள்ள செய எனும் ஒன்று நிகழ்காலம் காட்டும். பின்னருள்ள செயின் செய்யிய செய்யியர் எனும் வாய்பாட்டு எச்சம் மூன்றும் வான் பான் பாக்கு எனும் விகுதிகளால் முடிவன மூன்றும் ஆக இவ் ஆறும் எதிர்காலம் காட்டும்.

இவற்றுள் செய்து, செய்தென இரண்டும் 'த்' என்ற இடை நிலையால், இறந்தகாலம் காட்டின. பிற செய்பு, செய்யா, செய்யூ மூன்றும் இறுதிநிலையால் இறந்தகாலம் காட்டின.

படித்துத் தேறினான் - த் இடைநிலை இறந்த காலம் காட்டிற்று.

பசித்தென உண்டான் - இதுவும் த் இடைநிலை இறந்தகாலம் காட்டியது.

அறிகுபு முயன்றான் - அறிந்து முயன்றான்.

வணங்கா நின்றான் - வணங்கி நின்றான்.

இறந்தகாலம் உணர்த்தின

மோப்பக் குழையும் அனிச்சம் - செய எனும் வாய்பாட்டு வினையெச்சம் நிகழ்காலம் காட்டுகிறது.

வாழ்தல் வேண்டின் கற்றிடுக - செயின்எனும்வாய்பாட்டு வினையெச்சம் எதிர்காலம் காட்டிற்று.

எழுவான் வேண்டினான்<br>தடுப்பான் முயன்றான் } எதிர்காலம் காட்டின

தருபாக்கு அறிந்தனன்.

'புதியன் புகுதல்' எனும் முறைப்படி, இன்று வழங்கும் வினையெச்ச விகுதிகள் மிகப் பலவாகும்.

பாடிக் கொண்டான் - இ விகுதி. உண்பதற்கு வந்தான் - கு விகுதி. படித்தால் தேர்ச்சி பெறலாம் - ஆல் விகுதி. கற்றவழி வேலை கிடைக்கும் - வழி விகுதி. வருமேல் பார்த்துக் கொள்வோம் - ஏல் விகுதி. இவை போல்வன மிகப்பலவுள

நீ அல்லால் இல்லை - ஆல்
முயற்சி இல்லாமல் நடந்தது - மல்
வெருளாமை வேண்டும் - மை
} குறிப்பு வினையெச்சம்

## வினையெச்சங்கள் கொண்டு முடியும் விதம்

13.3 முன்னே குறித்த பனிரண்டு வகை வினையெச்சங்களில், முதலிலுள்ள செய்து, செய்பு, செய்யா, செய்யூ எனும் நான்கும், வான் பான் பாக்கு என முடியும் ஈற்றிலுள்ள மூன்றும் வினை முதல் வினை கொண்டு முடியும்.

இடையிலுள்ள செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் எனும் வாய்பாட்டு வினையெச்சம் ஐந்தும் வினை முதல் வினையையும் பிறிதின் வினையையும் கொண்டு முடியும்.

அவன் படித்து முடித்தான் - படித்து என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இதில் முடித்தவன் யார்? அவனே. எனவே இதனைத் 'தன்வினை கொண்டு முடிந்தது' என்றும் 'வினைமுதல் வினை கொண்டு முடிந்தது' என்றும் கூறுவர்.

பசித்தென உண்டான் அவன் - தன் வினை கொண்டது.

மக்கள் பசிதீர்ந்தென மகிழ்ந்தான் அவன் - பிறிதின் வினை கொண்டது.

பசிதீர்ந்தென - செய்தென வாய்பாடு. பசி தீர்ந்தென மக்களே மகிழ்ந்திருந்தால் தன்வினை கொண்டதாகும்; இது மக்கள் பசிதீர்ந்ததற்கு அவன் மகிழ்ந்தான்

என்பதால் இங்கு பிறிதின் வினையில் முடிந்தது.

விருந்தின்றி உண்ட பகல், துயிலின்றி நீந்திய இரவு - இவை குறிப்பு வினையெச்சங்கள், தன் வினை கொண்டன.

### வினைமுதலொடு முடிதல்

### முதலுடனும் சினையுடனும் முடியும் முறை

*13.4* முன் நூற்பாவில் 'வினை முதல் வினை' கொண்டு முடியும் எனப்பட்டவை *4 + 3* = 7. செய்து, செய்பு, செய்யா, செய்யூ - வாய்பாட்டு வினையெச்சங்கள். வான் பான் பாக்கு என முடியும் வினையெச்சங்கள். இவை சினைவினை சினை யொடும் முடியும்; சினைவினை முதலொடும் முடியும்.

சினை - உறுப்பு. முதல் - உறுப்பையுடைய முதல்

கை ஒடிந்து விழுந்தது - சினை வினை சினை வினையுடன் முடிந்தது.

கை ஒடிந்து விழுந்தான் - சினை வினை அதனுடன் முடிந்ததோடன்றி, முதலுடன் முடிந்தது, பிற வாய்பாடு களுக்கும் இவ்வாறு சேர்த்துக் கண்டு கொள்க.

### வினையெச்ச வாய்பாட்டுச் சொற்கள்

### சிறிது சிறிது திரியினும் பொருள் வேறுபடா

*13.5* முற்கூறிய வாய்பாட்டு எச்சங்கள், சொல் சிறிது திரியினும் பொருள் வேறுபடா.

பொழுது பட்டு வீட்டுக்கு வந்தான்
பொழுது பட்டதும் வீட்டுக்கு வந்தான்
பொழுது பட்டபின் வீட்டுக்கு வந்தான்
} பட்டு - செய எனும் வாய் பாட்டு வினை யெச்சம் சொல் திரியினும் பொருள் மாற

வில்லை.

| | |
|---|---|
| கோழி கூவிப் பொழுது புலர்ந்தது<br>கோழி கூவப் பொழுது புலர்ந்தது<br>கோழி கூவியபோது பொழுது புலர்ந்தது | பொழுது புலரக் கோழி கூவியது காரணமன்று. இவை செய்து, செய, செய்யிய என வாய்பாடுகள் திரிந்து வரினும் பொருள் ஒன்றே. உடனிழ்ச்சிப் பொருளே கொள்ளப்படும். |

**ஒழிபு**

**ஆக்கம் பற்றிய குறிப்பு வினை ஆக்கச்சொல் பெற்று வருதல்**

*14.* ஆக்கத்தைக் குறிக்கும் குறிப்பு வினைகள் ஆக்கச்சொல் இல்லாமல் கூறப்பட மாட்டா. (சில போது தொக்கு வருதலுண்டு)

இவர் கற்று வல்லர் ஆயினார். ஆக்கச் சொல் வந்தது.

இவர் கற்று வல்லர் - என முடிந்தாலும் ஆயினார் எனும் ஆக்கச் சொல் தொக்கது என்றே கொள்ள வேண்டும்.

இவன் பொன்னன் ஆயினான் என்றும் இவன் பொன்னன் என்றும் குறிப்புவினை ஆக்கச்சொல் பெற்றும் தொக்கும் முடியும்.

இவன் கொடியன், நண்பன் நல்லன் - இவை குறிப்பு வினை ஏற்றன. இங்கு ஆக்கச்சொல் வேண்டுவதில்லை. இவை இயற்கை இயல்பு பற்றியன.

**செய்யும் - என்னும் வாய்பாட்டுக்கு ஒரு சிறப்பு விதி**

*15.* செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று, உயர்திணைப் படர்க்கைப் பலர்பால், முன்னிலை, தன்மையில் வராது. எனவே படர்க்கையில் ஆண், பெண், ஒன்று, பல ஆகிய நான்கில் மட்டும் வரும். அவன் பாடும், அவள் நடக்கும், குயில் கூவும், மயில்கள் ஆடும்.

## யார் - குறிப்பு வினை - உயர்திணை முப்பாலில் வரும்.

16. வினாப் பொருளைத் தரும் யார் என்னும் குறிப்புவினைச் சொல் உயர்திணையில், முப்பாலில் மட்டும் இடம் பெறும். (அவன் யார், அவள் யார், அவர் யார்) கண்ணன் யார், கார்குழலி யார்,வேட்பாளர் யார்.

நான் யார், என் உள்ளம் ஆர், நீ யார், நீர் யார் - என்பனவும் யார் என்பது ஆர் என வழங்குவதும் புதியன புகுதலாகும்.

## 'எவன்' - என்னும் குறிப்புவினை வரும் இடம்

17. எவன் - என்னும் வினாப் பொருள் தரும் குறிப்பு வினைமுற்று, அஃறிணை இருபாலுக்கும் வரும்.

அஃது எவன்? அவை எவன்?

எவன் இன்று 'என்ன?' - என்றே வழங்குகிறது. அஃது என்ன? அவை என்ன பொருளன?

என், என்னை என்றும் இது வழங்குமிடங்கள் உள. நீ வினவுவது என்? அல்லது என்னை? - என்பதுண்டு. உயர்திணை ஆண்பாலைக் குறிக்கும் அவன் இவன் எவன் என வருவன வேறு; இங்கு 'எவன்' என்பது வினா மட்டுமே.

## தெரிநிலை, குறிப்புவினை முற்றுக்களுக்கு ஒரு புறனடை

18. தெரிநிலை வினைமுற்று, வினையெச்சமாகி 'முற்றெச்சம்' எனப்படுதலுமுண்டு. குறிப்பு வினைமுற்று, வினை யெச்சம், பெயரெச்சம் என இரண்டு எச்சமாதலும் உண்டு.

எழுந்தனன் வீசினான் - எழுந்து வீசினான்
எடுத்தனன் தொடுத்தான் - எடுத்துத் தொடுத்தான்
இவை தெரிநிலை முற்றெச்சங்கள்

வில்லினன் வந்தான் - வில்லினனாக வந்தான்
வெந்திறலினன் வேந்தன் - வெந்திறலினனாகிய வேந்தன்.

இவை குறிப்பு வினையெச்சமும் குறிப்புப் பெயரெச்சமும் ஆகும்.

# வினையியல்

மனிதன் பேசுகின்றான். காதலி சிரிக்கின்றாள். மரம் அசைகிறது. காற்று வீசுகிறது. தொழில், செயல், வினை காரிய மாற்றுதல் எல்லாம் ஒரு பொருட் சொற்களே. எழுவாயாகவோ, செயப்படுபொருளாகவோ நிற்பன பெயர்கள். அவை செயற்ப டுவதையோ அல்லது ஒரு செயலுக்கு ஆட்படுவதையோ குறிக்க வருவதுதான் வினைச்சொல். அவள் படிக்கின்றாள். படிப்பது ஒரு வினை, தொழில்,செயல், காரியம். அவள் புத்தகத்தைப் படிக்கின்றாள்; புத்தகம் ஒன்று அவளால் படிக்கப்படுகின்றது. இங்கும் புத்தம் செயப்படுபொருளாவதை, ஒரு வினைச் சொல்லே குறிக்கிறது. ஒரு வாக்கியத்தில் வினைச் சொல் மிக முக்கிய இடம் பெறுகிறது. 'வருகிறார்' என்றாலே போதும். 'அவர்' தோன்றா எழுவாயாக மறைந்து நிற்பார். எவ்வாறு 'பொருள்கள்' இன்றி உலகமில்லையோ, அதைப் போலவே 'வினை நிகழ்வின்றியும்' உலகம் இல்லை. இதனால்தான் பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லுமே தலைமையாக உள்ளன. ஏனைய இடைச்சொல், இவற்றிடையே வந்துதான் 'தான்' இருப்பதை - தனக்கொரு பொருளும் இருப்பதை உணர்த்த முடியும். உரிச் சொல்லும் பெயர் வினைகளின் பண்பை - இயல்பை - சிறப்பை - தன்மையை - நடத்தையை அடைமொழி போல வந்தும் சார்ந்துநின்றும் பொருள்தரும். அவை உலக வழக்கில் வரும் அடைமொழிகளாகும் பொழுது அளவின்றி வருவன வாகும். அவற்றைப் பண்படைகளிலும் எச்சங்களிலும் அடக்கி விடலாம். எனவே, செய்யுளில் வரும் - செய்யுளுக்குரியன பற்றி மட்டும் தொகுத்து, 'உரியியல்' என்பது வகுக்கப்படுகிறது. எனவே தான் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தனித்து நிற்காமல், பெயர் வினைகளைச் சார்ந்தே வழங்குகின்றன. ஆனாலும் இடைச்சொல் இன்றித் தமிழ்ச் சொல் உருவாகாது, அடிச்சொல்லாக மட்டுமே நிற்கமுடியும்.

# வினைச்சொல்லின் இலக்கணம்
# தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம்

**320. செய்பவன் கருவி நிலம் செயல்காலம்**
**செய்பொருள் ஆறும் தருவது வினையே 1**

தொல்காப்பியர் கூறியபடி வினைச்சொல் காலங்காட்டும்; வேற்றுமை ஏற்காது. பெயர்ச்சொல் காலங் காட்டாது; வேற்றுமை ஏற்கும்.

பவணந்தி முனிவர் கருத்துப்படி வினை என்பது, முன்பு பதவியலில் கூறியபடி, (137) ஒரு செயலைச் சுட்டுவதாகும். அது நட, வா முதலியனவாகிய பகாப்பதங்கள் அனைத்தும் அடங்க 'செய்' என்ற சொல்லின் அடிப்படையில் அமையுமென வினைச்சொல்லை விளக்குகிறார். தெரிநிலை வினை காலத்தைத் தெளிவாகக் காட்டும். அதனுடன் ஒரு வினைச்சொல்லால், அதைச் செய்தவன் யார் என்பதும் கருவி (காரணம்) யும் இடமும் செயலும் காலமும் செயப்படுபொருளும் அறியப்படும். இவை ஆறினையும் தருவது வினைச்சொல்லாகும்.

வீட்டைக் 'கட்டினான்' - என்றால் கட்டுதலாகிய செயல் அறியப்படுகிறது. கட்டுபவன், கல் மண் சிமிந்தி முதலிய முதற் கருவிகள், கொத்துக்கரண்டி, மண்வெட்டி, மட்டப் பலகை முதலான துணைக்கருவிகள், கட்டுமிடம், இறந்த காலம், வீடு ஆகிய செயப் படு பொருள் ஆகியவை உணரப்படுகின்றன.

எதற்குக் கட்டினான்? வசிப்பதற்கு அல்லது வரு வாய்க்கு என்றும் குறிப்பால் உணரலாம்.

கொடி ஆடியது என்பதில் செயப்படுபொருள் இல்லை. அது செயப்படுபொருள் குன்றியவினை.

வினைமுற்றில் பகுதியில் செயலும், விகுதியால் செய் பவனும் இடைநிலையால் காலமும் ஆகிய மூன்றும் அறியப்படும். கட்டினான் - கட்டு + இன் + ஆன். 'இன்' இறந்தகால இடைநிலை. பெயரெச்சம் (படித்த பையன்), வினையெச்சங்களில் (படித்துத்

தேறினான்) பகுதியால் செய்பவனும் இடைநிலையால் காலமும் ஆகிய இரண்டும் அறியப்படும். இவை தவிர்த்தவை குறிப்பால் மட்டுமே அறியப்படும். செய்பவன் என ஆண்பாலில் கூறினாலும் ஐம்பாலும் செயலுக்குரியதாய் வரும். அவள் படித்தாள் அவர்கள் பாடினார்கள், அது கூடுகட்டியது, அவை தொழுவத்தில் அடைந்தன. இவை 'வினை முதல்' என்று கூறப்படுவதையும் நினைவிற் கொள்க.

## குறிப்புவினைச் சொல்லின் பொது இலக்கணம்

**321. பொருள்முதல் ஆறினும் தோற்றி,முன் ஆறனுள்**
**வினைமுதல் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே 2**

பெயர்கள் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என ஆறுவகைப்படும். இப்பெயர்கள் - அதாவது பொருள் முதலான ஆறும் அடிப்படையாகத் தோன்றி, முன் நூற்பாவில் குறிப்பிட்ட செய்பவன் முதலனோ ஆறினுள், வினைமுதல் எனப்படும் கருத்தா (பெயர்) ஒன்றைமட்டுமே விளக்குவது வினைக் குறிப்பு அல்லது குறிப்புவினை என்று சொல்லப்படும்.

பொன்னன் - என்பது குறிப்பு வினை. பொன்னையுடையான் என்பது கருத்து. ஆதிரையான் - என்பது குறிப்பு வினை- ஆதிரை நாளில் (நட்சத்திரத்தில்) பிறந்தவன் என்று பொருள்.

குறிப்புவினை காலத்தை வெளிப்படையாகக் காட்டாது; குறிப்பால் காட்டும் என்பதே முக்கியமான கருத்து.

அவன் பொன்னன் என்றால் பொன்னையுடையனாக ஆயினான், ஆவான், ஆகின்றான் எனக் குறிப்பால் அறியலாம். அவன் பொன்னன், செல்வன், நெடியன், குறியன், நல்லன் என்பன எல்லாம் அவற்றையுடைய தன்மையைச் சுட்டுவதால், பெயரடியில் பிறந்த வினைச்சொல்லாகின்றன. 'அவன் செல்வன்' என்றால், செல்வன் என்பது இங்கே பயனிலையாக நிற்கிறது. இப்பயனிலை 'செல்வனாக இருக்கிறான்' என முடியும். ஆங்கிலத்தில் He is rich; She is beautiful என, வினைச் சொல் சேர்ந்து வருகிறது. தமிழில் அவன் செல்வன், அவள் அழகியள் என நின்றாலும் அவை

பயனிலையாய், அவற்றை உடையார் என உணர்த்தலால் வினையில் சேர்த்துள்ளனர்.

இதில் பகுதி ஏதோ ஒரு பெயராக உள்ளது; விகுதியே செய்பவனை - கருத்தாவை உணர்த்துகிறது.

| | |
|---|---|
| அவன் செல்வத்தான், பொன்னினன், பண்ணையான் | - பொருள். |
| அவன் வீட்டினன், மடத்தினன் | - இடம் |
| அவன் ஆதிரையான், சித்திரையான் | - காலம் |
| அவன் குட்டையன், நெட்டையன் | - சினை |
| அவன் கரியன், நல்லன் | - குணம் |
| அவன் உழைப்பாளன், முயற்சேியன் | - தொழில் |

அவள் அழகியள், அவன் நல்லன், அவர்கள் செல்வர்கள், அது கரியது, அவை நல்லவை என ஐம்பாலுக்கும் இவை வரும்.

குறிப்புவினை, பெயராய் ஆகி வேற்றுமையுருபு ஏற்றால் அது குறிப்பு வினையாலணையும் பெயராகிவிடும். ஆதிரையானைத் தொழுவோம்! ஆதிரையான் - சிவன். அவன் சிவன், அவள் கயல்விழி, அவன் முருகன் எனப் பெயர்கள் பயனிலையாக வருவன வேறு.

## வினைச்சொற்கள் முற்றாகவும் எச்சமாகவும் வரும் வகைப்பாடுகள்

**322. அவைதாம்,**
**முற்றும் பெயர், வினை எச்சமும் ஆகி**
**ஒன்றற்குரியவும் பொதுவு மாகும் 3**

வினைச்சொல் வினைமுற்றாகவும் பெயரெச்சம் வினையெச்சமாகவும் வரும். திணை, பால், இடங்களில் ஒன்றைமட்டும் உணர்த்துவதற் குரியனவாகவும் பலவற்றுக்குப் பொதுவாகவும் வரும். தெரிநிலை வினைமுற்று - நடந்தான், குறிப்பு வினைமுற்று - நல்லன். தெரிநிலைப் பெயரெச்சம் - நடந்த பெண். குறிப்புப் பெயரெச்சம் - நல்ல கிளி. தெரிநிலை வினையெச்சம் - வந்து போயினர். குறிப்பு வினையெச்சம் - நன்கு பேசினான்.

இவை தவிரவும் இவற்றிற்கு இனமான வேறு சிலவும் உள. 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற்குரித்தே' என்பதால் அவை கொள்ளப்படும்.

விடுத்தான் - தன்வினை, விடுவித்தான் -பிறவினை. 'வெளுத்தான்' - இரண்டற்கும் பொது.

கண்டான் - விதி வினை (உடன்பாட்டு வினை), கண்டிலன் - மறைவினை (எதிர்மறை வினை). சாவான் - இரண்டற்கும் பொது வினை.

நடத்தினான் - செய்வினை, நடத்தப்பட்டது - செயப்பாட்டு வினை. புலிகொன்ற யானை - இரண்டிற்கும் பொதுவினை.

நாடிய மாதவி, நாடிய வந்தனள் - இரண்டு எச்சத்திற்கும் பொது. இரண்டாம் 'நாடிய' என்பது, தேடும் பொருட்டு என்றாகும்.

## வினைமுற்றின் இலக்கணம்
## வினைமுற்று எத்தனை வகைப்படும் என்பது

323. பொது இயல்பு ஆறையும் தோற்றிப் பொருட் பெயர்
முதல் அறு பெயரலது ஏற்பில முற்றே 4

பொது இயல்பு - வினைச்சொல்லின் பொது இலக்கணம் என்று கூறப்பட்ட, செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் என்ற ஆறினையும் தோற்றுவித்து வரும்(320). பொருட் பெயர் முதல் அறு பெயர் அலது ஏற்பில - பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பனவே பொருட்பெயர் முதலாகிய ஆறு பெயர்கள். இந்த ஆறு பெயர்களையல்லது வேறு எதனையும் பயனிலையாக ஏலாதது முற்றுவினையாகும்.

முற்றுவினை - செயல் முற்றி நிற்றலைக் குறித்தலின் இது முற்றுவினை எனப்படும். (செயல் எஞ்சி நிற்பதைக் குறிப்பன எச்ச வினை. அவை வினையெச்சமும் பெயரெச்சமும்)

முற்றுவினை இன்னொரு வினைமுற்றை ஏற்காது. வினை முற்று, பெயர்களுக்குப் பயனிலையாக வரும்; அறுவகைப் பெயர் களைத் தனக்குப் பயனிலையாகக் கொள்ளும். இவை காலங்

காட்டி வரும் போது தெரிநிலை வினைமுற்றுக்களாகவும் காலம் காட்டாது வரும் போது குறிப்பு வினைமுற்றுக்களாகவும் அமையும்.

**தெரிநிலை வினைமுற்று:**

| | |
|---|---|
| படித்தான் மணியன், படிப்பாள் செல்வி பறந்தது பட்டம் | - பொருட் பெயர்கள் பயனிலையாக வந்தன. |
| சிறந்தது நிலம், விளைந்தது வயல், விரிந்ததுநகரம் | - இடப்பெயர்களை ஏற்றன. |
| முடிந்தது நேரம், வந்தது கோடை, நெருங்கியது நள்ளிரவு. | - காலப் பெயர்களை ஏற்றன. |
| வளைந்தது கிளை, சிவந்ததுகண், குவிந்தன கைகள். | - சினைப் பெயர்களை ஏற்றன. |
| வெறுத்தது தீங்கு, மறைந்தது களங்கம், நிறைந்தது பொறுமை. | - குணப்பெயர்களை ஏற்றன. |
| நீங்கியது தொல்லை, வந்தது சிறப்பு, நிறைந்தது பொறுமை. | - தொழிற் பெயர்களை ஏற்றன. |

**குறிப்பு வினைமுற்று:**

கரியன் கண்ணன், கரியது நிலப்பரப்பு, சிறியது பொழுது, நெடியது கை, நல்லது வள்ளன்மை, பெரியது இவ்வெற்றி - பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆகிய ஆறு பெயர்களைப் பயனிலையாகப் பெற்றன. இவை காலங் காட்டாதவை.

பார்த்தேன் நான், அழுதாய் நீ, அடித்தான் அவன் - மூன்று இடத்திற்கும் வந்தமை காண்க. இது போல் அனைத்திலும் ஒட்டிப் புரிந்து கொள்க.

திணை பால் இடம் அனைத்திலும் இவ்வாறு பொருத்திப் பார்க்க வேண்டும்.

## தெரிநிலை வினைமுற்றின் வகைகள் (27)

**324. ஒருவன்முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்**
**ஒருமைப் பன்மையைத் தன்மை முன்னிலையினும்**
**முக்காலத்தினும் முரண முறையே**

**மூ வைந்து. இருமூன்று, ஆறாய் முற்று**
**வினைப்பதம் ஒன்றே மூஒன்பானாம்** 5

ஒருவன் முதல் ஐந்து - ஐம்பாலைக் குறிக்கும். படர்க்கை இடத்தில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்தையும் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் எனும் மூன்றுடனும் பொருத்திப் பெருக்கினால் 15 வினைமுற்றுக்களாகும். தன்மை இடத்திலும் முன்னிலையிடத்திலும் ஒருமை, பன்மையே வரும். இவற்றை மூன்று காலத் தொடும் முரண - பெருக்க, 6 + 6 = 12 தெரிநிலை வினைமுற்று வரும். இரண்டையும் கூட்டினால் 15 + 12 = 27 எனத் தமிழில் தெரிநிலை வினைமுற்றுக்கள் வரும்.

**படர்க்கை வினைமுற்று: ஐம்பால் x முக்காலம். (15)**

உண்டான், உண்டாள், உண்டார்,
உண்டது, உண்டன. இறந்தகாலத்தில் ஐந்து.

உண்கின்றான், உண்கின்றாள்,
உண்கின்றனர், உண்கின்றது, - நிகழ்காலம் ஐந்து
உண்கின்றன

ஓடுவான், ஓடுவாள், ஓடுவர்,
ஓடுவது, ஓடுவன - எதிர்காலம் ஐந்து

படித்தேன், படித்தேம்
படிக்கின்றேன், படிக்கின்றேம் } முக்காலம் - தன்மை ஒருமை, பன்மை வினைமுற்று ஆறு
படிப்பேன், படிப்பேம்

நடித்தாய், நடித்தீர்
நடிக்கின்றாய், நடிக்கின்றீர் } முக்காலம் - முன்னிலை ஒருமை, பன்மை வினைமுற்று ஆறு
நடிப்பாய், நடிப்பீர்

**ஆக முற்றுவினை** 15 + 6 + 6 = 27

## ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதியால் அறியப்படும் விதம்

**325. அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை** 6

அன், ஆன் என்பனவற்றை இறுதியில் கொண்டு முடிவன, படர்க்கையில் ஆண்பால் தெரிநிலை வினைமுற்றுக்களாகும். குறிப்பு வினைமுற்றும் அன், ஆன் என முடிவுறும்.

எழுதினன் (அன்), எழுதினான் (ஆன்)
எழுதுகின்றனன், எழுதுகின்றான்
எழுதுவன், எழுதுவான்.

நல்லன், நல்லான். - குறிப்பு வினைமுற்று

## பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

**326. ஆள் ஆள் இறுமொழி பெண்பால் படர்க்கை** 7

அள், ஆள் என்னும் விகுதிகளை இறுதியில் கொண்டு முடியும் சொற்கள், படர்க்கையில் பெண்பாலை உணர்த்தும் தெரி நிலை, குறிப்புவினை முற்றுக்களாகும்.

பாடினள் (அள்), பாடினாள் (ஆள்)
பாடுகின்றனள், பாடுகின்றாள்
பாடுவள், பாடுவாள்

அழகியள், அழகியாள் - குறிப்பு வினைமுற்று

## பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள்

**327. அர்ஆர் பவ்வூர் அகரம்மார் ஈற்ற**
**பல்லோர் படர்க்கை; மார் வினையொடும் முடிமே** 8

அர்,ஆர் என்னும் இறுதிநிலைகளும்; பவ்வூர் அகரம் - ப்+ அ = ப என்பதும் மார் என்பதும் இறுதியில் வருவனவும் பலர் பால் படர்க்கை வினைமுற்றுக்களாகும். இவற்றுள் மார் ஈறு பெயருடன் முடிவதேயன்றி வினையுடனும் முடியும்.

**அர்,ஆர்**

ஆடினர், ஆடினார் (அர், ஆர்)
ஆடுகின்றனர், ஆடுகின்றார்
ஆடுவர், ஆடுவார்
அழகினர், அழகியார்
கருங்கயற் கண்ணினர், கண்ணினார்.

இவற்றுள் ஆடுகின்றனன் ஆடுகின்றனள் ஆடுகின்றனர் என வரும் நிகழ்கால வினைமுற்றுக்களில் அன், அள், அர் விகுதியுடன் வருவன 'அன்' சாரியை பெற்று வருதலை நினைவிற்கொள்க. நடக்கின்றனன் - நட + க் + கின்று + அன் + அன். இறுதிக்கு முன்னுள்ள அன் சாரியை.

**ப - விகுதி**

வருப, சொல்லுப, என்ப.
மார் - ஈறு பழங்கால வழக்கில் மிகுதி.
உண்மார் வந்தார் - உண்ணுகின்றார் என்பது பொருள்.
பீடில் மன்னரைப் பாடன்மார் எமரே - பாடமாட்டார். (பாடு + அல் (அன்) + மார். அல் எதிர்மறை இடைநிலை) முன்னது வினையுடனும் பின்னது 'எமர்' எனப் பெயருடனும் முடிந்தன.

## படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள்

**328. துருடுக் குற்றியலுகர ஈற்ற**
**ஒன்றன் படர்க்கை; டுக் குறிப்பினாகும்** 9

து று டு மூன்றும் குற்றியலுகரமாக வரும் வினைச் சொல் ஈறுகள். இவை படர்க்கையில் அஃறிணை ஒன்றன்பாலைக் குறிக்க, தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினை முற்றாக வரும் இவற்றுள் டுவ்விகுதி குறிப்புவினைமுற்றில் மட்டுமே வரும். (றுவ் விகுதி இறந்தகால இடைநிலையோடு மட்டும் கூடிவரும்.)

பறந்தது, பறக்கின்றது, பறப்பது
நடந்தது, நடக்கின்றது, நடப்பது } து விகுதி.
அழகிது, செவ்விது

கூடிற்று, கூவிற்று, பரவிற்று, பாடிற்று - று விகுதி. அற்று, இற்று, எற்று. (அத்தன்மைத்து, இத்தன்மைத்து, எத்தன்மைத்து). வந்தன்று (வந்தது என்று பொருள்). உண்டன்று, புக்கன்று (புகுந்தது) என வருவன பலவுள.

அது நன்றென்னும் பொருட்டு (பொருளையுடையது) நன்மைக்குப் பயன் உண்டு. 'டு' விகுதி - குறிப்பு வினைமுற்று.

## படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகள்

**429. அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை**
**ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்** 10

அ, ஆ என்னும் இரண்டு இறுதிநிலைகளையுடையன படர்க்கையிடத்தில் பலவின்பால் தெரிநிலை வினை முற்றாகவும் குறிப்பு வினை முற்றாகவும் வரும். அவற்றுள் ஆகார விகுதி எதிர்மறையில் மட்டுமே வரும். அகர விகுதி - உடன்பாடு, எதிர்மறை இரண்டிலும் வரும். அகர விகுதி 'அன்' சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

கடித்தன
கடிக்கின்றன } கடி+த்+த்+அன்+அ. இவற்றில் இறுதி நிலைக்கு முன்னுள்ள அன் - சாரியை.
கடிப்பன

அவை துளைத்த, துளைக்கின்ற, துளைப்ப என அன் சாரியையின்றி வருமென்பது இன்று அரிய வழக்கேயாம்.

கடித்தில, கூவுகின்றில - எதிர்மறையில் 'அ' விகுதி.
கடியா, ஓடா, கூவா, துளையா - எதிர்மறையில் 'ஆ' விகுதி

**குறிப்பு வினைமுற்று:** நல்லன, கரியன, கரிய, சிறிய; பொருளல, நன்றல. உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் முறையே, 'அ' விகுதி வந்தது. பொருளல - பொருள்+அல்+அ. அல் - எதிர்மறை இடைநிலை.

## உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணைக்கும் பொதுவாக வரும் வினைச்சொற்கள்

**330. தன்மை, முன்னிலை வியங்கோள் வேறு இலை**
**உண்டுஈர் எச்சம் இருதிணைப் பொதுவினை 11**

தன்மை வினைமுற்றுக்களும் முன்னிலை வினைமுற்றுக் களும் வியங்கோள் வினைமுற்றுக்களும் இருதிணைக்கும் பொது வாக வரும்.

வேறு, இல்லை, உண்டு எனும் மூன்று குறிப்பு வினை முற்றுக்களும் இருதிணைக்கும் பொதுவாய் வரும்.

தெரிநிலைப் பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம், குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் - இவையும் இரு திணைக்கும் பொதுவாக வரும்.

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம், வினை முற்றாகவும் வரும். அதுவும் இருதிணைப் பொதுவினையாம்.

நான் வந்தேன், நீ ஓடினாய் என்று சிங்கமும் மானும் பேசிக்கொண்டதாகக் கதை கூறலாம். தன்மை, முன்னிலை இருவினைப் பொதுவினை.

ஆ வாழ்க, மக்கள் வாழ்க, ஓடுக, குயில்கள் கூவுக - வியங் கோள் இருதிணைப் பொதுவினை.

அவை இல்லை, கூத்து உண்டு, அவர் வேறு, இது இல்லை, அடியார்களும் உண்டு - இவை போல்வன இருதிணைப் பொதுக் குறிப்பு வினை முற்றுக்கள்.

வந்த பையன், வந்த மாடு. தெரிநிலைப்
பெயரெச்சம் - பொது.
நல்ல பையன், நல்ல மாடு.
குறிப்புப் பெயரெச்சம் - பொது.
வந்து போனான், வந்து போனது.

தெரிநிலை வினையெச்சம் - பொது

நன்று செய்தான், நன்று செய்தது.

குறிப்பு வினையெச்சம் - பொது

அவன் செய்யும், குயில் பாடும், அவள் ஆடும், மயில் ஆடும் - செய்யும் என்னும் முற்று, இருதிணைப் பொதுவாக வந்தது. இது கூவும் குயில், ஆடும் அழகி எனப் பெயரெச்சப் பொருளில் வருவது; குயில் கூவும் அழகி ஆடும் என முற்றாகவும் வருகிறது.

## தன்மை ஒருமை வினைமுற்றுக்கள் எவ்வெவ் விகுதிகளைப் பெற்று வரும்?

**331. குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு**
**அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற**
**இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை 12**

கு, டு, து, று என்னும் நான்கு குற்றியலுகர ஈறுகளும் அல், அன், என், ஏன் எனும் நான்கு மெய்யீறுகளும் தன்மை ஒருமையில் தெரிநிலை, குறிப்பு வினைகளுக்கு விகுதிகளாக வரும். அதாவது இவை இருதிணைகளிலும் ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாக வரும். ஒருமைத் தன்மை - இவை இருதிணையிலும் தன்மை ஒருமைக்கு மட்டுமே வரும் என்பது கருத்து.

குடுதுறு - நான்கும் விகுதியே காலங்காட்டும். யான் செய்கு (செய்வேன்) யான் நடக்கு (நடப்பேன்). இவை எதிர்காலத் தெரிநிலைவினை முற்று தன்மை ஒருமையில் வந்தது. யான் கண்டு (கண்டேன்). யான் உண்டு (உண்டேன்) - இறந்தகாலம் மட்டும். யான் தந்து (தந்தேன்); யான் வந்து (வந்தேன்) - இறந்தகாலம். யான் போகுது (போவேன்; யான் வருது (வருவேன்) - எதிர்காலம். 'து' - இறந்தகாலமும் எதிர் காலமும் காட்டும்.

யான் தின்று (தின்றேன்); யான் சேறு (செல்வேன்) இறந்தகாலமும் எதிர்காலமும். இவை நான்கும் விகுதியே காலங்காட்டின. மலையாள மொழியில் இன்றும்

இவ்வழக்கு உளது. உண்பல், செல்வல், கொள்வல் - 'அல்' விகுதி எதிர்காலம் மட்டும் காட்டும் மற்றைய அன், என், ஏன் மூன்றும் முக்காலமும் காட்டும்

பார்த்தனன், பார்க்கின்றனன், பார்ப்பன் - 'அன்' விகுதி முக்காலத்தும் வந்தது.

அழைத்தனென், அழைக்கின்றனென்,
அழைப்பனென் - 'என்' விகுதி முக்காலத்தும் வந்தது.

எழுந்தேன், எழுகின்றேன், எழுவேன் - 'ஏன்' விகுதி முக்காலத்தும் வந்தது.

குறிப்பு வினைமுற்று வரும் விதம் - யான் சிறியன், சிறியேன், பெரியன், பெரியேன். இவை காலங்காட்டாத வினை முற்றுக்கள். வந்தனென், சிறியென் - 'என்' விகுதியுடன், தன்மை ஒருமையிற் சொல்வதே பழந்தமிழ் வழக்கு

## தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் எவ்வெவ் விகுதிகளுடன் எவ்வாறு வரும்? இவை 'உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றாகவும்' வருதல்

**332. அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்**
**எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்**
**உம்ஊர் கடதற இருபா லாரையும்**
**தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை 13**

அம், ஆம் என்பன முன்னிலையாரை உளப்படுத்தியும் வரும் தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள். எம் ஏம் ஓம் மூன்றும் படர்க்கை இடத்தாரை உளப்படுத்தியும் வரும் தன்மைப் பன்மை வினைமுற்று இறுதி நிலைகள். உம் ஊர் கடதற - உம் சேர்ந்தால் க் +உம் = கும் ஆகும். இவ்வாறு வரும் கும் டும் தும்

றும் என்னும் நான்கு விகுதிகளையுடைய சொற்கள் முன்னிலை, படர்க்கை எனும் இரண்டு இடத்தார்களை உளப்படுத்தியும் வரும்.

இவை தன்மை, முன்னிலைகளில் வருதலின், குறிப்பு வினைமுற்றுக்களாகவும் வரும். கும் டும், தும், றும் என்பன விகுதிகளே காலங்காட்டுதலின், அவை மட்டும் குறிப்பு வினை முற்றுக்களாக வாரா.

இவை எல்லாம் தன்மைப் பன்மையை மட்டும் குறிக்கவும், முன்னிற்பார், அயலாரை உளப்படுத்திக் கூறவும் என இரு நிலையிலும் வரும். நாம் புறப்படுவம் - முதலில் இது தன்மையில் மட்டும் வரும். அதாவது தன்னுடன் உள்ளவரைச் சேர்த்துச் சொல்வதற்குப் பயன்படும். இதுவே முன்னிற்பாரையும் பார்த்து, அவர்களையும் உளப்படுத்திப் 'புறப்படுவம்' என்னும் போது, 'உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகிவிடும்.

**அம், ஆம்:** பாடினம் பாடுகின்றனம் பாடுவம்
சென்றாம் செல்கின்றாம் செல்வாம்

இவை யாம், பாடுவம் பாடினம் என்றும் யானும் நீயும் சேர்ந்து பாடுவம் பாடினம் என்றும் இரு வகையாகவும் கூறப்படும்.

**எம், ஏம், ஓம்:** கண்டனெம் காண்கின்றனெம் காண்பெம்
கண்டேம் காண்கின்றேம் காண்பேம்
கண்டோம் காண்கின்றோம் காண்போம்

இவை முறையே இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் மூன்றிலும் வந்தன. நாம் காண்போம் என்று தன்மையில் மட்டும் சொல்லலாம். யானும் நீயும் அவனும் சேர்ந்து காண்போம் என்று முன்னிலை, படர்க்கையிலுள்ளவரைச் சேர்த்தும் சொல்லலாம்.

யாம் காதலம், நட்பினம். யாம் அழகியம், யாம் பண்டை யேம், யாம் புகழினோம். நல்லம் யாம் என்னும் உறுதி. நல்லெம், நல்லேம், நல்லோம் எனவும் வரலாம். இவை குறிப்புவினையில் வந்தன.

இவை யாவும் தெரிநிலைத் தன்மைப் பன்மை வினை முற்றைப் போலவே பொருள்படும். காலம் காட்டாமையே வேறுபடு வதற்கு அடிப்படையாகும்.

**கும், டும், தும், றும்:**

யாம் அல்லது
யானும் நீயும் அல்லது
யானும் நீயும் அவனும்

} உண்கும் (உண்போம்) - எதிர்காலம், உண்டும் (உண்டோம்) - இறந்தகாலம்,
வந்தும் (வந்தோம்), வருதும்- இறந்த காலமும் எதிர்காலமும்.
சென்றும் (சென்றோம்), சேறும் (செல்வோம்) - இறந்த காலமும் எதிர்காலமும்.

இவை காலங் காட்டுதலின் குறிப்பு வினையாக வாரா. இவை பல முன்னைய வழக்கு. ஏனைய திராவிட மொழிகளில் இவை சில இன்றும் உள.

இவை யாவும் சிறுபான்மை வேறுபட்டும் வரும். இடம் நோக்கிப் பயன்படுத்த வேண்டும்.

## செய்கு, செய்கும் இரண்டும் வினைச்சொல் கொண்டும் முடியும் - எனினும் எச்சம் எனப்படாது முற்றேயாம்

**333. செய்கு என் ஒருமையும் செய்கும் என் பன்மையும்**
**வினையொடு முடியினும் விளம்பிய முற்றே** 14

செய்கு - என்னும் தன்மை ஒருமை வினைமுற்றும் செய்கும் என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றும் பெயரோடு முடிதலே யன்றி, வினைச்சொல் கொண்டு முடியினும் முன்பு கூறியபடி முற்றேயாகும். இவற்றை செய்கு யான், உண்கும் யாம் எனப் பெயருடன் முடித்துக் கூறுவது முன்பு சொன்ன விதி.

இவை வினையொடு முடியினும் - எச்சம்போல் தோன்றுமாயினும் - வினைமுற்றென்றே கொள்ளப்படும்.

உண்கு வந்தேன், உண்கும் வந்தேம் - இவை வினைமுற்று எனப்படுவது, பழந்தமிழ் மரபு.

## உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள்

**334. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை** 15

(தன்மையுடன் கூடிய முன்னிலையும் படர்க்கையும் உளப்பாட்டுத் தன்மையானாற்போல), முன்னிலையுடன் கூடிய படர்க்கையும் முன்னிலையை மட்டும் குறிப்பதோடன்றி, முன்னிலையுடன் கூடிய படர்க்கையையும் உணர்த்தி, உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களாகும்.

நீர் கண்டனிர், கூடினிர், பாடினிர்

இதனையே நீயும் அவனும் கண்டனிர், கூடினிர், பாடினிர் என்றும் கூறலாம். நீயும் அவனும் உண்டீர், நின்றீர் எனவும், உண்மின், நின்மின் எனவும் இதுபோல வரும். குறிப்பு வினையில் நீயும் அவளும் உறவினிர், நட்பினிர் என வரும்.

## முன்னிலை ஒருமை வினைமுற்று எவ்வெவ் இறுதிநிலைகளைப் பெற்று வரும்?

**335. ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்**
**ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும்**
**முப்பால் ஒருமை முன்னிலை மொழியே** 16

ஐ ஆய் இ - என்னும் மூன்று இறுதிநிலைகளையுடைய வினைச் சொற்களும் ஏவலில் வரும் 'நட, வா' முதலான விகுதி குன்றாமலும் குன்றியும் வரும் (நடவாய், நட; வாராய், வா) 23 இறுதிகளையுடைய சொற்களும் (நூற்பா 137) ஒருவன் (ஆண்), ஒருத்தி (பெண்) ஒன்று (ஒன்றன்பால்) என்னும் மூன்று பால் களுக்கும் பொதுவாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றுக் களாகும்.

**ஐ, ஆய், இ**

நீ - பெற்றனை, பெறுகின்றனை, பெறுவை
நீ - வென்றாய், வெல்கின்றாய், வெல்வாய்
நீ - சென்றி, செல்லாநின்றி, சேறி

முன்னர்க் கூறிய 23 ஏவல் வினைச் சொற்களுள் வாராய், வருதி என ஆய், இ விகுதி சேர்த்துக் கூறினாலும் வா, நட, போ செய் எனப் பகுதி மாத்திரையாய்ச் சொன்னாலும் அவை முன் னிலை ஒருமை வினை முற்றுக்களேயாம். பாராய், நடவாய் என்பதே முழுச்சொற்களென்றும் பார், நட என நிற்பது, 'ஆய்' விகுதி புணர்ந்து குன்றிப் பகுதி மட்டும் நிற்பன என்றும் விளக் கப்படும். காலம் காட்டுவதால் இவை தெரிநிலை வினைமுற்றுக் களாகவே வரும். அல், எல், ஆல் என்னும் மூன்று ஏவல் வினை விகுதிகளும் எதிர்மறையில் வரும். உண்ணல், உண்ணேல், மறால் (மறுக்காதே).

| | |
|---|---|
| உண்ணாதி<br>உண்ணாதே | எதிர்மறை ஏவல்<br>ஒருமை வினைமுற்று |

இவற்றில் எதிர்மறை 'ஆ' கார இடைநிலையின் பின் 'த்' வருவது, எழுத்துப்பேறு. முன்னதில் 'இ' விகுதி; பின்னதில் ஏ விகுதி. (உண் + ண் + ஆ + த் + இ. உண் + ண் + ஆ + த் + ஏ.)

நல்லை, நல்லாய், நல்லி - குறிப்பு வினைமுற்று முன்னிலை ஒருமை.

## முன்னிலை ஒருமை வினைமுற்று 'ஈ' விகுதியும் பெற்று வருதல்

**336. முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே 17**

முன்னிலை ஏவல் வினைமுற்று என்று முன் சொல்லப் பட்டவற்றின் இறுதியில் ஈ காரமும் ஏ காரமும் வருமிடங்களுண்டு. அவ்வாறு வருமிடங்களில், அவை பொருந்திய மெய்யெழுத்து ஏதேனும் ஒன்றுடன் சேர்ந்து வரும். மெய் ஊர்தல் - மெய்யின் மேல் ஏறி வருதல்.

சென்றீ பெரும! - செல்(ன்) + ற் + ஈ. நின்மே - (நில்) நி(ன்) + ம் + ஏ. இவை ற் - ம் எனும் ஒற்றுக்களுடன் வந்தன. (இவை இரண்டும் எழுத்துப்பேறு. பொருளின்றி ஒன்றனுக்கு உதவியாய் வரும் எழுத்து. ஈ, ஏ என வருவன முன்னிலை

விகுதிகள், அவற்றுக்கு உடன் வரும் ற், ம் - இரண்டும் எழுத்துப்பேறு.)

## முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதிகள்

**337. இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்**
**பன்மை முன்னிலை; மின்அவற்று ஏவல் 18**

இர், ஈர் என்னும் ஈற்றினையுடையவையான இரண்டும் இருதிணைக்குப் பொதுவான முன்னிலைப் பன்மை வினை முற்றுக்களாகும். மின் ஈற்று வினைகள், முன்னிலைப் பன்மையில் ஏவலைக் குறிக்கும் வினைமுற்றுக்களாகும். 'மின்' மட்டுமன்றி, ஈர்,உம் விகுதிகளும் முன்னிலைப் பன்மை ஏலலுக்கு வருமென்பர் உரையாசிரியர்கள்

நீர் - பேசினிர், காண்கின்றனிர்,
உண்பிர் - இர் ,
பேசினீர் காண்கின்றீர்,
உண்பீர்- ஈர்
} இருதிணைப் பொது.

ஏவல் - விரைந்து சென்மின், படைதொடுமின், வெல்லுமின். விரைந்து வாரீர், பசியெடுத்தபின் உண்ணும்.

நீர் பெரும்படையினிர், நீர் பெருஞ்சிறப்பினீர் - குறிப்பு வினைமுற்று.

## வியங்கோள் வினைமுற்று விகுதிகள்

**338. கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கும் என்ப. 19**

க, ய வுடன் ர ஒற்று (ர் - என்பது) மூன்றையும் இறுதி யாகவுடையன வியங்கோள் வினைமுற்றாக வரும். இவை மூன்று இடங்களிலும் ஐம்பால்களிலும் பொதுவாக வருமென்பர் புலவர்.

யான், நீ, அவன் - மூன்றி
டம். அவன் அவள் அவர்
அது அவை - ஐம்பால்
} வாழ்க, உண்க, பாடுக.
வாழிய, காணிய, நீடிய.
வாழியர், காணியர், ஆடியர்.

தமிழ் வாழ்க, பயிரினம் தழைத்திடுக.

க, ய - இரண்டும் உயிர்மெய்யாக வரும். ர் - ஒற்று 'ய' கரத்துடன் சேர்ந்து வரும் - வாழி + ய + ர்.

இவை தவிர ஓங்க, நீங்க என 'அ' ஈறும்; பதடி எனல் (என்று கூறுக) என 'அல்' ஈறும்; மனத்துக்கண் மாசிலனாதல் (மாசிலனாகுக) எனத் 'தல்' ஈறும் வியங்கோள் விகுதிகளாக வரும்.

எல்லோரும் வாழ்க, சிறக்க என வாழ்த்துதற் பொருளிலும் அருளுக, செலுத்துக என வேண்டிக் கோடற்பொருளிலும் உண்க, செல்க எனக் (கட்டாயப்படுத்தி விதித்தற் பொருளிலும் இவை வரும்.

ஏவல், வியங்கோள் (மதிப்புடன் ஏவுதல்) ஆகிய இரண்டும் ஏவுதற் பொருளால் ஒன்றே. ஆயினும் ஏவுதல் முன்னிலையில் மட்டும் வரும்; வியங்கோள் இருதிணை, ஐம்பால், மூவிடங் களிலும் வரும்.

## வேறு இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைகளின் இலக்கணம்

**339. வேறு இல்லை உண்டுஐம் பால்மூ இடத்தன 20**

வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினை முற்றுக்களும் ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாக வரும்.

யான், நீ, அவன் - வேறு, இல்லை, உண்டு என முடிக்கவும்.

யான் வேறு, நீ வேறு, யான் இல்லை, அவன் உண்டு என எல்லாவற்றையும் ஒட்டிக்கொண்டு உதாரணம் பார்க்கவும். உண்டு என்பது அது உண்டு என அஃறிணை ஒருமைக்கே வருவதுதான் பழைய வழக்கு. அதைப் பொதுவாக வழங்குவது 'புதியன புகுதல்' என்பர். அவர் வேறு அல்லர், யாரும் இல்லை, குருகும் உண்டு, பெண்டிரும் உண்டுகொல், நான் உண்டு, நீ உண்டு, பயம் உண்டோ, ஒருவன் உண்டு எனப் பாடல்களில் வரும். 'எஞ்ஞான்றும் இல்' - இல்லை என்பது இல் எனவும் நிற்கும்.

வேண்டும் தகும் படும் என்பன போலப் பிற சிலவும் ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.

யான் எழுதுதல் வேண்டும், அது ஓடுதல் வேண்டும், நீ பாட வேண்டும். இங்கு கூட்டம் நடத்தத் தகும். இது படிக்கத் தகும். வஞ்சரை அஞ்சப்படும். 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'.

## பெயரெச்சம்

## பெயரெச்ச வாய்பாடுகளும் அவற்றின் இலக்கணமும்

**340. செய்த, செய்கின்ற, செய்யும்என் வாய்பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வது ஆதி அறுபொருட் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே** 21

செய்த, செய்கின்ற செய்யும் என்னும் வாய்பாடுகள் 'செய்' என்பதிலிருந்து பிறந்த இறப்பு நிகழ்வு எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்கள். மூன்றுகாலமும் காட்டுவதுடன், வினைச்சொல் உணர்த்தும் செயலும் தெரியவரும். இவை தெரிநிலை உடன் பாட்டுப் பெயரெச்சங்கள். அவற்றுடன் 'பால்' (அவன் அவள் அவர் அது அவை என்ற ஐம்பால்) என்பது தோன்றாது. மேலும் 'செய்வது ஆதி அறுபொருள் பெயரும் எஞ்சநிற்பது' - அதாவது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் எனப் பயனிலையாக முடிவுறும் ஆறு பொருட் பெயர்களும் இது என அறியப்படாமல் எஞ்சும்படி நிற்பது பெயரெச்சமாகும். படித்த பையன் (செய்த - வாய்பாடு - இறந்த காலம்). படிக்கின்ற பையன் (செய்கின்ற - வாய்பாடு - நிகழ்காலம்). படிக்கும் பையன் (செய்யும் - வாய்பாடு - எதிர்காலம்). இவை இவ்வாறு காலத்தையும் படித்தலாகிய செயலையும் மட்டும் வெளிப்படுத்தி நிற்றலால், தெரிநிலை வினைப் பெயரெச்சங்களாகும். இவை உடன்பாட்டில் வந்தன. படிக்காத பையன் எனில் எதிர்மறையாகும்.

இவை ஐம்பாலும் இன்னதென்று அறியப்படாதவை. அதாவது 'பாலும்' எஞ்சிநிற்பவை. ஓடிய வேலன், ஓடிய செல்வி, ஓடிய இளையோர், ஓடிய மாடு, ஓடிய மான்கள். ஐம்பாலும் எஞ்சிநின்றன.

இனி இவற்றில் பயனிலையாக - முடிக்கும் சொல்லாக வரும் செய்பவன் (வினைமுதல்), கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் எனும் ஆறு பெயர்களும் எஞ்சிநிற்கும் எச்சங்களாகும்.

பாடிய, பாடுகின்ற, பாடும் பெண் - செய்பவர் யார் எனும் எழுவாய் எஞ்சிநின்றது.

பாடும் குரல் - கருவி,

பாடும் மன்றம் - இடம்

பாடும் இசை - செயல்

பாடும் இரவு - காலம்

பாடும் பாட்டு - செயப்படுபொருள்

இங்ஙனம் காலமும் செயலும் காட்டி, பிற எஞ்சிநிற்பன தெரிநிலைப் பெயரெச்சங்கள். காலம் செயல் இரண்டும் காட்டாது ஏனைய பால் முதலானவை எஞ்சிநிற்பன குறிப்பு வினைப் பெயரெச்சங்கள். முன் கூறிய செய்த, செய்கின்ற, செய்யும் எனும் வாய்பாடுகளுக்குட்படாத அனைத்தும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

நல்ல பையன், நல்ல பெண், நல்ல மனிதர்கள், நல்ல மாடு, நல்ல மான்கள் - குறிப்புப் பெயரெச்சம். காலம் காட்டவில்லை; செயலெதுவுமில்லை. பண்பை உணர்த்தி நின்றன. ஐம்பாலுக்கும் வந்தன. புதிய நட்பு, சிறிய புத்தகம், பெரிய மனம், வறிய நிலம் - என்பன குறிப்புப் பெயரெச்சங்கள் உடன்பாட்டில் வந்தன.

ஓடாத மாடு, கேளாத செவி, காணாத கண், படியாத பையன், வேலை பார்க்காத பெண், விடியாத பொழுது, - இவை போல்வன தெரிநிலை எதிர்மறைப் பெயரெச்சம். இல்லாத பொருள், நல்லதல்லாத செயல், பொள்ளாத (செதுக்கப்படாத) பிள்ளையார்.

பொல்லாத கூட்டம் - இவை குறிப்புப் பெயரெச்சம் எதிர் மறையிலும் வந்தன.

உண்ட களைப்பு, குடிபோன ஊர், பெரிய நம்பி என இது வேறு பல பெயர்கள் எஞ்சிநிற்க, வருமிடங்களும் உண்டு.

## 'செய்யும்' என்னும் வாய்பாட்டு எச்சத்திற்குச் சிறப்பு விதிகள்

**341. செய்யும்என் எச்சம்ஈற்று உயிர்மெய் சேறலும்**
**செய்யுளுள் உம்உந்து ஆகலும், முற்றேல்**
**உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே** 22

செய்யும் என்னும் பெயரெச்சத்தின் இறுதியிலுள்ள 'உயிர் மெய்' எழுத்துக் கெடும். ஆகும் பொருள் - ஆம் பொருள், போகும் போது - போம்போது, வாவும் பரி - வாம்பரி (குதிரை) இவற்றில் கு, வு முதலான உயிர்மெய் கெட்டன.

செய்யுளுள் உம் உந்து ஆகலும் - செய்யுளுள், பழந் தமிழில், செய்யும் என்பதின் இறுதி 'உம்' - 'உந்து' என ஆகும். செய்யும் - செய்யுந்து. 'தென்கடல் திரைமிசைப் பாயுந்து' (பாயும்). சங்கப் பாடல்களில் அருகி வருகிறது. அதனால் இதைத் தொன்மை மிக்க வடிவம் எனலாம்.

'செய்யும்' என்பது முற்றாகவும் வரும், (அவன் செய்யும், அவள் பாடும்) அங்ஙனம் முற்றாகும் போது அதன் ஈற்று உயிராயினும் உயிர்மெய்யாயினும் கெடும். நன்றாங்கால் எல்லாமே நன்றாம். போகுங்கால் எல்லாம் போம். (ஆகும் - ஆம், போகும் - போம்). கு - ஈற்று உயிர்மெய் கெட்டது.

கலுழும் (அழும்) என்பது செய்யுளில் கலுழ்ம் என வரும் போது, ஈற்று 'உ' - என்னும் 'உயிர்' கெட்டது. 'மொழியும்' என்பது பாடலில் 'மொழிமே' என வரும்போது, ஈற்றுயிர் மெய் - யு கெட்டது. தோழி கலுழும், ஊர் மொழியும் என இவை விளைமுற்றாக வருவன. இதுபோலக் கேளும் என்ற ஏவல்வினை கேண்மோ என்றும் உரையும் என்ற ஏவல்வினை உரைமோ என்றும் உயிரும் உயிர் மெய்யும் கெட்டுவருதலுமுண்டு. இவையும் செய்யுளில் வருவன.

## வினையெச்சம்

### வினையெச்சத்தின் இலக்கணம்

342. தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினைஎச் சம்மே 23

வினையெச்சவினை செயலும் (தொழில் - செயல்) காலமும் வெளிப்படத் தோன்றி, ஐந்து பாலும் முற்று வினையாகிய செயலும் எஞ்சிநிற்பது. பெயரெச்சவினை போல, வினையெச்சமும் ஒரு வினைச்சொல்தான். பெயரெச்சத்தில் பெயர் எஞ்சிநிற்கும் - அதாவது எச்சச் சொல் பெயரைக் கொண்டு முடியும்; வினையெச்சத்தில் வினைச் சொல் ஒன்று எஞ்சிநிற்கும் - அதாவது எச்சச்சொல் வினையைக் கொண்டு முடியும். சுருங்கச்சொன்னால் எச்சவினை பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம்; வினையைக் கொண்டு முடிந்தால் வினையெச்சம்

படித்த மாணவன் - பெயரெச்சம்.

படித்துத் தேறினான் - வினையெச்சம்

பார்த்து வந்தான் - பார்த்து வந்திலன் = தெரிநிலை வினையெச்சம்

அருளின்றி நடக்கின்றான், பொருளின்றி வாழ்ந்திலன் = குறிப்பு வினையெச்சம் - இன்றி என்பது காலங்காட்டாது.

தெரிநிலை வினையெச்சத்தில் செயலும் காலமும் தோன்றும். இன்ன பால் என்பதும் முற்று வினையும் எஞ்சிநிற்பது தெரிநிலை குறிப்பு வினை எச்சம் இரண்டிற்கும் பொது.

தெரிநிலை வினையெச்சத்தில் பார்த்தல் தொழிலும், இறந்த காலமும் உணர்த்தப்பட்டன. இவை ஐம்பாலுடன் சேருமாறு எஞ்சி நிற்கும். அவன் பார்த்து வந்தான், அவள் பார்த்து வந்தாள், அவர்கள் பார்த்து வந்தனர். குருவி பார்த்துப் பறந்தது; குருவி(கள்) பார்த்துப் பறந்தன (வந்திலன், வந்திலது என இவை எதிர் மறையிலும் முடியும்.) பார்த்து - என்பதில் பார்த்தான் எனும்

முற்றுக் குறைந்து, முடிவுபெறாமல் நிற்பதையே வினை எஞ்சி நிற்கிறது என்று கூறுகிறோம். அதில் செயல் இன்னதெனத் தெரிகிறது; ஆனால் முற்றுப் பெறவில்லை.

**வினையெச்சம் கொண்டு முடியும் சொற்கள்:**

பேசிப் பழகினான் - தெரிநிலை வினைமுற்றுடன் முடிந்தது
அவளன்றி நல்லள் யார் - குறிப்பு வினையுடன் முடிந்தது.
பேசிப் பழகிய நண்பன் - பெயரெச்சத்துடன் முடிந்தது.
பேசிப் பழகி மகிழ்ந்தனர் - வினையெச்சத்துடன் முடிந்தது.
பேசிப் பழகுதல் நன்மைதரும் - தொழிற்பெயரில் முடிந்தது.
பேசிப் பழகியவர் நண்பராயினர் - வினையாலணையும் பெயருடன் முடிந்தது.

## வினையெச்ச வாய்பாடுகளும் அவற்றின் இலக்கணமும்

**343. செய்து செய்பு செய்யா செய்யூ**
**செய்தென செய செயின் செய்யிய செய்யியர்**
**வான் பான் பாக்குஇன வினையெச் சம்பிற**
**ஐந்து ஒன்று ஆறுமுக் காலமும் முறைதரும். 24**

செய்து முதலாக செய்யியர் ஈறாக ஒன்பது வாய்பாட்டால் வருவனவும் வான், பான், பாக்கு எனும் மூன்று விகுதிகளைக் கொண்டு வருவனவும் இன (இன்னன) இவை போல்வன பிறவும் வினையெச்சங்களாகும். இவற்றுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ செய்தென எனும் முதலிலுள்ள ஐந்தும் இறந்த காலம் காட்டும். நடுவிலுள்ள செய எனும் ஒன்று நிகழ்காலம் காட்டும். பின்னருள்ள செயின் செய்யிய செய்யியர் வான் பான் பாக்கு இறுதியின ஆறும் எதிர்காலம் காட்டும்.

இவற்றுள் செய்து, செய்தென இரண்டும் 'த்' என்ற இடைநிலையால் இறந்தகாலம் காட்டின. பிற செய்பு, செய்யா,

செய்யூ மூன்றும் இறுதிநிலையால் இறந்த காலம் காட்டின.

| | |
|---|---|
| செய்து - வந்து, உண்டு, படித்து; இற்று, அற்று. | |
| செய்பு - இடுபு, தெரிபு, சொல்லுபு. | **இறந்த காலம்** |
| செய்யா - வணங்கா, உண்ணா, | **காட்டும்** |
| கல்லா, காணா. | **வினையெச்சங்கள்** |
| செய்யூ - காணூஉ, உண்ணூஉ, வணங்கூஉ. | |
| செய்தென - பசித்தென, உண்டென, இற்றென, தெற்றென | |
| செய - கொள்ள, மோப்ப, காண, பாட - | **நிகழ் காலம் காட்டுவன.** |
| செயின் - வேண்டின், காணின், வரின் | **எதிர்** |
| செய்யிய - ஊடிய, உண்ணிய, பூணிய | **காலம்** |
| செய்யியர் - பணியியர், காணியர், உண்ணியர் | **காட்டின** |
| வான் இறுதியில் வருவன - ஓதுவான், எழுதுவான் | |
| பான் இறுதியில் வருவன - காண்பான், | **எதிர்** |
| தடுப்பான் | **காலம்** |
| பாக்கு இறுதியில் வருவன - தருபாக்கு, உண்பாக்கு | **காட்டின** |

'செய' என்னும் வாய்பாட்டு எச்சம் நிகழ்காலத்தை மட்டுமன்றி மற்றைய இரண்டு காலமும் காட்டும். நிகழ்காலத்தில் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்; இறந்த காலத்தில் காரணப் பொருட்டாய் வரும்; எதிர்காலத்தில் காரியப் பொருட்டாய் வரும்.

கதிர் எழப் பொழுதுவிடிகிறது - நிகழ்காலம் - உடனிகழ்ச்சிப்பொருள்

மழை பெய்ய நெல் விளைந்தது - இறந்தகாலம் - காரணப் பொருள்.

அல்லவை தேய அறம் பெருகும் - எதிர்காலம் - காரியப்பொருள்.

வான், பான், பாக்கு என்பன எச்சப் பொருளேயன்றி, 'தொழிற்பெயர்' விகுதிகளாகவும் வரும்.

கொடுப்பான் நல்லறம் ஆகும் - தொழிற் பெயர் கொடுத்தல். விரித்துரைப்பான் விளக்கம் தரும். - விரித்துரைத்தல். 'ஏதம்படு பாக்கு அறிந்து - படுதல்.

இன்னன என்பதால் வருவன மிகப்பலவுள. முன்னர்ச் சுட்டியன பல பழந்தமிழ் வழக்கு. புதியன புகுதலால் வருவன பிற.

இவை புதிய இறுதிகள், துணை ஒட்டுக்களாக வருகின்றன. பாடிக் கொண்டான் - இ விகுதி. போய்த்திரும்பினான் - ய் விகுதி. தழீஇக் கொண்டான், தழுவிக் கொண்டான் - விகுதி விகாரப்பட்டது. சிறைபுக்கு விடுதலை பெற்றான் - புகு - புக்கு என விகாரப் பட்டு, இறந்த காலம் காட்டிற்று. உண்பதற்கு வந்தான் - கு விகுதி.

| | |
|---|---|
| உண்டால் பசி தீரும் - ஆல் | |
| உண்டக்கால் பசிதீரும் - கால் | **இவை 'செயின்** |
| உண்டக்கடைப் பசிதீரும் - கடை | **வாய்பாடு** |
| உண்டவழிப் பசிதீரும் - வழி | **போல்வன.** |
| உண்டவிடத்துப் பசிதீரும் - இடத்து | **இறுதி** |
| உண்ணுமேல் பசிதீரும் - ஏல் | **ஒட்டுக்கள் பல** |
| உண்ணுமேல் பசிதீரும் - ஏல் | **வந்தன.** |

வந்தாலும் வருவான்
இகழ்ந்தாலும் விடமாட்டான் உம்
காணினும் பேசான்

பாராமே போனான் - மே
இகழாமை வேண்டும் - மை **எதிர்மறையில் வந்தன**
வெறாமைக்கு வந்தான் - மைக்கு
எதிர்பாராமல் வந்தான் - மல்

திட்டமின்றிச் செய்தான் - றி
வாழ்வு செல்வமில்லாது இல்லை - து
எதுவும் பொருள் இல்லாமே இல்லை - மே
கண்ணிருந்தும் காணாமை இல்லை - மை **இவை குறிப்பு**
வெற்றி முயற்சி இல்லாமலில்லை- மல் **வினையெச்சங்கள்**
எனக்கு நீயல்லாலில்லை - ஆல்

## வினையெச்சங்கள் கொண்டு முடியும் விதம்

344. அவற்றுள்,

**முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்**
**வினைமுதல் கொண்டும்; பிறவும் ஏற்கும்பிற 25**

அவற்றுள் - முன்னே குறித்த வினையெச்சங்களில், முதலிலுள்ள செய்து, செய்பு,செய்யா செய்யூ எனும் நான்கும் இறுதியில் வான் பான் பாக்கு என்பவற்றைக் கொண்டு வரும் மூன்றும் வினை முதலாகிய தன்வினை கொண்டு முடியும்.

பிற இடையிலுள்ள செய்தென செய செயின் செய்யிய செய்யியர் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ஐந்தும் வினை முதலாகிய தன்வினையையும் பிறிதின் வினையையும் கொண்டு முடியும்.

செய்து - அவன் வந்து சேர்ந்தான் - சேர்தல் அவன்தன் வினையே.

செய்பு - இணக்கம் அறிந்து இணங்கு - இணங்குதற் செயல் அவனதே.

செய்யா - அவன் காணா கழிதல் கண்டேன் - தன் வினையே கொண்டது.

செய்யூ - அவள் 'படுமகன் கிடக்கை காணூஉ மகிழ்ந்தனள் - தன்வினையே கொண்டது.

வான் - கொல்வான் படைகொண்டு எழுந்தான் - தன் வினை கொண்டது.

பான் - கல்வி கற்பான் புறப்பட்டான் - தன்வினை கொண்டது.

பாக்கு - செல்வம் தருபாக்கு முயன்றான் - தன்வினை கொண்டது.

தன்வினை, பிறிதின் வினை கொள்பவை.

செய்தென - பசித்தென உண்ணும் அவன்; மக்கள் பசிதீர்ந்தென மகிழ்ந்தான் .

செய - 'மோப்பக் குழையும் அனிச்சம்'; வண்டு பாடமலர்ந்தது முல்லை.

செயின் - தாம் வேண்டின் நல்குவர்; பிறர் விரும்பின் உதவுவர்.

செய்யிய - பேணிய பண்பு பெருமைதரும்; ஊர் காணிய நோற்றனள் அவள்.

செய்யியர் - பணியியர் நீயே பெரும; பணியியர் நின்குடைபெரும.

இவை தன்வினையும் பிறிதின் வினையும் முடிபாக வர ஏற்றன. விருந்தின்றி உண்டபகல்; துயிலின்றி நீந்திய இரவு - இவை குறிப்பு வினையெச்சம் தன் வினை கொண்டன.

உண்டால் பசிதீரும், தலைவர் வந்தால் நிகழ்ச்சி நடக்கும் - 'ஆல்' தன்வினைமுதலும் பிறவும் கொண்டது. இவை போல்வன பல 'இன்னன' என்பதால் கொள்ளவேண்டும்.

## வினைமுதலொடு முடிதல் என்பது முதலுடன் முடிதலா, சினையுடன் முடிதலா?

**345. சினைவிளை சினையொடும் முதலொடும் செறியும்26**

வினைமுதல் வினையைக் கொண்டு முடியும் எனப்பட்ட ஏழும் (முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்று இதன் முன் நூற் பாவில் கூறியவை) அவ்விதிப்படி சினைவினையாயின் சினை யொடு முடிதலேயன்றி, ஒற்றுமைபற்றி முதலுடனும் முடியும்.

கை ஒடிந்து விழுந்தது - சினைவிளை, சினைவினை யுடன் முடிந்தது

கை ஒடிந்து விழுந்தான் - சினைவினை அதனுடன் முடிந்ததோடன்றி முதலுடன் முடிந்தது. பிற வாய்பாடுகளுடன் இவ்வாறு சேர்த்துக் கண்டுகொள்க. கை ஒடிதல் - சினைக்குரிய வினை. விழுந்தான் - முதலுக்குரிய வினை.

## வினையெச்சச் சொற்கள் சிறிது சிறிது திரியினும் பொருள் வேறுபடா

**346. சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை 27**

வினைக்குறை - வினையெச்சம். வாய்பாட்டுச்சொல் திரியி னும் பொருள் வேறுபடாது.

பொழுது பட்டு வீட்டுகு வந்தான். பொழுது பட என வர வேண்டிய 'செய' வாய்பாட்டெச்சம் பட்டு எனத் திரிந்தது, திரியினும் பொருள் வேறுபடவில்லை. யான் கொள்வான் பொன் கொடுத் தான். இதில் 'கொள்ள' என்னும் செயவெனும் எச்சம் கொள்வான் எனத் திரிந்தது. இவ்வாறு வாய்பாட்டு எச்சங்கள் சிறிது மாறி வரினும் பொருளொன்றேயாம்.

கோழி கூவிப் பொழுது புலர்ந்தது. இதைக் கோழி கூவப் பொழுது புலர்ந்தது என உடனிகழ்ச்சியாக்கலாம். ஆனால் இது 'காரணப்' பொருட்டன்று, கூவியது காரணமாகாது. கோழியைக் கூவிவித்து என்றோ, கோழி கூவும்படி என்றோ, கோழி கூவிய போது என்றோ திரித்துக் கூறினும் பொருள் ஒன்றேயாம்.

## ஒழிபு
## ஆக்கம் பற்றிய குறிப்புவினை ஆக்கச்சொல் பெற்று வருதல்

**347 ஆக்க வினைக்குறிப்பு ஆக்கமின்றி இயலா. 28**

ஆக்கத்தை உணர்த்தும் குறிப்புவினை ஆக்கச்சொல் விரிந்து வரும். (சிலபோது தொக்குவருதலுமுண்டு).

இவர் கற்று வல்லர் ஆயினார். இவர் கற்று வல்லர். (ஆயினார் என்பது மறைந்துளது). இவர் பண்பினால் பெரியர் ஆயினார்; இவர் பண்பிற் பெரியர். (ஆக்கச்சொல் விரிந்தும் தொக்கும் வந்தது.) இவர், கொடியர், நண்பன் நல்லன்-இவை குறிப்புவினை ஏற்றன. இங்கு ஆக்கச் சொல் வேண்டு வதில்லை.

## 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கு ஒரு சிறப்பு விதி

**348. பல்லோர் படர்க்கை முன்னிலை, தன்மையில்**
**செல்லா தாகும் செய்யும்என் முற்றே. 29**

செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று உயர் திணைப் பன்மைப் படர்க்கையிலும் (அவர்), முன்னிலை யிலும் தன்மையிலும் வராது. ஆண், பெண், ஒன்று, பல ஆகிய நான்கில் மட்டும் வரும். அவன் பாடும், அவள் இசைக்கும், அது கூவும், அவை ஆடும். தன்மை முன்னிலையிலும் பலர் பாலிலும் வராது.

## 'யார்' - குறிப்புவினையாக வரும் வினாச்சொல் உயர்திணையில் மட்டும் இடம்பெறுதல்

**349. யார்என் வினாவினைக் குறிப்புஉயர் முப்பால் 30**

வினாப் பொருளைத் தரும் 'யார்' - என்பது குறிப்பு வினை முற்றாகும். அது உயர்திணை முப்பாலில் (அவன், அவள், அவர்) மட்டும் வரும்.

அவன் யார், அவள் யார், அவர் யார்
கண்ணன் யார், கயல்விழி யார், கண்டோர் யார்.

நான் ஆர், என் உள்ளம் ஆர், நீ யார், நீர் யார். இவை யாவும் யார் என்பது ஆர் என மருவி வருவதும் புதியன புகுதல் என்பர்.

## 'எவன்' - குறிப்புவினை எங்கு வரும்?

**350. எவன்என் வினாவினைக் குறிப்பு இழி இருபால் 31**

'எவன்' - என்னும் வினாப்பொருள்தரும் குறிப்பு வினை முற்று, அஃறிணை இருபாலுக்கு (அது, அவை) மட்டும் வரும்.

அஃது எவன், அவை எவன்?

எவன் என்பது இன்று என்ன என்று வரும். அஃது என்ன? அவை என்ன? பாட்டு என்ன? பாடல்கள் என்ன? இவை என், என்னை எனவும் வரும். இதிலுள்ள எவன், முன்பு 'என்ன' 'என்' 'என்னை' என வினவப் பயன்பட்டது. உயர்திணை ஆண் பாலைக் குறிக்கும் 'எவன்' என்பது (அவன், இவன், எவன்) வேறு,

## தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்றுக்கு ஒரு புறனடை

**351. வினைமுற் றேவினை எச்ச மாகலும்**
**குறிப்பு முற்று ஈரெச்ச மாகலும் உளவே 32**

தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாகி, முற்றெச்சம் என வரும். குறிப்பு வினைமுற்று வினையெச்சம், பெயரெச்சம் என இரண்டு எச்சமாகும் இடங்களும் உள.

முழங்கினன் எழுந்தான் - முழங்கி எழுந்தான்
எடுத்தனர் தொடுத்தார் - எடுத்துத் தொடுத்தார்
இவை தெரிநிலை முற்றெச்சங்கள்.

வில்லினன் வந்தான் - வில்லினனாகி வந்தான்.
வெந்திறலினன் வேந்தன் - வெந்திறலினனாகியவேந்தன்

இவை குறிப்பு வினையெச்சமும், குறிப்புப் பெயரெச்சமும் ஆகும்.

# ૩. பொதுவியல்

## இயல் கருத்து நிரல்

சொல்லதிகாரத்திற்குரிய பெயர் வினை இடை உரிச் சொற்களுக்குப் பொதுவானவற்றையும் அவற்றிற்குரிய இயல் களில் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல். அதனால் இவ்வியல் நடுவில் வைக்கப்பட்டுள்ளது. 68 நூற்பாக்களைக் கொண்ட இதுவே பெரிய இயலாகும்.

### தொடர்களுக்குப் பொருள் கொள்ளும் முறை

### பாற்பொதுமைத் தொடர்கள்

*1.1* இரு திணையிலும் ஆண் பெண்பால்களுக்குப் பொது வான பெயர், வினைச் சொற்கள் குறிப்பினால் ஒன்றை ஒழித்து, மற்றதைக் குறிக்கும். மாணவரில் தாவணியர் பலராவர். (தாவணி என்ற குறிப்பால் ஆண்பால் நீக்கப் பட்டது) இம்மாடுகள் பாரவண்டியை இழுக்கும். (மாடுகள் என்ற பொதுச் சொல் இங்கு காளைகளை மட்டும் குறித்தது.)

### பெயர், வினைகள் ஈற்றயல் திரிதல்

*1.2* ன, ள, ர, ய ஈற்றுப் பெயர் வினைகளில் ஈற்றயல் எழுத்து ஆ, ஓ ஆகல் செய்யுளுக்குரியதாய் வரும். (வில்லான் - வில்லோன்; நல்லார் - நல்லோர், வல்லார் - வல்லோர், கொடுத்தாய் - கொடுத்தோய்; படைத்தான் - படைத்தோன்; மலை கிழவன் - மலை கிழவோன்.)

### வேற்றுமைகளும் வினைச்சொற்களும் எதிர்மறுத்துரைப்பினும், உருபுகள் வேறுபடா

*1.3* எட்டு வேற்றுமைகளும் (முற்று பெயரெச்சம் வினை யெச்சம் என்ற) மூவகை வினைகளும் எதிர்மறையாகக் கூறினும், தத்தம் ஈற்று உருபுகள் வேறுபடா. (மலர்விழி வந்திலள், அலர்மேலு செய்திலள். தம்பியே வராதே. நடப்பான் - நடவான். போகாப் பொருள். கேட்காது போனான்.)

## உருபுகளும் வினைச்சொற்களும் அடுக்கி ஒரு முடிபுகொடுத்தல்

1.4 வேற்றுமை உருபுகளை அடுக்கியும் வெவ்வேறு வினைகளை அடுக்கியும் தத்தம் எச்சம் ஒன்று இறுதிகளில் வர அதனுடன் முடியும். (மாணாக்கன் தேர்வின்கண், வினாக்களுக்கு உரிய விடைகளை, கவனித்து எழுதினான், இவன் படித்து வந்து, அமர்ந்து, நல்ல எழுத்துடன் அழகாக எழுதிய மாணவன்.)

## இடைப்பிறவரல்

## பெயர்க்கும் பயனிலைக்கும் இடையே பிறசில வருதல்

1.5 வேற்றுமைகளும் வினைமுற்றும் பெயரெச்ச வினையெச்சங்களும் நின்று, அவை கொண்டு முடியும் பெயர், வினைகளிடையே, ஏற்புடையன பிறசில வருதலுமுண்டு. கந்தன் (வயிறார) உண்டான்; பாட்டிற்குப் (பொருத்தமாகவும் சிறப்பாகவும்) இசைத்தான்; தமிழின்கண் (தனித்து ஒளிரும்) செவ்வியற் பண்புகள் உள; எழுச்சி பெற்ற (மறமானம் மிக்க) இளைஞர்களே! முயன்று (தமிழின் இழிவை ஒழிக்க) விரைந்திடுவீர்!

## முற்று எச்சங்களில் முடிக்கும் சொல் நிற்குமிடங்கள்

1.6 வேற்றுமையுருபுகளும் முற்றுக்களும் எச்சங்களும் முன்னே நிற்க, அவை கொண்டு முடியும் பெயர்களும் வினைச் சொற்களும் அவற்றின் இறுதியில் வந்து முடிந்து நிற்கும். உம்மையால் முதலிலும் நிற்கும். எனினும் அவை சிறப்புடையன அல்ல.

(அன்பரசன் படித்தான், வேலைக்குக் கூலி பெற்றான் என முடியும். படித்தான் அன்பரசன், கூலி பெற்றான் வேலைக்கு எனவும் சிலபோது வரும்.)

## ஒரு சொல் தன் இனமான பொருளையும் தருதல்

1.7 பெயர், வினைகளுள் ஏதேனும் ஒரு சொல் நின்றே, அது தன் இனமான பிறசில தொடர்புடைய பொருள்களையும் தருதற்கு இடமுடையதாகும். (சோறுண்டான் என்பது பிறகறி வகைகளையும் உண்டதாகப் பொருள் தரு மல்லவா?)

## பொதுப்பெயர்கள் பொதுமை நீங்கிப் பொருள்தருதல்

*1.8* திணை பால் இடங்களுக்குப் பொதுவான பெயர்கள், வினைகளின் பொதுமைத் தன்மையை, மேல் வரும் சிறப்புப் பெயர் வினைகள் நீக்கும். (சாத்தன் இவன், சாத்தன் இது. முன்னது மனிதனையும் பின்னது மாட்டையும் குறிக்கும். குருவி பறந்தது - ஒன்றன் பால்; குருவி பறந்தன - பலவின்பால். இவ்வாறு வருவன.)

## எச்சச் சொற்கள் தத்தம் எச்சம் கொண்டு முடியும் முறை

*1.9* எச்சச் சொற்கள் பத்து வகைப்படும். (1) பெயரெச்சம் (பாடிய பாட்டு, நல்ல பெயர்) 2. வினையெச்சம் (படித்துத் தேறினான்) 3. 'உம்'மையெச்சம் (படிப்பிலும் சிறந்தவன்) 4. சொல்லெச்சம் (என்னிடமே உளது. 'வேண்டாம்' என்பது பொருள். இது சொல் எஞ்சி நிற்பது) 5. பிரிநிலை எச்சம் (முருகனே செய்தனன்), 6. 'என' என்னும் எச்சம் தடால் என விழுந்தான் 7. ஒழியிசை எச்சம் (நீ சும்மா பார்க்கவா வந்தாய்? உளவறிய வந்தாய் என்பது குறிப்பு.) 8. எதிர்மறை எச்சம் (நானா சொன்னேன்? சொல்ல வில்லை என்பது கருத்து) 9. இசையெச்சம் (மலர்மிசை ஏகினான் மாணடி சேர்தல்'- என்றால் இறைவனை இடையறாது நினைத்தல் எனப் பொருள் கொள்வது) 10. குறிப்பெச்சம் (முன்னம் காட்டி முகத்தின் உரைத்தல் - தலைவன் பிரிவுக்கு உடம்படாமை.)

## தொகைநிலைத் தொடர் மொழிகள்

2. பெயரொடு பெயரும் பெயரொடு வினையும், வேற்றுமை முதலாய அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண், அவற்றிடை யேயுள்ள உருபுகள் தொக்கு நிற்க, இரண்டு முதலாகச் சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு மொழிபோல நடப்பன, தொகைநிலைத் தொடர்கள் எனப்படும். (கல்லெறிதல் - கல்லால் எறிதல், கூலிவேலை - கூலிக்கு வேலை)

## தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும்.

*2.1* 1. வேற்றுமைத் தொகை 2. வினைத்தொகை (சுடு சோறு) 3. பண்புத்தொகை (செந்தமிழ்) 4. உவமைத் தொகை (மதிமுகம்) 5. உம்மைத் தொகை (காய்கறி) 6. அன்மொழித் தொகை. (சுடு முகம் வந்தான் - பேச்சில் 'சுடு மூஞ்சி வந்தான்' என்பர்.)

## ஆறு வேற்றுமைத் தொகைகள்

2.2 ஐ, ஆல் கு இன் அது கண் - என இரண்டு முதல் ஏழு வரையுள்ள வேற்றுமையுருபுகள், வெளிப்பட நில்லாது, மறைந்திருப்பது வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் களாகும். உருபுகள் ஆறு; எனவே தொகைத் தொடரும் ஆறு) . (சிலைதிறந்தனர்)

## வினைத்தொகை

2.3 காலத்தைக் காட்டும் உருபுகளான இடைநிலை, இறுதி நிலைகள் தொக்குநிற்கும் பெயரெச்ச வினைகள் வினைத் தொகை எனப்படும். (எழு சுடர், ஊறுகாய்)

## பண்புத்தொகை

2.4 பண்புருபாகிய - 'ஆகிய' என்பது மறைந்து நிற்பனவும், சிறப்புப் பெயரும் பொதுப்பெயருமாய் ஒரு பொருளுக்கு இரு பெயர் வந்து, இடையில் 'ஆகிய' உருபு தொக்கு நிற் பனவும் பண்புத்தொகை எனப்படும். பின்னதை இரு பெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். (கருங்குதிரை- கருமையாகிய குதிரை; வாழைமரம் - வாழையாகிய மரம்)

## உவமைத் தொகை

2.5 போல, புரைய, அன்ன முதலான உவமை உருபுகள் இடையில் வராது தொக்கு நிற்பன, உவமைத் தொககளாகும். (கயற்கண், மதிமுகம், புலிப் பாய்ச்சல்)

## உவம உருபுகள்

2.5.1 போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன என்பன உவமஉருபுகள். 'பிறவும்' என்பதால் பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய என இவ்வாறு மிகப்பல உவம உருபுகள் உள. இவற்றிடையே உவமிப்பதில் சிற்சில நிழற் பொருள் வேறுபாடுகள் உண்டு. ஒப்ப - ஒப்பது. உறழ - போட்டியிடுவது.

## உம்மைத் தொகை

2.6 அளவைப் பெயர்கள் நான்கு: எண்ணலளவை, எடுத்த லளவை, முகத்தலளவை, நீட்டலளவை. இவற்றினிடையே 'உம்' உருபு வராதது, உம்மைத்தொகை. (காடுகரை - காடும் கரையும். கபில பரணர் - கபிலரும் பரணரும்.)

## அன்மொழித்தொகை

2.7 முன்பு சொன்ன ஐந்து தொகைகளும் வந்து, அவற்றுக்கும் மேலே பிற சில மொழிகள் தொக்குவருவது அன்மொழித்தொகை, (வாயாடி வந்தாள் - வாய் ஓயாமல் பேசும் ஒரு பெண் வந்தாள் - 'வாயால் ஆடி' என்பதால் - இது மூன்றாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைத் தொடர்)

## தொகைநிலைத் தொடர்கள் பொருள் சிறந்து நிற்குமிடங்கள்

2.8 தொகைத் தொடர்களில் முதலிலோ, பின்னர் நிற்பதிலோ, அனைத்திலுமோ, அனைத்திற்கும் புறத்திலோ எனவரும் நான்கு இடங்களில் ஏதேனும் ஒன்றில் பொருள் சிறந்து நிற்கும். (பாடம் படித்தான் - முன்மொழியில். இவள் சிரிக்கின்றாள் - பின் மொழியில். காய் கனி கிழங்கு - அனைத்திலும். தெளிதமிழ் - தெளிதமிழ் எனும் திங்களிதழ் - புறமொழியில்.)

## இடத்தொகை, பெயர்த்தொகை வேறுபாடு

2.9 வல்லொற்று இடையில் வந்தால் அது இடத்தொகையாகும். மெல்லொற்று வந்தால் அது பெயர்த்தொகையாகும். (வடுகக் கண்ணன்' - ஊர். வடுகங்கண்ணன் - பெயர்.)

## 'உம்' மைத் தொகை முடியும் முறை

2.10 உயர்திணையில் வரும் உம்மைத்தொகைகள் பலர்பால் ஈற்றைப் பெற்று வரும். (கபில பரணன் அன்று கபிலபரணர் என வரும்.) (அஃறிணையில் ஆடு மாடு - ஆடுமாடுகள் எனவரும்.)

## தொகைநிலைத் தொடர்கள் பலபொருள் தருதல்

2.11 வேற்றுமை உருபுகள் தொக்கு நிற்குமிடங்களில் இரண்டு முதல் ஏழு வேற்றுமை வரையிலான பொருள்களில் மயங்கிவரும்.

(கடவுள் வணக்கம்: கடவுளை வணங்கும் வணக்கம், கடவுளுக்கு வணக்கம் என இரண்டுவிதமாக விரிக்க இடந்தருகிறது.)

## தொகாநிலைத் தொடர்கள்

3. இடையே உருபுகள் தொக்கு (மறைந்து) வருவன தொகைநிலைத் தொடர்கள். அவ்வாறு உரு பேதுமின்றியும், தொகாதும் நிற்பன தொகாநிலைத் தொடர்கள்

வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய்த் தொடர், விளித்தொடர், (ஐ ஆல் கு இன் அது கண் என்ற) ஆறு வேற்றுமையுருபுகள் விரிந்து நிற்கும் தொடர்கள், இடைத்தொடர், உரித்தொடர், அடுக்குத் தொடர் என்பன தொகாநிலைத் தொடர்கள்.

(வாணன் வந்தான் - எழுவாய்த்தொடர், படித்த புத்தகம்-பெயரெச்சத் தொடர், நனிபேதை - உரித்தொடர். இவற்றின் இடையில் தொகை ஏதுமில்லை.)

## வழு, வழாநிலை, வழுவமைதி

வழு - குற்றம். மொழியைக் குற்றப்படப் பயன்படுத்தக் கூடாது. வழாநிலை - மொழியைக் குற்றமின்றிப் பயன் படுத்துவது. வழுவமைதி - வழுவாயினும் அதற்கொரு அமைதி கூறுவது இது. ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ, மக்கள் வழக்காற்றில் அடிப்பட வந்து விட்டதாலோ, வழு வாகத் தோற்றுவனவற்றையும் ஏற்றுக்கொள்ளலாம் என்பது.

## வழுக்கள் எவை?

4.1 திணையும் பாலும் இடமும் காலமும் வினாவும் விடையும் மரபும் ஆகிய ஏழும் தத்தம் நெறிவிட்டு மயங்கிவரின் வழுவாகும். (மரபு - தொன்று தொட்டு வழங்கி வருவன.) (அவன் வந்தது - திணை வழு. அவள் வந்தான் - பால்வழு. நீ வந்தேன் - இடவழு. நேற்று வருகின்றேன் - கால வழு. இவ்வாறு வருவன)

## திணை, பாலில் - வினா விடை வழுவாமற் காத்தல்

4.2 திணையிலும் பாலிலும் ஐயம் வந்தால் அவை பற்றிய பொதுச் சொல்லால் கூறவேண்டும். இதுவென ஐயம் தெளிந்து விட்டால், அத்தெளிந்த பொருளுடன் 'அன்மைச் சொல்லைச்' சேர்த்துச் சொல்லவேண்டும்.

(மரமோ மனிதனோ இருளில் தெரியும் உருவம்? என்று 'உருவம்' போன்ற பொதுச்சொல்லால் வினவுதல் வேண்டும். இது திணை வழு தவிர்த்தது. 'நாம் இருவர் நமக்கு

ஒருவர்,'- பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரியாத பொழுது, 'ஒருவர்' எனும் பன்மைச் சொல்லால் கூற வேண்டும். இது பால்வழு தவிர்த்தது. அன்மைச் சொல்- அல்லன், அல்லள், அல்ல, அன்று என்பது. மனிதன் என்று தெரிந்தால் 'மரமல்லன்' என்று அன்மைச் சொல்லை, தெளிந்த பொருளுடன் முடிக்க வேண்டும். பெண் என்று நன்கு தெரிந்துவிட்டால் 'ஆண் அல்லள்' எனல் வேண்டும்.)

## திணை வழுவமைதி

4.3 உயர்திணை எழுவாயுடன் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் பற்றிய ஆறு அஃறிணைகளும் தொடர்ந்து வரின், அவை உயர்திணையுடன் சார்த்திக் கூறப்படுவதால், உயர் திணை முடிபையே, பயனிலையாகப் பெறும். (வேலன் வீடு உடையன், நங்கை அழகு உடையள். நம்பி மூக்குக் கூரிது என்றால் நம்பிக்கு மூக்கு கூரிது என்றாகும். நம்பியே எழுவாயானால் கூரியன் என்பதே வழுவற்ற வழக்கு).

## திணை பால் மரபு வழுவமைதி

4.4 திணை பலவும் பால் பலவும கலந்து வருமாயின் சிறப்பு, மிகுதி, இழிபு பற்றி, ஒரு முடிபு கொடுக்க வேண்டும். (திங்களும் சான்றோரும் ஒப்பர் - திங்கள் அஃறிணை; சான்றோர் உயர்திணை. இதில் சிறப்புக் கருதி ஒப்பர் என உயர்திணைக்குரிய முடிபு கூறப்பட்டுள்ளது. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா - மூர்க்கன் உயர்திணை வரினும் இழிவு பற்றி 'விடா' என அஃறிணை முடிபு கொண்டது.)

## திணை பால் வழுவமைதி

4.5 உயர்திணையை அஃறிணையாகவும அஃறிணையை உயர் திணையாகவும ஆண்பாலைப் பெண்பாலாகவும் பெண் பாலை ஆண்பாலாகவும் மேலும் ஒருமை பன்மை மயக்க மாகவும் கூறலாமா? அவை வழுவல்லவா? அல்ல. சிலபோது அவ்வாறு கூறின் வழுவாகாது. மகிழ்ச்சியினாலும் உயர் வினாலும் சிறப்பினாலும் சீற்றத்தினாலும் இழிப்பினாலும் பாலும் திணையும் வழுவினும் அவை இயல்பாகவே கொள்ளப்படும். (மகனை, மகிழ்ச்சியினால் 'வா'ம்மா' என்பதுண்டு; அவர்களில் எவன் யோக்கியன்? சீற்றத்தில்

சொல்வது. நரியார் சிங்கத்தை ஏமாற்றினார். இழிப்புக் குறிப்பு இது.)

### பாலிலும் இடத்திலும் வழுவமைதி

4.6 ஒருமைப் பாலில் பன்மைப் பாற்சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப் பாற்சொல்லையும் ஒன்றற்குரிய இடத்தில் பிற இடச்சொற்களையும் தழுவிக் கூறும் முறைகளும் உள. இவை வழுவாயினும் தவறாகா. (மழை எல்லாம் அற்றுப் போனது - எல்லாம் பன்மை, போனது ஒருமை. தமிழ் காக்கும் மறவர்களின் தாய் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டோ? மறவர்கள் பன்மை, தாய் ஒருமை. ஒவ்வொருவரின் தாய் என்று பொருள்படும். 'தாங்கள் செய்வது பாராட்டற்பாலது'- முன்னிலையைப் படர்க்கையில் வைத்துக் கூறுவது.)

### இடம் வழுவாமல் காத்தல்

4.7 தரல், வரல், கொடுத்தல், செலல் எனும நான்கு சொற்களையும் அவற்றின் வேறுபாடுகளாக வரும் சொற்களையும் படர்க்கை இடத்தைச் சார்த்தியே வழங்குவர். முதலிலுள்ள தரல், வரல் இரண்டையும் தன்மை முன்னிலைகளைச் சார்த்தியும் வழங்குவர். (அவனுக்குத் தந்தான்; அவனிடத்து வந்தான்; அவனுக்குக் கொடுத்தான்; அவனிடத்துச் சென்றான். எனக்குத் தந்தான்; என்னிடத்து வந்தான், உனக்குத் தந்தான்; உன்னிடத்து வந்தான்.)

### வினைச்சொல் உணர்த்தும் காலம்

5. வினைச்சொல் உணர்த்துகின்ற காலம் இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் என மூன்று வகைப்படும். (பாடினான், பாடுவான், பாடுகின்றான்)

### கால வழுவமைதி

5.1 மூன்று காலங்களிலும் ஒரே தன்மையை உடையனவாய், இடையறவு படாமல் நிகழும் பொருள்களை, நிகழ் காலத்தினால் சொல்வர். (இறைவன் காக்கின்றார்; காற்று வீசுகிறது. இவை எக்காலத்தும் நிகழ்பவை.)

### காலம் மாறிக் கூறப்படுமிடங்கள்.

5.2 முக்காலங்களும் சிலபோது ஏற்குமிடங்களில் பிறழ்ந்து, ஒன்று மற்றொன்றாக மாறியும் கூறப்படும். விரைவு காரணமாகவோ, மிகுதி காரணமாகவோ, தெளிவு காரண

மாகவோ இம் மூன்றுமின்றி இயல்பாகவோ அவ்வாறு மாற்றி வழங்கப்படும். (ஒருவர் வரும் முன் 'வந்தேன்' என்பது விரைவு பற்றியது. தொலைக் காட்சியையே பார்த்துக் கொண்டிருப்பவன் படிப்பை இழந்தான் என்பது பெரும் பான்மையாம் மிகுதி பற்றியது. தமிழில் அருச்சித்தவன் துன்பத்திலிருந்து விடுபடுகின்றான். இறந்த காலத்தினால் வரும் பயன் நிகழ்காலத்தில் கூறப்பட்டது தெளிவு கருதி யாகும். யான் முன்பு படிப்பது இதோ இப்பள்ளியில்தான் இறந்த காலத்தை எதிர்காலமாகச் சொன்னது, இயல்பாக வழங்கியது.)

## அறுவகை வினாக்கள்

6.1 அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல்வினா, கொடை வினா, ஏவல்வினா என வினா ஆறுவகைப்படும். இவை தவறுபடாமல் வழங்கப்படும். ('இச்சொற்குப் பொருள் யாது?' - இதை மாணவன் கேட்டால் அறியா வினா; இதையே ஆசிரியன் கேட்டால் அறிவினா (அவர் விடை அறிவார்); ஒரு படிப்பறியாதவன் கேட்டால் ஐயவினா. 'இப்பட்டு என்ன விலை?' வாங்கக் கேட்பதால் கொளல் வினா. 'பசிக்கிறதா?' - உணவு தரக்கேட்பதால் கொடை வினா. இன்னும் உறங்கவில்லையா?' - உடனே படுக்கப்போ என்பதால் ஏவல்வினா.)

## எண்வகை விடை

6.2 தமிழில் விடை கூறுதல் என்பது எட்டு வகைப்படும். அவற்றுள் செவ்வனிறை (நேரே விடைகூறல், இறை - இறுத்தல் - விடையிறுத்தல் - விடை) மூன்று : சுட்டு விடை, எதிர்மறை விடை, நேர்விடை (உடன்பாட்டு விடை). இறை பயப்பன ஐந்து(ஒருவாறு குறிப்பால் விடை கூறவன): ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்ற துரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை.

(பேருந்து நிலையத்திற்கு வழி யாது? 'இது' - என்பது சுட்டுவிடை. வழி தெரியாது என்பது எதிர்மறை விடை. வழி காட்டுகின்றேன் என்பது எதிர்மறை விடை. துணைக்கு வரலாமா? என்று கேட்கும் போது 'கால் வலிக்கும்' என்பது உறுவது கூறல் விடை; காலில் காயம்பட்டுள்ளது என்பது உற்ற துரைத்தல் விடை; நாளை வருவேன் என்பது இனமொழி விடை.)

## வினா விடைகளில் முதல், சினை வழுவாமை

6.3 வினவும் போதும் விடை கூறும் போதும் சினையை முதலோடும் முதலைச் சினையோடும் மயங்கும்படி கலந்து கூறக் கூடாது.

(கண் நோய் தீர்ந்ததா - எனக் கேட்டால், உடல் நலமுற்றது எனச் சினைக்கு முதல் பற்றி விடை கூறலாகாது. கண்நோய் நலமுற்றது என்பதே சினைக்குச் சினை நேர்விடை. பெண் அழகாக இருக்கிறாளா என வினவினால் கண் அழகாகவுளது என்பது பொருந்திய விடையாகாது. முதலுக்குச் சினை பற்றிய விடை பொருந்தாது. பெண் உள்ளது போலத்தான்; ஆனால் கண்கள் அழகாகவுள்ளன எனலாம்.)

## சொல்மரபு பிறழாமை

7. எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு நம் முன்னோராகிய உயர்ந்தவர்கள் சொல்லிவந்தார்களோ, அதனை அச்சொல்லால் சொல்லுவது மரபாகும். இதற்குக் காரணம் காட்ட வேண்டுவதில்லை. மரபென்பது, முன்னோர் சொல்லி வந்த வழிவழிமுறை. (கீரிப்பிள்ளை, அணிற்பிள்ளை என்பர். அதற்காக பாம்புப்பிள்ளை, பசுப்பிள்ளை எனல் தவறு. பாம்புக்குட்டி, பசுக்கன்று என்பதே மரபு. சோறு உண்டான், கறி தின்றான், பாயசம் பருகினான் என்றாற் போல்வன வினைச்சொல் மரபு.)

## மரபு வழாநிலை

## மரபு வழுவாமல் காத்தல்

8. உலகில் வெவ்வேறு வகைச் செயல்களுக்குரிய பலவிதப் பொருள்களுக்கும் ஒரு பொதுச்சொல் உள்ளது. அவற்றிற்கு வினைமுடிபு பொதுச்சொல்லால் சொல்ல வேண்டும். வேறு வேறாகக் கூறப்படும் அவற்றின் சிறப்புச்சொற்களுக்கும் அவற்றைச் சேர்த்துக் கூறும்போது பொதுவான சொல் முடிபே தர வேண்டும். (அடிசில் - அடப்படும் - சமைக்கப்படும் உணவு. அதில் உண்பன, தின்பன, பருகுவன எனப் பலவுள. இவற்றின் பொதுச்சொல் அடிசில்; இதற்கு உண்டான், சாப்பிட்டான் எனப் பொதுச்சொல்லே விடையாக வேண்டும். பறை கொட்டினான், குழல் ஊதினான், யாழ் மீட்டினான், முழவு முழக்கினான். இவை

வேறு வேறாகக் கூறப்படுவன. இவை அனைத்தையும் சேர்த்து பறை, குழல், யாழ், முழவு இயம்பினர் என்றோ, வாசித்தனர் என்றோ பொதுவினையாலேயே கூற வேண்டும்.)

## பலபொருள் தரும் சொற்களைச் சார்பால் விளக்குதல்

9. பலபொருள் தரும் ஒரு சொல்லை, அதனுடன் வினைச் சொல், சார்புச்சொல், இனச்சொல், இடச்சொல்லுள் ஒன்றைப் பொருத்தி, உரைத்து, அச் சிறப்புச் சொல்லால் அதன் பொருளை விளங்க வைப்பர். மா - மாமரம், வண்டு, விலங்கு, குதிரை, திரு, ஒருவகை மா உணவு எனப் பல பொருள் தரும் ஒரு சொல். இதனைச் சிறப்புச் சொல் ஒன்றுடன் சேர்த்துக் கூறியே விளங்கவைக்க வேண்டும். (மா, பூத்தது (மரம்); மா மொய்க்கிறது (வண்டு; மா ஐயறிவினது (விலங்கு), மா பாய்ந்தோடும் (குதிரை); மா வாழ் மார்பன் (இலக்குமி); மா வுருண்டை இனிது (உணவு); இவ்வாறு வினைச்சொல், சார்புச்சொல் போன்றவற்றால் மட்டுமே, ஒரு பொதுச்சொல் பிரித்துணரப்படும்.)

## ஒலி அழுத்தத்தால் பிரிந்து, வெவ்வேறு பொருள்படும் தொடர்ச்சொற்கள்

10. எழுத்து மாறாமல், சில தொடர் மொழிகள், பொருளை வெவ்வேறாகக் கொள்ளுமாறு, அவற்றை ஒலிக்கும் முறை அழுத்தத்தால் பலபொருள் தந்து துணியப்படும் என்பர். (எழுந்திருந்தான் - எழுந்து இருந்தான் வேறுபடுகிற தல்லவா? இதுதான் எழுத்தியல் திரியாது பொருள்திரியும் புணர்மொழி. ஒலிக்கும் முறை வேறுபாட்டால் இவை பொருள் இதுவென்று துணியப்படும். செம்பொன்பதின் தொடி என்பது பழைய காட்டு. செம்பு + ஒன்பதின்தொடி; செம்பொன் + பதின்தொடி. தமிழைக் கைவிட்டார் தலைநின்று பயன் என்னே? தமிழைக் கைவிட்டார் தலை + நின்று பயன் என்னே? தாய்மொழி கல்லாதார் அறிவில்லா தவரே; தாய்மொழி கற்பார் அறிவில் ஆதவரே.

## பலபெயர் அடுக்கி முடிக்கும் விதம்

11. ஒரே பொருளைக் குறிக்கப் பலபெயர்கள் வருமானால், இறுதியில், ஒரு வினைச்சொல்லால் முடிப்பார்கள்.

அவற்றைத் தனித்தனி வினையால் முடிப்பதும் உண்டு. திருநிறைசெல்வி, தேன்மொழிக் காரிகை, சீர்இளநங்கை செந்தாமரை வந்தாள். ஒருத்தியையே குறித்து ஒரு வினை கொண்டது. திருநிறை செல்வி வந்தாள், தேன்மொழிக் காரிகை வந்தாள். சீர்இளநங்கை வந்தாள், செந்தாமரை வந்தாள், இவ்வாறு ஒருத்தியையே பல வினை முடிபுகளால் முடிப்பதுமுண்டு.

## இயற்பெயரும் சிறப்புப்பெயரும் சேர்ந்து வருதல்

*12.* ஐந்திணை, நிலம், குலம், குடி, உடைமை, குணம், தொழில், கல்வி ஆகியவை பற்றிய சிறப்புப் பெயருடனே, இயற்பெயர் சேர்ந்து வருமானால், இயற்பெயர் பின்னதாக வருதலே சிறப்புடைத்து. 'சிறப்பே' - என்றதால், சிலபோது முன்னே வருதலுமுண்டு எனவும் அது வழு வமைதியாக ஏற்கப்படுமென்றும் கூறுவர். (மூதறிஞர் மாணிக்கம் என்பர். மாணிக்கம் மூதறிஞர் என்பதும் கொள்ளப் படுமெனினும் முன்னதே சிறப்பென்பர். மருத்துவன் தாமோதரன், ஆசிரியன் நல்லந்துவன் என்பன தொழிலால் வரும் சிறப்புப் பெயர்கள். வெண்ணிக் குயத்தியார் வெண்ணி எனும் இடத்தால் வந்த பெயர்.)

## சுட்டுப்பெயர் வரும் இடம்

*13.* படர்க்கை இடத்தில் வரும் உயர்திணை, அஃறிணை, விரவுப் பெயர் என்னும் மூவகைப் பெயர்களோடு, சுட்டுப் பெயர் எதிரே வந்து சேருங்கால்,அதன் பின் வினை முடிபு ஒன்று வருமாயின், அச்சுட்டுப்பெயர் மூவகைப் பெயருக்கும் பின்னேதான் வரவேண்டும்; முன்னே வராது. முடிக் குஞ்சொல் இல்லாத போது, பெயருக்கு முன்னும் பின்னும் சுட்டுப்பெயர் வரும். இது உலக வழக்கு. செய்யுளில் ஏற்ற இடத்தில், பொருந்தியவாறு வரும். (சிகப்பி வருகின்றாள்; அவளுக்குப் பூக்கொடுக்க. பிறை தெரிகிறது; அதனைத் தொழுக. கந்தன் அவன், அவன் கந்தன். 'அவன் என்னை அருளினன் காண், ஆலவாய் அண்ணல்' - எனச் செய்யுளில் சுட்டுப் பெயர் முன்னரும் வரும்.

## அடுக்குத் தொடர்

*14.* அசைநிலைக்கும்; விரைவு, வெகுளி, உவகை முதலிய பொருள் நிலைக்கும்; இசைநிறைக்கும் ஒரே சொல் முறையே

இருமுறை, மும்முறை, நான்குமுறை எல்லைவரை அடுக்கி வருவன. அடுக்குத்தொடர் (அன்றே, அன்றே - அசைநிலை அடுக்குத்தொடர். பொருளின்றி வருவது அசைநிலை. வாழ்க வாழ்க வாழ்க - உவகைப் பொருள் அடுக்குத்தொடர். பாடு பாடு பாடு பாடுக பாட்டே - இசைநிறை அடுக்குத் தொடர். செய்யுளில் ஓசையை நிரப்புவது இசைநிறை.)

### இரட்டைக் கிளவி

15. கிளவி - சொல். இரட்டைக் கிளவி - இரட்டைச் சொற்கள். அவை இரட்டையாய் நிற்பதைப் பிரிக்க இயலாது. பிரித்தால் பொருளற்றதாகி விடும். (கலகலென, படபடென, சலசலென, படபடத்து)

அடுக்குத் தொடர் பிரிக்கக் கூடியது; பிரித்தால் பொருள் தருவது. (பாம்பு பாம்பு, தீதீதீ)

### ஒன்றையே குறிக்கும் தொடர்ப்பெயர்கள்

16. ஒரே பொருளைக் குறிக்கப் பலபெயர்கள் தொடர்ந்து வரும் போது, பிரிக்க இயலாதவற்றைப் பிரிக்கமாட்டார்கள். எனவே பிரிக்கக் கூடியதைப் பிரிப்பார்கள். (சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்)

### ஒருபொருட் பன்மொழி

17. ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் சேர்ந்து வருவன. அதன்மூலம் சிறப்பும் மிகுதியுமாகிய பொருளைத் தருதலால் அவை வழுவாகா. (ஓங்குயர் மாமலை - மிக வுயர்ந்த மலை; மீமிசை ஞாயிறு - மேலே சிறந்து விளங்கும் சூரியன்.)

### முற்றும்மை வருமிடங்கள்

18. இத்தனைதான், இவ்வளவுதான் என வரையறுத்து உணரப்படும் பொருள்களுக்கும் உலகில் எங்கும் என்றும் இல்லாத பொருள்களுக்கும் வினை முடிபு கொடுத்துக் கூறும் போது 'உம்' மை கட்டாயம் வேண்டும். (முத் தமிழும் படி, ஐம்பொறியையும் அடக்கு, ஒளிமுன் இருள் எங்கும் இல்லை.)

## செயப்படு பொருளைச் செய்ததுபோலக் கூறுதல் - மரபு வழுவமைதி

19. செயப்படு பொருளை, அதுவே எழுவாயாய்ச் செய்தது போலக் கூறுதலும் உலக வழக்கிலுண்டு. (வண்டி ஓடுகிறது; வாள் வெட்டுகிறது; தரை சுத்தமாகிறது. வண்டி ஓட்டப் படுகிறது எனும் செயப்படு பொருளை, அதுவே ஓடுகிறது என்பதுதான் இது. உலகில் இது பெரிதும் வழங்குகிறது. பலரால் வழங்கப்படுவதை 'வழங்குகிறது' என்பதே, 'செய்தது' போலக் கூறுவதுதான்.)

## அடை மொழித் தொடர்கள்

20. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் - எனும் ஆறு சொற்களும் அடையடுத்து வரும். அவ்வாறு உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வரும்போது இனச் சுட்டுள்ளனவும் இனச் சுட்டில்லாதனவும் என இரு வகைப்படும். (பொற்குடம் - பிறகுடங்களும் உள. செந் தாமரை - வெண்தாமரையும் உள. இவை இனஞ்சுட்டும் அடை மொழிகள். உப்பளம் - வேறு அளம் இல்லை. செம்போத்து - வெண்போத்து இல்லை. இவை போல இனமில்லாதனவும் அடைமொழியுடன் வருவதுண்டு)

## அடைமொழியின் பயன்கள்

21. முன் சொல்லப்பட்டவாறு அடையடுத்த மொழிகள் தம் இனத்தை உணர்த்தல் மட்டுமன்றி, அவ்விடத்துப் பொருந்து மாயின் இனமல்லாததையும் தரும். (தாய்த் தமிழ்வழி கற்பவரே நோபல் பரிசு பெறுவர் - என்றவழி, பிறவழி கற்பவர் அது பெறும் தகுதி அடையார் என்பதும், தாய் மொழிப் புறக்கணிப்பு அவமானமும் அறியாமையும் ஆகும் என்பனவும் பெறப்பட்டன.)

## அடைமொழிகள் பல சேர்ந்து வருதல்

21.1 ஒரு தொடரில் அடைமொழி + சினை + முதல் மூன்றும் சேர்ந்து வருதலுண்டு. அடை + அடை + முதல் என ஈரடைகள் வருதலுமுண்டு. செய்யுளில் அடை + அடை + சினை என வருதலும் பல அடைகள் கலந்து மயங்கி வருதலுமுண்டு (செங்கால் நாரை - அடை + சினை + முதல். சிறுகருங்காக்கை - அடை + அடை + முதல். செய்யுளில் கருநெடுங்கண் - அடை + அடை + சினை)

### இயற்கைப் பொருளை 'இற்று' எனக் கூறல்

22. இயற்கைப் பொருளை 'இத்தன்மைத்து' என இயல்பாகக் கூற வேண்டும். (நிலம் வலிது, பால் வெளிது.)

### செயற்கைப் பொருளைக் கூறும் முறை

23. செயற்கைப் பொருளைக் காரணத்துடன் ஆக்கச் சொல் சேர்த்தும் காரணமின்றி ஆக்கச்சொல் சேர்த்தும் ஆக்கச் சொல்லின்றிக் காரணம் சேர்த்தும் இவ்விரண்டுமே இல்லாமலும் கூறுவர். (தமிழ்வழிக் கல்வி யாவும் கட்டாயமாக்கியதால் நல்லவாயின - காரணமும் ஆக்கமும் பெற்றது. தமிழ் வழிக்கல்வி நல்லவாயிற்று - காரணமின்றி ஆக்கம் பெற்றது. தமிழ் வழி உயர் கல்வியானதால் தமிழ் நிலைத்தது - காரணம் வந்து ஆக்கச்சொல் தொக்கது. தமிழ்வழிக்கல்வி நன்று - காரணம், ஆக்கம் இரண்டும் தொக்கன.)

### வணிக மரபில் வினாவும் விடையும்.

24. ஒரு வணிகரிடம் நாம் கேட்ட பொருள் இல்லையென்றால் அவர் அதை 'இல்லை' என்று கூறார். அதனுடன் தொடர்புடையதாகத் தம்மிடம் இருப்பதைக் கூறுவார். தம்மிடம் அஃது இருந்தால், அதைச் சுட்டி நன்கு விளக்கி, இத்தகையது, இவ்விலையினது என்று சுட்டிக் கூறுவார். இவை வணிக மரபில் சொற் சுருங்கவுரைத்தலாகும். (பாசிப்பயறுளதோ என்றால் தட்டைப் பயறுளது என விடைகூறுவர். பாசிப்பயறு இல்லை என்பது குறிப்பு. பாசிப் பயறு இருந்தால், இது இன்ன தரமுள்ளது, இன்ன விலையினது எனச் சுட்டிக் காட்டிக் கூறுவர்.)

### ஒன்றைக் கேட்கும் சொல் மரபு

25. ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடம் கேட்பது; தா - என்பது ஒப்பானவனிடம் கேட்பது; கொடு - என்பது உயர்ந்தோன் தன்னிலும் தாழ்ந்தவனிடம் கேட்பது. (தாயே ஈ வாயாக; தோழியே தருவாயாக; தம்பியே கொடுப்பாயாக.)

### முன்னம் - குறிப்பால் விடை தெரிதல்

26. குறிப்பினால் பொருள் அறியப்படும். சொற்களும் உள. (சோற்றால் மடை அடைக்கும் சோணாடு - மருதவளச் சிறப்பைக் குறிப்பால் உணர்த்தும்.)

### அஃறிணைகளும் உயர்திணைபோல் புனையப்படுதல்

27. கேளாத அஃறிணைகள் நாம் சொல்வதைக் கேட்குன போலவும்; அவை நம்மிடம் பேசுன போலவும் இயங்குன போலவும் இயற்றுன போலவும் கற்பனை செய்வதுண்டு.

*(அனிச்சமே! இதுகேள்!; பகைமையும் நட்பையும் கண் உரைக்கும்; இவ்வழி சென்னைக்குப் போகும்; என் மனம் முன்னமே வீடு போய்ச் சேர்ந்து விட்டது.)*

### உருவகம் உவமைகளில் வரும் மயக்கங்கள்

28. உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை, அஃறிணைகள் ஒன்றுடன் ஒன்று மயங்கி வருதலும் முதல், சினைகள் அவ்வாறு மயங்கி வருதலும் இவ்வியலுள் சொல்லாதன பிறவும் ஆகியவற்றை மரபைப் பேணி ஏற்றுக்கொள்ளுக.

*(அரசச்சிங்கம் பகையானைகளை ஒட்டியது. திணை மயக்கம் வந்த உருவகம். மங்கை மயில் போன்றனள். உவமையில் வந்த திணை மயக்கம். கண் கயல்போலும் - சினை முதலுடன் மயங்கியது.)*

### பொருள்கோள்

29. செய்யுளில் பொருள் கொள்ளும் முறைகளான பொருள் கோள் எட்டு வகைப்படும். 1. யாற்றுநீர்ப் பொருள்கோள் 2. மொழிமாற்றுப் பொருள்கோள் 3. நிரல் நிறைப் பொருள் கோள் 4. விற்பூட்டுப் பொருள் கோள் 5. தாப்பிசைப் பொருள்கோள் 6. அளைமறி பாப்புப் பொருள்கோள் 7. கொண்டு கூட்டுப் பொருள் கோள். 8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்.

### யாற்றுநீர்ப் பொருள் கோள்

30.1 ஒரு பாட்டின் பொருள் ஒரே நோக்காக, எழுவாயில் தொடங்கி, பயனிலையில் போய் முடிவது யாற்றுநீர்ப் பொருள்கோள். பிறிது நோக்காது, உயர்ந்த பொருளை அடி தோறும் கொண்டு, இடையே எச்சச் சொற்களால் அற்றற்று ஒழுகி முடிவது இது. (வான் நின்று உலகம் வழங்கி வருதலால்- தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று (11) இக்குறளில் வான் எழுவாய்; உணரற்பாற்று பயனிலை. வழங்கி, வரு

தலால், என்று என்பன எச்சச் சொற்கள். எனவே இது யாற்று நீர்ப் பொருள்கோள்.)

## மொழிமாற்றுப் பொருள்கோள்

30.2 ஏற்புடைய பொருளுக்கு (எழுவாய்களுக்கு), இயைபுள்ள மொழிகளை (பயனிலைகளை), ஓரடியுள் மாற்றி அமைத்துப் பாடுதல் மொழிமாற்றுப் பொருள்கோள். (சுரை யாழ அம்மி மிதக்கும் சுனை. இதைச் சுரையோடு மிதக்க, அம்மி ஆழ என மாற்றிப் பொருள் கொள்ள வேண்டியிருப்பதால், இது மொழி மாற்றுப் பொருள்கோள்.)

## நிரனிறைப் பொருள்கோள்

30.3 பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவற்றின் பயனிலைகளையும் வேறுவேறாக வரிசைப்படி நிறுத்தி, அதே வரிசை முறைப்படியேனும் எதிர் வரிசையாக வேனும் பொருள் கொள்ள வைப்பது நிரனிறைப் பொருள்கோள்.

*(அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை - பண்பும் பயனும் அது(45). அன்பு - இல்வாழ்க்கையின் பண்பு. அறன் - அதன் பயன். நிரல்நிறை. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் - கற்றாரோடு ஏனையவர் (410) விலங்கு - ஏனையவர். மக்கள் - கற்றார். இது எதிர் நிரல் நிறை.)*

## பூட்டுவிற்பொருள்கோள்

30.4 வில்லில் நாண் பூட்டுவதுபோல, பாட்டின் இறுதியில் எழுவாயை வைத்து, அவ் இறுதி. மொழி, பாடலின் முதல் மொழியுடன் பொருந்தும் பொருள் நோக்குடையது பூட்டு விற் பொருள்கோள். (திறந்திடுமின் தீயவை பிற்காண் டும்-தமிழர் பெருமானைக் கண்ணாரக் காணக் கதவு-முத் தொள்ளாயிரப் பாடற் கருத்து இது. பாடலின் இறு தியிலுள்ள கதவு - முதலிலுள்ள திறந்திடுமின் என்பதோடு முடிதலால் இது பூட்டுவிற்பொருள்கோள்.)

## தாப்பிசைப் பொருள் கோள்

30.5 ஒரு பாடலின் இடையிலுள்ள சொல், ஊஞ்சல் போல முன்னும் பின்னுமாகிய இரண்டு இடத்துடனும் சென்று பொருள்தருவது தாப்பிசைப் பொருள்கோள். (தாப்பு - ஊஞ்சல்) (உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண

அண்ணாத்தல் செய்யாது அளறு (குறள்.255) இதில் 'ஊன்' (இறைச்சி) இடையிலுள்ள சொல். இது ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என முன்னும் ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு எனப் பின்னும் சென்று பொருள் தருகிறது. அதனால் இது தாப்பிசைப் பொருள்கோள்.)

## அளைமறி பாப்புப் பொருள் கோள்

*30.6* செய்யுளில் இறுதியிலுள்ள மொழி/தொடர், இடையிலும் பிறகு முதலிலும் சென்று சேர்ந்து பொருள் தருவது அளைமறி பாப்புப் பொருள் கோள். (பாம்பு புற்றில் தலையை மேலே வைத்து, வாலை முடக்கி உள்ளே செலுத்தி, மடக்கி இருப்பது போல்வதால், இது அளைமறி பாப்புப் பொருள்கோள் ஆகிறது.)

(தாழ்ந்த உணர்வினராய்த் தளர்வாரும், ஆழ்ந்த வினையால் சுழல் வாரும், மூழ்ந்த பிணி நலிய முனிவாரும் யாரெனில், வாழ்ந்த பொழுதில் நல்ல நெறி முன்னி முயலா தாரே. இது பாடற்கருத்து. இதை முயலாதார் (ஈற்றடி), பிணியால் முனிவார் (மூன்றாம் அடி), சூழ்ந்த வினையால் சுழல்வார் (இரண்டாம் அடி), தாழ்ந்த உணர்வினராய்த் தளர்வார் (முதலடி). இவ்வாறு தலை கீழாய்ப் பொருள் கொள்வதால் இது அளை மறி பாப்புப் பொருள்கோள். (அளை - புற்று, பாப்பு - பாம்பு)

## கொண்டு கூட்டுப் பொருள் கோள்

*30.7* ஒரு பாடலின் பல அடிகளில் அங்கங்கே நிற்கும், கோப்புடைய பொருந்திய சொற்களை, ஏற்றபடி அறிந்து கோத்துப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள் கோளாகும். (பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை, அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற - (குறள் 61) அறிவறிந்த மக்கட் பேறே பேறு; பிற அல்ல; எனவே அதுபோல் பேறு, பெறுமவற்றுள் யாம் அறிவது எதுவும் இல்லை. இவ்வாறு கொண்டு கூட்டிப்பொருள் கொள்வதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

## அடிமறி மாற்றுப் பொருள் கோள்

*30.8* ஏற்குமிடமறிந்து ஒவ்வோர் அடியையும் தனித்தனியே எடுத்துக் கூட்டிப் பொருள் கொள்ளுமாறு அமைந்த

அடிகளை உடையனவும், ஒரு செய்யுளில் ஏதாவது ஓரடியை எடுத்து அதை இடையிலும் முதலிலுமாக எங்கு கூட்டினும் பொருளும் யாப்பமைதி மாட்சியும் மாறாத அடியை உடையனவும் அடிமறி மாற்றுப் பொருள்கோளாகும்.

தாய்மொழிக் கல்வியே தனிப்பெரும் சிறப்பு
தாய்மொழி கற்றவர் தரணியில் உயர்வர்
தாய்மொழி கல்லார் தம்மையே இழப்பார்
தாய்மொழி கற்றவர் தனித்துயர் வாரே.

இதன் அடிகளை எங்ஙனம் மாற்றினும் பொருள் கெடாது. இதுவே அடிமறி மாற்றுப் பொருள்கோள்.

# பொதுவியல்

சொல்லதிகாரம் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற நான்கு சொற்களுக்கும் நான்கு இயல்கள் கொண்டது. பெயர்வினைக்குப் பின்னும் இடைஉரிக்கு முன்னும் இப்பொதுவியல் உளது. சிங்க நோக்காக, இவ்வியல் முன்னுள்ள இரண்டுக்கும் பின்னுள்ள இரண்டுக்கும் நடுவில் பொதுவாக வைக்கப் பட்டு, அவை நான்கிற்கும் பொதுவான இலக்கணக் கூறுகளை உரைக்கிறது. (அடிக்கடி முன்னும் பின்னும் பார்ப்பது சிங்கத்தின் இயல்பு.)

## பாற் பொதுமைச் சொல், ஒன்றனை நீக்கி மற்றதை மட்டும் குறிப்பது

**352. இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்**
**பெயரும் வினையும் குறிப்பி னானே 1**

இருதிணையிலும் ஆண்பால், பெண்பால்களுக்குப் பொதுவான பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும், குறிப்பினால் கூறும் முறையில், இரண்டில் ஒன்றனை நீக்கி, மற்றதை மட்டும் உணர்த்தும்.

மக்கள் தம் உரிமை காக்கப் பெண்ணிய விடுதலை பற்றிப் பேசினர். 'தம் உரிமை காக்க' என்ற குறிப்பால், மக்கள் என்பது இங்கு மகளிரைக் குறிக்கும்.

இம் மாடுகள் பாரவண்டியை இழுக்க வல்லன - இங்கு 'வண்டியை இழுத்தல்' என்ற வினையால், மாடுகள் என்ற பொதுப்பெயர் காளை மாடுகளைக் குறித்தது.

## பெயர், வினைச்சொற்கள் ஈற்றயல் திரிதல் உண்டு

**353. பெயர் வினை இடத்து ன, ள, ர, ய ஈற்றயல்**
**ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே** 2

பெயர்ச்சொல்லிலும் வினைச்சொல்லிலும் னகர ளகர ரகர யகர - ஈற்றுச் சொற்களில், ஈற்றயலில் உள்ள ஆகாரம் ஓகார மாதலும் செய்யுளிடத்து உரித்தாகும்.

வில்லன் - வில்லான் - 'வில்லோன்'. தொடியள் - தொடி யாள் - தொடியோள். (தொடி - வளையல்). 'வில்லோன் காலன சுழலே' 'தொடியோள் மெல்லடி மேலன சிலம்பே' நல்லர் - நல்லார் - நல்லோர். இவ்வாறு செய்யுளில் வருவன இவை. இக்குறிப்பு வினையாலணையும் பெயர்களேயன்றி, வினைகளும் இவ்வாறு செய்யுளில் ஆ - ஓவாகத் திரிதலுண்டு. கொடுத்தாய் - கொடுத்தோய்.

படைத்தான் - 'படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்'. நல்லள் - நல்லாள் - 'நல்லோள் மன்ற அவளே' 'சென்றார் - சென்றோர் அன்பிலர் தோழி'. வந்தாய் - 'வந்தோய் நல்லை நீ மன்ற'; 'பழமுதிர் சோலை மலைகிழவோனே' - கிழவன் - கிழவோன். அ - ஓ ஆயிற்று, கிழவன் - மலைக்கு உரியவன். பெரிதும் அகரம் - ஆகார மாகிப் பின் ஓகாரமாதலே மிகுதி.

## எட்டு வேற்றுமைகளும் மூவகை வினைகளும் எதிர் மறுத்துரைப்பினும் வேறுபடா

**354. உருபும் வினையும் எதிர்மறுத்துரைப்பினும்**
**திரியா தத்தம்ஈற்று உருபின் என்ப** 3

எட்டு வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச் சொற்களும் (முற்று பெயரெச்சம் வினையெச்சம்) எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் ஈற்றிலிருந்தும் அவ்வவ் உருபிலிருந்தும் வேறுபடா

மலர்விழி வந்தாள், மலர்விழியைப் பார்த்தேன், மலர் விழியால் பின்னப் பட்டது என்பது போல், மலர்விழி வாராள், மலர்விழியைப் பார்க்கவில்லை, மலர்விழியால் பின்னப்பட வில்லை என எதிர்மறையாகக் கூறினும் உருபும் பொருளும் ஒன்றே. முருகனுக்குத் தாரேன், கல்லூரியின் நீங்கேன், உறுப் பினரது ஒவ்வாமை, தீதின்கண் ஈடுபடான், நண்பா வாராதே.

நடப்பான் போன்றதே நடவான் என்பதும், ஈற்றுருபுக்கு (விகுதி) அதே பொருள்தான். போகிய போகாத, வந்து வாராது - பெயரெச்சம், வினையெச்சம் ஈறு ஒன்றே. பேசாத படம் - பேசாப்படம். இதனை, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். செய்யாக் கோலம், பேசாக் கிளி. செய - செய்யாமல் என வரும். நடத்தல் - நடவாமை (தொழிற் பெயர்). உண்ணாய்- உண்ணேல், உண்ணாதே (ஏவல்). இவை சில ஈறு திரிந்தும் இவ்வாறு வந்தன.

## உருபும், வினையும் அடுக்கி, ஒரு முடிபு கொள்ளுதல்

**355. உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்**
**ஒருதம் எச்சம் ஈறுற முடியும் 4**

வேற்றுமை உருபுகள் பல விரிந்து நின்றும் தொக்கு மறைந்து நின்றும் பல அடுக்கி வரினும், வெவ்வேறு பல அடுக்கி வரினும் மூவகை வினைச்சொற்களும் (முற்று, பெயரெச்சம், வினையெச்சம்) வெவ்வேறு பல அடுக்கி வரினும், தத்தம் எச்சம் ஒன்று இறுதியில் வர அதனோடு முன் சொன்ன அனைத்தும் முடியும்.

தலைவனானவன் தேர்தலின்கண், பல உறுதிமொழி களைக் கூறி, மக்களுக்குக் கவர்ச்சியூட்டி, தன் திறமையால் வெற்றி பெற்றான். இதில் பல வேற்றுமையுருபுகள் விரிந்து, வென்றான் என அதற்குரிய வினைகொண்டு முடிந்தன. உறுதிமொழி கூறி, மக்கள் மனம் கவர்ந்து வெற்றி பெற்றான் என வரும் இதில் உருபுகள் தொக்கு, தனக்குரிய வினைகொண்டு முடிந்தன.

அண்ணனுக்கும் தம்பிக்கும் கொடுத்தான். வேறுபல அடுக்கி, கொடுத்தான் என ஒரு வினையில் முடிந்தது. அண்ணன் தம்பி சண்டை. உருபு தொக்கு அவ்வாறு ஒரு வினையில் முடிந்தது.

ஆடினாள், பாடினாள் நடிகை; இளையள் அழகியள் நடிகை. தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் வேறுபல அடுக்கி, நடிகை என்னும் ஒரு பெயர் கொண்டன.

படித்துச் சிறந்த பாவாணர்; நல்ல பெரிய மாமனிதர் - தெரிநிலைப்பெயரெச்சமும் குறிப்புப் பெயரெச்சமும் வேறுபல அடுக்கி முறையே ஒரு பெயரில் முடிந்தன. ஆடி ஆடி, பாடிப்பாடி, என்றால் ஒன்றே அடுக்கி வருவது. அதனை ஆடிப்பாடி எனும் போது, வேறு பல அடுக்கி என்றனர்.

பிற சொல் நீக்கித் தனித்தமிழ் போற்றிக் காத்தார். விருப் பின்றி வெறுப்பின்றிக் கற்றார். முன்னது தெரிநிலை வினை யெச்சம், பின்னது குறிப்பு வினையெச்சம். இவை ஒரு வினை முடிபு கொண்டன.

## இடைப்பிறவரல் - பெயர்க்கும் கொண்டு முடியும் வினைக்குமிடையே பிறசில வருதல்

356. உருபு முற்றுஈர் எச்சம் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன 5

வேற்றுமையுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் - கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கு மிடையே, அவ்விடத்தில் பொருந்துவனவாகிய பிறசில சொற்கள் வருதலுமுண்டு.

வேலன் (காலார) நடந்தான்
பாடத்தை (மூன்று முறை) படித்தான்
திறமையால் (முதல் வகுப்பில்) தேறினான்
பாட்டிற்கு (பொருத்தமாக) இசைத்தான்
தலையினின்று (உதிர்ந்து) விழுந்த முடி
மறைமலையடிகளது (புகழ்மிகுந்த ) தமிழியக்கம்

தமிழின் கண் (தனித்தொளிரும்) செவ்வியல் பண்புகள்
தமிழா (உன் ஏமாளித்தன்மையை) கை விடு

இவை வேற்றுமையுருபுகளிடையே ‘இடைப்பிறவரல்’ வந்தன.

எழுச்சி பெற்றான் (உறங்கிக் கிடந்த) தமிழன் - வினைமுற்று.

வெற்றி பெற்ற (தமிழகத்து) வீராங்கனை - பெயரெச்சம்.

உழைத்து (பலவகையிலும்) முன்னேறினான் - வினையெச்சம்.

ஏற்பன எனவே ஏலாதன இடைப்பிற வரலாகாது.

## முற்று எச்சங்களுள் முடிக்கும் சொல் நிற்குமிடம்

**357. எச்சம் பெயர்வினை எய்தும் ஈற்றினும்** 6

உருபுகளும் (வேற்றுமைத்தொடர்), முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் ஆகியவை கொண்டு முடியும். பெயர்களும் வினைகளும் அவற்றிற்கு இறுதியில் வந்து முடிந்து நிற்கும் (ஈற்றினும் என்ற உம்மையால் முதலிலும் வந்து முடிந்து நிற்கும்.

| **ஈற்றில் முடிதல்** | **முதலில் நிற்றல்** |
|---|---|
| வேலையாள் வந்தான் | வந்தான் மாணவன் |
| வேலையைச் செய்தான் | படித்தான் பாடத்தை |
| உழைப்பின் உயர்ந்தான் | உயர்வடைந்தான் உழைப்பால் |
| வேலைக்குக் கூலி பெற்றான் | பரிசுபெற்றான் படிப்புக்கு |
| வேலையின் நீங்கினான் (வேலையிலிருந்து) | நீங்கினான் தீங்கிலிருந்து |
| வேலையினது சிறப்பு | நற்பெயர் அவனது |
| வேலையின்கண் அக்கறை | அக்கறை படிப்பின் கண் |

மக்களே சென்றிடுவீர் சென்றிடுவீர் மக்களே

வந்தான் வேலையாள் - தெரிநிலை வினைமுற்றுத் தொடர் (ஈற்றில் முடிந்தது)

நல்லன் வேலையாள் - குறிப்பு வினை முற்றுத் தொடர் (ஈறு)

வந்த வேலையாள் - ஈற்றில் மட்டுமே முடியும் (வேலையாள் வந்த என்று பெயரெச்சத் தில் வராது)

வந்து திரும்பினான் - வினையெச்சத் தொடர் (ஈற்றில் முடிந்தது)

திரும்பினான் வந்து - (முதலில் நின்றது)

முதலில் உள்ளவாறு இறுதிக் கண் பயனிலைகள் வந்து முடிவனவே சிறப்புடையன.

## ஒரு சொல்லைக் கொண்டு தொடர்புடைய பிறவற்றையும் உணரவைத்தல்

**358. ஒரு மொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே** 7

பெயர் வினை எனப்படும் சொற்களுள் ஏதேனும் ஒன்று நின்றே, அது ஏனைய தன் இனமான - தொடர்புடைய பிற வற்றையும் பொருள் கொள்ளுதற்கு இடமுடையதாகும்.

சோற்றை உண்டான் என்றால், பிற கறிகளையும் தின்றான் என்பது சொல்லாமலே அறியப்படும். வெற்றிலை போட்டுக் கொண்டான் என்றால் பாக்குத் தின்றது, சுண்ணாம்பு தடவியது யாவும உணரப்படும். நஞ்சுண்டவன் செத்துப்போவான் என்றால், நஞ்சுண்டவள் இறப்பாள் என்பதும் பெறப்படும். இவ்வாறு ஆண்பாலிற் சொல்பவை பல பெண்பாலுக்கும் உரியதாகும். நன்கு கற்றவனே உயர்வடைவான் என்றால், நன்கு கற்றவளுக்கும் அது பொருந்தும்.

## திணை பால் இடம் - பொதுமை நீங்குதல்

359. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே. 8

திணை பால் இடங்களுக்குப் பொதுவான பெயர்கள், வினைகளின் பொதுமைத் தன்மையை அவற்றைக் கொண்டு முடிக்க மேல்வரும் சிறப்புப் பெயர்களும் வினைகளும் நீக்கி, அவை இவை எனப் பிரித்துணர்த்தும். சாத்தனிவன் என்றால் மனிதனென்றும் சாத்தனிது என்றால் மாடு என்றும் மேல் வரும். (பின்னே வரும்) சுட்டுப் பெயரால் உயர்திணை, அஃறிணை என்பனவும் ஆண்பால், ஒன்றன்பால் என்பனவும் அறியப்படும். சாத்தன் படித்தான், சாத்தன் புல் மேய்ந்தது என்பதும் இது போன்றே வினையால் அறியப்படும். மரம் வளர்ந்தது - ஒன்றன் பால். மரம் வளர்ந்தன - பலவின்பால். (இன்று 'கள்' விகுதி சேர்ப்பது புதுவரவு)

யாம் எல்லாம் வருவேம் (தன்மை இடம்), நீரெல்லாம் வருவீர் (முன்னிலை இடம்), அவரெல்லாம் வருவர் - எல்லாம் எனும் பொதுப் பெயர் முன்னுள்ள சிறப்புப் பெயராலும் (யாம், நீர், அவர்) பின்னுள்ள சிறப்பு வினையாலும் (வருவேம், வருவீர், வருவர்) இடம் இதுவென்று அறியப்பட்டன.

வாழ்க அவன், அவர், யாம், நீவிர் - இவ்வாறு இவ் வியங்கோள் வினைமுற்றுக்கள் பின்வரும் முடிபுச்சொற்களா லேயே திணை பால் எண் இடம் யாவும் உணரப்படும்.

இவ்வாறு பொதுமையை நீக்கும் பெயர், வினைகள் முன்னாலும் வரும்; பின்னேயும் வரும். (சாத்தன் இது - பின்னே வந்தது. வாழ்க தமிழ் - முன்னே வந்தது)

## எச்சச் சொற்கள் பத்தும் கொண்டு முடியும் சொற்கள் பற்றிய இலக்கணம்

360. பெயர்வினை உம்மைசொல் பிரிப்புஎன ஒழியிசை

**எதிர்மறை இசைஎனும் சொல்லொழிபு ஒன்பதும்**
**குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்** 9

இந் நூற்பாவில் ‘சொல் ஒழிபு’ என்பது, ஒரு சொல் எஞ்சி நிற்பது. இதில் ஒன்பது ‘சொல்லெச்சங்களும்’ ஒரு ‘குறிப் பெச்சமும்’ எனப் பத்து எச்சங்கள் கூறப்பட்டுள்ளன. இவை தத் தமக்குரிய எச்சச் சொற்களைக் கொண்டு முடியும்.

1.பெயர் (சொல்லொழிபு) - பெயரெச்சம் - பாடிய பாட்டு, நல்ல தொழில்
2. வினையெச்சம் - பாடி மகிழ்ந்தான், நன்று தேறினான்
3. ‘உம்’மையெச்சம் - நாடகத் தமிழும் சிறந்ததே. ஏனைய இயலும் இசையும் சிறந்தனவே என்பதுஉம்மை எச்சம்
4. சொல்லெச்சம் - நல்லனென்றான். நல்லவனென்று சொன்னான்.சொல் என்பது எஞ்சிநின்றது.
5. பிரிநிலை எச்சம் (பிரிப்பெச்சம்) - தமிழரே தாழ்வு மனப்பான்மையினர். பிறர் அல்லர் என்பதால் இது பிரிநிலை
6. என என்னும் எச்சம் - ஒல்லென ஒலித்தது, தீடீர்என வீழ்ந்தது - இது மிகுதியாக ஒலித்தது, விழுந்தது என உணர்த்தும் ஓர் இடைச்சொல்
7. ஒழியிசை எச்சம் - நீ படிக்கவா வந்தாய் - என மாணவனை ஆசிரியர் கேட்டால், அவன் அக்கறையற்றவன் என ஒழிந்த பொருளைத் தருகிறது.
8. எதிர்மறை எச்சம்-அந்த நல்லவனா திருடினான்- அவன் இல்லை எனும் எதிர்மறைப் பொருள் தருகிறது.
9. இசை எச்சம்-பல்வேறு சொல்லும் பொருளும் வருவித்துணரப்படுவது. ‘வாலறிவன் நற்றாள் தொழுதலே, கற்றதன் பயன்’ என்றால், நாமும் கற்றுத் தூய அறிவு (வாலறிவு) பெறவேண்டும் என்று

உணர்வது.

10. குறிப்பெச்சம்: பெயரியல் 12ஆம் நூற்பாவில் 'ஒன்றொழி பொதுச் சொல்' எனத் தொடங்கிக் கூறப்பட்டவை குறிப்பெச்சமாகும். 'மாணவருள் தாவணியர் பலராயினார்' எனில், மகளிர் எனக் குறிப்பால் பெறப்படுவது 'ஒன்றொழி' பொதுச்சொல்'.

குறுந்தொகை முதற்பாடலில், தோழி தலைவனிடம், ''தலைவ நீ கொண்டு வந்திருக்கும் செங்காந்தள் பூக்கள், எங்கள் முருகனின் மலையுச்சியிலும் நிரம்ப உள்ளன'' என்று கூறுகிறாள். இதில் 'எம்மிடமே உள்ளன' என்ற கருத்தில் கூறியிருந்தால்,. நீ தருவது 'வேண்டாம்'-என்பது கருத்து. இது சொல்லெச்சம்.

'மலைமேலே பூக்கள் உள்ளன; நான் அங்கு செல்கிறேன்' என்று கருதிக் கூறியிருந்தால், 'தலைவி தனித்திருக்கிறாள்; நான் மலைமீது சென்று வரும்வரை, நீ தலைவியுடன் பேசிக் கொண்டிரு' என்பது கருத்து, இதைக் 'குறிப்பெச்சம்' என்பர்.

## தமிழில் தொகைநிலைத் தொடர்மொழிகளின் இலக்கணம்

**361. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளின் அவற்றின் உருபுஇடை**
**ஒழிய, இரண்டு முதலாத் தொடர்ந்து ஒரு**
**மொழிபோல் நடப்பன தொகைநிலைத்தொடர்ச்சொல்10**

தொகை-தொகுத்தல்; அதாவது உருபு மறைதல், தமிழில் உருபுகள் தொக்கும் (மறைந்தும்), விரிந்தும் வருவது அதன் இயல்பு. சிலையைத் திறத்தல் - 'ஐ' உருபு விரிந்து நிற்கிறது. இதையே 'சிலைதிறப்பு' என்றால் அங்கு இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' மறைந்து நிற்கிறது. மேலும் அது 'ஒரு சொல்' போன்ற தன்மையுடையதாகிறது. இவ்வாறு வரினும் அதனிடையே 'ஐ' உருபு இல்லையெனல் இயலாது; அது மறைந்து (தொக்கு) நிற்கிறது என்றே கூறவேண்டும். இவை

போல்வனவே 'தொகைநிலைத் தொடர்கள்' எனப்படும். 'வள்ளி வந்தாள்' - என்னும் எழுவாய்த் தொடரில் தொக்குநிற்க எதுவு மில்லை. அவற்றைத் 'தொகாநிலைத் தொடர்கள்' என்பர்.

பெயர்ச்சொல்லுடன் பெயரும் பெயர்ச் சொல்லுடன் வினைச்சொல்லும் சேர்ந்து தொடராவது இது. வேற்றுமை உருபுகள் முதலாய (ஐ ஆல் கு இன் அது கண்) அறுவகைப் பொருட் புணர்ச்சிகளிலும்-அவற்றினிடையேயுள்ள உருபுகள் நடுவில் தொக்கு நிற்க, இரண்டு முதலாகச் சொற்கள் தொடர்ந்து நின்று, ஒரு மொழிபோல் நடப்பன, தொகைநிலைத் தொடர்ச்சொற்கள் எனப்படும்.

'ஒரு மொழிபோல் நடப்பன'-ஒரு சொல்போல் நடப்பன.

இதனை முன்பு 'ஒரு மொழி தொடர்மொழி பொது மொழி' எனச் சொற்களை வகைப்படுத்தியதுடன் (259) ஒப்பு நோக்குக. இதில் 'தொடர்மொழி' என்பதே இது. இதுவே 'தொகைநிலைத் தொடர்மொழி', 'தொகா நிலைத் தொடர் மொழி' என இரு வகைப்படும்.

## தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படுதல்

**362. வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை**
**அன்மொழி எனஅத் தொகை ஆறாகும்** 11

வேற்றுமைத் தொகையும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் அன்மொழித்தொகையும் என அத் தொகைநிலைத் தொடர் ஆறு ஆகும்.

வேற்றுமையில் முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் உருபற்றவை (வேலன் வந்தான், வேலா வா). எனவே இவை தொகாநிலைத் தொடர்களாகவே வரும். இடை யேயுள்ள ஆறு மட்டுமே தொக்கும் விரிந்தும் வரும்.

## வேற்றுமைத் தொகை ஆறு

263. இரண்டு முதலா இடைஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே 12

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தவிர்த்து, இடையிலுள்ள இரண்டு முதலான ஆறு வேற்றுமையுருபுகளும் ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகும். வெளிப்படத் தோன்றாது, மறைந்து நிற்பது வேற்றுமைத் தொகை ஆகும்.

**தொகை - விரி**

சிலை திறந்தனர் - (சிலையைத் திறந்தனர்) - இரண்டாம் வேற்றுமைத்தொகை
கல்லெறிந்தான் - (கல்லால் எறிந்தான்) - மூன்றாம் வேற்றுமைத்தொகை
கூலிவேலை - (கூலிக்கு வேலை) - நான்காம் வேற்றுமைத்தொகை
தலையின் இழிந்தமுடி - (தலையிலிருந்து விழுந்தமுடி) - ஐந்தாம் வேற்றுமைத்தொகை
கண்ணன் குழலோசை - (கண்ணனது குழலோசை) ஆறாம் வேற்றுமைத்தொகை
தமிழ்ஆர்வம் .- (தமிழின்கண் ஆர்வம்) ஏழாம் வேற்றுமைத் தொகை

பாட்டுப் புலவன் - பாட்டைப் புலவன் என நிற்பின் பொருள் இல்லை. இதை பாட்டைப் பாடும் (அல்லது புனையும்) புலவன் என விரிக்க வேண்டும். பொற்குடம் - பொன்னாற் குடம் என்னாது பொன்னாற் செய்த குடம் எனல் வேண்டும். இவற்றை 'உருபும் பயனும் உடன் தொக்க தொகை' என்பர்.

தொல்காப்பியர் ஐ, கண் வேற்றுமைகள் இரண்டும் இறுதியிலும் உருபு தொக்கு வரும்; ஏனைய நான்கும் இடையில் உருபு தொக்கு வருதலல்லது இறுதியில் தொகாது எனக் கூறியுள்ளார். இது பெரிதும் செய்யுள் நோக்கில் இலக்கணம் ஆகலாம். (தொல்589. வேற்றுமை மயங்கியல்).

பாடினான் வாசகம் பைந்தமிழ்ப் பாவலன் - பாடினான்

வாசகத்தை எனும் இதில் 'ஐ' இறுதியில் தொக்கது. ஏறினான் வானத்து எழுச்சியுற்றனனே - வானத்தின்கண் என இதன் இறுதிக் கண் உருபு தொக்கது. ஏனைய உருபுகள் இடையில் மட்டுமே தொகும்.

இவ்வாறு வேற்றுமை உருபுகள் விரியுமிடத்தில் தரும் பொருள் எதுவோ, அதே பொருள் தருகிற இடத்தில் மட்டுமே தொக்குவரும். பொருள் வேறுபடுமிடங்களில் தொகப் பெறாது. தலைவனைத் தோற்கடித்தான் - இங்கு 'ஐ' உருபு தொக்கு வருமேல், தலைவன் தோற்கடித்தான் என்று பொருளே வேறுபட்டு விடும். தந்தையொடு வந்தான் என்பதில் 'ஒடு' உருபு தொக்கு, தந்தை வந்தான் என்றால் பொருள் வேறுபடுகிறது. எனவே பொருள் பொருந்துமிடத்தே தான் தொக்கு வருதல் வேண்டும்.

## வினைத்தொகை இலக்கணம்

### 364. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை 13

காலத்தைக் காட்டும் வினைச்சொல்லின் உருபுகளான இடைநிலை, இறுதிநிலைகள் தொக்க பெயரெச்ச வினைகள் வினைத்தொகை எனப்படும். கரந்த-மறைந்துள்ள, பெயரெச்சத்தில் முதனிலை (பகுதி) மட்டும் நின்றால், அது வினைத் தொகை யாகிவிடும்.

சுடுகின்ற சோறு - நிகழ்காலப் பெயரெச்சம். சுடு சோறு வினைத்தொகை. நிகழ்காலம் காட்டும் 'கின்று+அ' ஆகிய இடை நிலை, இறுதிநிலை இரண்டும் தொக்கன. இதனைச் சுட்டசோறு, சுடுகின்ற சோறு, சுடும் சோறு என்று முக்காலத்திற்கும் விரிக் கலாம். அரிவாள், எழுகதிர், ஊறுகாய், தொடுகறி, நடுகல், புனை கதை என இவ்வாறு அடைமொழிபோல், பெயரெச்சத் தொகைகள் அதாவது வினைத்தொகைகள் வழங்குகின்றன. இவை முக்காலத்திற்கும் விரிக்கும் படியும் அவற்றின் இயல்புணர்த்தும் படியும் விளங்கக் காணலாம். வா, தா எனும் முதனிலைகள் வரு, தரு, என விகாரப்படும். வருபுனல், தருகொடை என வழங்கும்.

## பண்புத்தொகை இலக்கணம்

365. பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை14

பண்பு-பண்பையுடையது பண்பி. பண்புக்கும் பண்பிக்குமிடையே பண்பை விளக்குதற்கு வரும் 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்குநிற்பனவும் ஒரு பொருளுக்கு பொதுப் பெயரும் சிறப்புப் பெயருமாக வந்து அவற்றின் ஒற்றுமையை உணர்தத 'உருபு' தொக்குவருவனவும் பண்புத்தொகை எனப் படும். பண்பை விளக்கும் மொழி - கருங்குதிரை என்றால் கருமை நிறத்தைக் குதிரையைவிட்டுப் பிரிக்க இயலாது. இதனால் கருமையாகிய குதிரை, பசுமையாகிய பயிர் (பசும் பயிர்), செம்மையாகிய தாமரை (செந்தாமரை) என இவ் ஒற்றுமை நயத்தை உணர்த்த வல்லது 'ஆகிய' எனும் பண்புருபு. இதுவே பண்பை விளக்கும் மொழி. ஒரு பொருட்கு இருபெயர்: வேப்ப மரம், சாரைப்பாம்பு போல்வன. வேம்பு, சாரை சிறப்புப்பெயர். மரம், பாம்பு பொதுப்பெயர். வேம்பும் மரமும் வேறல்ல; சாரையும் பாம்பும் வேறல்ல. எனவே வேம்பாகிய மரம், சாரையாகிய பாம்பு என விரிக்கவேண்டும். இது இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

பண்பு எனப் பொதுப்படச் சொன்னதால்-வண்ணம் (நிறம்), வடிவு, அளவு, சுவை முதலாயினவை எல்லாம் கொள்ள வேண்டும். பைம்பொழில்-பசுமையாகிய பொழில். பலாமரம் - பலாவாகிய மரம் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. இரண்டும் பிரிக்கமுடியாத ஒற்றுமையுடையதென்பதை 'ஆகிய'- உருபு விளக்குகிறது. அது மறைந்து வருவது பண்புத்தொகை.

கருங்குரங்கு - (கருமையாகிய குரங்கு) - வண்ணப் பண்புத் தொகை. (நிறம்)
வட்டக்கல்-(வட்டமாகிய கல்)-வடிவுப்பண்புத்தொகை
முத்தமிழ்-(மும்மையாகிய தமிழ்) - எண்ணலளவைப் பண்புத்தொகை
இன்சொல்-(இனிமையாகிய சொல்) - சுவைப் பண்புத் தொகை

சாரைப்பாம்பு-(சாரையாகிய பாம்பு)-இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

செந்நிறக்குவளை - செம்மையாகிய நிறமாகிய குவளை. இது பன்மொழித்தொகை. இவை யாவும் உரையாசிரியர்கள் தத்தம் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்ட எழுதுவன.

பண்புருபு - ஆகிய - என்பது தொக்குவரும் பண்புத் தொகை, அதே உருபு மறைந்து நிற்கும் இருபெயரொட்டு (சிறப்புப் பெயரும் பொதுப்பெயரும்)-எனும் இரண்டுள என்பது தெரிந் திருந்தால், அதுவே அடிப்படையாகும்.

## உவமைத்தொகை இலக்கணம்

**366. உவம உருபிலது உவமத் தொகையே** **15**

விளை, பயன், மெய், உரு(நிறம்) என்பவற்றைப் பற்றி வரும் போல, ஒப்ப முதலிய உவம உருபுகள் இல்லாது, அவை தொக்குவரும் தொடர்கள் உவமத்தொகை எனப்படும்.

புலிப்பாய்ச்சல் - புலிபோலப் பாய்தல் - வினையுவமைத் தொகை. மழைக்கை-மழைபோலும் கை-பயனுவமைத்தொகை விற்புருவம் - வில்போலும் புருவம் - மெய்யுவமைத் தொகை (வடிவம்). பொன்மேனி - பொன்போலும் மேனி - உருவுவமைத் தொகை (உரு-நிறம்)

பொன்மணிப் பேரழகு என்பது பொன்போலும் மணி போலும் பேரழகு என வருவதால், பன்மொழி உவமைத்தொகைத் தொடர் எனக் காட்டுவர், உரையாசிரியர்கள்.

மழையைப் போலக் கொடுக்கும் கை - என விரித்தால் இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாக ஆகும்.

## உவம உருபுகள்

**367. போல புரைய ஒப்ப உறழ**

**மான கடுப்ப இயைய ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமத்து உருபே 16**

போல புரைய ஒப்ப உறழ மான கடுப்ப இயைய ஏய்ப்ப நேர நிகர என்பன பத்தும் 'செய' வென் எச்சமாக வரும் உவம உருபுகள். அன்ன, இன்ன இரண்டும் குறிப்புப் பெயரெச்ச உவம உருபுகள்.

பிறவும் என்றதால் போல், புரை எனும் அடிச்சொற்கள் திரிந்து வருவனவும் பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையும் என உவம உருபுகள் மிகப் பலவாகும். இவை பொருளமைதியில் சிறு சிறு வேறுபாடுடையன. பொருவ - போர் செய்வது போல் எதிர்நிற்க வல்லது; உறழ-மாறி நின்று உறழ்ந்து பார்க்கக் கூடியது; நேர-நேரானது; நிகர-சமமானது என இவ்வாறு சிறுசிறு நிழற்பொருளுடையன இவை.

ஒத்து நிற்பது உவமம். இதை உவமம், உவமை எனல் தமிழ் வழக்கு.

மனம் போல வாழ்வு-போல. கனியொப்ப இனிமை தரும். கார் நிகர் கொடைக்கையன். காளை அன்ன கடுந்திறல் மறவன். கரு மணல் கடுக்கும் கருங்கூந்தல், பொன்னேர் மேனிப்பொலி வுடையாள். நிலவுறழ் ஒளிநெற்றி. இவ்வாறு வரும்.

## உம்மைத்தொகை இலக்கணம்

**368. எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**
**எனும் நான்கு அளவையும் உம்இலது அத்தொகை 17**

எண்ணலளவை, எடுத்தலளவை (தராசு, துலாக்கோல்) முகத்தலளவை (படி, நாழி), நீட்டலளவை (அடி, சாண்) என்னும் நான்கு அளவைகளால், அளக்கும் பெயர்களுக்குள் 'உம்' எனும் இடைச்சொல்லுருபு தொக்கு நிற்பது 'உம்'மைத்தொகை எனப்படும்.

காய்கறி-காயும் கறியும்-எண்ணும்மைத்தொகை
ஒன்றரை வீசை-ஒரு வீசையும் அரையும்-
எடுத்தலும்மைத்தொகை
ஒருபடி நாழி-ஒரு படியும் நாழியும்- முகத்தலும்மைத் தொகை
ஏழரை அடி-ஏழடியும் அரையடியும்-நீட்டலும்மைத் தொகை
சேர சோழ பாண்டியர்-சேரரும், சோழரும், பாண்டியரும்-
பன்மொழித்தொகை

பொதுவாக கபிலபரணர் (கபிலரும் பாணரும்), இராப்பகல் (இரவும் பகலும்), அறுபத்து மூவர் (அறுபதின்மரும் மூவரும்), மாபலா வாழை (மாவும் பலாவும் வாழையும்), ஆயிரத்து எழு நூற்று அறுபத்து ஐந்து (ஆயிரமும் எழுநூறும் அறுபதும் ஐந்தும்) என இவ்வாறு வருவனவெல்லாம் கொள்க.

## அன்மொழித்தொகை இலக்கணம்

**369. ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி 18**

அன்மொழி - அல்லாத மொழி, முன்பு தொக்க (மறைந்த) மொழிகள் தவிர்த்த பிறமொழிகள். ஐந்தொகை மொழி - முன்பு கூறிய வேற்றுமைத் தொகை (இரண்டு முதல் ஏழுவரை), வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை என்பன. இத் தொகைநிலைத் தொடர்மொழிகள் ஐந் திற்கும் புறத்தே, அவையல்லாத பிற மொழிகள் - உருபுச் சொற்கள் தொக்கு வருவன அன்மொழித்தொகை எனப்படும்.

'படுசுட்டி வந்தான்' என்றால், சுட்டித்தன்மையுள்ள ஒரு சிறுவன் வந்தான் எனப் பொருள் விரியும். படு - மிகுதிப் பொருள் உணர்த்தும் வழக்குச்சொல். 'வாயாடி வந்தாள்' என்றால் வாயினால் ஆடுபவள் எனப் பொருள் விரியும். இவையே அன்மொழித்தொகையாகும். படுசுட்டி - ஒரு தொகைத் தொடர்; படுசுட்டி ஆகிய சிறுவன் என்பது தொகையின் மேல் வந்த பிறிதொரு தொகை. வாய் ஆடி - ஒரு தொகை. வாயாடுபவளாகிய பெண் என்பது தொகையின் மேல் ஒரு தொகை. இவையே

புறத்தே பிறிதொன்று 'தொகல்' எனக் கூறப்பட்டது.

வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகள் ஆறு (2முதல் 7வரை)

1. பூங்குழல் வந்தாள் - பூவை அணிந்த குழலை (கூந்தலை) உடையவள் வந்தாள் இது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பெற்றொடி வந்தாள் - பொன்னாலான தொடியினை (வளையலை) உடையாள் வந்தாள். இது மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

சொல்லதிகாரம் படி - சொல்லுக்கு இலக்கணம் விளக்கப் பட்ட நூற்பகுதி என விரியும். இது நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

மலையருவி பாய்கிறது பார் - மலையிலிருந்து விழு கின்ற அருவி நீர்பாய்கிறது. இது ஐந்தாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

திருக்குறள் பதிப்பு அழகிது - திருக்குறளினது பதிப் பாகிய நூல் என விரிவதால், இது ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

மதுரைப் பதிப்பு படித்தேன் - மதுரையின் கண் பதித்ததாகிய நாளிதழ் என விரிவதால் இது ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இவை ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்தவை.

2. காய்கதிர் எழுந்தது - காய்கின்ற கதிர்களை யுடையவனாகிய சூரியன் எனக் குறிக்கும் போது, வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (காய்கதிர் எழுந்தது என இது வாக்கியமாக விரியும் போதுதான் இது அன்மொழித் தொகையாகும்.

3. செந்தமிழ் படித்தேன் - 'செம்மையாகிய தமிழ்' எனும பொருளுடைய ஒரு திங்கள் இதழையோ நூலையோ படித்தேன் என விரியும். இது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்

தொகை.

4. மலர்விழி வந்தாள் - மலர் போலும் விழியினை யுடையவளாகிய பெண் வந்தாள். இது உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

5. காய்கறி உண்டேன் - காயும் கறியும் கூட்டிச் செய்த தாகிய உணவை உண்டேன் என விரியும். இது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

இவ்வாறு 'ஐந்து தொகை மொழி மேலே, பிறசில தொக்கன', இனி, உரையாசிரியர்கள் 'பன்மொழித் தொகை அன் மொழித் தொடர்' ஒன்றும் காட்டுகின்றனர். காய்கறி அறுசுவை அமுதார்வமிகவுண்டேன் - காயும் கறியும் கூட்டிச் சமைத்த அறு சுவையாகிய அமுது போலும் உணவை ஆர்வ மிகுதியாக விருந்து உண்டேன். இதில் பலவகைப்பட்ட தொகைகளின் புறத்தே 'மிகுதியாக விருந்து' என முடிவதால், இதனைப் பன்மொழித் தொகைத் தொடர் என்பர்.

## தொகைநிலைத் தொடர்களில் பொருள் சிறந்து நிற்குமிடங்கள்

**370. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி**
**எனும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப் பொருள்19**

மேலே கூறிய தொகைநிலைத் தொடர்களில் பொருள் சிறந்து அழுத்தமாய் நிற்கும் இடம் எது? அரசி சிரித்தாள் என்னும் போது, யார் சிரித்தார் என்பது சூழ்நிலையாயின் 'அரசி'யிற் பொருள் சிறந்து நிற்கும்; அரசி என்ன செய்தாள் என அறியும் சூழ்நிலையாயின் 'சிரித்தாள்' என்பதில் சொல் அழுத்தமிருக்கும்.

இதுபோல தொகைநிலைத் தொடர்களில் முதலில் நிற்கும் மொழியிலும், பின்னர் நிற்கும் மொழியிலும் அனைத்து மொழியிலும் அனைத்து மொழிக்கும் புறத்தே வரும் மொழி யிலும் என வரும் நான்கு இடங்களில் ஒன்றில் பொருள் சிறந்து நிற்கும்

பாடம் படித்தான் (வேறு புத்தகங்களைப படிக்க வில்லை), தாமரைப் பூ (வேறு பூ அன்று), செந்தாமரை (வெண்தாமரை அன்று), கயற்கண் (கயல்மீன் போன்ற சாய லுள்ள கண்). இவற்றுள் முன்மொழிகளில் பொருள் சிறந்து நின்றன.

களை எடுத்தான். (வேறு வேலையைச் செய்யவில்லை), வெறும் சீற்றம் (மனத்துள் சீற்றமெதுவுமில்லை). இவை பின்மொழியில் பொருள் சிறந்து நின்றன.

கபிலபரணர், சேரசோழபாண்டியர். அனைத்து மொழி களிலும் பொருள் சிறந்து நின்றன.

'உயிர்மெய்' - உயிர்மெய்யாகிய எழுத்து. 'தெளிதமிழ்' என்னும் திங்களிதழ். இவ்வாறு வருவனவற்றில், தொகைச் சொற்களின் புறத்தே வந்த மொழிகளில் பொருள் சிறந்து நின்றன.

## இடத்தொகை, பெயர்த்தொகைகளில் வேறுபாடறியும் விதம்

**371. வல்லொற்று வரினே இடத்தொகை யாகும்**
**மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும் 20**

வல்லொற்று இடையே வரின் அது இடத்தைப் பற்றிய் தொகையாகும்.

சிதம்பரக்கண்ணன் - 'க்' வல்லொற்று. சிதம்பரத்துள்ள கண்ணன். இடத்தொகை. சிதம்பரன் கண்ணன் - 'ன்' மெல் லொற்று. சிதம்பரன் மகன் கண்ணன். பெயர்த்தொகை. புணர்ச்சி விகாரப்படுவதால், இவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றன. அல்லாமல் மருத வணிகன், மருத வாணன் என்றாற் போல்வன பலவும் சொல்லுவான் குறிப்பினால் மட்டுமே துணியப்படும். .

## உம்மைத் தொகை எவ்வாறு முடியும்?

**372. உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே 21**

உயர்திணையில் வரும் உம்மைத் தொகைகள் ரவ்வொற்

றும் (ர்), கள் விகுதியுமாகிய பலர்பால் விகுதிகளையே கொண்டு முடியும்.

கபிலபரணர், இந்திய இத்தாலிய அமெரிக்கர், கணவன் மனைவியர், தேவன் தேவிகள். (கபிலபரணன் என வராதென்பது கருத்து) .

அஃறிணை, பொதுத்திணைகளில் பன்மை ஈறாகவும் இயல்பான ஒருமையீறாகவும் வருவனவும் உள.

நன்மை தீமைகள், நன்மைதீமை. (அஃறிணை). சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்தி (பொது), (சாத்தன், சாத்தி என மாடு களுக்கும் பெயர்)

## வேற்றுமைகள் சொல்வோர் குறிப்பிற்கு ஏற்ப வெவ்வேறு பொருள்படுதல்

**373. தொக்குழி மயங்குந இரண்டுமுதல் ஏழ்**
**எல்லைப் பொருளின் மயங்கும் என்ப 22**

வேற்றுமையுருபுகள் தொக்கு நிற்குமிடங்களில், சொல் பவர் குறிப்பிற்கு ஏற்பப்பொருள் மயங்குவனவாகிய தொடர் மொழிகள் உள. அவை இரண்டு முதல் ஏழு ஈறாகிய வேற்றுமைப் பொருள்களால் மயங்கும் என்பர் புலவர்.

இதன் கருத்து, வேற்றுமை உருபுகளை நம் கருத் திற்கேற்ப விரிக்கலாம்; அங்ஙனம், கருத்தை விரிப்பதற்கு ஏற்ப உருபுகள் மாறிக்கொள்ளும் என்பதாகும். ஆனால் அவை பொருத்தமுற இருக்க வேண்டும்.

தமிழ்வணக்கம் - தமிழை வணங்கும் வணக்கம், தமிழுக்கு வணக்கம். இரண்டும் நான்குமாகிய பொருள்களில் விரிக்குமாறு, தொகைச் சொல்மயங்கியது,

தமிழ்ப்பற்று - தமிழைப் பற்று, தமிழொடு பற்று, தமிழின்கட் பற்று. மூன்று பொருள்களில் தொகையை விரிக்குமாறு மயங்கியது.

தமிழிலக்கணம் - தமிழினது இலக்கணம், தமிழுக்கு

இலக்கணம், தமிழின்கண் இலக்கணம், தமிழினது இலக்கணம் சொல்கின்ற நூல் என நான்கு பொருள்களில் மயங்கும்.

தமிழ் அமிழ்து - தமிழாலாகிய அமிழ்து, தமிழாகிய அமிழ்து, தமிழின்கண் அமிழ்து, தமிழொடு கூடிய அமிழ்து, தமிழும் அமிழ்தும். ஐந்து பொருள்களில் மயங்கியது.

தமிழ்க்காப்பு - தமிழைக் காக்கும் காப்பு, தமிழுக்குக் காப்பு, தமிழினது காப்பு, தமிழிலிருந்து பிறமொழிக் கலப்பு நீக்கும் காப்பு, (இன் என்பதன் சொல்லுருபு 'இருந்து'), தமிழா லாகிய காப்பு, தமிழாகிய காப்பு. ஆறு பொருள்களில் மயங்கியது.

சொற்பொருள் - சொல்லால் அறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொல்லுக்குப் பொருள், சொல்லின் கண் தோன்றும் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல் என்பது ஒரு பொருள் என ஏழு பொருள்களில் மயங்கியது. சொல்லாகிய பொருள் - இரு பெய ரொட்டுப் பண்புத்தொகை. இரண்டும் வேறல்ல என்பது கருத்து. சொல் என்பது ஒரு பொருள் என்பதை எழுவாய்த் தொடரென்பர் உரையாசிரியர்கள்.

பகை கொல் தமிழ் - இது பன்மொழித்தொடர். மூன்று சொற்கள், இரண்டு தொகைகள். பகையைக் கொல்ல வல்ல தமிழ், பகையானது கொல்லும் தமிழ், பகையினாலே கொல்லப்படுகின்ற தமிழ் - என மூன்று பொருள்களில் மயங்கியது.

வலிந்து விரிக்காமல் இயல்பாகச் சொல்லிப் பார்த்துப் பொருள் பொருத்தி வருமாறு விரிக்க வேண்டும்.

## தொகாநிலைத் தொடர்மொழிகள்

**374. முற்று, ஈர் எச்சம், எழுவாய், விளிப்பொருள்**
**ஆறு உருபு, இடை, உரி, அடுக்குஇவை தொகாநிலை 23**

முன்பு இதுவரை கூறியவை, இடையே ஏதாவது உருபுகள் மறைந்து நின்று (தொக்கு நின்று), விரித்துப்பார்க்கக் கூடிய தொகைநிலைத் தொடர்கள். அவ்வாறு உருபெதுவும் மறைந்து நிற்காத தொடர்களும் உள. அவை தொகாநிலைத்

தொடர்கள் எனப்படும்.

வினைமுற்று, பெயரெச்சம்,வினையெச்சம், எழுவாய், விளி ஆகிய ஐந்து பொருள் தரும் தொடர்களும் வேற்றுமையில் ஐ ஆல் கு இன் அது கண் எனும் ஆறு உருபுகளும் விரிந்து நிற்கும் தொடர்களும்,தத்தமது முடிக்கும் சொல்லாகிய பெயர் வினைகளுடன் பொருந்தும் புணர்ச்சிகளில் இடையே எதுவும் தொக்கு நிற்பதில்லை. அவை போலவே இடைச்சொல் புணர்ச்சி, உரிச்சொல் புணர்ச்சி, ஒரு சொல்லே அடுக்கி வரும் அடுக்குத் தொடர்ப் புணர்ச்சி ஆகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடர்களாகும்.

1. வென்றனன் தமிழன் — வினை முற்றுத்தொடர்.
பெருமையன் தமிழன் — (முதலில் வினை முற்று வந்ததால் இதை வினை முற்றுத் தொடர் என்போம்) (முதலில் வருவது தெரிநிலை வினைமுற்று, காலங்காட்டுவதால்; பின்னது (பெருமையன்) காலங் காட்டாமையால் குறிப்பு வினைமுற்று)
2. நிமிர்ந்த தமிழன் — பெயரெச்சத் தொடர்
இனிய தமிழன்,
3. நிமிர்ந்து எழுந்தான் — வினையெச்சத் தொடர்
தமிழின்றி வாழான்
4. தமிழன் வென்றனன் — எழுவாய்த் தொடர்.
5. தமிழா எழுச்சிகொள் — விளித்தொடர்

6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள். இவை உருபு பெறும் இரண்டு முதல் ஏழு வரையிலானவை. (ஐ ஆல் கு இன் அது கண்):

தமிழைக் கற்றான் - ஐ
தமிழால் உயர்ந்தான் - ஆல்
தமிழுக்குத் தந்தான் - கு
தமிழின் நீங்கான் - இன்
தமிழினது செல்வன் - அது
தமிழின்கண் இனிமை - கண்

7. மற்றொன்று, அம்மவாழி - இடைச்சொல் தொடர்.
8. கழிகண்ணோட்டம், நனிபேதை - உரிச்சொல் தொடர்.
9. வந்துவந்து, பாம்புபாம்பு, அடுத்தடுத்து, - அடுக்குத் தொடர்

## வழுக்களும் வழாநிலைகளும் வழுவமைதிகளும்

### வழுவாக வரக்கூடியன ஏழு

375. திணையே பால்இடம் பொழுது வினாஇறை
மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே 24

இருதிணையும் ஐம்பாலும் மூன்றிடமும் முக்காலமும் வினாக்களும் விடைகளும் இவையல்லாத பிற மரபுகளும் தத்தம் நெறியினின்றும் மயங்கி, மாறிவரின் வழுக்களாகும். வழு-குற்றம். குற்றப்படக் கூறுதலும் எழுதுதலும். பிழையாகும். மயங்குதல் - ஒன்று வரவேண்டிய இடத்தில் பிறிதொன்று வருதல். பொழுது - காலம், இறை - விடை கூறுதல், மரபு - தொன்று தொட்டு வருவது.

1. அவன் வந்தது - உயர்திணை அஃறிணையில் முடிந்தது - திணைவழு
2. அவன் வந்தாள் - பால்வழு
3. நான் வந்தாய் - இட வழு
4. நாளை வந்தான் - கால வழு
5. பால் கறக்கின்ற பசு சினையா? - வினாவழு
6. மதுரைக்கு வழிகேட்டால், குதிரைக்குக் கொம்பில்லை என்பது விடைவழு

7. பூனைக் குட்டியை, பூனைக் கன்று என்பதும் ஆவின் கன்றை, ஆக்குட்டி என்பதும் மரபுவழு. இன்று கன்றுக் குட்டி என்பது மரபாக மாறியுள்ளது. யானை மேய்ப்பவனை இடையன் என்பதும் ஆடு மேய்ப்பவனைப் பாகன் என்பதும் மரபு வழு

அல்லவா?

திணை பால் எண் இடம் பிற சொல் மரபுகள் யாவும் பிழைபடச் சொல்லுதல், எழுதுதல், இலக்கியத்தில் ஆளுதல் தவறு

## திணை, பாலில் வினாவும் விடையும் வழுவாமல் காப்பது எவ்வாறு?

**376. ஐயம் திணைபால் அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள் மேல் அன்மையும் விளம்புப 25**

திணையில் ஐயம் வந்தாலும் பாலில் ஐயம் வந்தாலும் அவ்வவற்றின் பொதுச் சொல்லால் சொல்ல வேண்டும். இரண்டில், இதுவென்று தெளிவாக அறிந்த பொருளுடன் 'அன்மை'ச் சொல்லைச் சேர்த்துச் சொல்லுவது வழக்காகும். மெய்தெரி பொருள்- இதுதான் என்று உண்மையை அறிந்த பொருள்.

மரமோ, மனிதனோ, அங்கு நிற்கும் உருவம் - உருவம் என்பது பொதுச்சொல் - அல்லாமல் மரமோ மனிதனோ அங்கு நிற்பவன், நிற்பது என்றால் பிழையாகிவிடும். இது திணை வழு தவிர்த்தது.

ஆணோ, பெண்ணோ அங்கு நிற்பவர் - என, ஐயம் வந்த விடத்துப் பலர்பாலில் முடிக்க வேண்டும். நிற்பவன், நிற்பவள் என முடிப்பது பிழை. பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா எனத் தெரியாத நிலையில் 'நாம் இருவர், நமக்கு ஒருவர்' என விளம்பரம் செய்கின்றனர். ஒருவன, ஒருத்தி என முடித்தால், ஐயம் தோற்றாது, முடிவு அறிந்தது போலாகி விடும்.

இத்தனை என எண்ணிக்கை தெரியாதபொழுது, ஒன்றோ, பலவோ தோட்டத்தில் மேய்ந்த மாடு - எனல் வேண்டும். முன்பு ஆடு, மாடு, கொக்கு, குருவி என்பன எல்லாம் வினை முடிபை வைத்தே ஒருமை பன்மை அறியப்பட்டன. கொக்கு பறந்தது - ஒருமை; கொக்கு பறந்தன - பன்மை. கள் விகுதி சேராத காலம் அது. முன்பு 'பெற்றம்' என்பது காளை, பசு இரண்டுக்கும்

பொது. இன்று 'மாடு' என்பதையே பொதுச்சொல்லாக வழங்கு கிறோம். அஃறிணையில் 'பால் ஐயம்' என்பது, ஒன்றன் பாலா, பலவின்பாலா என்பதுதான் எனவேதான் மேய்ந்தது, மேய்ந்தன எனப் பால் அறியும் அஃறிணைச் சொல்லால் கூறக் கூடாது. மேலும் பெற்றம், மாடு எனப் பொதுச்சொல்லால் கூறுதலும் மரபாகும்.

இனி 'அன்மைச் சொல்லால்' சொல்வது என்றால் என்ன?

மரமும் மனிதனும் இருள் நிழலில் வேறுபாடு தெரிய வில்லை. சற்று அருகே சென்றதும் 'மரமல்லன்' என்றால், மனிதன் என நன்கு தெரிந்துவிட்டது என்பது பொருள். இங்கு துணிந்த பொருள் மனிதன் என்பதால், மரம் அல்லன், என - அன்மைச் சொல்லை அவனுடன் சேர்த்துச் சொல்கின்றனர். மரம் என்று துணிந்து விட்டால். மனிதன் அன்று எனல் வேண்டும். இங்கு' மனிதன் அன்று இது, மரம் என்பது பொருள். இவற்றில் துணிந்த பொருள் எது? முதலில் மரமன்று, மனிதன் என்பது. அவ் வாறாயின் அன்மைச் சொல்லைச் சுருக்கமாகத் துணிந்த பொரு ளுடன் சொல்ல வேண்டும். - அதாவது 'மரமல்லன்' எனல் வேண்டுமென்பதே இலக்கணம்.

ஆண், பெண் - இரண்டில் ஐயம் வந்தால், ஆண் எனில் 'பெண்ணல்லன்', பெண் எனில் 'ஆணல்லன்' எனல் வேண்டும்.

ஒன்றோ, பலவோ என ஐயம் வரின், ஒன்றே எனில் 'பலவன்று' என்றும் பலவாயின் 'ஒன்றல்ல' என்றும் கூறுவர். சுருக்கமாகக் கூறுதல் பற்றிய இலக்கணம் இது.

## திணை வழுவமைதி

**377. உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்**
**அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின 26**

உயர்திணை எழுவாயாக முதலில் வர, அதைத் தொடர்ந்து அஃறிணைப் பொருளவான (பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்) ஆறும், அவ்வுயர்திணையோடு சார்த்திக் கூறப்படும் போது, அவ்வுயர்திணை முடிபையே பெறும்.

| | |
|---|---|
| முருகன் அருள் உடையன் (பொருள்) | உயர்திணை |
| முருகன் மலை உடையன் (இடம்) | தொடர்ந்த |
| முருகன் கார்த்திகை நாளினன் (காலம்) | அஃறிணை ஆறும் |
| முருகன் முகம் ஆறுடையன் (சினை) | வந்து உயர்திணைப் |
| முருகன் குடிமைச் சிறப்பினன் | பயனிலை |
| (குணம்) | கொண்டன |
| முருகன் போர் கடியன் (தொழில்) | |

முருகன் போர் கடிது என்றால் முருகனது போர் கடிது என்றாகும். முருகன் என்பதே எழுவாயனால், கடியன் என்றே முடிக்க வேண்டும்.

கீழ்வருவனவும் இதனுடன் சேர்த்துக் கொள்ளலாம்:

கிணறு நீர் ஊறியது; மாடு கொம்பு கூரியது - இரண்டும் அஃறிணையாக வந்து, அஃறிணை முடிபு ஏற்றன. சார்த்திச் சேர்த்துக் கூறாதபொழுது முருகனுக்கு மலை உரியது, முருகனுக்கு கார்த்திகை நாள் (நட்சத்திரம்) உரியது என வரும்.

அஃறிணைச் சொல் தொடர்வதால் உடையன், நாளினன் என்பன வழுவாயினும், உயர்திணைத் தொடர்பால் இவை உயர்திணை முடிபேற்றது, பொருத்தமாகி, இது வழுவமைதி எனப்பட்டது.

## திணை, பால், மரபு வழுவமைதி

**378. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்**
**மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே 27**

திணைகளும் பால்களும் வெவ்வேறு செயல்களுக்குரிய பல பொருள்களும் தத்தமிற் கலந்து வருமாயின், அவை சிறப் பினாலாவது, மிகுதியினாலாவது, இழிவினாலாவது ஒரு முடி பினைக் கொள்ளும்.

**திணை:**

'திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்' - எனும் பாடலில், சான்றோர்க்கு திங்களில் உள்ளதுபோல் மறுஇல்லாத சிறப்பால், 'ஒப்பர்' என உயர்திணை முடிபைப் பெற்றது.

'பார்ப்பார், தவம்செய்வார், பிணிப்பட்டார், மூத்தார், பசு, பெண்டிர் இவர்களுக்கு வழிவிட்டு உதவ வேண்டும்' - எனும் கருத்தமைந்த பாடலில், பெரும்பாலும் உயர்திணையே வந்துள்ள மிகுதியால், 'இவர்களுக்கு' என்னும் உயர்திணை முடிபு வந்துளது.

'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' எனும் பழமொழியில் இருதிணையும் கலந்து, இழிவினால் 'விடா' எனஅஃறிணை முடிபு வந்துளது. இவை திணை பற்றியன.

**பால்:**

'தாழ்சடையோன் (சிவன்) தானும் தன் தையலும் ஆண்டிலனேல்' என்னும் போது, தையல் எனப் பெண்பாலும் வரினும் சிறப்புக்கருதி 'ஆண்டிலனேல்' என ஆண்பாலில் வந்தது.

தோழனும் தானும் வந்தான், தோழியும் தானும் வந்தாள்- இவை ஆண் பெண் கலப்பின்றித் தனித்தனி வந்தன. இவை போல்வன யாவும், நூற்பாவிற் கூறப்படாவிட்டாலும், 'சொற்றொறும் இற்றிதன் பெற்றி' எனத் தொடங்கும் புறனடைச் சூத்திரத்தாற் கொள்ளப்படும். என்று உரையாசிரியர்கள் கூறுவர். முன்னரும் பின்னரும் வரும். இத்தகைய அனைத்துக்கும் இதுவே விதியாகக் கொள்க (நூ.461)

**மரபு:**

கறியும் சோறும் உண்டான். கறிதின்பது, சோறு உண்பது, சிறப்புக்கருதி உண்டான் என்பது வழக்காயிற்று. உரையும் பாட்டும் இசைத்தனர். இதில் சிறப்புக் கருதி உரையையும் பாட்டுடன் இசைத்தனர் எனக்கூறுவர். இவை வழுவாகாமல், வழுவமைதியாயின.

## திணையும் பாலும் வழுவினும் வழுவமைதியாகுமிடங்கள்

**379. உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே 28**

மகிழ்ச்சியினாலும் மேன்மையினாலும் சிறப்பினாலும் சீற்றத்தினாலும் இழிவுபடுத்துவேதினாலும் பாலும் திணையும்

வழுவி (தவறி) வரினும் அது இயல்பேயாகும். அவை தவறாகா என்பது குறிப்பு.

**பால்:** 1. தன் மகனை 'என்னம்மா! வந்தாயா' எனக் கொஞ்சும்போதுஆண்பால் பெண்பாலாவது, மகிழ்ச்சி யினால் சொல்வதால் தவறன்று.

2. கம்பர் இராமகதை படினார் என்பது, மதிப்புப் பன்மை. ஒருமையை உயர்வினால் பன்மையிற் சொல்வது.
3. அம்மையே அப்பா - என்று ஆண்டவனை அன்னை எனவும் கூறுவது சிறப்பினாலாகும்.

4. ஊழல் செய்பவர்கள் எவனாயினும் ஒழித்துக்கட்ட வேண்டும். சீற்றத்தில் பன்மை ஒருமையானது.'எனைத் துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும் - தேரான் பிறன்இல் புகல்' எனும் குறளிலும் ('144') 'துணையர் - தேரான்' எனப் பன்மையில் தொடங்கி, ஒருமையில் முடிந்தது. கோபத்துடன் கடிந்து சொன்னதிது.

5. எதற்கும் அஞ்சி நடுங்கும் ஆணை, 'இவனொரு பெண்பிள்'ளைங்க', என்பது இழிப்பினால் ஆண்பாலைப் பெண் பாலாகக் கூறுவது.

**திணை:** 1. ஆண் நாயை 'இங்கே வா' ம்மா' என்பது, உவப்பினால் அஃறிணையை உயர்திணையாக்குவது.

2. 'செந்தாரப் பைங்கிளியார் தூது சென்றார்' - என்னும் போது உயர்வு கருதி, அஃறிணையை உயர்திணையாய்க் கூறுவது.

3. 'தம்' பொருள் என்ப தம் மக்கள்' (63) என்ற குறளில், மக்களைப் 'பொருள்' என்றது, சிறப்பினால் உயர்திணையை அஃறிணையாக்கிச் சொல்வது.

4. 'ஏவவும் செய்கலான், தான்தேரான் அவ்வுயிர் - போஒம் அளவும் ஓர் நோய்' - என்பது சீற்றத்தால் (செறல் - கோபம்) உயர்திணை அஃறிணையானது. தேரானை 'நோய்' என்றது அஃறிணை. (குறள். 848)

5. 'நாயினும் கெட்ட நன்றியில்லான்' - இழிப்பினால் நன்றியில்லானை நாய் என அஃறிணையாய்க் கூறப்பட்டது.

இனிப் புறனடையால் மகனை 'என் அப்பன் வந்தான்' எனவும் மகளை, 'என் அம்மை வந்தனள்' எனவும் கூறுவதுண்டு. இவை யாவும் வழுவாயினும் (தப்பாயினும்) இடமும் சூழலும் நோக்க, வழுவமைதிகளாயின.

## பாலிலும் இடத்திலும் வரும் வழுவமைதிகள்

**380. ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்**
**ஓரிடம் பிறஇடம் தழுவலும் உளவே 39**

ஒருமைப் பாலில் பன்மைப் பாற்சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப் பாற்சொல்லையும் ஓரிடத்திற்குரியதில் பிற இடச்சொல்லையும் தழுவிக் கூறும் முறைகளும் உள.

**பால்:** வெயில் எல்லாம் மறைத்தது மேகம். வெயில் - ஒருமை. எல்லாம் - பன்மை. தந்தையாய் ஆனாய் இந்த நாட்டின் தனயர்கள் எல்லோருக்கும் - தனயர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே தந்தை என்பதால், தந்தை என்ற ஒருமை இங்கு பொருந்தும். எனவே இது பால்வழுவமைதி. இரண்டு கண்ணும் சிவந்தது - இரண்டுகண் என்பது அஃறிணை. இதில் 'சிவந்தது' என்னும் ஒருமைச் சொல்லுடன் சேர்த்துக் கூறப்பட்டது. வீரர்தம் தாய்க்கு வெற்றியில் மகிழ்ச்சி காண் - வீரர் ஒவ்வொருவருக்கும் தனித்தனித்தாய் மகிழ்ந்ததைக் குறிப்பதால், இது வழுவாகாது வழுவமைதியாகும்.

**இடம்:** 'தாங்கள் தந்தருள வேண்டும்' - முன்னிலையைப் படர்க்கையில் வைத்துக் கூறுவது.நன்மக்கள் தாய் இது செய்வனோ - என்புழி, தாயாகிய நான் என வாராமல், தாய் - எனப் படர்க்கைபோல் நின்றது இடவழுவமைதி 'எம்பியைப் பெற்றேன், என் எனக்கு அரியதாகும்' என்று, முன்னிற்கும் தம்பியை நோக்கிக் கூறுவது இடவழுவமைதி.

நீயோ, அவனோ கதவில் சாய்ந்தவர்; யானோ அவனோ விரைந்து போனவர்; நீயோ யானோ இதனை வீழ்த்தியவர்;

நீயோ அவனோ யானோ இக்காரியம் சாதித்தவர் - இவ்வாறு விரவி, ஓரிடத்தில் பிற இடம் கலந்து முடிதலும் கொள்க.

## இடம் வழுவாமல் காத்தல்

**381. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை**
**எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும் 30**

தரல், வரல், கொடுத்தல், செலல் முதலிய நான்கு சொற்களையும் (அவற்றின் வேறுபாடுகளாக வரும் தந்தான், தருக, தர, தந்த முதலியவை உட்பட) படர்க்கையைச் சார்த்தியே வழங்குவர். இவற்றுள் முதலில் நின்ற தரல் வரல் இரண்டும் தன்மை முன்னிலைகளைச் சார்ந்தும் வழங்கும். எழுவாய் இரண்டு - முதலிலுள்ள இரண்டு. அவனுக்குத் தந்தான் (தரல்); அவனிடத்து வந்தான் (வரல்); அவனுக்குக் கொடுத்தான் (கொடை); அவனிடத்துச் சென்றான் (செலல்). இவை யாவும் படர்க்கையில் வந்தன. எனக்குத் தந்தான்; என்னிடத்து வந்தான். உனக்குத் தந்தான்; உன்னிடத்து வந்தான். இவை தன்மை முன்னிலையில் வந்தன.

இதிலிருந்து கொடுத்தலும் செல்லுதலும் படர்க்கைக்கே சிறந்தன என்பதும், தரலும் வரலும் படர்க்கைக்கு அத்துணைச் சிறப்பில என்பதும் உய்த்துணரப்படும். தரல், வரல் இரண்டும் தன்மை, முன்னிலைக்குச் சிறப்பாக உரியன என்பதும் அறியப் படும்.

## வினைச்சொல் உணர்த்தும் காலம்

**382. இறப்பு எதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே 31**

வினைச்சொல் காலங்காட்டும் எனக் கூறப்பட்ட அது, இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் என மூன்று வகைப்படும்.

சென்றான், செல்வான், செல்கின்றான் - இவை முறையே இறப்பு, எதிர்வு, நிகழ்வு.

## கால வழுவமைதி

383. முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே 32

மூன்று காலங்களிலும் இடையறவுபடாமல் ஒரு தன்மையையுடையனவாய் நிகழும் பொருள்களை, நிகழும் காலத்தினால் சொல்லுவர்.

மலை நிற்கின்றது; கடவுள் காக்கின்றார்; தெய்வம் இருக்கின்றது. இவ்வாறு நிற்றலும் காத்தலும் இருத்தலும் முக் காலத்தும் உளதாதலை அறிக.

## கால வழுவமைதி
## காலம் மாறிக் கூறப்படுமிடங்கள்

384. விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி 33

விரைவினாலும் மிகுதியினாலும் தெளிவினாலும் இம் மூன்றுமின்றி இயல்பினாலும், மூன்று காலங்களும், ஏற்கு மிடத்து ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லவும் படும்.

ஒருவரை வாவா எனக் கூப்பிடும் முன் 'இதோ வந்தேன், வந்தேன்' என்று இறந்த காலத்திற் கூறுவது, விரைவு பற்றியது. அதனால் அது கால வழுவமைதியாகும்.

பெண்களைக் கேலி செய்வானேல் படிப்பை இழந்தான்-பெரும்பாலும் வெளியேற்றப்படக் கூடுமென்பதால், இது 'மிகுதி' (பெரும்பான்மை) பற்றிய கால வழுவமைதி.

முதல் மாணவனாயின் வேலையிற் சேர்ந்தான்; தமிழில் அருச்சிப்பாரது மனத்துன்பம் ஒழிந்தது. இவை தெளிய அறியப் பட்டதால் வந்த காலவழுவமைதி. இவை 'அளவை நூல்' (தருக்கம்) முறைப்படி தெளியப்பட்டன. காட்சியளவை (நேரில் கண்டது), நூலளவை (நூல்வழி அறிவது) களால் உறுதியென

அறிந்துரைக்கப்பட்டன.

யாம் முன்பு நடைபயில்வது இதோ இவ்வழியேதான்; பழம்புலவர் பாடுகின்றது இன்றைய இப்பண்களேதான். இவை இயல்பாக எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் முன்பு நடந்ததைக் கூறப்பட்டன. இவ்வாறு கூறக் காரணமெதுவுமில்லை.

## வினாவும் முறைகள்
## அறுவகை வினா

**385. அறிவுஅறி யாமை ஐயுறல் கொளல்கொடை**
**ஏவல்தரும் வினா ஆறும் இழுக்கார்** 34

அறிவினா, அறியாவினா எனும் ஆறுவகை வினாக் களையும் தவறின்றி வழங்குவர். (இழுக்கார் – தவறார்) ஆசிரியன் மாணவனிடம் 'இதற்குப் பொருள் யாது?' என வினவுவது அறிவினா. ஆசிரியன் அறிவானாதலின் மாணவனைச் சோதிக்கக் கேட்பது இது. மாணாக்கன் ஆசிரியனிடம் 'இச்சொற்குப் பொருள் யாது?' எனக் கேட்பதும்'பழுதோ (கயிறோ) பாம்போ' – என்பதும் ஐயவினா. ஒரு கடையில் போய் 'அப்துல்கலாமின் அக்கினிச் சிறகுகள் நூல் உளதா?' எனக் கேட்பது கொளல்வினா. அதை விலைக்கு வாங்கிக் கொள்ளக் கேட்பது அது. 'உனக்குப் பசிக்கிறதா?' என்று கேட்பது, சோறு படைக்கக் கேட்பதால், கொடைவினா. 'பட்டுக் கோட்டை பாட்டுக் கேட்டாயா?' – என்பது, சூழல் நோக்கி, 'இனியாவது கேள்' என ஏவுவது, ஏவல் வினா.

## விடைகூறும் முறைகள்
## எட்டுவகை விடைகள்

**386. சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்**
**உற்ற துரைத்தல் உறுவது கூறல்**
**இனமொழி எனும்எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப** 35

சுட்டுவிடை, எதிர்மறைவிடை, உடன்பாட்டு விடை

(நேர் - உடன்படல்), ஏவல்விடை, எதிர்வினாவிடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல்விடை, இனமொழிவிடை (இனமான மற்றதைச் செய்வேன் என்பது) எனும் எண் இறையுள் - என்னும் எட்டு விடைகளுள் (இறை - விடை), இறுதியில் கூறப்பட்ட ஐந்தும், அவ்விடைப் பொருளைக் குறிப்பால் தருவதினாலே, விடைகள் என்றே ஏற்றுக் கொள்வர், புலவர்கள்.

எனவே முதல் மூன்றும் - சுட்டு, எதிர்மறை, உடன்பாட்டு விடைகள் - 'செவ்வனிறை' எனப்படும். செவ்வன் - இறை = நேரே விடைகூறுவது. பின்பு கூறப்பட்ட ஐந்தும் - ஏவல், எதிர்வினா, உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி - 'இறைபயப்பன' எனப்படும். விடையைக் குறிப்பால் தருவன, இவை.

1. நம் தாய்மொழி எது? - இதுதான் எனத் தமிழைச் சுட்டுவது சுட்டுவிடை. 2. தமிழையே படிக்காது கைவிடுவாயா? என வினவுவார்க்கு, 'அவ்வாறு கைவிடேன்' என்பது எதிர்மறை விடை. 3. 'தமிழைக் கட்டாயம் படிப்பேன்' என்பது நேர்விடை (நேர்தல் - உடன் படுதல்). 4. 'நீ தமிழைப் படி' எனத் திருப்பிச் சொல்வது ஏவல் விடை 5. 'நாம் தமிழ் கற்க வாய்ப்புளதா?' என்பது எதிர்வினாவிடை 6. அரசு தமிழ்ப் படிப்பைக் கட்டாய மாக்கவில்லையே என்பது உற்றதுரைத்தல் விடை 7. பள்ளிகளில் தமிழ் படிப்பது இழிவுபடுத்தப்படுகிறது என்பது உறுவது கூறல் விடை 8. பிற மொழிகளையே படிப்பேன் என்பது இனமொழிவிடை

## வினா, விடைகளில் முதலும் சினையும் வழுவாமை வேண்டும்

**387. வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல் 36**

வினவும் போதும் விடை கூறும் போதும் சினையை முதலோடும் முதலைச் சினையோடும் மயங்கும்படி கலந்து கூறக் கூடாது.

தாய்மொழி சிறந்ததோ? பிறமொழி சிறந்ததோ? என வினவினார்க்குத் தாய்மொழியே பிறமொழியினும் சிறந்தது என விடையிறுக்க வேண்டும். முதலுக்கு முதலே விடையாதல் இது.

தமிழ்ச்சொல் இனிதோ? பிறசொல் இனிதோ? என வினவின், பிறசொல்லினும் தமிழ்ச்சொல்லே இனிது எனல் வேண்டும். சினைக்குச் சினையே விடையாதல் இது. இவ்வாறல்லாமல் பிறசொல்லினும் தாய்மொழி இனிது எனக் கலந்து கூறுதல் தெளிவுதராது வழுவாகிவிடும். (செப்புதல் - விடை கூறுதல். இறுத்தல் என்பதும் விடைகூறுதலே. 'இறை' - விடை)

## சொன் மரபு

**388. எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே** 37

எந்த ஒரு பொருளை எந்த ஒரு சொல்லினால், எம்முறைப்படி அறிவுடைய உயர்ந்தோர் சொல்லிவந்தார்களோ, அப்பொருளை, அச்சொல்லால், அம்முறைப்படி சொல்வது மரபாகும்.

புலிக்குட்டி, யானைக்கன்று, ஆட்டுப்புழுக்கை, மாட்டுச் சாணம், கறிதின்றான், சோறு உண்டான், கை கொடுத்தான், காலை வாரினான் - இவ்வாறு வரும் உயர்ந்தோர் வழக்குகளை மாற்றின் வழுவாகிவிடும். பசுக்குட்டி, கிளிக்கன்று எனத் தோன்றிய வாறு வழங்குதலாகாது.

## மரபு வழுவாமல் காத்தல்

**389. வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்**
**வேறு அவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்.** 38

வேறுவேறு வினைகள் அல்லது செயல்களுக்குரிய பல பொருள்களையும் தழுவிநிற்கும் பொதுச்சொற்கள், ஒவ்வொன்றிற்கும் உரிய சிறப்புவினையால் முடியாது, ஒரு பொது வினையால் முடிய வேண்டும் வேறுவேறான சிறப்புச் சொற்களை எண்ணி நிற்கும் பல சொற்களும் அதேபோல, சிறப்புவினைச் சொல் வேண்டாது, எல்லாவற்றிற்கும் உரிய பொதுவினைச் சொல்லாலேயே முடியவேண்டும்.

அடிசில் - அடப்படுகிற - சமைக்கப்படுகிற உணவு.

அவற்றுள் உண்பன, தின்பன, மெல்லுவன, அருந்துவன,நக்குவன, பருகுவன, கடிப்பன எனப் பலவகையுண்டு. இவற்றிற்கு ‘அடிசில்’ பொதுச்சொல்லாதலால், அதுவே ‘வெவ்வேறு வினை களுக்குரிய பலபொருள் தழுவிய பொதுச்சொல்’ ஆகும். இதற்குப் பொதுவான வினை முடிபே கொடுக்கவேண்டும். அடிசில் அயின்றார், அடிசில் மிசைந்தார் எனல்வேண்டும். இன்று அடிசில் உண்டார் எனில் எல்லாம் அடங்கும். (அடிசில் பருகினார் எனச் சிறப்புச் சொல்லால் கூறலாகாது. பால் பருகினார், தேன் நக்கினார். பாயசம் அருந்தினார், காய்கறி தின்றார் என்றாற் போல்வன, சிறப்புப் பொருளைச் சிறப்பு வினையிற் கூறுவன). அணிகலன் என்பது கவிப்பன (முடி) கட்டுவன (சிலம்பு), இடுவன (சங்கிலி), தொடுவன (தோடு), செறிப்பன (வளையல்), பொருத்துவன (நெற்றிச் சுட்டி) எனப் பலவகைப்படும் . எனவே அணிகலனை அணிந்தார் எனப் பொதுவாகவே முடிக்க வேண்டும். இயம் (வாத்தியம்) என்பது கொட்டுவன, தெறிப்பன, ஊதுவன, முழக்குவன எனவரும் பலவற்றிற்கும் பொதுவாதலால் இதை இயம்பினார் என்பர். வாத்தியம் பழந்தமிழில் வாச்சியம் என்றும் வரும். ஏதோ ஒரு வகையில் வாசிக்கப்படுவது வாச்சியம் அல்லது வாத்தியம். இதனை ‘வாத்யம்’ என்பது அடிப்பிழை. வாத்தியத்தைக் கற்றுக் கொடுப்பவரே வாத்தியார். ‘உபாத்யாய’ என்பதன் திரிபன்று அது. படைக்கலம் (ஆயுதம்) எய்வன, வெட்டுவன, எறிவன, குத்துவன, அழுத்துவன, வீசுவன எனப் பலவற்றிற்கும் பொதுவாதலால், முன்பு இதைப் படை தொட்டார் என்றனர். (தொடுதல் - படை தொடுத்தல்)

சோறும் கறியும் துவையலும் இனிப்பும் பழமும் பாயசமும் அயின்றார் அல்லது உண்டார் என முடிக்க வேண்டும். இது முன்பு சொன்ன அவற்றை வேறுவேறாக எண்ணிச்சொல்வது. அவ்வளவே. இவற்றையும் பொதுவினையாலேயே முடிக்க வேண்டும். முடியும் கடுக்கனும் மோதிரமும் அரைஞாணும் அணிந்தார் என்க. குழலும் பிடிலும் மத்தளமும் கைமணியும் இயம்பினார் அல்லது வாசித்தார் என முடிக்க வேண்டும். தப்பும் தவறும் பிழையும் நீக்கி எழுதினார் என்க.

## பலபொருட் சொற்களை வழுவாமற் கூறுதல்

390. வினைசார்பு இனம்இடம் மேவி விளங்காப்
பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே 39

சொன்னதும் இதுதான் என்று விளங்காத பலபொருள் ஒரு சொல்லை, வினைச்சொல், சார்புச்சொல், இனச்சொல், இடச்சொல் ஆகிய ஏதேனும் ஒன்றைப் பொருத்திக் கூறி, அச்சிறப்புச் சொல்லால் அதன் சிறப்புப்பொருளை விளங்க வைப்பர்.

மா - மாமரம், வண்டு, குதிரை, திரு (இலக்குமி), ஒரு வகையான உண்ணும் மா -பலபொருள் தரும் ஒரு சொல் இது.

மா பூத்தது
மா காய்த்தது } வினைச் சொல்லால் மரம் என விளங்கியது.

மா மொய்க்கும் மலர்
மா வீழ் மலர் } மலர் என வந்த சார்பால் வண்டு என விளங்கியது.

தேர்களிறு மா காலாட்படை - இனத்தால் மா - குதிரை எனத் தெரிந்தது.

மா வாழ் மார்பன் - திருமால். திருமாலின் மார்பில் மா - இலக்குமி உறைகிறாள். எனவே இது இடத்தால் விளங்கியது

இனி வினை முதலியவற்றைச் சேர்க்கும் போது, இயல்பாக விளங்குவதற்காக, மா ஏறினான் என்னாமல் பாய் மா ஏறினான் என்பர். பாய்மா பாய்ந்தோடும் குதிரை. மா ஏறினான் - மாமரம் ஏறினான். இவை சிறப்புச் சொல்லால் வேறுபாடறியப் பட்டன.

## சொற்களைப் பிரித்தது போல, வெவ்வேறாக ஒலியழுத்தம் தந்து கூறுதலால் பொருள் பல தரும் தொடர்கள்

391. எழுத்தியல் திரியா பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப 40

எழுத்தினது தன்மை திரியாமல், பொருளைத் திரித்து, வேறுபடுத்திப் பொருள்கொள்ளுமாறு ஓசைத்திரிபினாலே (ஒலித் துச் சொல்லும் முறை வேறு பாட்டினாலே) பொருள் துணியப்படும் என்று கூறுவார்கள். புணர்மொழி - தொடர்ச்சொற்கள். இசைத் திரிபால் - பிரிதது உச்சரித்துச் சொல்லும் வேறுபாட்டினால். தெளிவெய்தும் - இன்ன பொருளென்று துணியப்படும்.

எழுந்திருந்தான் - எழுந்து இருந்தான் வேறல்லவா? தமிழ் மொழிக்கல்வியே வேண்டாமென வாதிப்பவர்களை, விளக்கு மாற்றினால் விளக்க வேண்டும். விளக்கும் ஆற்றினால் (முறைப் படி) விளக்க வேண்டும். விளக்குமாற்றினால் (துடைப்பத்தால்) விளக்கவேண்டும். இளைஞர்கள் சாப்பிடு மிடம் - இளைஞர் - கள் சாப்பிடுமிடம்.

செம்பொன்பதின்தொடி - செம்பு + ஒன்பதின் தொடி. செம்பொன் + பதின்தொடி (தொடி - ஒரு பலம்). குன்றேறாமா - குன்று + ஏறா + மா. (மா - விலங்கு). குன்றேறும் + ஆமா = குன்றின் மேலேறும் காட்டுப்பசு. தமிழைப் பழிப்பார் தலைநின்று என்பயனே? தமிழைப் பழிப்பார்தலை நின்று என் பயனே?

இவை இசைத் திரிபால் பொருள் வேறுபட்டன.

## பலபெயர் அடுக்கி முடிக்கும் விதம் ஒரு வழுவமைதி

**392. ஒருபொருள் மேற்பல பெயர்வரின் இறுதி**
**ஒருவினை கொடுப்ப; தனியும் ஒரோ வழி 41**

ஒரே பொருளைக் குறிக்கப் பல பெயர்கள் வருமானால், இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொடுத்து முடிப்பார்கள். அவற்றைத் தனித் தனியே கூறி, தனித்தனியே வினைமுடிபு கொடுத்தும், ஒரோ வழி முடிப்பார்கள்

ஆசிரியர் மதுரையார் அழகப்ப நம்பி வந்தார். (அனைத் தும் ஒருவரையே குறிப்பதால், ஒரே பயனிலை வந்து, ஒன்றென உணர்த்தியது).

கண்ணிற் கருமணியாய், கருவிழியிற் பாவையாய், கருத்

திற்கோர் ஆருயிராய், கவர்ந்தென்னை ஆள்கின்ற கயல்விழி யாய்க் காலமெல்லாம் துணைநிற்கும் காதலியாய் வந்தவளே, கார்குழலி! என்னைக் கைப்பிடித்துக் காப்பாற்றுவாய்! இவை யாவும் ஒருத்தியையே குறித்து, ஒரு வினைமுடிபு கொண்டது.

கருமணியே வாராய்! கருவிழிப் பாவாய் நீ வாராய்! ஆருயிரே வாராய்! அன்பேநீ வாராய்! கயல்விழியே வாராய்! காதலியே வாராய்!கார்குழலி வாராய்! - யாவும் காதலி ஒருத் தியையே குறிப்பதால், வாராய் எனும் ஒருவினை பெயர்தோறும் தனித்தனியே சேர்க்கப் பட்டது. இதுவும் வழுவன்று

## இயற்பெயரும் சிறப்புப் பெயரும் நிற்குமிடம் பற்றிய மரபு

**393. திணைநிலம் சாதி குடியே உடைமை**
**குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு**
**இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே** 42

ஐந்திணை, தேயம், குலம், குடி, உடைமை, குணம், தொழில் கல்வி ஆகிய இவற்றைப் பற்றி வரும் சிறப்புப்பெய ருடனே, இயற்பெயர் சேர்ந்து ஒருங்கு வருமானால், இயற்பெயர் பின்னால் வருதலே சிறந்த மரபாகும்..

சிறப்பே என்றதனால், சிலபோது முன்னே வருதலு முண்டு என்பதும் அது வழுவமைதியாக ஏற்கப்படுமென்பதும் பெறப்படுகிறது. பேராசிரியர் வரதராசன் என்று கல்வி பற்றிய சிறப்புப் பெயர் முன்னும் வரதராசன் என்னும் இயற்பெயர் பின்னரும் வருதலே மரபாகும். வரதராசன் பேராசிரியர் என்று மாற்றி வருவது வழுவமைதியாகக் கொள்ளப்படும். அதனை வரதராசப் பேராசிரியர் என இறுதி விகாரப்பட்டும் வரும்

குன்றவன் முருகன் - திணை பற்றி வந்தது. பழனியான் முருகன் - நிலம். குறவன் முருகன் - குலம். ஆவி நன்குடியான் முருகன் - குடி. செல்வன் முருகன் - உடைமை. அழகன் முருகன் - குணம் (பண்பு). அருளாளன் முருகன் - தொழில் (செயல்). ஆசிரியன் முருகன் - கல்வி.

இதை மாற்றி முருகன் குன்றவன், முருகன் பழனியான்,

முருகன் குறமகன், முருகன் அழகன் என்றெல்லாம் கூறின், அவை வழுவேயாயினும், வழக்கில் ஒரோ வழி வழங்குவதால், வழுவமைதியாக ஏற்கப்படும்.

கணக்காயன் நக்கீரன் - இவ்வாறு, முதலிற் காட்டியதுபோல, இயற்பெயரைப் பின்னாலும் சிறப்புப் பெயரை முன்னாலும் வைத்துச் சொல்வதே ‘வழாநிலை’ எனப்படும். அதுவே மரபு. நக்கீரன் கணக்காயன், நக்கீரக் கணக்காயன் - என்பன வழுவமைதியாக ஏற்கப்படும். (கணக்காயன் - ஆசிரியன்)

## சுட்டுப்பெயர்கள் வருமிடங்கள்

**394. படர்க்கை முப்பெயரோடு அணையின் சுட்டுப்**
**பெயர்பின் வரும் வினை யெனின் பெயர்க்கு எங்கும்**
**மருவும் வழக்கிடை, செய்யுட்கு ஏற்புழி 43**

படர்க்கையிடத்தில் வரும் உயர்திணை, அஃறிணை, விரவுப்பெயர் என்னும் மூவகைப் பெயர்களோடும், சுட்டுப் பெயர் எதிரே வந்து சேரும்போது, அதன்பின் வினைச் சொல் முடிக்க வருமானால், அச்சுட்டுப்பெயர் மூவகைப் பெயருக்கும் பின்னேதான் வரவேண்டும்; முன்னே வரக்கூடாது. முடிக்குஞ் சொல் இல்லாமல் வருமாயின், சுட்டுப்பெயர், முற்கூறிய மூவகைப் பெயருக்கும் முன்னும் பின்னும் வரும். இம் மரபு உலக வழக்கில் காணப்படுவது. செய்யுளில் வரையறையின்றி, ஏற்ற இடத்தில் ஏற்றவாறு வரும்.

வேலன் வருகின்றான்; அவனை வரவேற்க. உயர்திணை. ஞாயிறு எழுகின்றது; அதனைத் தொழுக - அஃறிணை.

பாண்டியன் வருகின்றான்; அவனுக்கு விருந்து தருக. பாண்டியன் வருகிறது; ஏறிக்கொள்க. } விரவுப்பெயர்

பின்னே ஒரு வினைநிகழ்ச்சி முடிவு வருவதால், சுட்டுப் பெயர் பின்னே வந்தது.

மலர்விழி அவள்; அவள் மலர்விழி - வினைமுடிபு ஏதும்

இன்மையால் முன்னும் பின்னும் சுட்டுப்பெயர் வந்தது.

'அவ்வன் அணங்கு நோய் செய்தான்; ஆருயிர் என் காதலன்', எனச் செய்யுளில், சுட்டுச் சொற்பெயர் முதலில் வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிலும் பின் வருதல் வழாநிலை (முருகன் வருவான்; அவன் அருள்தருவான்); முன் வருதல் வழுவமைதி. உலகவழக்கில் வினை முடிபு வருமிடத்தில், சுட்டுப்பெயர் பின் வருதல் வழாநிலை (வேலன் வருகின்றான்; அவனுக்கு விருந்து தருக.) முன் வருமேல் வழுவாகிவிடும் (அவனுக்குக் சோறிடுக; வேலன் வருகின்றான் என்பது பிழை).

## அடுக்குத் தொடர்

**395. அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்**
**இரண்டு மூன்று நான்கு எல்லைமுறை அடுக்கும்.44**

அசைநிலைக்கும் விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலிய பொருள்நிலைக்கும் இசைநிறைக்கும் ஒரு மொழி முறையே இரண்டு, மூன்று, நான்கு அளவு அடுக்கிக் கூறப்படும். எல்லை முறை - முறையே கூடுதல், எல்லையாக அடுக்கும். அதாவது அசைநிலைக்கு இரண்டும், பொருள்நிலைக்கு இரண்டும் மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கிவருமென்பதாம்.

அன்றே அன்றே, அம்மஅம்ம - அசைநிலை (பொருளின்றி வருவது)

வந்தேன்வந்தேன், போபோபோ - விரைவுப் பொருள்

அடிஅடி, தொலை தொலை தொலை - வெகுளிப் பொருள்

வாழ்க, வாழ்க, பொலிக, பொலிக - உவகை (மகிழ்ச்சி)

பாம்பு பாம்பு, தீதீதீ - அச்சம்

ஐயோ ஐயோ, கெட்டேன் கேட்டேன் கெட்டேன் - அவலம்

ஏஏஊரார் தூற்றுகிறாரடி

வருமே வருமே வருமே நம் காதலி இசைநிறை

பாடு பாடு பாடு பாடிக் கொண்டேயிரு
(பாட்டின் ஓசையை நிரப்புவது)

பலமுறை ஒரே சொல்லைச் சொல்லுதல் வழுவாயினும் , மேலே கூறிய காரணங்களால் சொல்லுதல் வழுவமைதியாகும். இவற்றுக்கு எல்லை வரையறுத்தல், வழுவாமற் காத்தலாகும்.

## இரட்டைக்கிளவி

**396. இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிற் திசையா 45**

'இரட்டைக்கிளவி' - என்பது இரட்டைச் சொற்கள். அவை அவ் இரட்டையினின்றும் பிரித்துச் சொல்லப்படா, பிரித்தால் பொருள்தரா. அடுக்குத் தொடர் பிரித்தால் பொருள் தரும். இதுவே இவையிடை வேற்றுமை.

குறுகுறு நடந்து - குறு எனப் பிரித்தால் பொருளில்லை. மடமடவெனக் குதித்தான்; சடசடவெனச் சரிந்தது. 'பொலபொல வெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்'.

துடிதுடித்து, படபடத்து, கடுகடுத்து - என்பனவும் பிரிப்பின் உரிய பொருளின்மையால், இரட்டைக் கிளவிகளேயாம். (கிளவி - சொல்)

## பிரிக்கவொண்ணாத் தொடர்ப்பெயர்கள்

**397 ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார் 46**

ஒரு பொருளின் மேல் பல பெயர்கள் தொடர்ந்து வரும் போது பிரிக்கக் கூடாதவற்றைப் பிரியாது அப்படியே கொள்வர். எனவே பிரிவுபடுவனவற்றைப் பிரிப்பர் என்பதாம். பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை - இவை ஒருவரையே குறிக்கும் பல்பெயர்த் தொடராகும். யானைக்கண், மாந்தரன், சேரல், இரும்பொறை எனப் பிரிக்கமாட்டார்கள். புலிகண்டஞ்சும் தாள்தொடாக் குறைக்கைப் படைமறவன் என, ஒன்றி னொன்று ஒவ்வாதவை கூறின் வழுவாகும்.

## ஒருபொருட் பன்மொழி மரபு வழுவமைதி

**398. ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா 47**

ஒரு பொருளையே குறித்து வரும் பல சொற்கள், அவ்வாறு வருவதன்மூலம் சிறப்பும் மிகுதியுமான பொருள் தருதலால், அவை வழுவாகா. சிறப்பு - மிகுதி, செவிக்கின்பம், சொல்வளம் ஆகியவை. மீமிசை ஞாயிறு. மீ - மேலே, மிசை - மேலே. மீமிசை - மிகவும் மேலே என்பதாம். உயர்ந்தோங்கும் நெடு மலை-உயர்ந்து ஓங்கும் மிகவுயர்ந்த மலை. புனிற்றிளங்கன்று: புனிறு - பிறந்த அணிமை, இளமை, மிகவும் இளங்கன்று. தமிழில் ஒருபொருட்பன்மொழிகள் மிகப்பலவுள.

## முற்றும்மை வருமிடங்கள் மரபு வழுவாமல் காத்தல்

**399 இனைத்தென்று அறிபொருள், உலகின் இலாப் பொருள்**
**வினைப்படுத்துரைப்பின் உம்மை வேண்டும் 48**

இவ்வளவினது என்று வரையறுத்து உணரப்படும் பொருளும் உலகத்தில் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், வினைமுடிபுடன் சொல்லும் போது முற்றும்மையை வேண்டி நிற்கும்.

மூவேந்தரும் வந்தார்; முத்தமிழும் கற்றோன்; ஐம்பொறியையும் அடக்குதல் வேண்டும். வினை முடிபுடன் வரும் போது முற்றும்மை வந்தது. குதிரைக்குக் கொம்பு எங்குமில்லை. ஒளி முன் இருள் எங்கும் இல்லை.

## செயப்படுபொருளைச் செய்தது போலக் கூறுதல் மரபு வழுவமைதி

**400. செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே 49**

செயப்படுபொருளைச் செய்த கருத்தாவைப் போல

அதாவது அதுவே செய்தது போல, அதன்மேல் அவ் வினை முதல் வினையை (எழுவாயின் செயலை) ஏற்றிக் கூறுதலும் வழக்கிலுளதாகும். (தொழிற்பட - வினை முதலின் வினை யாகும்படி)

இப் புத்தகம் யான் படித்தது (என்னால் படிக்கப்பட்டது எனல்வேண்டிய செயப்பாட்டு வினை, படித்தது எனச் செய் வினை ஆனது). இத்தரை யான் மெழுகியது. சோறு யான் கொடுத் தது. வீடு யான் கட்டியது. கதை யான் எழுதியது. இவை செயப்பாட்டு வினையைச் செய்வினையாக மாற்றும் முறையை உணர்த்துகிறது. புத்தகம் என்னால் படிக்கப்பட்டது என்பதை, யான் படித்தது இப்புத்தகம் என்று காட்டப்படுகிறது.

செயப்படு பொருளை மட்டுமன்றிக் கருவி, நிலம், செயல், காலம் என்பனவற்றையும் கருத்தாவாக்கிக் கூறுதலுண்டு என்பர், உரையாசிரியர்கள்.

இப்பேனா யான் எழுதியது - கருவி
இப்பள்ளி யான் படித்தது - நிலம்
பொறியியல் யான் பயின்றது - செயல்
ஆதிரைநாள் (நட்சத்திரம்) யான் பிறந்தது - காலம்

வண்டி ஓடுகிறது, பேனா எழுதுகிறது, தரை சுத்த மாகிறது, அம்பு பாய்கிறது, துப்பாக்கி சுடுகிறது - இவ்வாறாகச் செய்யப்படுவனவற்றை, அவையே செய்கிறது போலக் கூறு வதே இந்நூற்பாவின் பொருளென்று, நன்னூலின் முதல் உரை யாசிரியர் மயிலை நாதர் எழுதியுள்ளார். இளம்பூரணர், சேனா வரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகிய தொல் காப்பிய உரையாசிரியர்களுக்கு இதுவே உடன்பாடாகும். நன் னூலுக்கு கூழங்கைத் தம்பிரான் எழுதிய உரையும் இதைப் பின் பற்றியே உளது. ''வாள் வெட்டும்,திரிகை சுற்றும், எழுத்தாணி எழுதும் எனக் கருவி முதலாகச் செய்ததுபோல் நின்றன''. மேலும் சோறு வேகிறது, வேட்டி அழுக்கடைந்தது என்றாற் போல்வனவும் காட்டப்படுகின்றன.

## அடைமொழித்தொடர்களின் மரபு

**401. பொருள் முதல் ஆறாம் அடைசேர் மொழி, இனம்**
**உள்ளவும் இல்லவும் ஆம்இரு வழக்கினும்**

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும் ஆறு சொற்கள் அடையடுத்து வரும். அவை உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும், இனச்சுட்டுளளனவும் இனச்சுட்டில்லாதனவும் என இருவகைப்படும். இனச்சுட்டுள்ளவை அடையடுத்து வருதல் முக்கியம். ஏனெனில் வேறுபடுத்தறிய அது உதவும்

**இனமுள்ளன:** பொற்குடம் - பிறகுடங்களும் உள - பொருள். பேரூராட்சி - சிற்றூராட்சிகளும் உள - இடம். கார்த்திகை விளக்கு - பிற விளக்குகளும் உள - காலம் (கார்த்திகை மாத விளக்கு) . பூமாலை - பிற மாலைகளும் உள - சினை. செந்தாமரை - வெண்தாமரையும் உள - குணம் (நிறப்பண்பு). நாட்டிய மடந்தை - பிற மடந்தையரும் உளர் - தொழில்

**இனமில்லாதன:** உப்பளம் - அளம் எனவே உப்பு என்று பொருள்படும். வேறு அளம் இல்லை. ஊர் மன்றம் - (பொது இடம்) இடம். நாள் அரும்பு - (நாட்காலை பூக்கும் அரும்பு) காலம். இலை மரம் - சினை. செம்போத்து - (வெண் போத்து இல்லை) குணம் (நிறப்பண்பு). தோய் தயிர் - தொழில். இனமுள்ளவற்றிற்கு அடைமொழி அவசியம்

## செய்யுள் வழக்கு

**இனமுள்ளன:** பொருட்பெண்டிர் - (பரத்தையர்) - பொருள். கான்யாற்று அடைகரை - பிறகுளக் கரைகளும் உள - இடம். மூன்றாம் நாட் பிறை - காலம். கலவ மா மயில் - (கலவம் - தோகை) சினை. சிறுகோட்டுப் பெரும்பழம் - குணம் (பலாப்பழம்) பெரிது (கோடு - கிளை). ஆடு அரவு ஆடும் அம்பலத்தரசு - (சிவன். அரவு - பாம்பு) தொழில்.

**இனமில்லாதன:** பொற்கோட்டு இமயம் - (கோடு - உச்சி) பொருள். வடவேங்கடம் தென் குமரி - இடம். 'வேனிற் கோங்கின் பூம்பொகுட்டு - காலம் (வேனிற்காலத்துக் கோங்கம்பூ).

'சிறகர் வண்டு செவ்வழிபாட' - சினை. 'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் ' (புறம்) குணம் (நிறம்); ஒரே சூரியன்தான் உண்டு; இனமில்லை. (சிறகர் - சிறகு).

முழங்கு கடல் ஓதம் மூழ்கிப்போக - (ஓதம் - வெள்ளம்) முழங்கும் கடல் - தொழில். இவை இனமில்லாதன. அடைமொழி கட்டாயமென்பதில்லை. இமயம், வேங்கடம், ஞாயிறு, கடல் எல்லாம் இனம்பிரிக்க வேண்டாதன. இன்று அரபிக்கடல், இந்துமாக்கடல் என்றால் இனமுள்ளதாகிவிடும். இடம் நோக்கிக் கொள்க.

இனமுள்ளதற்கு அடைகொடுப்பது வழாநிலை. இனமில்லாததற்கு அடைகொடுப்பது வழுவமைதி.

## அடைமொழி இனமல்லாதனவும் தருதல்

**402. அடைமொழி இனமல் லதும்தரும் ஆண்டுறின் 51**

முன்சொல்லப்பட்டவாறு, அடையடுத்த மொழிகள், தம் இனத்தை உணர்த்தல் மட்டுமன்றி, அவ்விடத்துப் பொருந்துமாயின் இனமல்லாததையும் தரும்.

'அறத்தான் வரும் இன்பம்' என்றால் அறமல்லாதது துன்பம் தரும் என்பதுடன், 'இது செய்யின் இது வரும்' என்று அறியாத அறிவிலியாக வாழாதே என்னும் எச்சரிக்கையும் அதிலுளது. இன்பம் என்பதன் அடைமொழி 'அறத்தான் வரும்' என்பது. தாய்த் தமிழ் வழிக் கல்வி கட்டாய முதன்மை பெற்றது என்ற வழி, பிறமொழிகள் விருப்ப பாடமாயின என்பதும், அதனால் இருமொழிப் புலமை பெற்று, தமிழ்நாட்டு மாணவர் மேன்மையுறுவர் - வங்காளத்தார் போல நோபல் பரிசு பெறுமளவு அறிவு உயர்வர் என இனத்தொடு கூடிய பலவும் ஏற்புடையன பெறப்படும்.

## அடைமொழிகள் பல சேர்ந்து வருதல்

**403. அடைசினை முதன்முறை அடைதலும் ஈரடை<br>முதலோ டாதலும் வழக்கியல்; ஈரடை<br>சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே 52**

ஓரடைமொழியும் ஒரு சினையும் ஒரு முதலும் ஒன்றை யொன்று விசேடித்து வருதலுண்டு. இரண்டு அடைமொழிகள் ஒரு முதலை விசேடித்து வருதலுண்டு. இவை உலக வழக்கு நடைகளாகும். செய்யுள் வழக்கில் இரண்டு அடைமொழிகள் (ஈர் அடை), சினையை விசேடித்து வருதலும் இவ்வரையறை யைக் கடந்து மயங்கி வருதலுமுண்டு.

1. செங்கால் நாரை - செம்மை + கால் + நாரை. பண்பு (நிறம்) பற்றிய அடைமொழி + கால் என்பது சினை + நாரை என்பது முதல் ஆகும். இதனைத் தொல்காப்பியர் 'வண்ணச் சினைச் சொல்' என்பார். சிறு கண் யானை, முழங்கு திரைக் கடல் (திரை - அலை) இவை ஓரடை + ஒரு சினை + ஒரு முதல் வந்தன.
2. சொந்தாரப் பைங்கிளி - செந்தார் (கழுத்தில் சிவப்புக் கோடு) + பை (பச்சை) + கிளி. இரண்டு அடைகள் ஒரு முதலை விசேடித்து நின்றன. சிறுகருங்காக்கை, மனைச்சிறு கிணறு - இரண்டு அடைகள் வந்தன.
3. சிறு பைந்தூவியிற் சிறந்த புறாக்கள் - சிறு + பைம் + தூவி, (தூவி - உட்சிறகு) சினைக்கு இரண்டடை வந்தது. 'கரு நெடுங்கண் தரும் காம நோயே' கரும் + நெடும் = இரண்டு அடைகள்
4. பெருந்தோட் சிறு மருங்குல் பேர் அமர்க்கண் பேதை'' பலவும் கலந்து, எல்லை கடந்து வந்தன.

இவற்றுள் முதல் ஒன்று மட்டும் வழுவாமற் காத்தல்; பிற மூன்றும் வழுவமைதி என்பர்.

ே

## இயற்கைப் பொருளைக் கூறும் முறை மரபுவழுவமைதி

### 404. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் 53

இயற்கை, செயற்கை எனும் இருவகைப் பொருள்களுள், இயற்கைப் பொருளை, இத்தன்மைத்து என்று சொல்ல வேண்டும்.

இயற்கைப் பொருள் தானாக இயல்பாகத் தோன்றுவது; பிறர் தோற்றுவிக்காதது. செயற்கைப் பொருள் பிறரால் ஆக்கப் படுவது. முன்னதின் தன்மை உடன் தோன்றுவது; பின்னதன் தன்மை அது தோன்றிய பின் அமைவது.

நிலம் வலிது, நீர் தண்ணிது, நெருப்பு வெய்து, பால் வெளிது, மெய் உள்ளது, பொய் இல்லது. 'இற்று' (இத்தன் மைத்து) எனக் குறிப்பு வினை சேர்த்துக் கூறுதலால், இதனை 'வழுவமைதி' என்பர் உரையாசிரியர்.

## செயற்கைப் பொருளைக் கூறும் முறை மரபு வழுவாமல் காத்தல்

**405. காரணம் முதலா ஆக்கம் பெற்றும்
காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்
ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்
இருமையும் இன்றியும் இயலும் செயும் பொருள் 54**

செயும் பொருள் - செய்யப்படுவதாகிய செயற்கைப் பொருள். காரணம் முன்வர ஆக்கச்சொல் பெற்றும் காரணச்சொல் மறைந்து - தொக்கு நிற்க ஆக்கச்சொல் பெற்றும் ஆக்கச்சொல் மறைந்து நிற்கக் காரணச் சொல் மட்டும் பெற்றும், இவ்விருவகையும் இல்லாமலும் சொல்லப்படும்.

1. கட்டாயமாக்கியும் உயர்கல்வியும் தந்தமையால் தமிழ் மொழிக் கல்விகள் நல்லவாயின. பிறமொழிகளும் கற்றுத் தாய்த்தமிழின் செவ்வியை உலகெலாம் பரப்பியமையால், தமிழ் இலக்கியங்கள் சிறப்புறலாயின. காரணச்சொல முன்னும் ஆக்கச்சொல் பின்னும் வந்தன. 'கடுவும் கைபிழி எண் ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின' - என்பது பழைய காட்டு.

2. தமிழ்க்கல்வி நல்லவாயின; தமிழிலக்கியம் சிறப்புற லாயின, மயிர் நல்லவாயின - காரணச் சொல் தொக்கு நிற்க, ஆக்கச் சொல்மட்டும் வந்தன.

3. தமிழ் வழி உயர்கல்வி கட்டாயமானதால் மொழி நிலைத்தது. உலகெலாம் பரவியதால் தமிழ் சிறந்தது 'கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்ல' - இவை ஆக்கச் சொல் தொக்கு, காரணச்சொல்லுடன் வந்தன.

4. தமிழ்வழிக்கல்வி நன்று, தமிழிலக்கியம் சிறந்தது - இவற்றில் காரணச் சொல், ஆக்கச்சொல் இரண்டுமே தொக்கு நிற்கின்றன.

முதலிலுள்ள 'காரணம் முதலா ஆக்கம் பெறுதல்' ஒன்று மட்டும் வழுவாமற் காத்தல்; ஏனைய மூன்றும் வழுவமைதி என்பர் உரையாசிரியர்.

## வணிக மரபில் வினாவும் விடையும்

**406. தம்மால் இல்லது இல்லெனின் இனனாய்**
**உள்ளது கூறி மாற்றியும்; உள்ளது**
**சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே** 55

தம்பால் - தம்மிடத்தில் இல்லது இல்லெனின் - இல்லாததை இல்லை என்று சொல்லவேண்டின், இனமாய் உள்ளது கூறி - நேரே இல்லையென்னாமல், அதற்கு இனனாய்த் தம்மிடம் உள்ளதைக் கூறி, மாற்றியும் - அதன் மூலம் கேட்டது இல்லையென அறிவித்தும், உள்ளது சுட்டியும் - அப்பொருள் உள்ளதாயின் அதனை இது இத்தகையது, இவ்வளவினது எனத் தெளிவுபடக் கூறியும் சொற் சுருங்குதற்கு உரைப்பர் - வணிகர்கள் இவ்வாறு சுருக்கமாக மறு மொழி கூறுவர்.

அகிலனின் புதினங்கள் உண்டோ என வினவினார்க்கு - மு,வ, வின் புதினங்கள் உள என்று கூறி, முன்னது கைவசம் இல்லையென்பதைக் குறிப்பாய் அறிவிப்பர். பயறுண்டோ வணிகரே என்றார்க்கு, உழுந்துண்டு, துவரையுண்டு என மறுமொழி கூறுதல் வணிக மரபு. இல்லையென்னாது, இருப்பதைக் கூறி, இல்லையென்பதை உணரவைப்பர்.

பயறுளதோ என்றால் உளதெனின் நல்ல பயறுளது, இன்ன விலையினது, இவ்வளவினது என விடைபகர்வர். (இது உள்ளதைக் கூறுதல்)

பட்டாடையகத்தில் திருபுவனம் உளதோ என்றால் காஞ்சி உளது, காஞ்சிப்பட்டல்லது இல்லை எனவும் கூறுவர்

## ஒன்றைக் கேட்கும் சொல் மரபு

**407. ஈ,தா, கொடுவெனும் மூன்றும் முறையே**
**இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை 56**

ஈ, தா, கொடு என்னும் மூன்றும் முறையே இழிந்தோன், ஒப்போன், மிக்கோன் பிறரிடம் இரந்து கேட்பனவாம்.

ஈ - கீழே உள்ளவன் மேலிடத்தவனிடம் கேட்பது.
அரசே! ஈ வீராக !
தா - ஒப்பாயுள்ள தோழன் போல்வாரிடம் கேட்பது.
தோழி தா.
கொடு - உயர்ந்தவன் தன்னின் தாழ்ந்தவனிடம்
கேட்பது! தம்பி கொடு!

## முகக்குறிப்பால் உணர்தல்

**408. முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே 57**

முன்னம் - முகக் குறிப்பு, சைகை முதலியன. வெளிப் படையாகவன்றி, இவ்வாறு குறிப்பினால் அறியப்படும் சொற்களும் உள.

பெயரியலில் 'ஒன்றொழி பொதுச்சொல்' முதலாகச் சொல்லப்பட்ட குறிப்புச் சொற்களை (269) இதனுள் அடக்குவர், உரையாசிரியர்கள்.

முன்னம் - வாயால் வெளிப்படச் சொல்லாது, முகக்குறிப்பு, அவிநயம், சைகை, கையசைவுகளால் உணர்த்துவனவற்றையே குறிக்கும்.

பிரிய நினைக்கும் தலைவன் முன், தலைவி, பிரிந்து போக வேண்டாம் என்று தடுக்க நினைப்பதை, 'முன்னம் காட்டி முகத்தின் உரையா' என்பது அகநானூறு (5). குறிப்பால் பேசுவது. தொல்காப்பியக் கருத்துஇது.

காதணியாம் பொற்குழையை எறிந்து, கோழிகளை விரட்டும் வாழ்க்கையர், 'கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை - (பட்டி னப்பாலை 23.) சோற்றால் மடை அடைக்கும் சோழநாடு என்பன செல்வச் செழிப்பைக் காட்டும். இவையே 'முன்னத்தின் உணரும் கிளவி' என்பர், பிற்கால உரையாசிரியர்கள்.

கேட்பவருக்கு விளங்கச் சொல்லுதலே மரபாதலால், இது 'வழுவமைதி' ஆயிற்று என்பர், அவர்.

## அஃறிணைகளும் உரையாடுவது இயங்குவது போலக் கூறும் முறைகள்

409. கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே 58

கேளாத அஃறிணைகளைக் கோட்குனபோல்வும் அவை பேசுன போலவும் இயங்கி நடப்பன பேர்லவும் செயல்கள் சிலவற்றைச் செய்வன போலவும் கூறுதலும் உண்டு. (கேட்டுந, கிளக்குந - கேட்பவை, கிளப்பவை எனப் பெயர்களாகச் சொல்லப் பட்டுள்ளன)

1. அனிச்சமலரே! இது கேளாய்! - கேளாதது கேட்பது போலச் சொல்லப்பட்டது.
2. பகைமையும் கேண்மையும் (நட்பையும்) கண் உரைக்கும் - (குறள் 709) பேசாதது பேசுவது போல் 'உரைக்கும்' எனப்பட்டது.

3. இவ்வழி மதுரைக்குப் போகும் - நடவாதது நடப்பது போல் கூறப்பட்டது. என் மனம் எனக்கு முன் தலைவி இருக்கு மிடத்திற்குப் போய்விட்டது. நடவாதது நடப்பது போல் கூறப்ப ட்டது.

4. 'தன்னெஞ்சே தன்னைச் சுடும் (குறள் 293). கார்மேகம் காதலனை நினைப்பூட்டி வருத்துகிறது | செய்யாததைச் செய்வது போல் சொல்லுவது.

## உருவகம், உவமைகளில் வரும் மயக்கங்கள்

**410. உருவகம் உவமையில் திணை, சினைமுதல்கள்**
**பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே** 59

உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை அஃறிணைகள் ஒன்றுடன் ஒன்று மயங்கி வருதலும் முதல் சினைகள் அவ்வாறு மயங்கி வருதலும் இவ்வியலுள் சொல்லாதன பிறவும் ஆகியவற்றை மரபைப் பேணி ஏற்றுக்கொள்ளுக.

**உருவகம்:** 1. நம் அரசனாகிய சிங்கங்கண்டு, பகைவர் கூட்டமாகிய யானைகள் அஞ்சி ஓடின - உயர்திணை அஃறிணையுடன் மயங்கியது. கலைமகளாம் கல்வியைக் கற்றோர் விரும்புவர் - அஃறிணை உயர்திணையுடன் மயங்கியது.

2. அவன் தம்பியர் இருவரும் அவனுக்கு இரு தோள்கள்- உயர்திணை முதல் அத்திணைச் சினையுடன் மயங்கியது. முகமாகிய முழுமதி- உயர்திணைச் சினை அஃறிணை முதலுடன் மயங்கியது.

**உவமை:** 1. மங்கையாள் மயில் போன்றாள் - உயர்திணை அஃறிணையுடன் மயங்கியது. நெற்பயிர் கல்வி நிறைந்த சான்றோர் போலத் தலை சாய்த்து நின்றது. அஃறிணை உயர்திணையோடு மயங்கியது.

2. கண்ணிரண்டும் கயல்போலும் - உயர்திணைச் சினை அஃறிணை முதலோடு மயங்கியது. இவள் மேனி தளிர்போலும் - உயர்திணை முதல் அஃறிணைச் சினையுடன் மயங்கியது.

பிறவும் என்றதனால் 'இவன் கலைமகளே போல்வான்' எனப் பால் மயங்கிக் கூறுவனவும் ஒருவன் ஈந்த நன்கொடையை 'நாற்பதாயிரம் அருளினார்' என்பதும் சிறந்த ஆட்சியைச் 'செங்கோல்' எனலும் 'துஞ்சாக் கண்ண

வடபுலத்தரசே' என உயர்திணையை அஃறிணையாகக் கூறுதலும் இவைபோல்வன பிறவும் கொள்ளுதல் வேண்டும். இவை யாவும் மரபு வழுவமைதிகள்.

## பொருள்கோள்

### பொருள்கோளின் பெயரும் எண்ணிக்கையும்

**411. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்பு கொண்டுகூட்டு**
**அடிமறி மாற்று எனப் பொருள் கோள் எட்டே 60**

பொருள்கோள் - செய்யுளில் பொருள் கொள்ளும் விதம் பொருள் கோள். அது எட்டு வகைப்படும். 1.யாற்றுநீர்ப் பொருள் கோள் 2. மொழிமாற்றுப் பொருள்கோள். 3. நிரல்நிறைப் பொருள் கோள் 4. விற்பூட்டுப் பொருள்கோள் 5. தாப்பிசைப் பொருள் கோள் 6. அளை மறி பாப்புப் பொருள்கோள் 7. கொண்டு கூட்டுப் பொருள் கோள் 8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்.

### யாற்றுநீர்ப்பொருள்கோள்

**412. மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்**
**அற்றற்று ஒழுகுமஃது யாற்றுப் புனலே 61**

ஆற்றுநீர் அலை அலையாக, ஒரே போக்கில் ஓடி முடியு மல்லவா? ஒரு பாட்டுப் பொருள் ஒரே நோக்காக எழுவாயில் தொடங்கி, பயனிலையில் போய் முடிவது இது.

மற்றைய நோக்காது - பிறிது எதையும் நோக்காது, அடி தொறும், வான்பொருள் - சிறந்த பொருளானது, அற்று அற்று, - எச்சங்களால் அற்றற்று ஒழுகுவது, யாற்றுநீர் ஓடுவதுபோல் இருப்பதால், யாற்றுநீர்ப் பொருள் கோள் எனப்படும். (புனல் - நீர்)

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவி, தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

நெற்பயிர் விளைவு பற்றியது இச் சீவக சிந்தாமணிப் பாடல். சொல் - நெல். எழுவாய் கருஇருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சிக் காய்த்த எனும் பயனிலையில் முடிகிறது. ஒரே நீரோட்டம் போல் தொடங்கி முடியும் இப்பாடலில், இடையில் வரும் எச்சங்கள் அற்றற்றுத் தொடர்பு பட ஒழுகுவது போல் உளது.

## மொழிமாற்றுப் பொருள்கோள்

**413. ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை**
**மாற்றிஓர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே** 62

ஏற்புடைய இரண்டு மொழியையும் அவற்றுக்கு இயையும் இரண்டு பயனிலை மொழிகளையும் அவ்வவற்றுடன் பொருத்திக் கூறாது, மாற்றி ஏலாத பயனிலைகளை அவற்றுக்கு இயையாத பொருள்களுடன் கூட்டி ஓரடியுள் வழங்குதல் மொழி மாற்றுப் பொருள்கோளாகும்.

சுரை ஆழ அம்மிமிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலைஎன்ப
கானக நாடன் சுனை

கானக நாடனது சுனையில் சுரை மிதப்ப, அம்மி ஆழ எனவும் யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனவும் வரவேண்டும். பயனிலைகள் மாறிக் கிடப்பதால் இது மொழிமாற்றுப் பொருள் கோள் ஆயிற்று.

## நிரனிறைப் பொருள்கோள்

**414. பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்**
**வேறு நிரல்நிறீஇ முறையினும் எதிரினும்**
**நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே** 63

பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வெவ் வேறு வரிசையாக நிறுத்தி, முறையாகவேனும் எதிராக வேனும் இதற்கிதுப் பயனிலை என வரிசைப்படி அறியவைப்பது நிரல்நிறைப் பொருள் கோள்.

பெயர் வரிசை முதலில் நிற்க, அவற்றுடன் முடிக்கும் பயனிலைகள் அதே வரிசைப்படி வருவதுண்டு. பயனிலை வரிசை முன்னிற்க, பெயர்வரிசை பின் வருவதுண்டு. இவை எதிர்நிரல் நிறையாக வருதலுமுண்டு.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

இக்குறளில் அன்பு இல்வாழ்க்கையின் பண்பு, அறன் பயன் என முடிவதே நேரிய நிரல்நிறையாகும்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் (410)

ஏனையவர் - விலங்கு, நூல் கற்றார் - மக்கள். இது எதிர் நிரனிறையாகும்.

கொடி குவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்
மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
பிடிபிணை வடிவினளே வஞ்சி மகள்

வஞ்சிமகளுக்கு கொடிபோல் நுசுப்பு (இடை), குவளை போல் கண், கொட்டைபோல் மேனி என வரிசைப் படி இணைக்க வேண்டும். மதி முகம், பவளம்வாய், முத்தம் முறுவல் என இணைக்க வேண்டும். மஞ்ஞை (மயில்) சாயல், நடை பிடி (பெண்யானை), நோக்கு (பார்வை) பிணை (பெண் மான்) ஆகியவை அமைந்து வடிவழகியாக உள்ளாள். இவ்வாறு அடிதோறும் வரிசைப்பட அடுக்கிப் பார்க்கவேண்டும். அணி நூலார் இதை நிரல்நிறை அணி என்பர்.

## பூட்டுவிற்பொருள்கோள்

**415. எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்**
**பொருள்நோக்குடையது பூட்டுவில்லாகும் 64**

செய்யுள் முதலில் நிற்கும் சொல்லும் செய்யுள் இறுதியில் நிற்கும் சொல்லும் தம்முள் பொருள்முடிபு கொள்ளுமாறு நிற்பது, பூட்டுவிற் பொருள்கோளாகும்.

வில்லை நாணேற்றும் போது, நாண் கயிற்றைக் கீழே யிருந்து இழுத்து, மேலே கொண்டு போய் முடிந்து, வில்லை வளைப்பர். ஒரு பாட்டின் இறுதிச்சொல், அப்பாட்டின் முதற் சொல்லில் போய் பொருள் முடிவதால் இது பூட்டுவிற் பொருள் கோளாகும்.

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடின் பெரிதாம் ஏதம் - உறந்தையர் கோன்
தண்ணார மார்பின் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு

அரசன் உலாவருவதைக் கன்னி ஒருத்தி காண முடியாமல் தாயர் கதவை அடைத்தனர். ஐயோ, இதனால் அப்பெண் இறந்துபடின் ஏதம் (குற்றம்) பெரிதாகிவிடும்; எனவே கதவு - திறந்திடுமின் என இறுதிச் சொல், முதலிலுள்ள பயனிலையுடன் முடிந்தது. இது வில்லில் நாண் பூட்டுவது போல் முடிவதால், பூட்டுவிற் பொருள்கோள் எனப்பட்டது.

## தாப்பிசைப் பொருள்கோள்

**416. இடைநிலை மொழியே ஏனைஈ ரிடத்தும்**
**நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை** 65

தாம்பு - கயிறு, ஊஞ்சல். ஊசல் (ஊஞ்சல்) முன்னும் பின்னும் போகும். அதுபோல் ஒரு பாடலில் இடையிலேநிற்கும் மொழியானது, ஏனைய முதலிலும் இறுதியிலுமாகச் சென்று பொருள்தரும் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோள் எனப் படும்.

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு (255)

(அளறு - நரகம்) (ஊன் - இறைச்சி) இக்குறளில் ‘ஊன்’ என்பது ‘இடைநிலை மொழி’.

ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை
ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு

இவ்வாறு இடையிலே நின்ற ஒருசொல், முன்னும் பின்னும்

சென்று, பொருள்கொள்ள உதவியதால், இது தாப்பிசைப் பொருள் கோள் ஆகும்.

## அளைமறி பாப்புப் பொருள்கோள்

417. செய்யுள் இறுதி மொழியிடை முதலிலும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே 66

செய்யுள் இறுதிமொழி - ஒரு செய்யுளின் இறுதியில் நிற்கும் மொழி அல்லது தொடர், இடையிலும் முதலிலும் சென்று சேர்ந்து பொருள் தருவது அளைமறி பாப்புப் பொருள்கோளாகும்.

அளை - துளை, புற்று. பாம்பு - பாப்பு என ஆகும், இரும்புச்சட்டி, இருப்புச்சட்டி ஆவதுபோல. பாம்பு புற்றின் மேலே தலையை வைத்து, உடம்பை மடக்கிப் புற்றினுள்ளே செலுத் தியிருக்கும். அதுபோல, பாட்டின் இறுதியடி, இடையடிகளுடனும் முதலடியுடனும் சென்று பொருள்தருவது இது

தாழ்ந்த உணர் வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமும், சூழ்ந்த வினை யாக்கை சுடவிளிந்து நாற்கதியில் சுழல்வார்தாமும், மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும், வாழ்ந்த பொழுதினே வான்எய்தும் நெறிமுன்னி முயலா தாரே

இதைத் தலைகீழாய்க் கொண்டு பொருள் காண வேண்டும். இறுதியடி, 'வாழும் காலத்தே மேலுலகை அடையும் நெறியை எண்ணி முயலாதவர்கள்' - மூன்றாம் அடியுடன் சேரும் - மூழ்ந்த பிணி - முற்றிய நோய் முன்செய்த வினையென்று முனிபவர்கள் (வெறுப்பார்கள்); தீ வினையால் யாக்கையாகிய உடம்பு இறந்து எரிந்துபோக, பல பிறப்புக்களில் உழல்வார்கள்; தாழ்ந்த உணர்வுடன் தண்டூன்றித் தளர்வார்கள். இவை போல்வன அரிதில் வருவன.

## கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

418. யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே 67

யாப்பு அடிகள் பலவற்றிலும் அங்கங்கே நின்று, ஒரு தொடர்பு படக் கோக்கக் கூடிய சொற்களை, ஏற்ற இடமறிந்து

கொண்டு கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள் கோளாகும்.

நள்ளென் றன்றே யாமம் சொல் அவிந்து
இனிதுஅடங் கினரே மாக்கள் முனிவுஇன்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே (குறு.6)

யாமம் நள்ளென்றன்று (நள்ளிரவு); மாக்கள் சொல்லவிந்து இனிது அடங்கினர் (மக்கள் பேச்சொலி அடங்கி வீட்டினுள் போயினர்); நனந்தலை உலகமும் முனிவு இன்று துஞ்சும் (பெரிய உலகமும் தடையின்றி உறங்கிவிட்டது); துஞ்சாதேன் ஓர் யான் மன்ற (உறங்காதவள் நிச்சயமாக நான் மட்டுமே).

இந் நான்கடிப் பாடலிலேயே, ஏற்குமிடமறிந்து, கொண்டு கூட்டுவது, பாடலை - உரைநடை வடிவம் போல் ஆக்குகிறது. நெடும் பாடல்களில் இக்கொண்டு கூட்டு மிகுதி.

## அடிமறி மாற்றுப் பொருள்கோள்

**419. ஏற்புழிஎடுத்துடன் கூட்டுறும் அடியவும்**
**யாப்புஈறு இடைமுத லாக்கினும் பொருளிசை**
**மாட்சியும் மாறா அடியவும் அடிமறி** 68

ஏற்குமிடமறிந்து ஒவ்வோர் அடியையும் தனித்தனியே எடுத்துக் கூட்டிப் பொருள்கொள்ளுமாறு அமைந்த அடிகளை உடையனவும் ஒரு செய்யுளில் ஏதாவது ஓர் அடியை எடுத்து, அதை அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதானும் ஓரிடத்துக் கூட்டினும் பொருளும் ஓசையும் அதன் மாட்சிமைச் சிறப்பும் மாறாத அடியை உடையனவும் அடிமறி மாற்றுப் பொருள் கோளாகும்.

மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கண்பனி வரலா னாவே
வேறாம் மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே

இதில் எந்த அடியை எங்கு மாற்றினும் பொருள் மாறாமை காண்க.

அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்
விலைப்பாலில் கொண்டுஊன் மிசைதலும் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலும் குற்றம்
கொலைப்பாலும் குற்றமே யாம் (நான்மணிக்கடிகை)

முதல் மூன்று அடிகளை எவ்வாறு மாற்றினும் யாப்பும் பொருளும் மாறா. ஈற்றடியை எந்த அடியுடன் மாற்றினும் யாப்பு வேறுபடுமேயன்றி பொருள் வேறுபடா.

இது அடிமறிமண்டில ஆசிரியத்துடன் ஒப்புமையுடையது.

# 4. இடையியல்

## இயல் கருத்து நிரல்

பெயர்ச்சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் இடையே வந்து, அவற்றைச் சார்ந்து வழங்குவதால் இவை இடைச்சொற்கள் எனப்பட்டன. எனினும் பெயர் வினைகள் மட்டுமெனில், அவை அடிச்சொற்களே. அவற்றை முதனிலைகள் என்போம். முதனிலைகளை, முழுச்சொற்களாக்க உதவுபவை, இவ் இடைச்சொற்களே. பொறிஞன், பொழிஞன், அறிஞன் - எல்லாம் பெயர்ச் சொல்லாக - ஆக - பொறி, பொழி, அறி மட்டும் போதா. ஞ்+அன் = சேரவேண்டும். இவை இடை நிலையும், இறுதிநிலையுமான இடைச் சொற்கள். உண், தின், சிரி, பார் எனில் அவை அடிச்சொற்களே. உண்டான் - உண் + ட் + ஆன், தின்றான் - தின் + ற் + ஆன், சிரித்தான் - சிரி + த் + த் + ஆன், பார்த்தான் - பார் + த் + த் + ஆன். இடைநிலை, இறுதிநிலை சேர்ந்தே, இவ்வினைச் சொற்கள் உருவாக முடியும்.

படித்தவனா, படித்தவளா, படித்தவரா எனவும் பறந்ததா, பறந்தனவா எனவும் ஐம்பால் இருதிணை எண் இடம் எல்லாம் அறிய உதவுவன இவ் இடைச் சொற்களே.

சொற்களை உருவாக்குபவை இவை; சொற்பொருள் வேறுபாடுகளையும் உருவாக்குபவை இவையே.

கந்தனை - என்றால் ஐ உருபு கந்தன் எனும் பெயரைச் செயப்படு பொருளாக்குகிறது. கந்தனால் - என்றால் ஆல் உருபு அவனைக் கருவிப் பொருளாக்குகிறது. கந்தனுக்கு - என்றால் அவன் கொடைப் பொருளுக்குரியவனாக மாற்றப் படுகின்றான்.

பிறமொழிச் சொற்களைத் தமிழ் வடிவப் படுத்த இவை உதவுவதை எண்ணினால் இவற்றின் சிறப்பு இன்னும் பெரிதாக அறியப்படும். சீதா - சீதை (ஐ - சேர்ந்து தமிழாகும்). ராம் - இராமன், லஷ்மண் - இலட்சுமணன், பீம் - பீமன், கணேஷ் - கணேசன், க்ரியா - கிரியை, பீஷ்மா - பீடுமன் - இவ்வாறு சொல்லிப் பார்த்தால், இடைச்சொற்கள், பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்ய உதவுவதில், இன்றியமையா இடம் பெறுவதை அறியலாம்.

## இடைச்சொல்லின் பொது இலக்கணம்

1. வேற்றுமை உருபுகள், வினை உருபுகள், சாரியைகள், உவம உருபுகள், தத்தம் பொருளை உணர்த்தும் ஏ, ஓ, உம் முதலிய பலவகை உருபுகள்., இசைநிறைக்க வருவன, அசை நிலையாக வருவன, குறிப்பிற் பொருள் தருவன என இவ் எட்டு வகைகளாக வருவன இடைச் சொற்கள். இவை தனித்து இயங்கும் தன்மையின்றி, பெயரையும் வினையையும் சார்ந்து, அவற்றின் பின்னும் முன்னும் (அகத்தும் புறத்துமாக) ஏதேனும் ஓரிடத்தில் வந்து, ஒன்றும் பலவுமாக, அப்பெயர், வினைகளுடன் பொருட் பொருத்தமுறப் பொருந்தி வருவனவாகும்.

1. ஐ ஆல் கு இன் அது கண் என்பன ஆறும் வேற்றுமை உருபுகள்.
2. இடைநிலை, இறுதிநிலை (விகுதி) களாக வருவன வினை உருபுகள்.
3. உருபுகளை ஒட்டவைக்கச் சார்ந்து வருவன சாரியைகள். ஏழை - ஏழ் + ஐ. ஏழினை - ஏழ் + இன் + ஐ. இன் சாரியை. எழுதுகின்றனன் - எழுது + கின்று + அன் + அன். இறுதி 'அன்' னுக்கு, முன்னுள்ள 'அன்' சாரியை.
4. போல, ஒப்ப, புரைய, அன்ன முதலான உவம உருபுகள்.
5. ஏ, ஓ, உம், மற்று, கொல் - முதலான தத்தமக்கெனப் பொருள்தரும் இடைச் சொற்கள்.
6. செய்யுளில் இசையை நிறைக்கவரும் இசைநிறை
7. செய்யுளில் சொல்லை நிறைக்கவரும் அசைநிலை
8. ஒலிக்குறிப்புப் போல வந்து, குறிப்பிற் பொருள் தருவன. கலகல, பொலபொல என வரும் இரட்டைக் கிளவிகள், தடாலென, படீரென்று - இவ்வாறு வருவன.

வந்தனன் என்பதில் வரும் இடைநிலை, இறுதி நிலை முதலியனஅகத்தே வந்தன. அது மற்றம்ம - புறத்தே வந்தன. கொன்னூர் - முன்பு வந்தது. அதுமன் - பின்னே வந்தது. அம்ம, கொன், மன் - இடைச்சொல்.

## 'தத்தம் பொருள' என்றபடி, இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள்

2. ஏ, ஓ, உம் என்பன ஒவ்வொரு இடைச்சொல்லும், சூழலுக்கு ஏற்ப வெவ்வேறு பொருள் தரும். அவையாவன: தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிப்பு, கழிவு, ஆக்கம் ஆகிய பதினான்கும் இவை போல்வன பிறவுமாகும். (இவற்றுக்கான எடுத்துக் காட்டுக்கள், அவ்வந் நூற்பாவில் தரப்படுகின்றன.)

இன்னன என்பதால் அறியப்படுவன: அ, இ - சுட்டிடைச் சொற்கள்; எ யா ஆ - வினா இடைச்சொற்கள்; பின், முன் என்பன காலமும் இடமும் பற்றி வரும் இடைச் சொற்கள்; இனி - என்பது காலமும் இடமும் பற்றிய எல்லைப் பொருள்தரும் இடைச்சொல்; தொறும்; தோறும் - இடப் பன்மை, பிற பன்மைகளைக் குறிக்கவரும் இடைச் சொற்கள். இத்தகையன மேலும் பலவுள.

## ஏகார இடைச்சொல்

3.1. ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை எனும் ஆறு பொருளில் வரும்.

(நன்றே நினைமின் - பிற நினையற்க என்பதால் ஏகாரம் பிரிநிலைப் பொருளில் வந்துளது. (நன்று + ஏ) இலையே, பூவே, காயே, கனியே, கிழங்கே என்பன இயற்கை உணவுகள் - ஏகாரங்கள் எண்ணுப் பொருளன. தமிழைப் பழிப்பார் தமிழரே அல்லர் - ஏகாரம் தேற்றப்பொருள். (தேற்றம் - தெளிவு. ஐயமில்லை என்பதாம்.)

## ஓகார இடைச்சொல்

3.2. ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என எட்டுப் பொருளில் வரும். (படிக்கவோ வந்தாய் - இல்லை, சுற்றித் திரிய வந்தாய் என வேறு சில பொருளைத் தருதலால் ஒழியிசை. (படிக்க + ஓ). இதுதான் நற்பண்போ? - என வினவுவது வினாப்பொருள். தமிழரைப் போல மடவர் உலகில் உளரோ? - என வருந்தியுரைப்பது, கழிவிரக்கப் பொருள். இவ்வாறு பிறவும் காண்க.)

## என, என்று இடைச்சொற்கள்

*3.3.* என - எனும் இடைச்சொல் வினைச்சொல் சார்ந்தும் பெயர்ச்சொல் சார்ந்தும் குறிப்புச்சொல் சார்ந்தும், இசை, எண், பண்புப் பொருளிலும் என ஆறு பொருள்களில் வரும். என்று - என்பதும் அது போலவே வரும்.

(மகள் பிறந்தாள் என மகிழ்ந்தான். மகள் பிறந்தாள் என்று மகிழ்ந்தான். வினையுடன் முடிந்தது. தாய் என தந்தை என மதியான்; தாய் என்று தந்தை என்று மதியான். எண்ணிக்கைப் பொருள். நன்றென அறம் செய்கின்றனன்; நன்றென்று அறம் செய்கின்றனன். பண்பு சார்ந்து வந்தது).

## 'உம்' மை இடைச்சொல்

*3.4.* உம்மை இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் - ஆகிய எட்டுப் பொருளில் வரும். (தமிழில் பேச்சில் தவறினும் எழுத்தில் பிழைவிடாதே. பேச்சிலும் தவறுதல் கூடாதென்பதே குறிப்பு. இது எதிர்மறைப் பொருளில் வந்தது. சான்றோரும் போற்றுவர் - உயர்வு சிறப்பு. ஐம்பொறியையும் அடக்கி வாழ்க - முற்றும்மை. ஈதல் இன்பத்தையும் தரும்; அறமும் ஆகும் என்பது ஆக்கப் பொருளாகும்.)

## முற்றும்மை எச்சப் பொருளும் தரும்.

*3.4.1.* சில இடங்களில் முற்றும்மை முற்றுப் பொருளைத் தருவதுடன், எச்சப் பொருளையும் தரும்.

(செயற்குழுக் கூட்டத்திற்கு அனைவரும் வந்திலர். ஒருவருமே வந்திலரெனில் முற்றும்மை; சிலர் வந்துளர், சிலர் வந்திலர் எனப் பொருள்படின் எச்சப் பொருள். 'எல்லோரும் வந்திலரே, என்ன செய்வது?' - என்னும் போது சிலர் வாராமைக்கு வருந்துவது தெரிகிறதல்லவா?)

## எச்சவும்மைக்கு ஒரு சிறப்பு விதி

*3.4.2.* ஒன்று, இரண்டு, மூன்று என 'உம்' மின்றி வருவது; காய் கனி கிழங்கு என 'உம்' மின்றி வருவது - இவை செவ்வெண் எனப்படும். இவ்வாறு வரும் போது காய், கனி, கிழங்கும் உண்க என இறுதியில் உம் சேர்ப்பர். அதனை இறந்தது தழீஇய எச்சவும்மையாக்கி காயும் கனியும் கிழங்கும் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

## சில எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்பு விதிகள்

3.4.3. 'உம்' பெறாது எண்ணப்படும் பெயர்கள், ஏ, என்றா, எனா - என்னும் எண்ணிடைச் சொற்கள் நான்கும் இறுதியில் 'தொகை'ச் சொல் பெற்று வரும்.

உம், என்று, என, ஒடு - எனும் எண்ணிடைச் சொற்கள் நான்கும் இறுதியில் தொகைச் சொல் பெற்றும் வரும்; பெறாதும் வரும்.

(காலன் வேலன் மாலன் மூவரும் வந்தனர். பெயர்ச் செவ்வெண் தொகைச் சொல் பெற்றே வந்தது.

காலனும் வேலனும் மாலனும் வந்தனர் என 'உம்' சேர்ந்து வந்தால் 'மூவரும்' என்ற தொகைச் சொல் இன்றியும் வரலாம்; அதைப் பெற்றும் வரலாம்.) தொகைச் சொல் என்பது எண்ணிக்கை இறுதியில் மூன்றும், ஐந்தும் எனக் கூட்டிச் சொல்வது.

## எண்ணிடைச் சொற்களுக்கு மேலும் சில சிறப்பு விதிகள்

3.4.4. என்று, என, ஒடு - மூன்றும் சில சமயங்களில் ஓரிடத்தில் மட்டும் நின்று, பிறவற்றுடன் பின்னர்க் கூட்டியுரைக்கப் படும்.

('வினை பகை என்று இரண்டின் எச்சம்' - இதில் என்று - என்பது ஓரிடத்தில் வந்தாலும், வினையென்று, பகையென்று இரண்டின் எச்சம்' என்றே கொள்ள வேண்டும். 'பகை பாவம் அச்சம் பழி என நான்கும்' - இதில் என - என்பது இறுதியில் மட்டும் வந்துளது. இதை பிற வற்றுடனும் கூட்டிச் சொல்லியே பொருளுணர வேண்டும். பகையென, பாவம் என, அச்சம் என, பழி என நான்கும் என்று எண்ண வேண்டியது இது.)

## எண்ணிடைச் சொற்கள் வினைச்சொற்களொடும் வருதல்

3.4.5. பெயரொடு வரும் எனச் சொல்லப்பட்ட எண்ணிடைச் சொற்கள் எல்லாம் அதே முறைப்படி, ஏற்குமிடங்களில் வினைச் சொற்களோடும் பொருந்தி வரும்.

(முல்லை அரும்ப மல்லிகை பூக்க மாலைப் பொழுது வந்தது. அரும்பவும் பூக்கவும் வந்தது என எண்ண வேண்டும். 'உம்' தொக்கது. ஆடப் பாட இசைக்க மகிழ்விக்க வென்று வந்தார்கள். ஆடவென்று இசைக்கவென்று மகிழ்

விக்கவென்று வந்தார்கள். இவ்வாறு கூட்டிச் சொல்லிப் பொருளுணர வேண்டும்.)

## தில் - இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

4.1. தில் - என்னும் இடைச்சொல் விழைவு (விருப்பம்), காலம், ஒழியிசை (சொன்னதிலிருந்து சொல்லாததை உணர்த்துவது) ஆகிய மூன்று பொருளிலும் வரும்.

(வருகதில் - வரவேண்டுமென விரும்புகிறேன். 'வருக நம் காதலர்; வந்ததும் செறிகதில் நம் வளையே' - 'காதலர் வந்ததும் வளையல்கள் செறியட்டும்; உடல் மெலிவு நீங்கட்டும்' - என்பதால் இது காலத்தை உணர்த்துகிறது. 'காதலர் வருகதில் எம் சேரிசேர' - என்றால், அவர் வந்ததும் சண்டையிடப் போவதை உணர்த்துமிது, ஒழியிசைப் பொருளாகும்.)

## மன் - இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

4.2. மன் - என்னும் இடைச்சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருள் தரும்.

(இது முன்பு கூரியதோர் வாள்மன் - இப்போது மழுங்கி விட்டது எனில் 'ஒழியிசை'. 'இது பண்டு காடுமன்'- இப்போது வீடாயிற்று எனில் ஆக்கம். 'சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே' - என்றால், அதியன் இறந்து விட்டதால், ஔவைக்கு இனி அது கிடைக்காது எனப் பொருள்படுதலால், இது கழிவுப்பொருள்.)

## மற்று - இடைச்சொல் தரும் பொருள்கள்

4.3. மற்று - என்பது வினைமாற்று, அசைநிலை, பிறிது எனும் மூன்று பொருள் தரும்.

(கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே - எடுப்பதூஉம் எல்லாம் மழை. இக்குறளில் மற்று என்பது கெடுப்பதை மாற்றி எடுப்பதை உணர்த்த வருதலால் வினைமாற்று. 'அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்று அது - பொன்றுங்கால் பொன்றாத் துணை - இக் குறளில் மற்று வேறுபொருளின்றிச் சொல்லை நிரப்ப நிற்பதால், அசை நிலை. 'மற்றொன்று' என்னும் போது, முன் சொன்னதல்லாத ஒன்று எனப் பொருள்படுவது, 'பிறிது' எனும் பொருளாகும்.)

### மற்றையது - இடைச்சொல் தரும் பொருள்

4.4. மற்றையது - என்பது சுட்டிக் கூறியதற்கு இனமாகிய பிறி தொன்றைக் குறிக்கும்.

(இரண்டு வீடுகள் பார்த்தபோது, ஒன்றை விடுத்து மற்றையதை வாங்கலாம் என்பது இது. இனமான பிறிது ஒன்றையே இது குறிக்கும்.)

### கொல் - என்னும் இடைச்சொல்லின் பொருள்கள்

4.5. கொல் - என்பது ஐயம், அசைநிலை இரண்டிலும் வரும்.

(கற்றதனால் ஆய பயன் என் கொல்? - இதில் என் என்பதே வினா. கொல் - அசைநிலை. அறநெறி தவறுபவர் அழிவர் கொல்? - அழிய மாட்டாரோ எனும் ஐயம் தொனிக்கிறது.)

### ஒடு, தெய்ய உணர்த்தும் பொருள்கள்

4.6. ஒடு, தெய்ய இரண்டும் செய்யுளில் இசைநிறைத்தற்கு வரும்.

(போதொடு நிறைய, பொழுதொடு சாய - போது (மலர்) நிறைய, பொழுது சாய - 'ஒடு' இங்கு செய்யுளில் இசைநிறைக்க வந்துளது. 'உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்' - இங்கு 'தெய்ய' முன்னிலையசை.)

### அந்தில், ஆங்கு - உணர்த்தும் பொருள்கள்

4.7. அந்தில், ஆங்கு - இரண்டும் அசைநிலையாயும், இடப்பொருளைத் தரவும் வரும்.

(அந்தில் அழகன் அன்பினன் தோழி - அந்தில் அசை நிலை, வேறுபொருளில்லை. 'அந்தில் காணிய அவனும் வருமே' - அங்கு எனும் இடப்பொருள். 'ஆங்கு தமிழறியாத் தமிழர் அறிவுடையார் அல்லர்' - ஆங்கு அசைநிலை. ஆங்கு அவற் கண்டேன் - ஆங்கு இடப்பொருள்.)

### அம்ம - இடைச்சொற்பொருள்

4.8. அம்ம - உரையசையாய் வரும். கேண்மின் என ஏவற் பொருளிலும் வரும்.

('அதுமற்றம்ம' - மற்று உரையசை. 'அம்ம வாழி தோழி' - தோழியே கேட்பாயாக')

### மா வியங்கோள் அசைச்சொல்

4.9. மா - என்பது வியங்கோளில் அசைச்சொல்லாக வரும்.

(உயர்க, உண்க என்பன வியங்கோள் பொருளன. இவற்றை 'உயர்கமா வலனே' (வெற்றி உயர்க); 'உண்கமா மகனே'. இவற்றில் மா - அசைச்சொல். பொருளின்றிச் சொல்லை நிரப்ப வந்துள.)

### பத்து முன்னிலை அசைச்சொற்கள்

5. முன்னிற்பாரைத் தன் முகமாகத் திருப்புவதற்காகச் சில அசைச் சொற்கள் வரும். அவற்றிற்குப் பொருளில்லை என்றாலும் முன்னே அழைப்பதைக் குறிப்பாலுணர்த்தப் பயன்படும். பத்து முன்னிலை அசைச் சொற்களைப் பட்டியலிடுகிறார், பவணந்தி முனிவர். அவையாவன: மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ.

(கேண்மியா, காணிக, சென்மோ கொள்மதி, பணியியர் அத்தை, ஒன்று பாடித்தை, வாழிய தலைவி காணிய வருக, வருகமாள, சென்றீபெரும, நீயே செலவயர்ந்தியாழ.)

### எல்லா இடத்தும் வரும் இருபது அசைச்சொற்கள்

6. அசைச் சொற்களுக்குப் பொருளில்லை. சொற்களை நிரப்பி ஒரு வடிவு தருவன அவை. நம் அன்றாடப் பேச்சிலும் அடிக்கடி சரிசரி, ஆம்ஆம், ஊம்ஊம், ஓம்ஓம், என்ன என்ன - இவ்வாறு பொருளின்றி இடையிடையே வருவன பலவுள. அவை அசைநிலைகளே.

பவணந்தி முனிவர் பட்டியலிடும் அசைச் சொற்கள் வருமாறு: யா, கா, பிற, பிறக்கு,அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்பன.

(கண்டிகும் அல்லமோ - இகும்; என் நெஞ்சம் நொந்தன்று மாதோ - மாது, குயில் ஆலுமரோ - அரோ, அஞ்சவது ஓரும் அறனே - ஓரும்.).

# இடையியல்

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமே முழுமையான வையும் தனித்து இயங்குபவையுமான சொற்கள். இடைச் சொல்லும் உரிச்சொல்லும் அவை இரண்டையும் சார்ந்து வழங்குவனவே. உரிச்சொல்லை 'பெயர், வினை ஒருவா செய்யுட் குரியன' என்றார் (442). இடைச்சொல்லைப் 'பெயரினும் வினையி னும் பின்முன் ஓரிடத்து ஒன்றும் பலவும் வந்துஒன்றுவது' என்று கூறுகிறார். எனவே பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு அவற்றினிடையே வழங்குவதால் இடைச்சொல் எனப் பட்டது எனலாம்.

இடைச்சொற்கள் சொல்வடிவத்தை உருவாக்கப் பயன் படுவன; பெயர், வினைகளின் பொருளை வேறுபடுத்த வருவன. செய்யுளில் இசையை நிறைவிக்கவும் பொருளின்றிச் சொல் லுடன் அசை ஒட்டாகவும் நிற்பன. இவை பிறமொழிச் சொற் களைத் தமிழாக ஆக்கப் பயன்படுவதும் குறிப்பிடத்தக்க தாகும்.

## இடைச்சொல்லின் பொது இலக்கணம் அவற்றின் வகையும் வருமிடங்களும்

**420. வேற்றுமை வினைசாரியை ஒப்பு உருபுகள்,**
**தத்தம் பொருள, இசைநிறை அசைநிலை**
**குறிப்பு என் எண் பகுதியில் தனித்தியல் இன்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து**
**ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்** 1

வேற்றுமை உருபுகளும் வினைச்சொல்லின் இடைநிலை இறுதி நிலைகளும் அவற்றினிடையே வந்து இணைக்கும் சாரியைகளும் உவம உருபுகளும் இவை தவிர ஏ, ஓ, என-முதலான தத்தமக்கு என வெவ்வேறு பொருள்தருவனவும் இடைச்சொற்கள் எனப்படும்.

இவைதவிரச் செய்யுளில் 'இசைநிறை' என ஓசையை நிறைக்க வருவனவும், 'அசைநிலை' எனச் சொற்களினூடே

அசைத்தற் பொருளில் (சொற்பொருளை நிறைவு செய்ய) வருவனவும் உள. இவை் இரண்டும் தனிப்பொருளுடையன அல்ல எனினும் நிழற்பொருள் இல்லையெனல் இயலாது.

'குறிப்பு' என்பது, பெரும்பகுதி 'ஒலிக்குறிப்புச் சொற்களே' யாம் இவை பல 'இரட்டைக் கிளவி' களாக இருக்கும். படபட வென,தடதடவென - விரைவுக்குறிப்பு. இவை பலவகைப் படும். இவை பற்றி இதுகாறும் விரிவாக விளக்காமலும் நூற்றுக் கணக்கில் எடுத்துக் காட்டாமலும் விட்டுவிட்டனர். (சரேரெனச் சரிந்து, தடாலென அடித்து, திடுமென ஓடி, ஓகோ எனச் சொல்ல வைத்தவனைப் பார்த்துப் பலரும் ஆகா என வியந்தனர்.)

1. வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது, கண் போல்வன.
2. வினை உருபுகள் - வினைச்சொல்லின் இடைநிலை, இறுதிநிலைகள்.
3. சாரியை - அன், ஆன் முதலிய சாரியைகள்.
4. ஒப்பு உருபுகள் - போல, புரைய, ஒப்பு என வருவன.
5. தத்தம் பொருள - பிறவாறு தத்தமது பொருளை உணர்த்தி வருவன.
6. இசைநிறை - வேறு பொருள் உணர்த்தாது, செய்யுளில் ஓசையை நிறைக்க வருவன.
7. அசைநிலை - வேறுபொருள் உணர்த்தாது, பெயர்ச்சொல் வினைச்சொற்களுடன் சார்ந்து நிற்பன.
8. குறிப்பு - வெளிப்படையாக வரும் இவை போலாது, ஒலி, அச்சம், விரைவு என்பனவற்றைக் குறிப் பால் உணர்த்தி வருவன.

ஆஅ இழந்தான் என்று எண்ணப்படும் - ஆஅ என்பதை இசைநிறை என்பர். (இரக்கக் குறிப்பும் உளது.)

நகுமே தோழி நறுந்தண் காரே - 'கார்' காலம். கார் + ஏ. செய்யுளில் ஈற்றசை.

மொழிமோ - மோ முன்னிலை அசை

'கல்' லென்னும் இரைச்சல், 'ஒல்'லென்னும் ஓசை சீசீ போ.

'சோ'வென மழை பொழிந்தது. கூகூ எனக் கதறினான். துண்ணெனன, திடுமென, பொள்ளென, ஞரேலென சரேலென - இவற்றில் ஒலி, அச்சம், விரைவு பற்றிய குறிப்புப் பொருள்கள் உள.

என் எண் பகுதியில் - என்னும் எட்டு வகையினவாய் வரும். தனித்து இயல் இன்றிப் பெயரினும் வினையினும் - தனித்து இச்சொற்கள் இயங்கமாட்டா. பெயர்ச்சொல், வினைச் சொற்களின் அகத்தும் அவற்றின் புறத்தே பின்னும் முன்னுமாக என்னும் ஆறு இடங்களில், ஏதேனும் ஓரிடத்தே வரும். (பெயரின் அகத்தே வருதல், வினையின் அகத்தே வருதல்; பெயரின் புறத்தே பின் வருதல், பெயரின் புறத்தே முன் வருதல், வினையின் புறத்தே பின் வருதல், வினையின் புறத்தே முன் வருதல் என ஆறு இடம்.) இவ் இடங்களில் ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது - பொருந்துவது இடைச்சொல் எனப்படும்.

1. அழகன், அழகி. பொன்னன், பொன்னி. அன், இ என்பன இறுதிநிலை (விகுதி). அகத்துறுப்பாகச் சொல்லோடு சேர்ந்து வந்தன.
   கடையினன் (கடை + இன் + அன்) - இடைநிலை, இறுதிநிலையாக அகத்தே வந்தன.
   மடத்தினன் - மடம் + அத்து + இன் + அன். அத்து சாரியை. இன் - இடைநிலை, அன் இறுதிநிலை. இவை பெயர்ச்சொற்களின் அகத்தே (உள்ளே, பிரிக்க முடியாதவாறு) வந்தன.
2. உண்க - க - வியங்கோள் விகுதி. வினையின் அகத்தே வந்தது. உண்டான் - உண் + ட் + ஆன். உண்டனன் - உண் + ட் + அன் + அன். இடைநிலை, விகுதி; இடைநிலை, சாரியை, விகுதி. இவ்வாறு வினைச்சொற்களின் அகத்தே ஒன்றும் பலவும் வந்தன.
3. முருகனைப்பார், வாளால் வெட்டு - ஐ, ஆல் வேற்று மையுருபுகள் பெயரின் புறத்தே வந்தன.
4. கிளி போலும் அழகு, புலி போன்ற வலிமை - உவம உருபு இடைச்சொற்கள்.

5. வருகதில் அம்ம, அதுமற்றம்ம - தில், அம்ம; மற்று; இடைச்சொற்கள்
6. ஆஅ இஃதென்ன - வியப்பு. அண்ணாவோ - ஓ இரக்கக் குறிப்பு.

## 'தத்தம் பொருள' - என்றபடி இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள்

**421. தெரிநிலை தேற்றம் ஐயம்முற்று எண்சிறப்பு**
**எதிர்மறை எச்சம் வினாவிழைவு ஒழியிசை**
**பிரிப்பு கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள் 2**

தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிநிலை, கழிவு, ஆக்கம் ஆகிய பதினான்கும் இவை போல்வன பிறவும் இடைச் சொற்கள் தரும் பொருள்களாகும். இவற்றிற்கு எடுத்துக்காட்டு வருகின்ற நூற்பாக்களில் காட்டப்படும்

இன்னன என்பதால் இவை போல் தத்தம் பொருள் தருவன மேலும் பலவுள.

1. அ, இ முதலியன சுட்டெழுத்துக்கள். அவன், அம் மனிதன் என வரும். சுட்டிடைச் சொற்கள் இவை.
2. எ யா ஆ முதலியன வினா இடைச்சொற்கள். எவன், யார், வந்தானா.
3. பின், முன் என்பன காலம், இடம் பற்றி வருவன. அவன் வருவதன் முன் (காலம்); இந்த வீட்டிற்குப் பின் (இடம்)
4. 'இனி' - என்பது காலம், இடம், பற்றிய எல்லைப் பொருள் தரும்.இனி நல்வழி நடப்பேன் (காலம்); இனி வருவது தோட்டம் (இடம்)
5. தொறும், தோறும் - இடப்பன்மை (குன்று தோறாடும் குமரன்); பலகாற் பயின்று வருதலைக் குறித்தல் (அறிதோறு அறியாமை கண்டற்றால்).
6. வாளா, சும்மா - பயனின்றி எனும் பொருளில் வரும். வாளா கழிந்தது வாழ்வு. சும்மா சுற்றித் திரிகிறான்.

7. ஆவது, ஆதல், ஆயினும் - ஏழாவது ஆண்டு, பழங்கள் கனியாதல் கூடும்; சட்டமேயாயினும் ஊழல் ஒழியாது. இது பின்னொட்டாக வந்து, வேறுபடு பொருள்களைத் தருகிறது.

8. ஐயோ, அந்தோ - இரக்கப் பொருள்.

9. ஆ(கா), அம்ம, ஓ, ஓகோ - வியப்புப் பொருள்.

10. அம்மவோ, ஐயகோ, அன்னோ - அச்சப்பொருள்.

11. சீ, சீச்சீ - இகழ்ச்சிப் பொருள்.

தனித்து நடக்கும் பெயர் வினைச்சொற்கள்; அவை போலத் தனித்து இயங்காது, மற்றவற்றுடன் ஒட்டியே பொருள்கொள்ள வேண்டி வருவன எல்லாம் இடைச் சொற்கள் என்பர். கொல், ஓ, கொல்லோ, ந என்பன பலவுள. நக்கீரன், நப்பாலத்தனார் (ந - சிறப்பு).

கல், ஒல், கொன், துடும், துண், பொன், கம் என்பனவும் இடைச்சொற்களே. கொன்ஊர் - அச்சம்தரும் ஊர். துண்ணென, திடுமென - அதிர்ச்சி.

படபடென, கலகலென, திடுதிடென - ஒலிக்குறிப்புச் சொற்களெல்லாம் இடைச் சொற்களே. படார் என, திடீர்என, பட்டென, சட்டென என வரும்.

இவை ஒலி, அச்சம், விரைவு, வியப்பு, அவலம் எனப் பல பொருள்தரப் பயன்படும். 'பொலபொலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்' என்றால், அடுத்தடுத்து பலமுறை எனப் பொருள்படும். ஒலிக்குறிப்புச் சொற்களுக்கு நிழற்பொருள் வேறுபாடுண்டு. குழந்தைகளுக்கு என ஓர் அகரமுதலியே தொகுக்கலாம்.

## ‘ஏ’

## ஏகார இடைச் சொல்

**422. பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகாரம்மே** 3

இடைச்சொல் இலக்கணத்தில் கூறப்பட்ட வேற்றுமை உருபு பெயரியலில் கூறப்பட்டது; வினைச்சொல் ‘உருபு’ எனும் இடைநிலை இறுதி ஒட்டுக்கள், பதவியலிலும், வினையியலிலும் கூறப்பட்டன; சாரியை உருபு புணரியலில் கூறப்பட்டது; உவம உருபு பொதுவியலில் விளக்கப்பட்டது. ‘தத்தம் பொருள’ என்று கூறப்பட்டவை இங்கு ‘ஏ’ இடைச்சொல் தொடங்கிக் கூறப்படுகின்றன.

இடைச்சொற்கள் என்னஎன்ன பொருள்களை உணர்த்தும்? அவை தெரிநிலை, தேற்றம் முதலிய பதினான்கும் அவை போல் வன பிறவும் என்று முந்தைய நூற்பாவில் கூறப்பட்டன. இவை தவிர இசைநிறை, அசைநிலை, குறிப்பு (ஒலிக்குறிப்பு) எனும் மூன்றும் பொது இலக்கண நூற்பாவில் சொல்லப்பட்டன.

‘ஏ’ என்பது ஓர் இடைச்சொல். அது ‘தத்தம் பொருள’ என்றபடி, தனக்குரியனவாக எவ்வெப் பொருளைக் கொள்ளும் என்பது இதில் கூறப்படுகிறது.

பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை எனும் ஆறு பொருள்களை ‘ஏ’ கார இடைச்சொல் தரும்.

**பிரிநிலை:** துவரம் பருப்பே உடலுக்கு நல்லது - பிற பருப்புகளை விட்டுப் பிரிக்கிறது.

**வினா:** ‘இதுவும் ஒரு புதிய செய்தியே?’ - வினாவுவது போல் கேட்கும் போது வினாப்பொருள் தரும்.

**எண்:** ஆவின் பயன்களாவன பாலே தயிரே மோரே வெண்ணெய்யே நெய்யே என்பன. நிலனே நீரே தீயே வளியே வானே -ஐம்பெரும் பூதங்கள். எண்ணப்பயன்படுதல் காண்க.

**ஈற்றசை:** செய்யுளில் வரும். 'கடல் போல் தோன்றல காடிறந்தோரே - இறுதியிலுள்ள 'ஏ' - செய்யுள் இசையை, ஓசையை நிரப்புகிறது. காடிறந்தோர் என்பது போதும். 'ஏ' சேர்ந்து, பாட்டு முடிவை யும் அறிவிக்கிறது. இது இறுதியிலேயே வரு வதால் 'ஈற்றசை' எனப்படும். இந்நூற் பாவி லேயே 'ஏகாரம்' என்று நிறுத்தாமல், ஏகாரம் மே - என 'ஏ' வந்துமுடிவது ஈற்றசைதான்.

**தேற்றம்:** தெளிவு, ஐயமில்லாதது. 'அரசியல்வாதிகளின் தமிழ்ப்பற்று - தமிழ் முழக்கம் போலி நாடகமே' - சிறிதும் ஐயத்திற்கு இடமில்லை என்பதாம்.

**இசைநிறை:** 'ஆஅஎன் றெண்ணப்படும்'. 'ஏஎ இவள் ஒருத்தி' -

இவை பாடலின் இசையை நிரப்ப உதவுகின்றன. தேர் வாணையத் தலைவர் கூறியபடி, 'இந்திய அரசியல்வாதிகள் இந்நாட்டின் புற்றுநோயே' - இது தேற்றம். 'புற்றுநோயே' - என வினவுவது போல் கூறி, புற்றுநோய் அல்லர் எனப் பொருள் கொள்ளவும் இது இடம்தரும். இவ் 'எதிர்மறைப்' பொருளைப் 'புதியன புகுதலும் வழுவல' என்பதன்படி, புதுவரவு என்பர் உரையாசிரியர்கள். ஒரே தொடர் சொல்லும் முறையால் - ஒலி ஏற்ற இறக்கத்தால் நான்கு பொருள் தரக்கூடும்.

அவனே திருடன் - மற்றவர்கள் அல்ல; பிரிநிலை
அவனே திருடன் - நிச்சயமாக அவனே. தேற்றம்
அவனே? திருடன் - வினவுவது போல் கூறினால் வினாப்பொருள்
அவனே திருடன் - இல்லை என்பதுபோல் கூறினால் எதிர்மறை

## ஓ

## ஓகார இடைச்சொல்

423 ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை,
கழிவு, அசை நிலை, பிரிப்பு என எட்டு ஓவே 4

ஒழியிசை முதல் பிரிப்பு (பிரிநிலை) வரை எட்டுப் பொருளிலும் 'ஓ' இடைச்சொல் வரும்.

ஒழியிசை - சொல்ல வந்ததைச் சொன்னதில,ருந்து அறிய வைத்தல் - அஃதாவது சொல்லாது விட்டதை, உணர வைத்தல். (ஒழிந்ததை இசைத்தல்)

அறம் என்றோ கொடை கொடுத்தார் - கட்டாயத்தால் கொடுத்தார் என்பது ஒழியிசை.

நன்மை செய்யவோ தேர்தலில் நிற்கின்றார் - அன்று; பணம் கிடைக்கும் - கொள்ளையடிக் கலாம் என்பதற்கே நிற்கின்றார் என்பது ஒழியிசை.

வினா - நன்றோ தீதோ நானறியேன். 'நானேயோ தவம் செய்தேன்'. சிறப்பு என்பது மிகுதி. உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இது இருவகைப்படும். ஓஒ நன்மாணவன்: உயர்வு சிறப்பு. ஓஒ சோம்பேறி - இழிவு சிறப்பு. அவனோ திருடினான்? இல்லை என்ற பொருளில் எதிர்மறை. பாம்போ அன்று; பழுதோ (பழங்கயிறு) எனில் அதுவுமன்று. இது வேறு ஏதோ ஒன்று எனத் தெரிவித்து நிற்றலின் தெரிநிலை. கழிவு-கழிவிரக்கம். கழிந்ததற்கு-நடந்து போன தவற்றுக்கு வருந்துதல். 'மழலை யர்க்குத் தமிழ் கற்பிக்காதது தவறென்று உணராரோ; தாய்மொழி வழிக் கல்வியே உளவியலுக்கு ஒத்தது என அறியாரோ; 'தமிழர் கள் எல்லோரும் மடவராய் ஆனாரோ' - இவை தமிழின் சீர் கெட்டு வருதல் நோக்கி வருந்தி உரைப்பனவாதலால் கழி விரக்கப் பொருள் தந்தன. 'வம்மினோ இளைஞர்காள் தமிழ் காக்க; 'பைந்தமிழ் படிமினோ, பச்சிளங் குழந்தைகாள் - இவை

அசைநிலையாய் நின்றன. வம்மின், படிமின் என்பனவற்றுடன் அசையாய்ச் சார்ந்து வந்தது 'ஓ'.

நால்வர் நின்றுழி, ஒருவனைக் காட்டி 'அவனோ திருடினவன்' எனப் பிரித்துக் கேட்டால் பிரிநிலை. (பிரிப்பு-பிரிநிலை). எதிர்மறுத்துக் கேட்டால் எதிர்மறை; வினாவுவது கருத்தானால் வினா.

## என, என்று - இடைச்சொற்களின் பொருள்கள்

**424. வினை,பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு ஆறினும்**
**'என' வெனும் மொழிவரும்; என்றும் அற்றே 5**

வினைச்சொல், பெயர்ச்சொல், குறிப்புச் சொல், இசை, எண்ணிக்கை, பண்புச் சொல் ஆறுடனும் 'என' என்னும் இடைச் சொல் சார்ந்துவரும். என்று - என்பதும் அது போலவே வரும்.

**வினை சார்ந்தன** } கொள்ளெனக் கொடுத்தல். உயர்ந்தன்று; அதனெதிர் கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று. (என, என்று)

**பெயர் சார்ந்தன** } கவிதை என எதனையும் எழுதலாமா? கவிதை என்று எதனையும் எழுதலாமா?

**குறிப்பு** } 'பொள் என ஆங்கே புறம் வேரார்' (குறள் 487) விரைவுக் குறிப்பு. திடும் எனப் பாய்ந்தது - அச்சக் குறிப்பு (என்று என்பதையும் சேர்த்துக் கூறுக)

**இசை** } டும்டும் என முழவிசைத்தது; பொம்மென வண்டொலித்தது; ரீங்காரமிட்டது ஒரு வண்டு. (என்று இசைத்தது எனலுமாம்)

**எண்** } கண் என மணி என பொன் என பூ எனப் புகழ்ந்து தள்ளினான் காதலன். என்று என்பதும் சேர்ந்து வரும் (கண் என்று, மணி என்று), இவை எண்ணிக்கைப்பாற்பட்டன.

**பண்பு** } நன்றென நவின்றனன். மெல்லென இசைத்தனர். கரிதென்று வந்தது கார்முகில்.

என, என்று என்பன தமக்கெனப் பிறிதொரு பொருள் தராது, வினை முதலான ஆறு பொருள்களே தமது பொருளாக வரும். 'அழுக்காறு என ஒருபாவி' - அழுக்காறே பாவி எனப்பட்டது காண்க. மணி (எ) முத்தழகன் என்றால், அவனே இவன் என அறிக.

## உம்

## உம்மை இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் எட்டு

**425. எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம்,முற்று, அளவை,**
**தெரிநிலை, ஆக்கமோடு உம்மை எட்டே** 6

எதிர்மறைப் பொருள், சிறப்பு (உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு), ஐயப்பொருள், எச்சம், முற்று, அளவைப் பெயர்கள் (எண்ணிக்கை, நீட்டலளவை, நிறுத்தலளவை முதலியனவும்), தெரிநிலைப்பொருள், ஆக்கப்பொருள் ஆக 'உம்'மை இடைச் சொல் எட்டுப் பொருளில் வரும்.

1. **எதிர்மறை** - தமிழைப் பயன்படுத்தும்போது பேச்சில் தவறு நேர்ந்தாலும் எழுத்தில் பிழையே வரக்கூடாது. பேச்சிலும் தவறு கூடாது என்பதே கருத்து. அவன் வந்தாலும் வருவான்-வராமலும் போவான் என எதிர்மறைக் குறிப்புளது.

2. **சிறப்பு** - சான்றோரும் போற்றும் பண்பாளன் - உயர்வு சிறப்பு. நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு - இழிவு சிறப்பு (இங்கு 'சிறப்பு'- மிகுதிப் பொருள் தரும்.)

3. **ஐயம்** - இந்திய அணி வென்றாலும் வெல்லக்கூடும். தேர்வில் முதன்மை கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்.

**4. எச்சம்** - நிகழ்ச்சிக்குத் தலைவரும் வந்துவிட்டார். மற்றவர்கள் முன்பே வந்தனர் எனக் குறிப்பாலு ணர்த்துவதால் இது 'இறந்தது தழீஇய எச்சவும்மை' தேர்தலில் செயலரும் குதிப்பார் என்றால், தலைவரும் இனி ஈடுபடுவரென்று கருதக் கூடும். அது 'எதிரது தழீஇய எச்சவும்மை' எனப்படும். (தழீஇய - தழுவிய)

5. **முற்று** - முத்தமிழுக்கும் விழா எடுத்தனர். எல்லோ ரும் கூடியுள்ளனர். முற்றும்மை-முழுவதும் என்று பொருள்.

6. **அளவை** - எண்ணலளவை இரவும் பகலும், ஐந்தும் ஆறும், காயும் கனியும்-எண்ணும்மை

7. **தெரிநிலை** - இச்சொல் பெயரும் அன்று, வினை யும் அன்று, உரியும் அன்று. எனவே இடைச்சொல் எனத் தெரிய வைப்ப தால் தெரிநிலையும்மை.

8. **ஆக்கம்** - கீரை வகைகள் உணவும் ஆகும். அவையே மருந்துமாகுமென்பது ஆக்கப்பொருள். கல்வி அறிவும் தரும். அதுவே வேலை வாய்ப்பும் தருமென்பது ஆக்கம்.

## முற்றும்மை எச்சப்பொருளும் தரும்

**426. முற்றும்மை ஒரோ வழி எச்சமும் ஆகும்.** 7

முற்றும்மை ஒருசில இடங்களில் எச்சவும்மையாகவும் பொருள் தரும்.

மாணவர்கள் அனைவரும் வந்திலர் (ஒருவர் மீதமின்றி எல்லோருமே வந்திலர் என்பது முற்றும்மை. அதுவே அனைவரும் வந்திலராயினும் சிலர் வந்துளர் என்றும் பொருள்படும்போது, எச்சவும்மை. பழங்கள் பத்தையும் கொடுத்துவிடாதே. சிலவற்றை வேண்டுமேல் கொடு என்றும் தொனிப்பதால் எச்சவும்மையு மாகிறது.

## எச்சவும்மைக்கு ஒரு சிறப்பு விதி

**427. செவ்வெண் ஈற்றதாம் எச்ச வும்மை 8**

செவ்வெண்- ஆறும், ஐந்தும் என்பதுபோல எண்ணிடைச் சொல்லுடன் முடிக்காமல் ஆறு, ஐந்து என விடுவது செவ்வெண் எனப்படும். உம் மறைந்து நிற்கும். மெய் வாய் கண் மூக்கு செவி எனும் ஐம்பொறியையும் பக்குவப்படுத்தவேண்டும். ஐம்பொறியையும் என்பது எண்ணிடைச்சொல் வந்தது. மெய வாய் கண் மூக்கு செவியும் பக்குவப்படவேண்டும். இதை மெய்யும் வாயும் கண்ணும் மூக்கும் செவியும் எனக் கூட்டிச் சொல்ல வேண்டும். செவியும் என உம் இறுதியில் வந்தது, இறந்தது தழீஇய எச்சவும்மை. பிறவும் பக்குவப்பட வேண்டுமென்பதே எச்சக் கருத்து. 'செவியும் பக்குவப்பட வேண்டும்' என்றால், பிறவும் என்பது பெறப்படு கிறதல்லவா? எண்சுட்டி முற்றுப்பெறக் கூறாதபோது, எஞ்சிய வற்றை உணர்த்த, ஈற்றில் உள்ளதுடன் 'உம்'மை சேர்க்க வேண்டும் என்பதே கருத்து. கூழங்கைத் தம்பிரான் உரை தவிர, பிற உரையாசிரியர்கள் விளக்கம் பொருந்தவில்லை.

## சில எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்பு விதிகள்

**428. பெயர்ச் செவ்வெண், ஏ, என்றா, எனா எண்**
**நான்கும் தொகைபெறும். உம்மை என்று என ஒடு**
**இந்நான்கு எண்ணும் அஃதின்றியும் இயலும் 9**

பெயர்ச் செவ்வெண் - பெயர்கள் அடுக்கி வருதல். காலனும் வேலனும் மாலனும் என வரவேண்டியது 'உம்' தொக்கு, காலன், வேலன், மாலன் என வருவதையே பெயர்ச்செவ்வெண் எனக் குறிக்கின்றனர். எண்ணிடைச் சொல் 'உம்' இன்றி வருவது- எண்ணில்லாதது 'செவ்வெண்' எனப்படுவது, தமிழ் இலக்கணக் குறியீடுகளின் செவ்வியல் தன்மையைக் காட்டுகிறது.

பெயர், ஏ, என்றா, எனா எனும் எண்ணிடைச்சொற்கள் நான்கும் இறுதியில் 'தொகைச்சொல்' பெற்று வரும்.

உம், என்று, என ஓடு எனும் நான்கு எண்ணிடைச் சொற்களும் தொகை பெற்றும் பெறாதும் வரும்; வரும். காலன் வேலன் மாலன் **மூவரும்** வந்தனர். நிலனே நீரே காற்றே நெருப்பே வானே **ஐந்தும்** ஐம்பெரும் பூதங்களாகும். நீரென்றா நெருப்பென்றா **இரண்டும்** தேவையே. நாடெனா மொழியெனா **இரண்டும்** நம் இருகண்கள். இவை தொகைச் சொல் பெற்று வந்தன.

இவை தொகைச்சொல் பெறாது உலக வழக்கில் வரின் 'இசை யெச்சம்' என்று கொள்ளவேண்டும். (காலன் மாலன் வந்தனர்). செய்யுளில் வரின் 'தொகுத்தல் விகாரம்' என்று கூற வேண்டும். (மா பலா வாழை கேிடைக்குமே நாட்டினில்).

காயும் கனியும் இரண்டும் கிடைக்கும் - தொகை பெற்று வந்தது

காயும் கனியும் கிடைக்கும் - தொகை பெறாது வந்தது

வீடென்று வயலென்று தோட்டமென்று துரவென்று நான்கும் உள

வீடென்று வயலென்று தோட்டமென்று துரவென்று உள

பூவென பொட்டென இரண்டு மங்கலப் பொருள்கள்

பூவென பொட்டென மங்கலப் பொருள்கள்

மண்ணோடு காற்றோடு நீரோடு நெருப்போடு நான்கோடு கலந்துவிட்டார்

மண்ணோடு, நெருப்போடு, வானோடு போயினள் காண்.

இவ்வாறு தொகை பெற்றும் பெறாதும் வந்தன.

## எண்ணிடைச் சொற்களுக்கு மேலும் சில சிறப்பு விதிகள்

**429 என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி**
**நின்றும் பிரிந்துஎண் பொருள்தொறும் நேரும் 10**

என்று, என, ஒடு மூன்றும் ஒரு சில சமயங்களில் ஒரிடத்தில் மட்டும் நின்று, பிறகு பிரிந்து எண்ணப்படும் பொருள்தோறும் சென்று பொருந்தும்.

வினை பகை என்று இரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். (குறள் 674)

இது வினை என்று பகை என்று என வரவேண்டும். ஆனால் ஓரிடத்தில் நின்று, மற்றதிலும் சென்று பொருந்தியது.

பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இதுவாவாம் இல்லிறப்பான் கண் (குறள் 146)

இது பகை என பாவம் என அச்சம் என பழிஎன - என்று எல்லா இடத்தும் எண்ணப்பட வேண்டும். ஆனால் இறுதியில் 'என' ஓரிடத்தில் நின்று, பிறகு அங்கிருந்து பிறவற்றோடும் சென்று பொருந்தியது.

பொருள் கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் (குறள் 675)

இதுவும் பொருள்களொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடனொடு என்று எண்ணப்பட வேண்டும். இறுதியில் நின்ற 'ஒடு' - எல்லாவற்றொடும் சேர்த்து எண்ணப்படவேண்டும்.

## இவை பெயரொடு மட்டுமன்றி, வினையொடும் அவ்வாறே வரும்

**430. வினையொடு வரினும் எண் இனைய ஏற்பன 11**

மேலே பெயரொடு வந்தது போன்ற எண்ணிடைச் சொற்கள் எல்லாம் ஏற்குமிடங்களில், வினைச்சொற்களோடும் பொருந்தி வரும்.

முல்லை அரும்ப மல்லிகை பூக்க மாலை வந்தது. - வினைச்செவ்வெண். (அரும்பவும் பூக்கவும் என எண்ண வேண்டும்.) முயன்றும் உழைத்தும் வருந்தியும் முன்னேறினார்- உம்மையெண். ஆடஎன்று பாட என்று வந்தனர் - என்று எண். எழுதவென படிக்கவென அறியாள் - 'என' எண். உண்ண உடுக்க, படுக்கவென்று வந்தார்கள் - என்று என்பது, உண்ணவென்று உடுக்கவென்று எனப் பிறவற்றோடும் சென்று சேரும். இவை யாவும் வினைச்சொல்லோடு வந்தன.

## தில்

## தில் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

**431. விழைவே காலம் ஒழியிசை தில்லே 12**

'தில்' - இடைச்சொல் விழைவு (விருப்பம்). காலம், ஒழியிசை (சொல்லாது ஒழிந்ததை (விட்டதைச்) சொல்வது - ஆகிய மூன்று பொருளிலும் வரும்.

தமிழ்மொழி மிகக் கூர்மைப்பட, இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே வளர்ந்து, செம்மைப்பட்டு விளங்கியதை, இச்சொல் வழக்குகள் காட்டுகின்றன.

வருகதில், பெறுகதில் என்றால் வரவேண்டும், பெற வேண்டும் என விரும்புவதை அந்தத் 'தில்' கூட்டியுணர்த்து கிறது. காதலியைப் 'பெறுகதில் அம்ம யானே' (குறு.14) என்றால், பெறுமாறு விழைவதை, விரும்புவதை அது குறிக்கிறது.

காதலியைப் பெற்றதை 'அறிகதில் அம்ம இவ்வூரே' (குறு.14) என்றால், பெற்றபின் அதை அறியட்டும் என்பதால், காலத்தை உணர்த்துகிறது. எம் சேரிப் பக்கம் தலைவன் - 'வரு கதில் அம்ம எம் சேரி சேர' (அகம்.276) என்றால் வரட்டும், ஒருகை பார்க்கிறேன் எனும் சீற்றத்துடன் கூறுவதால், இது 'ஒழியிசைக்கண்' வந்துளது.

## மன்

## மன் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

**432. மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபே றாகும் 13**

மன்-இடைச்சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருளும் தரும்.

'அதுமன் நாம் தேடும் ஊரே' என்றால், மன் பொரு ளின்றி நிற்கும் அசைநிலை ஆகும்.

'இது முன்பு கூரியதொரு வாள்மன்' என்றால், இப் பொழுது மழுங்கிவிட்டது எனப் பொருள்தருதலின், ஒழியிசைப் பொருள்.

'இது முன்பு அடர்ந்த காடுமன்' என்றால், இப்போது வயலாயிற்று அல்லது வீடாயிற்று என உணர்த்தலின் 'ஆக்கப் பொருள்' தருகிறது.

'சிறியகள் பெறினே எமக்கு ஈயும் மன்னே' - என்றால், ஔவைக்கு அதியமான் கொடுத்த கள், இப்போது அவன் இறந்ததால் இனிக் கிடைக்காது என்று சுட்டுவதால், இது 'கழிவுப் பொருள்'.

'தெய்வம் நமக்கு அருளும்மன்' - மிகவும் அருளும் எனப்படுதலால் மிகுதிப் பொருள்.

'பொலிந்தினிது இவ்வுலகில் வாழ்கமன் நீயே' என்றால்- நிலைபேறு ஆக, எனும் பொருள்படுகிறது.

## மற்று

## மற்று என்னும் இடைச்சொல் தரும் பொருள்கள்

**433. வினைமாற்று அசைநிலை பிறிது எனும் மற்றே 14**

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை, பிறிது எனும் மூன்று பொருளையும் தரும்.

வினைமாற்று -

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (குறள்.15)

கெடுப்பதை மாற்றி எடுப்பதைக் குறிக்குமிது வினை மாற்றுக்கு வந்தது

அசைநிலை - அன்றறிவாம் என்னாது அறம் செய்க
மற்று அது, பொன்றுங்கால் பொன்றாத்துணை'
(குறள் 36)

மற்று இங்கு அசைநிலை; வேறுபொருள் இல்லை.

பிறிது - ஊழிற் பெருவலி யாவுள மற்று ஒன்று
சூழினும் தான்முந் துறும் (குறள் 380)

இங்கு 'மற்று' என்பது, ஊழல்லாத பிறிது ஒன்று.

## மற்றையது என்னும் இடைச்சொல்

**434. மற்றையது என்பது சுட்டியதற்கு இனம் 15**

மற்றையது என்பது கருதியதற்கு இனமாகிய பிறிதொன்றைக் குறிக்கும்.

'மற்றையது' என்பது ஓர் இடைச் சொல்லாகும். முன்பு சொன்னதல்லாத - ஆனால் அதற்கு இனமான ஒன்றையே அது குறிக்கும். இரண்டு பொத்தகங்கள் உள்ள இடத்தில், ஒன்றை ஒருவன் எடுத்துவர அதை மாற்றி, மற்றையதை எடுத்துவா என்பது இது. இனமான ஒன்றையே மற்றையது என்று சுட்டுவர். (போந்தை - பனை. பனை ஓலையில் எழுதப்பட்டது பொத்தகம். பனை ஓலையில் மிடைவதை இன்றும் 'பொத்துதல்' என்பர்)

## கொல்

## 'கொல்' இடைச்சொல்லின் பொருள்கள்

**435. கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே 16**

கொல் என்பது ஐயப் பொருளாயும் அசைநிலையாயும் கூறப்பட்டு வரும்.

ஐயம் - வினா போல் அமையும்.

கற்றவர்களும் தமிழைத் தாழ்வாக நினைப்பது அறியாமை கொல்? ஆணவம் கொல்? - இவற்றில் எது என்பது ஐயம்.

'கற்றதனாலாய பயன் என்கொல்? (குறள் 2) என் என்பதே வினா; 'கொல்' பொருளின்றி நிற்கும் அசைநிலை.

## ஒடு, தெய்ய

**436. ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே. 17**

ஒடு, தெய்ய இரண்டும் செய்யுளில் இசை நிறைத்தற்கு வரும். 'போதொடு நிறைய, பொழுதொடுசாய' - இவை செய்யுள் இசையை - ஓசையை நிறைவிப்பன. வேறு பொருள் இல்லை. எனவே இங்கு 'ஒடு' - இசைநிறை எனப்படும்.

வருக தெய்ய வாழிய நலனே - இசைநிறைத்தற்கே வந்தது. தெய்ய-என்பதைத் தொல்காப்பியர் குறிக்கவில்லை. ஆனால் சங்கப் பாடல்களில் முன்னிலை அசையாகப் பயின்று பல இடத்தில் வருகிறது.

'உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்' (குறு.81)

'ஒண்தொடி ஞெமுக்கா தீமோ தெய்ய' (அகம் 60)

'தங்கினிராயின் தவறோ தெய்ய' (குறு.345)

ஐங்குறு நூற்றில் தெய்யோப் பத்து வருகிறது.

'பசலை பாயப் பிரிவே தெய்யோ' (231)

'நும்மூர்ச் செல்கம் எழுகமோ தெய்யோ (236)

தெய்ய-தெய்யோ ஆனது. இடைச்சொற்கள் பல இவ்வாறு பழஞ்சொற்களாகக் காணப்படுகின்றன.

## அந்தில், ஆங்கு

**437. அந்தில் ஆங்கு அசைநிலை இடப்பொருளவ்வே 18**

அந்தில், ஆங்கு இரண்டும் அசைநிலையாயும் இடப் பொருளைத் தரவும் வரும்.

அந்தில் அழகன் அன்பினன்-வேறு பொருளின்றிச் சார்ந்து நிற்கின்றது. அசைநிலை.

அந்திற் கொழுநற் காணிய வரும் - அங்கே வரும் என இது இடப்பொருள்.

'ஆங்கு தமிழறியார் அறிவுடையார் அல்லர் - வேறு பொருளில்லை. அசைநிலை.

சிலர் பேசும்போது, என்ன என்ன என்றும் சரியா சரியா என்றும் ஏதேனும் ஒரு சொல்லை, இடையிடையே சொல்லிக் கொண்டே பேசுவர். இதை 'உரையசை' என்பர்; செய்யுளில் வரின் 'அசைநிலை' என்பர்.

ஆங்காங்கு ஆயினும் ஆக - அவ்விடத்து எனும் பொருள் தருதலால், இடப்பொருள் ஆயிற்று.

## அம்ம - என்னும் இடைச்சொல்லின் பொருள்

**438. அம்ம உரையசை கேண்மின் என்றாகும்.** 19

அம்ம என்பது உரையசையாய்ப் பேச்சிடையே வரும். யான் சொல்வதைக் கேட்க - என்று ஏவற்பொருளிலும் வரும்.

அதுமற்றம்ம - பேச்சிடையே வருதலால் உரையசை. அம்ம வாழி தோழி - தோழியே! சொல்வதைக் கேள்! இது ஏவற் பொருள் தருகிறது.

## மா - வியங்கோள் அசைச்சொல்

**439. மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல்** 20

வியங்கோள் - மதிப்புடன் ஏவுதல், வாழ்க, பொலிக, வாழிய என்பன போல. வியங்கோள் அசைச்சொல் - வியங்கோ ளுடன் சேர்ந்து வரும் அசைச்சொல். உண்கமா - மா என்பது அசைச் சொல். 'உயர்கமா வலனே' - வெற்றி உயர்க. வியங்கோள் அசைச்சொல். உண்க, உயர்க - வியங்கோள் சொற்கள் (கிளவி- சொல்)

## முன்னிலை அசைச்சொற்கள் பத்து

**440. மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை,**
**வாழிய, மாள, ஈ, யாழமுன் னிலையசை** 21

மேலே உள்ள பத்தும் முன்னிலை அசைச்சொற்கள். முன்னின்றாரைத் தன்முகமாக அழைக்கப் பயன்படுவன.

மியா-கேண்மியா, சென்மியா, இக-காணிக, பேணிக, மோ-கண்டது மொழிமோ, சென்மோ. மதி-செல்மதி,கொள்மதி. அத்தை-செல்லியரத்தை, இத்தை-ஒன்று பாடித்தை (செல, பாடு). வாழிய-கேளாய் வாழிய தோழி. அம்ம வாழி தோழி. மாள-சிறிது தவிர்ந்து ஈக மாள நின் பரிசிலர்க்கு. ஈ-சென்றீ பெரும, யாழ-யாழநின் புகழே வாழிய பெரும.

## எல்லா இடத்தும் வரும் பலவகை அசைச் சொற்கள் இருபது

**441. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும்,**
**சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு,**
**அன்று, ஆம், தாம் தான், கின்று, நின்று அசைமொழி 22**

இவை இருபதும் எல்லா இடங்களிலும் அசைகளாக வந்து சொற்களை நிரப்பும். அசைநிலை என்பதற்குப் பொருளில்லை. ஆனால் சொற்களைச் சார்ந்து, அவற்றுக்கு வடிவும் அழகும் தரும். முற்காலத்து இவை பெருவழக்கின. இன்றும் அடிசக்கை, சக்கை போடு போடு, நல்லது என இவ்வாறு பொருளின்றி வருவன பலவுள.

யா - காண்டியா நீயே கண்மணியே
கா - காண்டிகா என்றன் கண்ணே
பிற - ஆயனை அல்ல பிற
பிறக்கு - பிறக்கிதனுட் செல்லுக பேதாய்
அரோ - நோதக இருங்குயில் ஆலுமரோ
போ - பிரியில் வாழாதென்போ
மாது - அவரைத் தெளிந்த என் நெஞ்சு
விளிந்தன்று மாதோ (மாது, ஓ இரண்டும் அசைகளே)
இகும் - கண்டிகும் அல்லமோ காதல
சின் - 'நன்றாகியவால் என்றிசின்' (இசின் எனவும் வழங்கும்)

குரை - அது பெறலருங்குரைத்தே
ஓரும் - அஞ்சுவதோரும் அறனே
வஞ்சிப்பதோரும் அவா
போலும் - வடிவழகி நீ வருந்தினை போலும்
இருந்து - நனவென்று எழுந்திருந்தேன் நல்வினை
ஒன்றில்லேன்
இட்டு - நெஞ்சம் பிளந்திட்டு
அன்று - பெம்மான் இவன் அன்றே (அன்று+ஏ=அசைகள்)
ஆம் - பணியுமாம் என்றும் பெருமை
தாம் - நீர்தாம் கொடுத்தீர்
தான் - நான்தான் பேசினேன்
கின்று - ஆசைப்பட்டு இருக்கின்றேன்
(கின்று - இங்கு நிகழ்காலம் காட்டவில்லை.
இருப்பேன் என்பது கருத்து)
நின்று - அங்ஙனே நின்று அனைவருமே ஏத்த

இவை இவ்வாறு பொருள் கருதியல்லாமல், ஏதோ ஓசை நிரப்பவோ - சொல்லிடையே அசைபோடவோ வருவனவாய், ஒரு மொழியிடையே வழங்குவன.

# 5. உரியியல்

## இயல் கருத்து நிரல்

பெயர், வினைச் சொற்களின் இயல்பை உணர்த்தும் பண்பு அடைகள் போலவும், சில சமயம் அடிச்சொற்கள் போலவும் அமைபவை இவை. 'செய்யுட்கு உரியன உரிச்சொல்' என்பதால், இலக்கியத்துள் வரும் அருஞ்சொற்கள் பற்றியன என்றே நம் முன்னோர் கருதியுள்ளனர் எனத் தெரிகிறது.

குறிப்புப் பெயரெச்சங்களும் பண்படைகளும் (நல்ல பையன், நன்கு பேசினான், தெளிதமிழ்) இன்று அடைமொழி வகையில் அடங்கும். உரிச்சொற்கள் பல அத்தகையன; ஆயினும் அவற்றுள் இவை 'அருஞ்சொற்களாய்' தனிப் பண்புடன் காணப் படுகின்றன. அரிய சொற்கள் என எண்ணும்பொழுது ஒரு பொருள் குறித்த பல சொற்களும் பல பொருள் குறித்த ஒரு சொல் தொகுதிகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. தமிழில் 'நிகண்டு' நூல்கள் எனப்படும், தனித்தன்மை வாய்ந்த, ஒருவித அகர முதலிகளுக்கு இவை வித்திட்டன. ஆங்கிலத்தில் 'தெசாரசு' (Thesaurus) எனப்படும், அகரமுதலிகளுடன் இவை ஒப்புமையுடையன.

ஆயினும் எல்லாமே பழங்காலத் தோற்றம், இடைக் கால வளர்ச்சி என்பதோடு நின்றுவிட்டன. இன்று மரபு வழிப்பட்ட, ஆழ்ந்தகன்ற, நுண்மாண் நுழைபுலப் பெரும்புலவர் பலர் தோன்றினாலன்றி, இவை மேன்மேலும் வளர்க்கப்பட்டு, இன்றைய நிலையை எட்டுவது இயலாது.

நன்னூலுக்கு முதனூல் தொல்காப்பியம். எனவே அவர் உரியியலிலும் மரபியலிலும் கூறியன சில, இங்கு இவ்வியலில் தரப்பட்டுள்ளன. உரிச்சொல் இலக்கணம் உலக உயிர்வகைகள், அவற்றின் பண்புகள், ஒரு பண்பை உணர்த்தும் பல உரிச்சொற்கள், பல பண்புகளை உணர்த்தும் ஒருசொல், ஒரு பொருள் உணர்த்தும் பல சொற்கள், உரியியலுக்கும் சொல்லதிகாரத்திற்கும் இலக்கணம் முழுவதற்குமான புறனடைகள் என இவ்வியல் சுருக்கமாக அமைகிறது.

### உரிச்சொல்லின் இலக்கணம்

*1.1.* வெளிப்படச் சொல்லப்படுவனவும் குறிப்பால் உணரப் படுவனவுமான, பலவகைப்பட்ட குணப் பண்புகளையும் தொழிற்பண்புகளையும் குறிப்பிடும் பெயர்களாக வரும். பல குணத்தை உணர்த்தும் ஒரு சொல்லாகியும் ஒரு குணத்தை உணர்த்தும் பல சொல்லாகியும் பொருந்தி வரும். ஏனைய பெயர், வினைச்சொற்களை விட்டு நீங்காமல், அவற்றுடன் சேர்ந்தே வழங்கும். மேலும் இவை இலக்கியத்திற்கு (செய்யுளுக்கு) உரியனவாய் வந்து 'உரிச்சொல்' எனப்படும்.

### 'பண்பைக்குறிப்பிடும்' என்றால்,

### பண்பு - என்பதன் விளக்கம் யாது?

*1.2.* உலகத்திலுள்ள உயிருள்ளனவும் உயிரில்லாதனவுமான பொருள்களின் பண்புகள், இயல்புகள் ஆகியவையே 'பண்பு' எனப்படும்.

### உலகவுயிர்கள் ஐந்து வகைப்படும்

*2.0.* உடல், நா, மூக்கு, கண், செவி - எனும் ஐம்பொறிகளின் அறிவை, ஓரறிவு முதலாகக் கீழே உடம்பில் தொடங்கி மேலே செவியாற் கேட்பதுவரை எண்ணி, ஓரறிவுயிர் முதலாக, ஐயறிவுயிர்கள் ஈறாக ஐந்து வகை உயிர்கள் உள்ளன.

### ஓரறிவுயிர்

*2.1.* உற்று அறியும் அறிவே முதலறிவு. அது தொடுதலால் அறிவது. உட்துளையுடைய தென்னை, பனை முதலிய 'புல்' இன வகையும் வேம்பு, தேக்கு முதலிய உள்ளே வயிரமுடைய 'மர' இன வகையும், தொட்டறிவுடைய ஓரறிவுயிர்களாகும். (மரம் செடி கொடி அனைத்தும் இதிலடங்கும்.)

### ஈரறிவுயிர்

*2.2.* தொட்டறிவுடன் நாச்சுவை அறிவும் சேர்ந்தது ஈரறிவுயிர். முத்துச் சிப்பி, சங்கு, கிளிஞ்சல் முதலியன ஈரறிவுயிர்கள்.

### மூவறிவுயிர்

*2.3.* தொடுதல், நாச்சுவை, மூக்குவழி முகந்தறிதல் - மூன்று முள்ளவை மூவறிவுயிர்கள். செல், சிதல் எனப்படும் கறையான், எறும்பு முதலியன இவ்வுயிர்கள்.

## நாலறிவுயிர்

2.4. தொடுதல், நாச்சுவை, மோந்தறியும் மூக்கறிவுடன், கண்ணால் பார்த்தறியும் நான்கறிவுடையவை தும்பி, வண்டு முதலான உயிரினங்களாகும்.

## ஐயறிவுயிர்

2.5. மேலே கூறிய நான்குடன் செவியால் கேட்டு அறியும் ஐந்து பொறிகளின் அறிவுகளையுடையவை ஐயறிவுயிர்கள். வான வராம் தேவர்கள், மக்கள், கீழ் உலக நரகர்கள், விலங்குகள், பறவைகள் முதலானவை இவ்வகையில் அடங்கும் என்பது பவணந்தி முனிவர் கருத்து.

## உயிரில்லாத பொருள்கள்

3. உயிர் ஒன்றே அறியும் இயல்புடையது. அவ்வாறு தொடுதல் தொடங்கிய ஐம்பொறி அறிவு எதுவுமில்லாத, உயிரற்ற உடல் முதலான அனைத்தும் உயிரில்லாதவையே.

## உடலும் உயிரும்

3.1. உடல் வேறு, உயிர் வேறு அல்ல. உடலின்றேல் உயிரை அறிய முடியாது. எனவே 'ஒற்றுமைத் தன்மைப்' படி உடலும் உயிரும் ஒன்றே; ஆயினும் வேற்றுமைத் தன்மைப்படி எண்ணினால் உடல்வேறு; உயிர் வேறேயாம்.

## உயிருள்ளவற்றின் குணப்பண்புகள் (32)

4.1. உடம்பொடு கூடிய உயிர்களின் பண்புகளாவன 32 ஆகும். அவை வருமாறு: அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாணம், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி. இத்தகையன பிறவும் கொள்க. (நிறை - மனத்தை ஒரு வழி நிறுத்துவது நிறை. கற்பு போல்வது இது. பொறை - பொறுமை. ஓர்ப்பு - ஆராய்தல். கடைப்பிடி - கொள்கைகளில் உறுதி. இகல் - மன மாறுபாடு. பொச்சாப்பு - கடமைமறதி. மதம் - வலிமை. மறவி - மறதி.)

## உயிருள்ளவற்றின் தொழிற் பண்புகள்

4.2. துய்த்தல் - உலக இன்பதுன்பங்களை அனுபவித்தல். துஞ்சல்- அவ்வாறு அனுபவியாது உறங்குதல். தொழுதல்- வணங்குதல். அணிதல் - அணிமணிகளால் தன்னை அழகுபடுத்திக் கொள்ளுதல். உய்த்தல் - முயன்று உழைத்தல். இவை போல்வன பிறவும் உடலோடு கூடிய உயிர்த் தொழிற் குணங்களாகும்.

உடலின்றேல் உயிரால் மட்டும் இவை நுகரப்படா என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

## உயிரல்லாத பொருள்களின் பண்புகள்

4.3. பலவகை வடிவங்கள், இரு வகை மணம் (நல்ல மணம், கெட்ட மணம்), ஐந்து வகை வண்ணங்கள் - நிறங்கள் (வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை), அறு- வகைச் சுவைகள் (கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு (உப்பு), கார்ப்பு(காரம்), இனிப்பு என்பன. எட்டுவகைத் தொடுதற் குணங்கள் (வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்ம்மை, சீர்மை, இழுமெனும் வழு வழுப்பு, சொர சொரப்பு எனும் சருச்சரை).

## உயிருள்ளவை, உயிரற்றவை இரண்டற்கும் பொதுவான தொழிற்பண்புகள்

4.4. தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்பனவும் இவை போல்வன பிறவும் உயிருள்ளன, உயிரில்லன ஆகிய இருபொருள் களுக்கும் பொதுவான குணங்களாகும்.(இசைத்தல்-பாடுதல், ஆடுதல், அசைத்தல், மீட்டுதல், சொல்லுதல், கூவுதல் யாவும் அடங்கும்.)

## ஒரு குணம் உணர்த்தும் பல உரிச்சொற்கள்

5. சால, உறு, தவ, நனி, கூர், கழி - எனும் ஆறும் மிகுதி எனும் பொருளைத் தரும். (சாலப் பெரியன்,-உறுபொருள், தவச் சிறிது, நனிபேதை, துயர் கூர் வாடை, கழிபேருவகை.)

## பலவகைப் பண்புகளை உணர்த்தும் ஓர் உரிச்சொல்

6. கடி - என்பது ஓர் உரிச்சொல். இந்த ஒரே சொல் 13 குணப் பண்புகளை உணர்த்தும்.

கடிமனை - காவலுள்ள வீடு. கடிவாள் - கூரிய வாள். கடிமலர் - மணமுள்ள மலர். கடிமார்பன்- விளக்க முள்ள மார்பினன். கடியரண் - அச்சம் தரும் கோட்டை. கடி நகர் - சிறப்பமைந்த நகரம். கடிவிடுதும் - விரைந்து அம்பு விடுதல். கடியுணவு - மிக்க உணவு. கடிமனை - புதுமனை. கடிமுரசு - ஆர்ப்பரிக்கும் முரசு. கடிமது - நீக்கவேண்டிய மது, கடிமணம் - திருமணம். கடிமிளகு - காரம் மிக்க மிளகு. இவை நிழற்பொருள்கள். சிற்சில மாறியும் பொருள்தரும்.

(கடி என்ற வேர்ச்சொல்லிலிருந்து கடிது, கடினம், கடிதாக, கடிகின்றனர், கடிவது, எனவும் இதுவே கடும் எனத்திரிந்து கடுங்குளிர், கடும்பகல் எனவும் வருவன பலவுள. இங்ஙனம் எண்ணினால் ஓர் அடிச்சொல்லிலிருந்து, ஆலமரமும் விழுதுகளும் போல, மிகப்பல சொற்கள் உருவாவதைக் கண்டு மகிழலாம். இதைத் 'தமிழ்ச்சொல் விளையாட்டாக'- எளிமைப் படுத்திக் கற்பிக்கும் காலம் வரவேண்டும்.)

## ஒரு பொருள் தரும் பல சொற்கள்

7.1. 'சொல்' - என்பதற்கு மட்டும், பதினாறு சொற்கள் இருப் பதைப் பவணந்தியார் பட்டியலிடுகிறார். மாற்றம் (மறு மொழிதல்),நுவலுதல் (விளக்குதல் - நுவற்சி), செப்புதல் (ஒன்றைத் தானே சொல்லுதல்), உரைத்தல் (விளக்கி உரைத்த 'உரை' எலாம் அடங்கும். புகழ்ந்துரைத்தலுமாம்), கரைதல் (கூப்பிடுதல், காக்கை கரையும், தேம்பி அழுதல்), நொடிதல் (கற்பனையாகக் கூறுதல், விடுகதை 'நொடி' எனப்படும்.), இசை (இனிதாகப் பேசுதல்), கூற்று (குறிப்பிட்ட ஒன்றைக் கூறுதல். இன்று விலை கூறுதல்), புகறல் - விருப்புடன் பேசுதல், மொழிதல் - தெளிவாகப் பேசுதல், கிளவி - கிளத்தல், கருத்தைக் கூறுதல் (சங்கப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி பேசுவதை தலைவன் கூற்று, தலைவிக்குரிய கிளவி என்பர்.), விளம்புதல்- பலரறியக் கூறுதல், திரும்பத் திரும்பச் சொல்லுதல், அறைதல் - முகத்திலடித்தாற்போல் அழுத்த மாகக் கூறுதல். பாடுதல் - நீட்டிப் பேசுதல் (ஒரே பாட்டாய்ப் பாடுகிறான்),பகர்தல் - விலை பகர்தல், இன்னதென்று சுட்டிக் கூறுதல். இயம்பல் - இனிதாகவும் முழங்கியும் பேசுவன.

மேலும் பன்னுதல், கழறுதல், பேசுதல், கடிதல் என இவ்வாறு நாற்பதுக்கும் மேற்பட்ட சொற்கள் உள. இவை ஒவ்வொன்றும் தனித்தனி நிழற்பொருளுடனும் சில பொது வாகவும் வழங்கும்

## ஒரு பொருள் தரும் பல சொற்கள்

7.2. 'ஓசை' - பற்றி 22 சொற்களிருப்பதை, பவணந்தி முனிவர் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை (தல்), இரக்குதல் (இரங்குதல்), அழுங்கு(தல்), இயம்பல், இமிழ்(தல்), குளிறு(தல்), அதிர்(தல்), குரை(த்தல்), கனை (த்தல்), சிலை(த்தல்), சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு.

இவைபோல்வன பிறவும் பலவுள. ஓசையைக் குறிக்கும் இவை தனித்தனி நிழற்பொருளுடனும் சில பொதுவாகவும் வழங்கும். ஆந்தை இரட்டும் (மாறி மாறி ஒலிக்கும்). ஆர்கலி உலகத்து - ஆரவார ஒலிமிக்க உலகத்தில். துவைத்தல் - இசைக்கருவிகளை இயக்குதல். (இன்று துணிகளைத் துவைப்பர்.). யானை பிளிறும், குதிரை கனைக்கும், மான் சிலைக்கும். (மானின் ஓசை 'சிலைத்தல்' எனப்படும்.). இமிழ்தல் - இனிதாக ஒலித்தல். குளிறு - முன்பு கிளி ஓட்டும் கருவி. நாய் குரைக்கும். சும்மை - பேரொலி. கௌவை - வதந்தி, அலர் கூறுதல். கம்பலை - புலம்புதல், ஆர வாரித்தல். அரவம் ஆள்வரும் அரவம், பாம்பு திரியும் அரவம் (மென்மையான ஓசை ஒன்று கேட்பது).

## புறனடை நூற்பாக்கள் - உரியியலுக்குப் புறனடை

8.1. பெயர் வினை இடை உரிச்சொற்களில் இன்னசொல் இன்ன இடத்தில் இவ்வாறு பொருள் தந்து நடக்கும் என்று இசைக்க வந்தது இந்நூல். இதனுள் குணப் பெயர்களையும் அக்குணத்தைக் கொள்ளும் பெயர்களையும் முழுவது மாகச் சொன்னால், அது மிகப் பரந்துபட்டுச் செல்லு மாதலின், அவ்வாறு சொல்லாது கைவிட்டனம். எனவே அவை அனைத்தையும் பிங்கலந்தை, திவாகரம் முதலாகிய உரிச்சொல் நூல்களை விரும்பிக் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் நல்ல புலவர்கள் கடமையாகும். (அவை நிகண்டுகள் எனப்படும்.)

## சொல்லதிகாரத்திற்குப் புறனடை

8.2. சொல்தோறும் இதன் இலக்கணம் இது என்று சொல்லத் தொடங்கினால், அது முடிவிலதாய், எல்லையற்றுப் போகும். எனவே இதுகாறும் சொல்லியவற்றின் இயல்புப்படி, சொல்லாத மற்றைய பிறவற்றையும் இதே மரபுப்படி தெளிவாக அறிந்து கொள்ளுதல், தெளிந்த அறிவுடையோர் கடமையாகும்.

## இலக்கணம் முழுவதற்கும் புறனடை

8.3. இலக்கணம் என்பது, வாழும் மொழிக்கு உரியது. அவ்வாறு உயிர்ப்புடன் வழங்கும் மொழியில் கால வேறுபாடுகளால் விளைவன பலவாகும். அதனால் பழைய இலக்கண விதிகள் பல நீங்குதலும் புதிய விதிகள் பல புகுதலும் குற்றமாகா.

வழங்கும் உயிருள்ள மொழியில், பிற சொற் கலப்பு, இலக்கண மாறுதல்கள், வழுவமைதிகள் நேர்தல் இயல்பேயாம். அவற்றை முன்னர் வந்த மரபுப்படி, நெறி முறைப் படுத்தலே, அம்மொழியை வழங்குபவர் கடமை யாகும். அல்லாமல் வரன்முறைப் படுத்தாது விடுதலும் குற்றம்; புதியன புகுதலைக் குற்றமெனச் சொல்வதும் தவறாகும்.

அகர முதலிகளும் இலக்கணக் கூறுகளும் கலைக் களஞ்சியங்களும் காலந்தோறும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

# உரியியல்

உரிச்சொற்கள் பண்பை உணர்த்திச் செய்யுள் எனப்படும் இலக்கியத்திற்கு உரியவாய் வருதலின், 'உரி' எனப் பெயர் பெற்றன. பெயர்வினைகளைச் சார்ந்து வருதலின் அவற்றிற் குரிய இயல்பை உணர்த்தும் பண்பு அடைகள் - அடை மொழிகள் எனவும் கருத இடம் தருகின்றன. இவை குறிப்பாலுணரப்படும் என்றும் ஐம்பொறிகளால் (மெய் வாய் கண் மூக்கு செவி) உணரப்படும். என்றும் விளக்கப்பட்டுள்ளன. இவை அடிச்சொற் களாக வரும். அருஞ்சொற்களெனக் கொண்டு, இவற்றிற்கு நிரல்படப் பொருள் கூறுவார்,தொல்காப்பியர். 'உரிச்சொல் நிகண்டு' என அகராதி போல, அருஞ்சொற் பொருள் அகர முதலி தோன்ற இது அடிப்படையாயிற்று.

இடைச்சொற்கள் பெயர், வினைகளின் இடையேயும் முதலிலும் இறுதியிலும் வருவனவாம், முதல், உரிச்சொற்கள் ஒருசார் பண்புப் பெயர்களாய் நிற்பன எனலாம். இடைச்சொற்கள் போலாது, இவை முழுச்சொற்களாய் நிற்பன. எனினும் பெயர் வினைகளை ஒட்டியே வழங்குவன. பண்புப்பெயர்களாய் - பெயர் வினைக்கு அடையாய் வருவன அனைத்தும் உரிச்சொற்கள் எனப்படுதல் சாலும். ஆயினும் அருஞ்சொற்களாய், இலக்கியத் திற்குரியன மட்டுமே தனித்து விளக்கபட்டன எனக் கருதலாம்.

## உரிச்சொற்களின் பொது இலக்கணம்

**442. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவி, பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்** 1

பல்வகைப் பண்புகளாவன இசையும் (வெளிப்பட இசைத் தல்), குறிப்பு (மனத்தால் உணர வைத்தல்), பண்பும் (ஐம் பொறியால் அறியப்படும் குணப்பண்பும், தொழிற்பண்பும்) ஆகியன. பகர் பெயராகி - இப்பண்பைப் பகரும் (சொல்லும்) பெயராக வரும். பல சொல் ஒரு குணத்தை உணர்த்துவன; பலகுணத்தை உணர்த்தும் ஒரு சொல் எனப் பொருந்திவரும். ஏனைய பெயர், வினைச் சொற்களை விட்டு நீங்காமல், அவற்றுடன்

ஒட்டியே வழங்கப்படும். இவ்வாறு செய்யுட்கு (இலக்கியத்திற்கு) உரியனவாய் வரும் அருஞ்சொற்களே உரிச்சொற்கள் எனப்படும்.

உரிச்சொல்லைப் 'பல்வகைப் பண்பும் பகர் பெயர்' என்று பவணந்தியார் கருதுகிறார்.

இன்றைய மொழியியலார் கருத்தின்படி இவை பல அடை மொழிகளாய் வருவன; மற்றும் பல அடிச்சொற்களாய் நின்று, அவற்றிலிருந்து சொற்கள் பல தோன்றக் காரணமாவன,

## பல்வகைப் பண்பும் பகர்பெயர் என்றால், 'பண்பு' என்பது என்ன?

**443. உயிர்,உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே 2**

உலகத்திலுள்ள உயிருள்ளவற்றுக்கும் உயிரில்லாத வற்றுக்கும் உரிய பொருட்தன்மைகள் - அதாவது அவற்றின் இயல்புகள் - குணங்கள் அல்லது பண்புகள் எனப்படும்.

## உலகத்தில் உயிருள்ளவை ஐந்து

**444. மெய்ந் நா மூக்கு,நாட்டம் செவிகளின்**
**ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டு மேல் உணர்தலின்**
**ஓரறிவு ஆதியா உயிர்ஐந்து ஆகும் 3**

மெய் (உடல்), நா மூக்கு நாட்டம் (கண்), செவி என்பன ஐந்து பொறிகள். இவற்றுள் ஒன்று முதலாகக் கீழிருந்து மேலே எண்ணி உணரும்படியுள்ளவற்றை ஓரறிவுயிர், ஈரறிவுயிர் முதலி யனவாக எண்ணுவர். இவ்வாறு உயிர்கள் ஐந்து வகைப்படும். உடலால் அறிவது தொடுதலுணர்வு - இதை 'ஊறு' (உறுதல்-தொடுதல்) எனச் சுருக்கிக் கூறுவர். வடமொழியில் 'பரிசஉணர்வு' (ஸ்பரிசம்) என்பர். கீழிருந்து மேலே இவ்வுணர்வுகளை எண்ணு தலாவது உடலுணர்வோடு, நாவுணர்வுடைமை (சுவை); அவை இரண்டுடன் மணம் முகந்தறிதலுடைமை; அவை மூன்றுடன் கண்ணாற் பார்க்கும் அறிவுடைமை; அவை நான்குடன் ஓசை கேட்குமறிவுடைமை. இவை முறையே ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர் என எண்ணப்படும். மெய் வாய் மூக்கு கண் செவி என ஐம்பொறிகளால் அறியும் உயிரென மக்களையும் அடக்கி

விடுகிறார், பவணந்தி முனிவர், கீழ்க்கொண்டு மேல் உணர்தல்- கீழேயிருந்து மெய் (உடல்) முதலா, செவி வரை வரிசையாக அறிதல். இவை ஓரறிவு, ஈறறிவு என இவ்வாறு வரிசைப்படி எண்ணப்படும். தொல்காப்பியர் ஐம்பொறிகளுக்கு அப்பால் 'மனம்' என ஒன்றைச் சேர்த்து, அதனாலாம் அறிவுடைய மக்களை 'ஆறறி வுயிர்' என்றார் பவணந்தி முனிவர் மனவுணர்வு என்பதும் சற்றுக் கூடுதல் குறைவாக எல்லாவுயிர்க்கும் உண்டென்ற கருத்துடன் அதனை முழுமையாகவுடைய மக்களையும் இவ் ஐந்தனுள்ளேயே அடக்கிவிட்டார். நன்னூலின் முதல் உரையாசிரியர் மயிலை நாதர் தரும் விளக்கம் இது.

## ஓரறிவுயிர்கள்

**445. புல் மரம் முதலஉற்று அறியும் ஓர் அறிவுயிர் 4**

புல்லும் மரமும் முதலியன உடலால் தொட்டு (உற்று) அறியவல்ல ஓரறிவுயிர்களாகும்.

தொடுதல் - உடம்பிறபடுதல். புல் - உள்ளீடில்லாத தென்னை, பனை வகைகள். மரம் - உள்ளே வயிரம் உடைய வேம்பு, தேக்கு முதலியன. புல் செடி கொடி மரம் அனைத்தும் ஓரறிவுயிர்களாகும். வண்டு படப்படப் பூ மலரும். மரம் கூட, தடை ஏற்படுமாயின், வளைந்து வளரும். 'தொட்டாற் சினுங்கி' போல, இவற்றுக்கு நுட்பமாகத் 'தொடுதலால்' ஆகும் உணர் வுண்டு. இதை முதன்முதற் கண்டு, பயிரினங்களையும் உயிருடை யவை என வகைப்படுத்திய அறிவியல் ஒட்பம், தொல்காப்பி யரிடம் காணப்பட்டது.

## ஈரறிவுயிர்கள்

**446. முரள்நந்து ஆதி நா அறிவொடு ஈரறிவுயிர் 5**

முதலறிவு - தொடுதலாம் ஊற்றறிவு; இரண்டாம் அறிவு நா அறிவு, சுவைத்தறிவது. முரள் - சிப்பி. நந்து - சங்கு கிளிஞ்சல் முதலியன பலவும் தொடுதலோடு நாச்சுவையறிவு முடைய ஈரறிவுயிர்களாகும். முத்துச் சிப்பி அல்லது சங்குப்பூச்சி ஏதேனும் தாக்கிய வழி சுருங்கிக் கொள்ளும்; இரையை அறிந்துண்ணும் நாச்சுவையறிவுமுண்டு.

## மூவறிவுயிர்கள்

**447. சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூ வறிவுயிர் 6**

சிதல் - கறையான், எறும்பு. இவை இன் சுவைப்பண்டம் உள்ள இடத்தை மோந்தறிய வல்லன. எனவே முன் கூறிய தொடுதல், நாவுடன் மோந்தறியும் மூக்கறிவும் சேர மூவறிவின வாயின. இவை ஒன்று தடுத்த - தாக்கிய வழியல்லது அறியாமை யின் கண்ணில்லை என்பதும் சத்தமிட்டாலும் ஓடாமையின் செவியறிவில்லை என்பதும் பெறப்படுமென்று உரையாசிரியர் விளக்குவர்.

## நாலறிவுயிர்கள்

**448. தும்பிவண்டு ஆதிகண் ணறிவின் நாலறிவுயிர் 7**

தும்பி - வண்டினுள் சிறந்த ஒரு வகை. தும்பி, வண்டு முதலியவற்றுக்குக் கண்ணுண்டு. அதனால் உறுதல், நாச்சுவை, மோந்தறிதலுடன் கண் பார்வை அறிவும் சேர்ந்து இவை நாலறிவுயிர்கள் எனப்படும்.

## ஐயறிவுயிர்கள்

**449. வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்**
**ஆதி செவி அறிவோடு ஐயறிவுயிரே 8**

வானவர் மக்கள் நரகர் விலங்குகள் பறவைகள் முதலானவை முற்கூறிய நான்கு பொறியறிவுகளுடன் செவியால் ஓசையையும் அறியும் ஐயறிவுடைய உயிர்களாகும்.

வானவர், நரகர்களை நாம் கண்டதில்லை. தொல்காப்பியர் இவர்களைச் சேர்க்கவில்லை, மக்களை மட்டுமே கூறினார். மேலும் விலங்குகளையும் புள்களையும் (பறவை) ஐயறிவின என்ற தொல்காப்பியர், அவற்றோடு மனம் ஒன்றைக் கூட்டி 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றார். பவணந்தி முனிவர் ஐம்பொறிகள் வழிப்பட்ட அறிவுகளே மக்களிடத்தும் வெளிப்படக் காணப்படுதல் கருதி, அவர்களையும் ஐயறிவுயிர்கள் என்றார்.

ஆயினும் 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை, மற்று உயிருள்ளவும் இல்லவும் அஃறிணை' (261) என்ற விடத்து, மக்களை, ஏனைய வற்றிலிருந்து பிரித்துக் கூறியுள்ளமை இங்கு கருதத் தக்கதாகும்.

## உயிரில்லாத பொருள்கள்

**450. உணர்விய லாம்உயிர் ஒன்றும் ஒழித்த**
**உடல் முதல் அனைத்தும் உயிரல் பொருளே** 9

அறியும் இயல்புடையது உயிர் ஒன்றே. உணர்வியல் - அறியும். இயல்பு; உணரும் தன்மையுமாம். அது தவிர்த்த இந்த உடல் முதலான அனைத்தும் உயிரற்ற பொருள்களாம். மேலே கூறிய உயிர்வகை எல்லாம் உடலொடு கூடியனவே. எனினும் உயிர்நீங்கின் அவையும் 'உயிரற்ற' வையே.

## உடலும் உயிரும் ஒன்றா? வேறா? ஐயம் அகற்றுதல்

**451. ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்**
**வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர்** 10

இது ஓரறிவுயிர் என்னும் போது, உடலையும், சேர்த்தே கூறுகிறோம். உயிரைமட்டும் தனியே கண்டு கூறுதல் இயலாது. எனவே உடலும் உயிரும் ஒற்றுமைத் தன்மைப்படி ஒன்றெனவே தோன்றும். ஆயினும் வேற்றுமை நயமாம் தன்மையை எண்ணும் போது உடல்வேறு; உயிர் வேறு என்று தான் கூறப்படும்.

## உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகள் (32)

**452. அறிவுஅருள் ஆசை அச்சம் மானம்**
**நிறைபொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல்**
**நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி**
**துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்**
**துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்**

வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல்கொள் உயிர்க்குணம் 11

உடல்கொள் உயிர்க்குணம் - உடம்பொடு கூடிய உயிரின் குணங்கள் இவை 32-ம் ஆகும். உரிச்சொல் பல்வகைப் பண்பு களையும் பகரும் என்றதனால் 32 பண்புகளை இங்கு முன் மாதிரியாகக் காட்டுகின்றார். 1. அறிவு, 2. அருள், 3. ஆசை, 4.அச்சம், 5. மானம், 6. நிறை - மனத்தை ஒரு வழி நிறுத்தல், 7. பொறை - பொறுமை, 8. ஓர்ப்பு - ஆராய்தல், 9. கடைப்பிடி - விதி களை உறுதியாகக் கடைப்பிடித்தல், 10. மையல் - மயக்கம், 11. நினைவு - மனத்தால் நினைத்தல், 12. வெறுப்பு, 13. உவப்பு- மகிழ்ச்சி, 14. இரக்கம், 15. நாண் - நாணம், 16. வெகுளி- கடுங்கோபம், 17. துணிவு, 18. அழுக்காறு - பொறாமை, 19. அன்பு, 20. எளிமை, 21. எய்த்தல் - சோர்வடைதல், 22. துன்பம், 23. இன்பம், 24.இளமை (யுணர்வு), 25. மூப்பு - முதுமை(யுணர்வு), 26. இகல் - மன வேற்றுமை, பகை, 27. வென்றி - வெற்றி, 28. பொச்சாப்பு - கடமையை மறத்தல், 29. ஊக்கம், 30. மறம் - வீரம், 31. மதம்- வலிமை, 32. மறவி - மறதி. இனையவும் - இத்தன்மையன யாவும். உடலொடு கூடிய வழியல்லது உயிர்க்குணம் வெளிப்படாமையின், 'உடல்கொள்ளும் உயிரின் குணம்' இவை என்றார்.

## உயிர்ப்பொருள்களின் தொழிற்பண்புகள் உயிரினத்தின் செயற்பாடுகள்

453. துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்
உய்த்தல் ஆதி உடலுயிர்த் தொழிற்குணம் 12

துய்த்தல் - ஐம்பொறிகளாலும் உலக இன்பதுன்பங்களை நுகர்தல் (அனுபவித்தல்). துஞ்சல் - துய்த்தலின்றி இருத்தல், உறங்குதல், தொழுதல் - வணங்குதல். அணிதல் - அணிந்து கொள்ளுதல். உய்த்தல் - செலுத்துதல், முயலுதல், உழைத்தல், இதில் படைப்பயிற்சி, உழவு, வணிகம், கற்றல் எல்லாம் அடங்கும். ஆதி - இவை போல்வன பிறவும். உடலுயிர்த் தொழிற் குணம்- உடம்பொடு கூடிய உயிர்த் தொழிற் குணமாகும்.

## உயிரல்லாத பொருள்களின் பண்புகள்

**454. பல்வகை வடிவு, இரு நாற்றம், ஐ வண்ணம்,**
**அறுசுவை, ஊஃறுஎட்டு உயிரல் பொருட்குணம் 13**

உயிரற்ற பொருள்களின் குணங்கள் இவை எனப் பட்டியலிடப் படுகின்றன. பலவகை வடிவங்கள் - வட்டம், கோணம், சதுரம் முதலியன. முழவு, குழல் என வடிவ வகைகள் கணக்கில. இரு நாற்றம் - நல்ல மணமும் கெட்ட மணமும். (நாற்றம் – மணம் என்பது பழம்பொருள்) ஐ வண்ணம்-வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐந்து வண்ணங்கள். அறுசுவை - கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு (உப்பு), கார்ப்பு (காரம்), இனிப்பு என்னும் ஆறு சுவைகள். ஊறு எட்டு - எட்டுவகையான தொடுதல் பற்றிய குணங்கள் (ஊறு - உறு தல்-தொடுதல் - 'ஸ்பரிசம்'): வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்ம்மை - மிக மெலிந்திருத்தல், சீர்மை, இழுமெனல்-வழுவழுப்பு, சருச்சரை - சொரசொரப்பு என்பர் இன்று.

## உயிருள்ளவை, உயிரில்லாதவை இரண்டற்கும் பொதுவாகிய தொழிற்பண்புகள்

**455. தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்**
**நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்**
**ஈதல் இன்னன இருபொருட் தொழிற்குணம் 14**

ஒரு பொருள் 1. தோன்றுதலும் 2. மறைதலும்; ஒன்று 3. வளர்தலும் 4. சுருங்குதலும் (குறைதல், தேய்தல்); ஒன்றை விட்டு 5. நீங்கலும் 6. அடைதலும் 7. நடுங்குதலும் 8. இசைத்தலும் (அதாவது பாடுதல், அசைத்தல், சொல்லுதல், கூவுதல், ஆடுதல் யாவும்); ஒன்றை 9. ஈதல் அல்லது கொடுத்தல். இவை ஒன்பதும் இவை போல்வன பலவும் உயிருள்ள பொருள் உயிரில்லாப் பொருள் இரண்டற்கும் பொதுவான தொழிற் பண்புகளாகும். அவற்றின் செயற்பாடுகள் இவை. பிள்ளை பிறந்தது, கண்ணகி தோன்றினாள், ஞாயிறு மறைந்தது, உயிர் பிரிந்தது, பிறை வளர்ந்தது, ஊரை அடைந்தான், கூட்டை

அடைந்தது - என இவ்வாறு வரும். மழை பெய்தது என்பதுவும் ஈதலில் அடங்கும். அனைத்தையும் ஒருவாறு இவற்றில் அடக்கலாம்.

இவற்றிலிருந்து, மேலே கூறிய யாவும் பண்பு பற்றிய வையாய், அடைமொழிகளாக வருமென்பதும் அவற்றுள் அருஞ் சொற்களாகச் செய்யுட்கே உரியனவாய் வருவனமட்டும் இங்கு தொகுத்து, முன்மாதிரியாகக் காட்டப் பெற்றன என்று அறிகிறோம்.

## ஒரே ஒரு குணப்பண்பை உணர்த்தும் பல உரிச்சொற்கள்

**456. சால உறுதவ நனிகூர் கழிமிகல் 15**

சால, உறு, தவ, நனி, கூர், கழி- ஆறு சொற்களும் 'மிகுதி' எனும் பொருளுடையன.

சாலப் பெரிய தமிழ்ப்பணி, சாலச்சிறந்தது தமிழ்வழிக் கல்வியே. உறு பொருள் கொடுத்தும் கற்கவேண்டும் (உறு பொருள் - கூடுதலான ஊதியம்). தவச்சிறிது - மிகச் சிறியது. நனிநல்லர் - மிக நல்லவர். துயர் கூர் மாலை - துயரம் மிகும் மாலைப்பொழுது. கழிகண்ணோட்டம் - மிகுதியாக இரக்கப் படுவது, செல்லங்கொடுப்பது.

## பலவகைப் பண்புகளை உணர்த்தும் ஓர் உரிச் சொல்

**457. கடிஎன் கிளவி காப்பே கூர்மை**
**விரையே விளக்கம் அச்சம் சிறப்பே**
**விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்**
**வரைவே மன்றல் கரிப்பினாகும் 16**

'கடி' என்னும் ஒரு சொல், மேற்காட்டியவாறு 13 குணப் பண்புகளை உணர்த்தும்.

காப்பு - காவல். கடி நகர் - காவலுள்ள நகரம்

கூர்மை - கடி முனை அரிவாள் - கூரிய முனையை யுடையது. விரை - மணம். கடிமலர் மாலை - மணமுள்ளது.

விளக்கம் - ஆடி அன்ன கடிமார்பன். விளங்கித் தோன்றுதல். அச்சம் - கடி யர மகளிர். அச்சம் தரும் வரையர மகளிர். இன்று தேவதைகள் என்பர். சிறப்பு - கடியரண், காவற்சிறப்பு அமைந்த கோட்டை. விரைவு - 'எம் அம்பு கடி விடுதும்' - விரைந்து விடுவது, மிகுதி- கடி உணவு அருந்தி, கடி எனும் வேர்ச்சொல், ('கடு' எனத்திரிந்து கடுங்குளிர், கடும்பகல் என வருவதுண்டு.)

புதுமை - கடிமனை புகுந்தனர். புதுமனை.

ஆர்த்தல் - ஆரவாரித்தல். கடி முரசு ஆர்ப்ப - ஓசை மிக்க முரசு. வரைவு - நீக்குதல். கடிமது நுகர்ந்தனர். கடிய வேண்டிய மது. மன்றல் - திருமணம். கடிமணம் காண வந்தனர். கரிப்பு - காரம். கடி மிளகு - காரம் மிக்க மிளகு.

## ஒரு பொருள் தரும் பல சொற்கள்

**458. மாற்றம் நுவற்சிசெப்பு உரைகரை நொடிஇசை**
**கூற்று புகறல் மொழிகிளவி விளம்பு அறை**
**பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே 17**

மாற்றம் முதலாக் இயம்பல் ஈறாகப் பதினாறும் 'சொல்' என்பதை உணர்த்தும் சொற்களாகும்.

சிறுசிறு நிழற்பொருள் வேறுபாடுண்டு. மாற்றம் - மறு மொழிதல், பதில் கூறுதல், நுவற்சி - நுவலுதல் - எடுத்துச் சொல்லுதல். செப்பல் - செப்பு(தல்) - கூறுதல். உரைத்தல் - உரை- வாயால் விளக்கியுரைத்தல். கரைதல் - அருளுரை கூறுதல், இரங்குதல், அழுதல், கூப்பிடுதல். நொடி(தல்) - நொடி - கற்பித்துச் சொல்லுதல். இசை(த்தல்) - இனிதாகப் பேசுதல். கூற்று - கூறுவது கூற்று. இது தோழி கூற்று என்பது போல்வன. புகறல் - புகன்றனன். விருப்ப மொழிகள்; அடிகளார் புகன்றனர். மொழி(தல்) - மொழி- சொல்லுதல். கிளவி-கிளத்தல் - விவரமாகக் கூறுவன. சங்க அகப் பாடல்களில் ஒருவர் கூற்றைக் கிளவி என்றும் குறிப்பிடுவதுண்டு. விளம்பு(தல்) - விளம்பல் - பலரறிய விளக்கிக் கூறுதல்; திரும்பத்திரும்பச் சொல்லுதலுமாம். அறை

(தல்) - அறைகுவன் - அழுத்தமாகச் சொல்லுவேன். பாட்டு - அவன் பாட்டைக் கேளுங்கள் (நீட்டிச் சொல்வது). பகர்ச்சி - பகர்தல் - விலை பகர்தல், இன்னதென்று கூறுதல். இயம்பல் - இயம்புதல் - இயம் - வாத்தியம். முழக்கமிட்டுக் கூறுதல். இன்னும் பன்னுதல், கழறுதல் என்பன போல நாற்பதுக்கும் மேற்பட்டவை இதே பொருளில் - சிறு சிறு நிழற்பொருள் வேறு பாட்டுடன் வழங்குகின்றன. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் இத்தகைய 'தமிழ்ச்சொல்' வளத்தை எடுத்துக்காட்டியுள்ளமையை அவர்தம் நூல்களில் காணலாகும்.

## ஒரு பொருள் தரும் பல சொற்கள்

**459. முழக்கு இரட்டு ஒலிகலி இசைதுவை பிளிறுஇரை**
**இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ்குளிறு அதிர்குரை**
**கனை சிலை சும்மை கௌவை கம்பலை**
**அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை 18**

முழக்கு - முதலாக ஆர்ப்பு ஈறாக இங்குக் கூறப்பட்ட 22ம் 'ஓசை' என்னும் ஒரு பொருளன. எனினும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி நிழற்பொருள் வேறுபாடும் உண்டு.

முழக்கு - தலைவர் வென்றே தீர்வோம் என முழங்கினார். இசை முழக்கம் கேட்கிறது.
இரட்டு - மாறிமாறி ஒலித்தல் ஆந்தை(குடிஞை) இரட்டும்.
ஒலி - 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'. தமிழ் ஒலிப்பு முறையே உச்சரிப்பு.
கலி - ஆரவார ஒலி. 'கலி கெழு மூதூர்'.
இசை - அருவி இசைக்கும் (ஒலிக்கும்).
துவை - வாத்தியம் துவைக்கும் (பேரொலி எழுப்பும்).
பிளிறு - யானை பிளிறும் (ஓசையிடும்).
இரை - இரைச்சல், இரைகின்றனர், பறவை இரைச்சல்
இரக்கு - இரங்கு - முரசு இரங்கும் (ஒலிக்கும்)
அழுங்கு - மழை அழுங்கும் (அழுகிறது என்பர்). அவலக் குரலையும் இது குறிக்கும்.
இயம்பல் - முரசு இயம்பின, முருடு அதிர்ந்தன.

இமிழ் - இமிழ்தல், இனிதாய் ஒலித்தல், இமிழ்கடல் அலைகள்.

குளிறு - முழவு குளிறும். தட்டை ஒலி குளிறுதல் எனப்படும்.

அதிர்(வு) - இடி அதிர்கிறது. பேரொலி எழுப்புதல்.

குரை- நாய் குரைக்கிறது. 'குரை புனல்' - ஒலிக்கும் ஓடைநீர்.

கனை - குதிரை கனைக்கும். கனை கடல் அலைகள்.

சிலை - மான்கள் சிலைப்பது மென்மையாய் இருக்கும்.

சும்மை - சும்மை மிகு தெரு, ஆரவாரம்.

கௌவை - கௌவை நீர் வேலி - கடல். மக்கள் 'வதந்தி' பேசுவதைக் கௌவை என்பதுண்டு

கம்பலை - கண்ணீரும் கம்பலையுமாக - கம்பலை - அரற்றி, புலம்பி அழும் ஓசையுமாம்.
கம்பலை மூதூர் - ஆரவாரம் மிக்க ஊர்.

அரவம் - ஏதோ ஓர் அரவம் கேட்கிறது. ஆள் வரும் அரவமா?

ஆர்ப்பு - பல்லியங்கள் ஆர்த்தன.

இவை யாவும் பெயர்ப்பண்பும் தொழிற்பண்புமாகிய பெயர்கள் என்று கருதப்படுகின்றன. எனினும் ஒரு பொருள் குறித்த பல சொற்களும் பல பொருள் குறித்த ஒரு சொல் தொகுதி களுமாக, இவை அகராதிபோல் அமைகின்றன.

## இவ் உரியியலுக்குப் புறனடை கூறியன கொண்டு, கூறாதனவும் கொள்க எனல்

**460. இன்னது இன்னுழி இன்னணம் இயலும்**
**என்றிசை நூலுள் குண, குணிப் பெயர்கள்**
**சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலா**
**நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே** 19

பெயர் வினை இடை உரிச்சொற்களுள் இன்ன சொல் இந்த இடத்தில் இவ்வாறு பொருள் தந்து நடக்கும் என்று இசைக்க

வந்ததே இவ் இலக்கண நூல். இதில் குணப்பெயர்களையும் குணத்தை ஏற்கும் பெயர்களையும் (குணி - குணத்தைக் கொள்வது) முழுவதுமாகச் சொல்லாது கைவிட்டனம். ஏன்? பரத்தலின் - அவ்வாறு தொடங்கினால் அது பரந்துபட்டு, மிக விரிந்து செல்லும். எனவே, அவை அனைத்தையும் பிங்கலந்தை, திவாகரம் முதலாகிய, நல்ல புலவர் பலரும் ஆக்கிய 'உரிச்சொல்' பனுவல்களில் (நிகண்டுகளில்), விருப்பமாக ஆர்வத்தோடு படித்தறிந்து கொள்வீர்களாக.

தொல்காப்பியர் உரியியலில், அருஞ்சொற்களாய்ச் செய்யுளில் - அதாவது இலக்கியத்துள் வரும் உரிச்சொற்களைக் கூறிப் பொருள் விளக்கம் தந்தார். 'வெம்மை வேண்டல்'; 'நன்று பெரிதாகும்; 'படரே உள்ளல் செலவும் ஆகும்'; என்றிவ்வாறு, உலகிலேயே முன்னோடியாக அகராதிக் கலையைத் தொடங்கினார். அதனை மேலும் வளர்த்து, ஒரு பொருள் தரும் பல சொற்களுக்கும் பல பொருள் தரும் ஒரு சொல்லுக்குமாகச் சில முன்மாதிரிகளைப் பவணந்தி முனிவர் இங்கு தந்துள்ளார். தமிழில் 'உரிச்சொல் பனுவல்' என்றும் அதுவே 'நிகண்டு' என்றும் கூறப்பட்டு, ஒரு தனி அகராதி நூல்வகை தோன்றி வளர்ந்தது. மேனாட்டார் 'தெசாரசு' (Thesaurus) என யாத்த நூல்களுடன் இவை ஒப்புமையுடையன. வீரமாமுனிவர் 'சதுரகராதி' எனத் தொகுத்தார். இவற்றின் அடிப்படையில் ஒரு பொருட் சொற்கள்; பல பொருள் ஒரு சொல் தொகுதிகள்; எதிர்ச் சொற்கள் எனப் பலநிலையில் - பல வகையில் தமிழில் அகர முதலிகள் தோன்ற வேண்டும்.

## சொல்லதிகாரத்திற்குப் புறனடை சொன்னவை கொண்டு சொல்லாதனவும் முடிக்க என முடிவுரை கூறுதல்

**461. சொல்தொறும் இற்றுஇதன் பெற்றிஎன்று அனைத்தும்**
**முற்ற மொழிகுறின் முடிவில வாதலின்**
**சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும்**
**தெற்றென உணர்தல் தெள்ளியோர் கடனே**

சொல் தோறும் இதன் இலக்கணம் இது (இதன் பெற்றி இற்று) என்று, அனைத்தையும் முழுவதும் மொழியத் தொடங் கினால், அதற்கு முடிவே இலதாகும். எனவே 'சொற்றவற்று இயலான்' - இதுகாறும் சொன்ன இயல்பின் படி; 'மற்றைய பிறவும் தெற்றென உணர்தல்' - சொல்லாத பிறவற்றுக்கும் உரிய இலக்கணத்தை இதே மரபுப்படி அறிந்து கொள்ளுதல். தெள்ளி யோர் கடன் - தெளிந்த அறிவுடையவர்களின் கடமையாகும்.

## இலக்கணம் முழுவதற்குமான புறனடை

462. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுஅல கால வகையி னானே 21

கால வகையினான - காலந்தோறும் வேறுபாடுகள் நிகழ்தல் இயற்கை; அந்த வகையின்படி. பழையன கழிதலும் - முன்பு சொன்ன இலக்கணங்கள் பல காலமாறுதலால் பிற்காலத்து நீங்கு தலும். புதியன புகுதலும் - முற்காலத்து இல்லாதன பல பிற் காலத்து இலக்கணமாகிப் புகுதலும் வழு அல - குற்றமாகா. இஃது உலக இயற்கையேயாம்

இந்நூற்பா இலக்கண மாறுதல்களுக்கு என்று இங்கு கூறப்படினும்,பொதுவாகப் பழமொழி போல, இயற்கையில் கழி வனவற்றுக்கும் புதிதாய்ப் புகுவனவற்றுக்கும் எடுத்தாளப் படுகின்றது.

நன்னூல் புதிய முறை எளியவுரை முற்றுப் பெற்றது.

# நன்னூல்

## சொல்லதிகாரம்

## நூற்பா முதற் குறிப்பு அகர நிரல்


| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| **அ** | |
| அ ஆ ஈற்ற | 329 |
| அசைநிலை | 395 |
| அடைசினை | 403 |
| அடைமொழி | 402 |
| அண்மையின் | 313 |
| அதுவே, இயற்சொல் | 270 |
| அந்தில் ஆங்கு | 437 |
| அம் ஆம் என்பன | 332 |
| அம்ம உரையசை | 438 |
| அர்ஆர் பவ்வூர் | 327 |
| அவற்றுள், எழுவாய் | 295 |
| அவற்றுள் , ஒன்றே | 284 |
| அவற்றுள், கிளையெண் | 276 |
| அவற்றுள், முதலில் | 344 |
| அவைதாம், முற்றும் | 322 |
| அள் ஆள் இருமொழி | 326 |
| அறிவருள் ஆசை | 452 |
| அறி வறியாமை | 385 |
| அன் ஆன் இருமொழி | 325 |
| **ஆ** | |
| ஆக்கவினை | 347 |
| ஆண்பெண் பலர் என | 262 |
| ஆண்மை பெண்மை | 283 |
| ஆறன் உருபும் | 293 |
| ஆறன் ஒருமைக்கு | 300 |
| **இ** | |
| இஉ ஊவோடு | 304 |
| இடுகுறி காரண | 275 |
| இடைநிலை | 416 |

| நூற்பா | நூற்பா எேண் |
|---|---|
| இம்முப் பெயர்க்கண் | 305 |
| இயற்கைப் பொருளை | 404 |
| இரட்டைக் கிளவி | 396 |
| இரண்டா வதனுருபு | 296 |
| இரண்டு முதலாய் | 363 |
| இருதிணை ஆண் | 352 |
| இர்ஈர் ஈற்ற | 337 |
| இலக்கணம் உடையது | 267 |
| இறப்பெதிர்வு | 382 |
| இனைத்தென்று | 399 |
| இன்னது இன்னுழி | 460 |
| **ஈ** | |
| ஈதா கொடுவெனும் | 407 |
| **உ** | |
| உணர்வியலாம் | 450 |
| உயர்திணை உம்மை | 372 |
| உயர்திணை தொடர்ந்த | 377 |
| உயிர் உயிர் | 443 |
| உருபுபல அடுக்கினும் | 335 |
| உருபு முற்று | 356 |
| உருபும் வினையும் | 354 |
| உருவக உவமையில் | 410 |
| உவப்பினும் உயர்வினும் | 379 |
| உவம உருதுபிலது | 366 |
| **எ** | |
| எச்சப் பெயர் | 357 |
| எட்டன் உருபே | 303 |
| எண்ணல் | 368 |
| எதிர்மறை சிறப்பு | 425 |

எப்பொருள் 388
எல்லை இன்னும் 319
எவனென் வினா 350
எழுத்தியல் 391
எழுவாய் இறுதி 415
என்றும் எனவும் 429

ஏ

ஏழன் உருபு 301
ஏற்கும் 291
ஏற்புழி எடுத்துடன் 419
ஏற்ற பொருளுக்கு 413

ஐ

ஐந்தாவதன் 299
ஐந்தொகைமொழி 369
ஐயம் திணை 376
ஐ ஆய் இகர 335
ஐ ஆன்கு 318
ஐ இறு பொது 306

ஒ

ஒடுவுந் தெய்யவும் 436
ஒருசார் 307
ஒருபொருட் பல்பெயர் 397
ஒருபொர்ருள் குறித்த 272
ஒரு பொருள் பன்மொழி 398
ஒரு பொருள் 392
ஒருமையிற் 380
ஒருமொழி ஒருபொரு. 260
ஒருமொழி ஒழிதன் 358
ஒருமொழி தொடர் 259
ஒருவர் என்ப்து 289
ஒருவன் ஒருத்தி 288
ஒருவன் முதல் 324
ஒழியிசை 423
ஒற்றுமை நயத்தின் 451
ஒன்றே பல என்று 263
ஒன்றொழி பொதுச்சொல் 269

க

கடிஎன் கிலவி 457
கண்கால் 302
கயவொடு 338

கா

காரண முதலா 405
காலங் கரந்த 364

கி

கிளந்த கிளை முதல் 278
கிளை முதலாக 277

கு

குடுதுறு என்னும் 331

கே

கேட்குந போலவும் 409

கொ

கொல்லே ஐயம் 435

சா

சால உறுதவ 456

சி

சிதல் எறும்பு 447
சினை வினை 345

சு

சுட்டு மறைநேர் 386

செ

செந்தமிழ் ஆகி 271
செந்தமிழ் நிலஞ்சேர் 273
செயப்படு பொருளை 400
செய்கு என் 333
செய்த செய்கின்ற 340
செய்து செய்பு 343
செய்பவன் கருவி 320
செய்யுமென் 341
செய்யுள் இறுதி 417
செவ்வெண் 427

சொ

சொல்திரி யினும் 346
சொற்றொறும் 461

த

தம்பால் 406
தரல்வரல் 381
தன்மை முன்னிலை படர் 266
தன்மை முன்னிலை 330
தன்மை யான் நான் 285

தா

தான்யான் 287

தி

திணை நிலம் 393
திணை பால் 378
திணையே பாலிடம் 375

து

தும்பிவண்டு 448
துய்த்தல் 452
துறுடுக் குற்றிய 328

தெ

தெரிநிலை தேற்றம் . 421

தொ

தொக்குழி மயங்குந 373
தொழிலும் காலமும் 342

தோ

தோன்றல் மறைதல் 455

நா

நான்கா வதற்கு 298

நீ

நீயிர் நீவிர் 294

நு

நுவ்வொடு 314

ப

படர்க்கை முப்பெயரொடு 394
படர்க்கை வினைமுற்று 265
பண்பை விளக்கும் 365
பல்லோர் படர்க்கை 348
பல்வகைத் தாதுவின் 268
பல்வகைப் பண்பும் 442
பல்வகை வடிவு 454
பழையன கழிதலும் 462

பா

பால்பகா அஃறிணை 281

பி

பிரிநிலை வினா 422

பு

புல் மர முதல 445

பெ

பெண்மை விட்டு 264
பெயரும் வினையுமாம் 414
பெயரே ஐஆல் 292
பெயரொடு பெயரும் 361
பெயர்ச்செவ்வெண் 428
பெயர்வினை உம்மை 360
பெயர்வினை யிடத்து 353

பொ

பொதுப்பெயர் வினை 359
பொதுவியல்பு ஆறை 323
பொதுஎழுத் தானும் 274
பொருள் முதல் ஆறாம் 401
பொருள் முதல் ஆறினும் 321
பொருள் முதல் ஆறோடு 290

போ

போலப் புரைய 367

ம

மக்கள் தேவர் 261
மற்றையது என்பது 434
மற்றைய நோக்காது 412
மன்னே அசைநிலை 432

மா

மாற்றம் நுவற்சி 458
மாவென் கிளவி 439

மி

மியாயிக 440

மு

முக்கா லத்தினும் 383
முச்சக நிழற்றுய் 258
முதலிவை 316
முதலை ஐயுறின் 315
முதற்பெயர் 282
முரள் நந்து 446
முழக்கு இரட்டு 459
முற்றீ ரெச்சம் 374
முற்றும்மை 426
முன்மொழி பின்மொழி 370
முன்னத்தின் உணரும் 408
முன்னர் அவ்வொடு 280
முன்னிலை கூடிய 334
முன்னிலை முன்னர் 336

மூ

மூன்றா வதனுருபு 297

மெ

மெய்ந்தா மூக்கு 444

யா

யாகா பிறபிறக்கு 441
யாதன் உருபின் 317
யாப்படி 418
யார்என் வினாவினை 349
யாற்றுநீர் மொழி 411

ர

ரவ்வீற்று 309

ல

லகார ஈற்று 310
லளஈற்று அஃறிணை 312

வ

வல்லொற்று 371

வா

வானவர் 449

வி

விரைவினும் 384
விழைவே 431
வினாச்சுட்டுடனும் 279
வினாவினும் 387
வினைசார்பு 390
வினைபெயர் 424
வினைமாற்று 433
வினைமுற்றே 351
வினையின் பெயரே 286
வினையொடு வரினும் 430

வே

வேறு இல்லை உண்டு 339
வேறு வினை 389
வேற்றுமை வினைசாரியை 420
வேற்றுமை வினை பண்பு 362

ள

ளஃகான் உயர் 368

ன

னவ்வீற்று உயர்திணை 311



**தமிழை அறிவோம்; தமிழராவோம்**

**தமிழறிவோரே தமிழர்களாவர்**

## தமிழ் மொழிப் பயிலக வெளியீடுகள்

| | |
|---|---|
| தொல்காப்பியம் | 65.00 |
| உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் | 80.00 |
| குறுந்தொகை அரும்புகள் | 50.00 |
| நற்றிணை மலர்கள் | 50.00 |
| சங்க மரபு | 175.00 |
| ஆய்வியல் அறிமுகம் | 125.00 |
| புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | 75.00 |
| தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் | 90.00 |
| திருக்குறள் - நுண்பொருள் உரை | 120.00 |
| திருவள்ளுவர் அருளிய திருக்குறள் - தெளிவுரை | 50.00 |
| திருக்குறள் தெளிவுரை | 30.00 |
| குறிஞ்சிப் பாட்டு - இலக்கியத் திறனாய்வு | 35.00 |
| ஒப்பிலக்கிய அறிமுகம் | 55.00 |
| சொல் புதிது சுவை புதிது | 20.00 |
| தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? | 25.00 |
| கம்ப நாடகம் | 30.00 |
| இனிய தமிழ் மொழியின் இயல்புகள் 3 & 4 | 9.00 |
| திருவள்ளுவரின் மனிதநேயம் | 12.00 |
| வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம் | 15.00 |
| இளைஞர் வாழ்வில் திருக்குறள் | 25.00 |
| பரிசில் வாழ்க்கை | 25.00 |
| சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள் | 130.00 |
| சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கிய வகைகள் | 75.00 |
| நன்னூல் - எழுத்ததிகாரம் - புதிய முறை எளிய உரை | 60.00 |
| நன்னூல் - சொல்லதிகாரம் - புதிய முறை எளிய உரை | 75.00 |
| தண்டியலங்காரம் - புதிய முறை எளிய உரை | 60.00 |
| யாப்பருங்கலக் காரிகை - புதிய முறை எளிய உரை | 70.00 |